

# மானுடத்தின் வரலாற்றுக் களங்கம்

## - ஈழத்தில் இந்தியப்படை -

## 1987 - 1990

ஈழத்தமிழர்களின் பண்பாட்டிலும் வரலாற்றிலும் இந்தியாவின் செல்வாக்கு மிகப் பெரியளவில் தாக்கம் செலுத்துவதாகவே வரலாற்றுக் காலந்தொட்டு இருந்துவருகின்றது. எமக்கான தனித்துவமான கலை, இலக்கிய, பண்பாட்டு அம்சங்களைத் தாண்டியும் தம்மை இந்திய அடையாளங்களுடன் இணைத்து உணர்பவர்களாகவே ஈழத்தமிழர்கள் பலர் இருந்துள்ளனர். தமிழகத்து ஊடகங்களும் - குறிப்பாக தமிழகத்தில் இருந்து வெளிவருகின்ற இதழ்களும் திரைப்படங்களும் அண்மைக்கால தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் இந்த உணர்வை உருவாக்கியதிலும் ஊடுருவப் பண்ணியதிலும் பெரும்பங்காற்றி இருக்கின்றன. இந்தப் பண்பாட்டு ஊடுருவல் இன்றளவும் இன்னும் அதிகமாகிவருகின்ற அதேநேரம் ஈழத்தில் இந்தியப் படை என்கிற விடயம் மிகக் கசப்பானதாகவும் ஆறாத வடுக்களை ஏற்படுத்திய பேரவலமுமாகவே ஈழத்தவர்கள் நினைவுகளில் இருக்கின்றது.

ஈழத்தில் இனப்பிரச்சினை தீவிரமடைந்த காலம் முதலாக ‘இந்தியா கைவிடாது’ என்பது பெரும்பாலான ஈழத்தமிழர்களின் ஆதார நம்பிக்கையாக இருந்தது. அவர்கள் மனதில் தமிழகத்து அரசியல்வாதிகளும் தலைவர்களும் மட்டுமல்லாமல் இந்தியத் தலைவர்கள் பலரும்கூட தமக்கு நெருக்கமானவர்கள் என்றும் அணுக்கமானவர்கள் என்றும் நம்பிக்கை இருந்தது. எண்பதுகள் வரை பல ஈழத்தமிழர்கள் வீடுகளின் கூடங்களில் காந்தி, நேரு, சுபாஸ் சந்திரபோஸ் உள்ளிட்ட இந்தியத் தலைவர்களின் படங்களே மிகப்பெரிய அளவில் மாட்டப்பட்டிருந்தன என்பதை இப்போது கூட நினைவுகளிலிருந்து மீட்ட முடிகின்றது. குறிப்பாக ஆரம்ப காலங்களில் இயக்கங்களுக்கான ஆயுதப் பயிற்சி முகாம்கள், தங்கும் வசதிகள், அலுவலகங்கள் போன்றனவும் இந்தியாவிலேயே அமைந்திருந்தது, மக்களின் நம்பிக்கையை இன்னமும் பலமாக்கியது என்றே சொல்லவேண்டும்.

ஆயினும், இந்தியாவைப் பொறுத்தவரை முழுக்க முழுக்க தனது சுய லாபத்துக்காவும் பிராந்திய செல்வாக்கை நிலைநிறுத்தவேண்டும் என்ற வல்லாதிக்கக் கனவுக்காகவுமே ஈழப்பிரச்சினையைக் கையாண்டது, ஈழத்தமிழர்களை வைத்துப் பகடையாடியது. அது ஈழத்தமிழர்களை முழுமையாக வஞ்சித்ததுடன் மானுடகுலமே வெட்கித் தலைகுனியவேண்டிய அவலங்களை ஈழத்தில் அரங்கேற்றியது.

ஈழத்தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் இனப்படுகொலை என்பது மிகக் குரூரமாக முள்ளிவாய்க்காலில் நடந்தேறியது என்றாலும், அதில் இலங்கை அரசு இழைத்த பல்வேறு போர்க் குற்றங்களை அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே இழைத்து இனப்படுகொலையை நடத்தியது இந்திய அரசு. குறிப்பாக யாழ்ப்பாண வைத்தியசாலைப் படுகொலைகள், போர் அழிவுகள் வெளியில் பரவுவதைத் தடுக்கும் நோக்குடன் ஊடகங்களை மிரட்டியும், அழித்தும் இயங்கவிடாமல் செய்து உண்மைக்குப் புறம்பான செய்திகளை பரப்பியமை, வெள்ளைக்கொடியுடன் சரணடைய வந்தவர்களை சுட்டுக்கொன்றமை, போர் நிறுத்தப் பிராந்தியம் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல்கள், மரபுரிமைகளையும் அறிவுச்சொத்துக்களையும் அழித்தமை என்று இலங்கை அரசின் பின்னைய இனப்படுகொலைக்கான விடயங்களை ஈழத்திலே முதலில் இந்திய அரசின் பூரணமான சம்மதத்துடன் நிறைவேற்றியது அமைதி காக்கும் படை என்ற பெயரில் வந்த இந்திய ஆக்கிரமிப்புப் படையே.

ஆயினும் ஈழத்தில் இந்திய இராணுவம் நிகழ்த்திய அழித்தொழிப்புப் பற்றிய பதிவுகளோ, கணக்கெடுப்புகளோ இன்னும் சரியான முறையில் பரவலாக்கப்படவில்லை என்பது முக்கியமானது. மூவாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டு எழுநூறுக்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்று சொல்லப்படுகின்றபோதும் இழப்புகள் இதைவிட அதிகமாக இருக்கும் என்றும் பலகோடி பெறுமதியான சொத்து அழிப்புகள், உளரீதியான தாக்குதல்கள், உடல் அவயங்களை இழந்தோர், தாக்குதலுக்கு உள்ளானோர் என்று குறுகிய காலத்தில் இந்திய இராணுவத்தினூடாக இந்திய அரசாங்கம் நிகழ்த்திய பேரழிவு மிகப்பெரியது. ஆயினும் இயல்பாகவே ஈழத்தமிழர்கள் பலருக்கு இந்தியா மீதிருக்கின்ற மென்மையான அணுகுமுறை காரணமாகவும், இந்திய ஊடகங்களின் செல்வாக்குக் காரணமாகவும் இந்திய இராணுவம் செய்த இந்த அழிவுகள் மறைக்கப்பட்டும், அதற்கு நியாயம் கற்பிக்கின்ற வாதங்கள் பரப்பட்டும், மனிதத்தின் ஆன்மாவையே அழிக்கின்ற முயற்சிகளும் நடந்தே வருகின்றன. ஆரம்ப காலங்களில் இந்திய இராணுவத்தைச் சார்ந்தவர்களும் இந்திய வல்லாதிக்கக் கனவுகளைப் பிரதிபலிப்பவர்களுமாக ஆங்கிலத்தில் நூல்கள் ஊடாகவும் கருத்துதிர்ப்புகள் ஊடாகவும் சர்வதேச அரங்கில் பரப்பிய பொய்யான தரவுகளும் தகவல்களும் உலகத்தின் கண்களுக்கு உண்மையை மறைப்பதற்கு உதவின. இதன் கொடூரமான தொடர்ச்சியாக படைப்பாளிகளும் எழுத்தாளர்களும் கூட மானுடத்தைக் கொன்றொழித்த இந்திய இராணுவ நடவடிக்கைகளைப் பூசிமெழுகுகின்ற நடவடிக்கைகளை அண்மைக் காலமாக முன்னெடுப்பதையும் காணமுடிகின்றது. வரலாறு என்பது எப்போதும் வெற்றிபெற்றவர்களாலும் ஆதிக்கம் கொண்டவர்களாலும் எழுதப்படுவது என்று பரவலாகச் சொல்லப்படுவதுண்டு. ஆயினும் வரலாற்று எழுதியலில் சமகாலத்தில் ஏற்பட்டிருக்கின்ற பிரக்ஞை காரணமாக ஒடுக்கப்பட்டவர்களும் தோற்கடிக்கப்பட்டவர்களும் ஒதுக்கப்பட்டவர்களும் தமது வரலாற்றைப் பதிவுசெய்யவேண்டும், தமது நினைவுகளைப் பதிவுசெய்யவேண்டும், தமது கூட்டுநினைவுகளைப் பதிவுசெய்வதன் மூலம் வரலாற்றினை உண்மையை நோக்கி நகர்த்திச்செல்ல முடியும் என்கிற வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. நினைவுகூர்தல் நிகழ்வுகளை நடத்துவது மூலமும் தமது நினைவுகளை வாய்மொழியாகவும், எழுத்துப் பதிவுகள் மூலமும் கலை இலக்கிய வெளிப்பாடுகள் மூலமும் பதிவுசெய்வது முக்கியமானதாகக் கருதப்படுவதுடன் ஒரு ஒடுக்கப்பட்ட, தோற்கடிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட சமூகங்களின் மிகக் காத்திரமான ஒரு அரசியல் நடவடிக்கையாகவுமே கொள்ளப்படுகின்றது. அந்த விதத்தில் ஈழத்தமிழர்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை, அவலங்களை, போர்க் குற்றங்களை, தம்மீது கட்டவிழ்க்கப்பட்ட இனப்படுகொலையை தொடர்ச்சியாக நினைவுகூரவும் அவற்றைப் பதிவுசெய்யவும் வேண்டிய வரலாற்றுக்கடமையுள்ளவர்களாக இருக்கின்றனர். இதனைப் பிரக்ஞைபூர்வமாக உணர்ந்தவர்களாகவே தாய்வீடு பத்திரிகையின் ஒகஸ்ட் 2017 மாத வெளியீட்டினை ஈழத்தில் இந்தியப் படை நிகழ்த்திய அழிவுகளை நினைவுகூரும் சிறப்புத் தொகுப்பாக வெளியிடுகின்றோம்.

தொடர்தல் 49ம் பக்கம்

# மானுடத்தின்...

48ம் பக்கத் தொடர்ச்சி...

இந்தத் தொகுப்பிற்கான தலைப்பு என்னவென்று யோசித்தபோது மானுடத்தின் வரலாற்றுக் களங்கம் என்பதைத் தவிர பொருத்தமானதாக வேறெதுவும் தோன்றவில்லை, மானுடத்தின் வரலாற்றுக் களங்கம் என்பதைத் தவிர சுருக்கமான விபரணமும் இந்திய இராணுவம் நிகழ்த்திய பேரவலத்தை வெளிப்படுத்தப் பொருத்தமானதாகத் தோன்றவில்லை.

ஜுலை மாதம் 1987இல் இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயருடன் இந்திய - இலங்கை அரசுகளுக்கு இடையிலான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, இலங்கை அரசின் வேண்டுகோளுக்கிணங்க ஈழத்திற்குள் நுழைந்த இந்திய இராணுவப் படை, மிகக் குறுகிய காலத்திலேயே தனது முக மூடியைத் தானே அகற்றிவிட்டு, மார்ச் 1990இல் ஈழத்தைவிட்டு வெளியேறும்போது வந்தது அமைதி காக்கும் படை அல்ல, 'சாத்தானின் படை' என்பது அம்பலமாகி இருந்தது. ஆயினும் அது பற்றிய பதிவுகளும் தொகுப்புகளும் அழிந்தும் அழிக்கப்பட்டும் அருகிவருகின்ற காலப்பகுதியில், ஆன்மாவைப் புதைத்துவிட்டு ஈழத்தில் இந்திய இராணுவம் இழைத்தவற்றைப் பற்றி உண்மைக்குப் புறம்பான மோசடி வரலாறும் நச்சுக் கருத்துகளும் பரப்பப்பட்டுக்கொண்டிருகின்ற காலப்பகுதியில் நாம் இன்னமும் தீவிரமாகச் செயற்படவும் பதிவுகளை மேற்கொள்ளவும் ஏற்கனவே இருக்கின்ற பதிவுகளைப் பரவலாக்கவும் வேண்டி இருக்கின்றது. அந்த வகையில் இது ஒரு விதத்தில் மறதிக்கெதிரான நினைவின் போராட்டம், மறதிக்கெதிராக நினைவுகளைத் தொகுக்கின்ற போராட்டம்.

இந்திய இராணுவம் ஈழத்தில் நிகழ்த்திய அழிவுகள் பற்றிய இந்தச் சிறப்புத் தொகுப்புக்காக நாம் தகவல்களைத் திரட்டும் முயற்சிகளில் ஈடுபட்டபோது போர் கடுமையாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் பத்திரிகைகள் தாக்கப்பட்டு, முழுமையான செய்தித் தணிக்கை திணிக்கப்பட்டதனால் திகதி வாரியாகச் செய்திகளைத் திரட்டுவதில் சிரமம் ஏற்பட்டது. அத்துடன் அக்காலத்தில் வெளியிடப்பட்ட பிரசுரங்களும் வெளியீடுகளும் கூட இலகுவாகப் பெறக் கூடியதாக இருக்கவில்லை. இந்தியாவின் தலையீடு குறித்தும், இலங்கை இந்திய ஒப்பந்தம் குறித்தும், ஈழத்திற்கு இந்திய இராணுவத்தின் வருகை குறித்தும் இடதுசாரி அமைப்புகளும் இயக்கங்களும் சில பிரசுரங்களை வெளியிட்டிருந்தபோதும் கூட அவை பொதுவாக தனிப்பட்டவர்களின் சேகரங்களாக இருக்கின்றனவே தவிர உசாத்துணை செய்யக்கூடிய பொதுத் தளங்களுக்கு இன்னமும் வரவில்லை என்பது ஒரு குறையே. அதுபோல உண்மைச் சம்பவங்களின் தொகுப்பாக வெளியிடப்பட்ட 'அம்மாளைக் கும்பிடுகிறானுகள்', 'வில்லுக்குளத்துப் பறவைகள்' என்பனவும் கூட மிகச் சிலரிடம் மாத்திரமே இருக்கின்றன. இவையெல்லாம் பரவலாக மக்களையும் அரசியற் செயற்பாட்டாளர்களையும் சென்றடையவேண்டியது அவசியமாகும்.

இந்தத் தொகுப்பில் இந்திய இராணுவத்தின் வருகை, வெளியேற்றம் என்கிற கட்டுரைகளுடன் திலீபனின் உண்ணாவிரதம், பிரம்படி லேன் படுகொலைகள், சிங்கத்தின் நகங்களும் அசோகச் சக்கரமும் என்கிற கட்டுரைகளுடன் உண்மைச் சம்பவங்களின் நினைவுப் பதிவுகளாகவும் தன்னனுபவப் பதிவுகளாகவும் வரலாற்றுச் சாட்சியங்களைத் தொகுத்திருக்கின்றோம். இதுதவிர இலக்கிய சாட்சியங்களாகவும் இயன்றவரை பொருத்தமான சில மாதிரிகளைத் தொகுத்திருக்கின்றோம்.

மாதப் பத்திரிகை ஒன்றில் இத்தனை பக்கங்களில் சிறப்புத் தொகுப்பு ஒன்றினை வெளியிடுவது என்பது புலம்பெயர் சூழலில் எவ்வளவு சவாலானது என்பதை உணர்ந்திருப்பீர்கள் என்று நம்புகின்றோம். அந்தச் சவாலையும் பல்வேறு விதமான நெருக்கடிகளையும் எதிர்கொண்டவாறே ஒரு முக்கியமான பணியை ஆற்றிய நிறைவுடனும் இன்னமும் பல்வேறு ஆக்கங்களும் தரவுகளும் பதிவுகளும் சேர்க்கப்பட்டு இது இன்னமும் முழுமையாக்கப்படவேண்டியது என்கிற புரிதலுடனும் இந்த முயற்சியில் அக்கறையும் பிரக்ஞையும் கொண்ட இன்னும் பலரும் தொடர்ந்து ஈடுபடுவார்கள் என்கிற உறுதியான நம்பிக்கையுடனும் இந்தச் சிறப்புத் தொகுப்பினை உங்களுக்குக் கையளிக்கின்றோம்.

■ ■ ■

---

# இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தம்

- அ. கணபதிப்பிள்ளை -

இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தம் 1987ம் ஆண்டு யூலை மாதம் 29ம் திகதி அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதியாக விருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் இணைந்து கைச்சாத்திட்டதன் பின் நடைமுறைக்கு வந்தது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு முப்பது ஆண்டுகள் முடிவடைந்திருந்தாலும் அது ஏற்படுத்திய நன்மை, தீமை பற்றிய வெளிப்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை எனக் குறிப்பிடுதல் பொருத்தமானது.

இந்தியாவினதும் இலங்கையினதும் கேந்திரமுக்கியத்துவமானது பூகோள அரசியலில் விதந்து பேசப்படும் ஒன்றாக மாறியிருந்தது. இந்து சமுத்திரத்தினைக் கட்டியாள நினைக்கும் எந்த வல்லரசுக்கும் இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளினதும் ஆதரவு தேவைப்பட்டிருந்தது.

இந்தியாவை ஒரு வல்லரசாக ஏற்றுக்கொள்ளத் தயங்கும் மேலை நாடுகள் அது ஒரு பிராந்திய வல்லரசு என்பதனைக்கண் கூடாகக் கண்டு வருகின்றன. இந்தியா தனது வரலாற்றுக் கால ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுபட எடுக்கும் முயற்சிகளின் ஊடாக வல்லரசு என்ற பட்டத்தினைப் பெற்றுக்கொள்ளப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கிறது.

அத்தகையதொரு முயற்சியின் வெளிப்பாடாகவே இந்திய இலங்கைச் சமாதான ஒப்பந்தத்தினை நோக்கலாம். சர்வதேசத் தலையீடு என்ற பதத்தினைப் பலமுறைகளில் அயல் நாடுகள் மீது பிரயோகித்து வந்த நாடு இந்தியா தான். இந்தியா தன்னைப் பலப்படுத்துவதற்காக ஏற்படுத்திக் கொண்ட இராஜதந்திர உத்தியாக இதனைக் குறிப்பிட முடியும்.

இந்து சமுத்திரத்தினூடாக வந்த ஆக்கிரமிப்பு 1498ல் போத்துக்கீசரின் வருகையுடன் ஆரம்பமாகியது. அதன் தாக்கம் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறானதொரு வரலாற்றுச் சுழற்சியினை இந்தியா ஒருபோதும் வரவேற்கப்போவதில்லை.

இத்தகைய பின்னணியில் இந்தியாவின் அயல் நாடுகள் மீதான தலையிடுகளை நோக்க முடியும். குறிப்பாகச் சுதந்திரமடைந்தது முதல் இந்தியாவால் போராலும் கலாச்சாரத்தாலும் இலங்கை இந்திய மயமாக்கப்பட்டுவிடும் என்ற பயம் இருந்து வந்ததால் இந்தியாவுடனான தொர்புகளை உடைத்தெறிவதில் இலங்கை மிகவும் கரிசனையுடன் தொழிற்பட்டது. இதில் இந்திய வம்சாவழித் தமிழ் மக்கள் வெளியேற்றம் முதல், இந்தியக் கலாச்சாரமானது மதம், இலக்கியம், சினிமா என்பவற்றினூடாக உள்வருவது வரையான தடைகளினை ஏற்படுத்துவதில் முனைப்புடன் செயற்பட்டது. இதற்காக இந்தியாவுக்கு வேண்டும்.

இலங்கையின் உள்நாட்டு அரசியலை அவதானித்துக் கொண்டிருக்கும் இந்தியா இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிராக இளைக்கப்பட்டு வந்த அநீதிகளையிட்டு அதிகம் கவலை கொண்டிருக்கவில்லை. பல இனம் பலமொழிபேசும் மக்கள் வாழும் இந்தியா போன்ற உபகண்டத்தில் இருக்கும் பிரச்சினைகளை விட கால கட்டத்தில் சாத்தியமாகவிருந்தது.

> " இலங்கையின் உள்நாட்டு அரசியலை அவதானித்துக் கொண்டிருக்கும் இந்தியா இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிராக இளைக்கப்பட்டு வந்த அநீதிகளையிட்டு அதிகம் கவலை கொண்டிருக்கவில்லை. "

எதிரானநாடுகளாக எண்ணப்பட்ட அமெரிக்கா பாகிஸ்தான் சீனா ஆகியவற்றுடனான கூட்டினைப் பலப்படுத்துவதில் இலங்கை அதிக ஆவலாக இருந்தமையினைக் காண முடிந்தது.

இருப்பினும் இலங்கை இந்தியப் பிடியிலிருந்து வெளியேறி விடாதபடி பார்த்துக் கொண்ட இந்தியா வேண்டிய நேரங்களில் இலங்கையில் வெளியார் தலையிடு ஏற்பட்டுவிடாதபடி தனது வியூகத்தினை அமைத்து வைத்துக் கொண்டது.

நேரு கொத்தலாவலை ஒப்பந்தம் சிறமாவோ -சாஸ்தரி ஒப்பந்தம் போன்றன இலங்கையின் இறையாண்மையினை அங்கீகரிக்கவும் இலங்கை எதிரிவல்லரசுகளின் கைகளில் விழுந்துவிடாதபடி பாதுகாத்துக் கொள்ளவும் செய்யப்பட்டவைகளாகும். இது போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் தான் இந்திய இலங்கைச் சமாதான ஒப்பந்தமும் செய்யப்பட்டாலும் கூட அந்த ஒப்பந்தம் அரசியல் அனுபவம் குறைந்த ராஜீவினதும் அரசியல் முதிர்ச்சியும் தந்திரமும் கொண்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினாலும் மேற்கொள்ளப்பட்டதனால் இந்திப் பிரதமர் இந்திரா காந்தியின் கனவாகவிருந்த இந்திய வெளிநாட்டுக் கொள்கை முறையானது பலனளிக்காமற் போய்விட்டதென்றே கூற இது பாரதூரமாகத் தெரிந்திருக்க நியாயமில்லை.

இலங்கையில் பிரச்சினையா எல்லோரும் இந்தியாவுக்கு வரவேண்டியது தானே என்ற கருத்தினைக் கொண்டிருந்ததாகச் சொல்லப்படும் காங்கிரஸ் மூப்பனார் போன்ற தமிழ் அரசியல் வாதிகள் கூட இலங்கைச் சிறுபான்மை மக்களது மனப்போக்கினை நன்கு தெரிந்து வைத்திருக்கவில்லை என்றே சொல்ல வேண்டும்.

1956ம் ஆண்டு இலங்கையில் தனிச்சிங்களம் சட்டம் கொண்டு வரப்பட்டதும் தமிழர்கள் தமிழ்மொழிக்காகச் சத்தியாக்கிரகப்போராட்டம் நடத்தியதும் அதன் பின்னர் 1958ல் இடம் பெற்ற தமிழருக்கு எதிரான மிகப்பெரிய இனக்கலவரமும் மொழியை அடிப்படையாகக் கொண்ட ஒரு போராட்டமாகவே இந்தியாவுக்குத் தெரிந்திருந்தது. அதே காலப்பகுதியில் தமிழ்நாடும் இந்தித் திணிப்புக்கு எதிராகச் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒரு இனத்துக்கு மொழியுடன் நாடு என்பது மிக முக்கியமானது என்பதும் அதனூடாக அந்த இனம் தனது சுயநிர்ணய உரிமையினைப் பாதுகாக்க முயற்சி எடுக்கும் என்பதும் கோட்பாட்டளவிலேயே அன்றைய


சிறுபான்மைக்கு ஆதரவாக அமைந்த பண்டா செல்வா ஒப்பந்தத்தின் வழிவந்த மாகாண சபை மசோதாவும் டட்லி - செல்வா ஒப்பந்தந்தின் வழி வரவிருந்த மாவட்ட சபை மசோதாவும் இலங்கையின் சில பெரும்பான்மை இனஅரசியல் வாதிகளின் நடவடிக்கைகளினாலும் பௌத்த தலைமைகளின் அச்சுறுத்தலினாலும் கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் பல்கலைக்கழக அனுமதியில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த தரப்படுத்தல் முறையினூடாக இலங்கையின் கிராமிய இளைஞர்களுக்குப் போதிய கல்வி வேலை வாய்ப்பு வசதிகள் கிடைக்குமா என்ற ஐயப்பாடு தோன்றத் தொடங்கியது. இடதுசாரி மாணவர்களின் இந்தப் பயமும் தமிழர்களின் கல்வி உரிமை படிப்படியாகப் பறிபோகிறது என்ற ஆதங்கமும் கலந்து அரசியற் சிந்தனையைப் பின்னணியாகக் கொண்ட கிளர்ச்சியானது வெடித்திருந்தது. சேகுவேராவின் சிந்தனையானது அக்காலத்தில் இருந்த பல்கலைக்கழக மாணவர்களிடையே முக்கியம் பெற்றிருந்தது. அந்தச் சிந்தனை கொண்ட தமிழ் சிங்களம் ஆகிய இரு பிரிவினருள் சிங்களத்தலைமையிலமைந்த புரட்சியானது 1971ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து தொடங்கிச் சிங்கள மக்கள் வாழும் பகுதியெங்கும் படிப்படியாகப் பரவத் தொடங்கியிருந்தது.

இந்நிலையில் அக்கிளர்ச்சியினை அடக்குவதற்காகச் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அரசு ஏற்கனவே சீனாவுடன் கொண்டிருந்த கலாச்சாரத் தொடர்பினூடாக இராணுவ உதவியையும் பெற்றுவிடக்கூடும் என்ற நிலை தோன்றத் தொடங்கியது. இதில் இந்தியத் தலையீடானது உதவி என்ற போர்வையில் உள்நுளைந்திருந்தது. பல நூற்றுக்கணக்கான சிங்கள இளைஞர்களின் பிணங்கள் களனியாற்றில் மிதந்தன. கிளர்ச்சி அடக்கப்பட்டு சிங்கள இளைஞர்கள் இயல்பு வாழ்வு நிலைக்குக்கொண்டு வரப்பட்டிருந்தனர்.

1972ல் இலங்கை புதிய அரசியற் திட்டத்தினூடாக சனநாயகச் சோசலிசக் குடியரசு என்று பிரகடனப்படுத்தப்பட்டதும் இலங்கை தனது காலனித்துவ முதலாளியான பிரித்

தொடர்தல் 50ம் பக்கம்



# இந்திய இலங்கை...

49ம் பக்கத் தொடர்ச்சி...

தானியாவின் கட்டுப்பாட்டு அதிகாரத்தினைத் துண்டித்து விட்டிருந்தது. தமிழ் மொழிக்கு இருந்த விசேட அதிகாரம் கொண்ட பிரிவானது நீக்கப்பட்டது. சிங்களம் பௌத்தம் ஆகிய இரண்டுக்கும் முன்னுரிமை அளிக்கும் அரசியற் திட்டத்தினூடாக இலங்கையில் ஒற்றையாட்சி முறையூடாகப் பெரும்பாமைச் சிங்கள இனமானது ஏகபோக உரிமையினைப் பெறும் அடிப்படையில் ஆட்சி முறையானது நடைமுறைக்கு வந்தது.

இதேவேளையில் புரட்சிச்சிந்தனை கொண்ட தமிழ் இளைஞர்களது பிரிவானது விளிப்படையத் தொடங்கியிருந்தது. 1972 முதல் பட்டிதொட்டியெங்கும் மறைமுகமான பாசறைகளும் அவற்றுடன் கூடிய புரட்சிச்சிந்தனைகளும் பரப்பப்பட்டன. 1974 ஆம் ஆண்டு ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்வுகளில் அத்துமீறி நுளைந்த சிங்கள அரசபடை அட்டூழியங்காரர்களும் அதன் பின்னணியில் இயங்கிய தமிழ் அரசியல் வாதிகளும் தமிழின எதிரிகளாக நோக்கப்பட்டனர். அதில் 9 தமிழ்மக்களது இறப்பும் யாழ் நூலக எரிப்பும் தமிழர் கலாச்சாரத்தினை ஒடுக்கும் படிகளாக நோக்கப்பட்டன.

இந்நிலையில் தான் தமிழர்களினால் சிங்கள ஆயுதத்தினை எதிர்த்துப் போராடக் கூடிய தலைமை என்பது உருவாகத் தொடங்கியிருந்தது. இவ்வாறு வளரும் தமிழ் இளைஞர்கள் தாமாகவே முன்வந்து ஆரம்பத்தில் பாலஸ்தீனம் வரை சென்று ஆயுதப் பயிற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வாறான பயிற்சிகள் சர்வதேசப் புரட்சிகர இயக்கங்களூடாகத் தமிழ் இளைஞர்களுக்குக் கிடைப்பதனை இந்தியா விரும்பியிருக்கவில்லை. பதிலாகத் தமது கட்டுப்பாட்டில் தமிழ் இளைஞர் இயக்கங்கள் வளர வேண்டும் அதனூடாக இலங்கையின் வெளிநாட்டு தொடர்புகளைக் கண்காணிக்க முடியும். என்ற நம்பிக்கையுடன் இந்தியா இருந்தது.

இலங்கையில் இருந்து சென்ற ஒரு தொகுதியினருக்கு 1980ல் உத்தரப்பிரதேசத்தில் விசேட ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டு இந்தியாவின் தமிழ் நாட்டில் பலபயிற்சி முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர் இந்திராகாந்தி எம்.ஜி. இராமச்சந்திரன் கூட்டு ஆதரவின் அடிப்படையில் தமிழ்ப் போராளிகள் தொடர்பான இந்திய இராஜதந்திர நகர்வுகள் இடம் பெற்றுவந்தன.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சி அரசானது தேர்தலில் மிகப் பாரிய வெற்றியினைப் பெற்றுக் கொண்டது. அத்துடன் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையினை அறிமுகப்படுத்தி அதனூடாக என்றுமே சிறுபான்மை இனம் இலங்கை ஆட்சியுரிமையினைப் பெற்றுக் கொள்ள முடியாதபடியான அரசியற் திட்ட மாற்றத்தினையும் சர்வவல்லமை பொருந்திய ஜனாதிபதி முறையினையும் இலங்கையில் அறிமுகம் செய்திருந்தது. 1977ல் நடந்த தேர்தலில் கிடைத்த வெற்றிக்களிப்பானது தமிழர்கள் மீதான வன்முறையாக மாறியிருந்தது. மலையகத்திலிருந்தும் சிங்களக் கிராமங்களிலிருந்தும் தமிழர்கள் பலர் வடக்குக்கும் கிழக்கும் துரத்தப்பட்டிருந்தனர்.

1983ல் இடம்பெற்ற இனக்கலவரத்துக் கான காரணமாகத் திருநெல்வேலியில் இடம் பெற்ற தாக்குதலும் அதில் 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டமையும் எனச்சொல்லப்பட்டாலும் தமிழர்கள் சிங்களவர்களுக்கு எதிராகப் போர் செய்யத் தொடங்கிவிட்டார்கள் என்ற கருத்தினைச் சிங்களவர்களிடையே ஜே.ஆர் ஜெயவர்த்தனா புகுத்தியிருந்தார். அதுவே கொழும்பு போன்ற நகரங்களில் இருந்த தமிழர்கள் கொலை செய்யப்பட்டும் பலதமிழரின் உடமைகள் சூறையாடப்பட்டும் கறுப்பு ஜூலை இனக் கலவரமாக மாறக் காரணமாகவிருந்தது.

இந்தியாவின் உதவியுடன் வளர்த்தெடுக்கப்பட்ட இளைஞர்களின் ஆயுதங்கள் இலங்கை அரசபடைகளுக்கு எதிரன போரில் பயன்படுத்தப்படலாயிற்று என ஜே.ஆர் ஜெயவர்த்தனா முழுமையாக நம்பியிருந்தார். இலங்கையில் 'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' என்ற ஜே. ஆரின் அறை கூவலுடன் இலங்கை அரசானது பாகிஸ்தான் சீனா, அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளின் ஆயுதங்களை வாங்கிக் குவிக்கத் தொடங்கியது. இலங்கைப்படைகளின் எண்ணிக்கையையும் அதிகரிக்கத் தொடங்கியது.

இந்நிலையில் இலங்கையில் இளைஞர்களுக்கு எதிரான போர் உக்கிரமடைந்தது. மறுபுறமாக இலங்கையின் ஆயுதங்களின் தொகையினையும் இந்தியா கணிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் இலங்கை மீதான தலையீடு புதுவிதமாகத் தொடங்கியிருந்தது. போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் ஓப்பரேசன் பூமாலை நிகழ்வாக இந்தியப் போர் விமானங்கள் இலங்கையின் யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் பறந்தன. உணவுப் பொட்டலங்களைப் போட்டிருந்தன.

இந்தியாவின் சமாதானத்துக்கான படையினரும் யாழ்ப்பாணத்துக்குள் வந்திருந்தனர். இலங்கையின் போராயுத நடவடிக்கைகளை மட்டுப்படுத்தும் முயற்சியில் இந்த ஒப்பந்தம் முக்கியம் பெறுகிறது. இந்த ஒப்பந்தத்தினூடாக இரண்டு முக்கிய விடயங்கள் இடம் பெற வேண்டும் என இந்தியா வற்புறுத்தியது.

முதலாவது இலங்கை செய்யவேண்டியவை இரண்டாவது இந்தியா செய்யவேண்டியவை. இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றவைகளில் முக்கியமானவை முதலாவது இலங்கை அதிகாரப் பரவலாக்குதலுக்குச் சம்மதம் தெரிவித்திருந்தமையாகும். இதில் அரசியற்திட்டத்திருத்தத்தில் 13வது திருத்தத்தினூடாக மாகாணசபை முறையும் வடக்கு கிழக்கு இணைப்புக்கான சம்மதமும் முக்கியம் பெற்றிருந்தது.

இரண்டாவது சிங்களம் தமிழ் இரண்டும் அரசுகரும மொழியாக்கப்பட வேண்டும் ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்க வேண்டும் என்பதும் குறிப்பிடப்பட்டிருந்தது. மூன்றாவதாக இலங்கை தனது படைகளை மீளப்பெற்று வடக்கின் முகாம்களுக்கு அனுப்பப்படவேண்டும் என்பதும் இலங்கையின் சார்பில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஜே.ஆர் தொடர்ந்து இந்தியாவிற்கு எதிராகச் சுமத்திய குற்றச்சாட்டான இந்தியா தமிழ்க் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதம் வழங்கியிருக்கிறது அவர்களின் முகாம்கள் இந்தியாவில் காணப்படுகின்றன என்பதுமாகும் இந்நிலையில் இந்தியாவின் பங்களிப்பாக விடுதலை இயக்கங்களிடமிருக்கும் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்பதும் அதற்கு 72 மணிநேரக் காலக்கெடு விதிக்கப்படவேண்டும் என்பதுமாக இருந்தது.

இதன் பிரகாரம் 1987 ஜூலை 29ம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஒப்பந்தத் தினைக் கண்காணிப்பதற்காக இலங்கைக்கு ஜூலை 30ந்திகதி இந்திய அமைதிகாக்கும் படையானது வந்து இறங்கியது.

இந்தியா துரோகம் செய்துவிட்டது என்ற வாதமானது சிங்களவர்களினாலும் தமிழர்களினாலும் முன்வைக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும் சிங்கள மக்களுக்கு இந்த ஒப்பந்தம் எந்தவிதமான பலனையும் கொடுக்கத் தவறிவிட்டது என்ற வாதமானது இலங்கை இந்த ஒப்பந்தத்தினை நடைமுறைப்படுத்த முடியாதவாறு பல முட்டுக்கட்டைகள் போடுவதற்கான காரணமாக அமைந்து விட்டது.

இந்தியா தமிழர்களுக்கு எதிராகத்துரோகம் செய்துவிட்டது என்ற வாதமானது விடுதலைப்புலிகளுடனான இந்திய இராணுவத்தின் போராக மாற்றம் பெற்றிருந்தது. இந்த மாற்றமானது வரலாற்றில் இடம் பெறத்தக்க நிலைமைகளை இருபகுதியினருக்கும் வழங்கியிருந்ததுடன் தமிழரின் ஆயுதரீதியிலான அரசியற் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் நிலையினையும் தோற்றுவித்திருந்தது என்பது கசப்பானதொரு
உண்மையாகும்.



kanapathipillai.a@thaiveedu.com



# திலீபனின் மரணமும் டிக்சித்தின் வகிபாகமும்

**- எஸ். பரமநாதன் -**

*திலீபன் அழைப்பது சாவையா - இந்தச்*
*சின்ன வயதில் இது தேவையா?*
*உலகம் இதை எண்ணிப் பார்க்குமா.*

என்ற காசி ஆனந்தனின் வரிகளில் அமைந்து ஒலித்த பாடல் நல்லூர் வீதி எங்கும் ஒலித்தபடி இருந்தது. மக்கள் அலையலையாக வந்து போய்க்கொண்டிருந்தனர், சோகம் எல்லோர் முகத்திலும் அப்பிக் கிடந்தது. திலீபனுக்கு ஏதாவது நடந்தால் சண்டை வெடிக்கும் என்ற பயமும் இருந்தது. எங்கும் பதட்டமே நிலவியது.

திலீபன் நீராகாரம் இன்றி மேடையில் சுருண்டு கிடந்தார். வழமையான புன்முறுவல் மறைந்துவிட்டது. மாணவர்கள் துயரம் தாங்காது கோஷங்கள் எழுப்பினர். நல்லூரில் நிலவரம் படிப்படியாக மோசமானது.

செப்டம்பர் 15, 1987 அன்று நல்லூர் கோயில் வீதியில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திலீபன் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்த போது இப்படியாக முடிவுறும் என்று யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

விடுதலைப்புலிகள் இந்த முடிவை எடுத்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. இந்தியப் படைகளிடம் ஆயுதங்களைக் கையளித்த பின்னர் விடுதலைப் புலிகள் தமது முகாம்களுக்குள் முடக்கப்பட்டனர். ஆனால், மற்ற இயக்க உறுப்பினர்கள் புதிய முகாம்களை அமைத்துச் சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்பட்டனர். மன்னாரில் ஒரு இயக்கம் விடுதலைப்புலிகள் மீது தாக்குதலையும் நடத்தியது. இவ்வாறான நடவடிக்கைகள் புலிகளை ஆத்திரப்படுத்தியதுடன் இந்தியப்படைகள் மீது சந்தேகங்களையும் எழுப்பியது. மற்ற இயக்கங்களின் நடவடிக்கைகள் குறித்து இந்தியப் படைத்தளபதியிடம் விடுதலைப் புலிகள் முறையிட்டும் கண்டும் காணாத ஒருவித அசமந்தப் போக்கையே இந்தியப்படை கடைப்பிடித்தது. இந்த அசமந்தப் போக்குக் காரணமாக இந்தியப்படையினரின் முகாம்களுக்கு முன்னால் பொது மக்கள் போராட்டங்களை நிகழ்த்தினர்.

இவ்வாறான ஒரு போரட்டத்தில் தான் விடுதலைப்புலிகளின் எண்ணவோட்டத்தைப் பிரதிபலித்த பிரசித்திபெற்ற உரையினை திலீபன் நிகழ்த்தினார். இந்தியப்படை குறித்தும் ஒப்பந்தம் குறித்தும் வெளிப்படையாகத் தன் கருத்துக்களைக் கூறினார்.

“எமது நாட்டில் எமது இராணுவம் நிலை பெறும் வரை எமது சுதந்திரத்தை யாரும் உறுதிசெய்ய முடியாது. அதற்காகத் தான் போராடிக் கொண்டிருக்கிறோம். அதற்காகத் தான் நாம் தமிழீழம் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். தமிழீழம் என்பது சகல அடக்குமுறைகளையும் உடைந்தெறிந்த சமதர்ம சோசலிச தமிழீழமாக அது மலரும். அதுவரை நாம் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை. ஒன்றை மிகவும் தெளிவாகவும் அறுதியாகவும் கூறுகின்றோம். நாங்கள் மீண்டும் ஆயுதங்கள் ஏந்துவோம். எமது மக்கள் அழிக்கப்படும் நிலை தோன்றுமானால் நாம் மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராடுவோம்.

இது ஒரு இடைநிலையே தவிர ஒரு முற்றுப்புள்ளி அல்ல. ஒன்றைத் தெளிவாக தமிழ்மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இன்று எமக்கு ஏற்பட்டுள்ள இழிநிலையை, அடக்கப்பட்ட நிலையை புரிந்து கொள்ளத் தவறினால் நாளை எமது வரலாறு மிகவும் பரிதாபத்துக்குரியதாக இருக்கும்.”

போராட்டங்கள் எதனையும் இந்தியப்படைத்தளபதிகள் கணக்கில் எடுக்கவில்லை. தமிழர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான பல விடயங்கள் நடந்த வண்ணம் இருந்தன. இதனால் விசனம் அடைந்த விடுதலைப்புலிகள் ஐந்து கோரிக்கைகளை இந்தியத் தூதுவருக்கு செப்டம்பர் 13, 1987 அன்று அனுப்பிவைத்தனர்.

- பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இன்னமும் தடுப்புக் காவலில், சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.
- புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படவேண்டும்.
- இடைக்கால அரசு நிறுவப்படும் வரை ‘புனர்வாழ்வு’ என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.
- இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்காவல்படை என அழைக்கப்படுவோர்க்கு வழங்கப்படும் ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு தமிழ்க் கிராமங்கள், பள்ளிக்கூடங்களில் நிலை கொண்டுள்ள இரானுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்படவேண்டும்.

இந்தியத் தூதர் டிக்சித் இந்தக் கோரிக்கைகளைப் பொருட்படுத்தவில்லை. இதனைத் தொடர்ந்து இந்தியப் படைகளுக்கு எதிராகப் போராட்டத்தை அவர்கள் பாணியிலேயே அதாவது காந்தீய வழியில் ஆரம்பிக்க விடுதலைப் புலிகள் முடிவு செய்தனர். இதன் பிரகாரம் நீராகாரம் எதுவும் இல்லாமல் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தைத் திலீபன் செப்டம்பர் 15, 1987 அன்று ஆரம்பித்தார்.

திலீபனின் இயற்பெயர் இராசையா பார்த்திபன்.

ஊரெழு என்ற ஊரில் நவம்பர் 29,1963ல் பிறந்தவர். யாழ்.இந்துக்கல்லூரியில் பயின்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்குத் தெரிவானவர். மருத்துவப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்ட இவர் மே, 1987ல் இலங்கை இராணுவம் மேற்கொண்ட ‘ஒப்பரேஷன் லிபரேஷன்’ன் போது படுகாயத்துக்குள்ளானவர். யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளராகச் செயல்பட்டவர்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவிடம் தனிமனிதனாக நின்று நீதி கேட்ட திலீபனை உலகமே வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தது. இரண்டாவது நாள் உண்ணாவிரத மேடையில் நின்று திலீபன் சிறு உரையினை நிகழ்த்தினார்.

“எனது அன்பார்ந்த மக்களே! என்னால் அதிகம் பேசமுடியாது. ஆனாலும் உங்களுடன் பேசவேண்டும் போலிருக்கிறது. உங்களைப் பார்க்கும் போது, நீங்கள் தரும் ஆதரவைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. எமது ஐந்து கோரிக்கைகளையும் இந்திய தேசம் நிறைவேற்றும் வரை ஒரு சொட்டு நீர் கூட அருந்த மாட்டேன். இது உறுதி. இறக்க நேரிட்டால் நான் மகிழ்ச்சியுடன் அதை ஏற்றுக்கொள்வேன்”.

நாளுக்கு நாள் திலீபனின் உடல்நிலை மோசமடைந்து கொண்டிருந்தது. அதே வேளை தமிழ்ப்பிரதேசம் எங்கும் எழுச்சியும் இந்தியப் படைகளுக்கு எதிரான பகையுணர்வும் வளர்ந்தபடி இருந்தது. இந்தியத் தூதர் டிக்சித் தொடர்ந்தும் தனது அலட்சியப் போக்கைக் கடைப்பிடித்தார். முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து அவர் மௌனம் சாதித்தார்.

திலீபனின் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டுவர ஒரேயொரு வழி தான் இருந்தது. இந்தியத் தூதர் டிக்சித் நேரடியாக வந்து திலீபனிடம் கோரிக்கைகள் பற்றிய உறுதிமொழியை அளிப்பது. திரண்டிருந்த மக்களும் டிக்சித் வருவார், வந்து திலீபனின் உயிரைக் காப்பாற்றுவார் என்று எதிர்பார்த்திருந்தனர். ஆனால் திச்சித் வரவில்லை.

எனினும், இந்தியப் படைகளுக்கு எதிரான எழுச்சியைக் கண்ட இந்திய அரசாங்கம் யாழ்ப்பாணம் சென்று நிலைமையை அறிந்து வருமாறு டிக்சித்துக்கு அழுத்தம் கொடுத்தது. திலீபன் உண்ணாவிரதம் ஆரம்பித்த எட்டாவது நாள் செப்டம்பர் 22, 1987 டிக்சித் யாழ்ப்பாணம் வந்து பிரபாகரனையும் பாலசிங்கத்தையும் சந்தித்தார். திலீபனின் உண்ணாவிரதம் மூலம் தமிழ் மக்களை இந்தியப் படைகளுக்கு எதிராகத் தூண்டுவதாக கடுமையான தொனியில் டிக்சித் பேசினார். நீங்கள் சென்று திலீபனைச் சந்தித்து உறுதிமொழியை வழங்குங்கள் என்று பிரபாகரன் டிக்சித்துக்குக் கூறினார். அதற்கு “அது எனது பயணத்தின் நோக்கம் அல்ல” என்று டிக்சித் காட்டமாகப் பதிலளித்து விட்டுச் சென்றுவிட்டார்.

செப்டம்பர் 26, 1987 திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த 12வது நாள் காலை. திலீபனின் நாடி நரம்புகள் ஒடுங்கத் தொடங்கின. காலை 10.40 மணியளவில் டாக்டர் சிவக்குமார் அவர்கள் திலீபனைப் பரிசோதித்து விட்டு “திலீபன் நம்மை விட்டுப் போய்விட்டார்” என்றார்.

திலீபனின் மரணம் மக்கள் மத்தியில் இந்திய அமைதிப்படைக்கு எதிரான உணர்வலைகளைத் தூண்டிவிட்டது. இந்தியத் தூதுவர் டிக்சித் களநிலவரங்களைச் சரியாகப் புரிந்து, நேர்மையாகவும் இதய சுத்தியுடனும் செயற்பட்டிருந்தால் தமிழர் பிரச்சினை மீதான இந்தியாவின் தலையீடு வேறு திசையில் பயணித்திருக்கும்.

■ ■ ■

# முகத்திரை கிழிந்த அமைதிப்படை

- நா.க. ராஜா -

முப்பது வருடங்களுக்கு முந்திய இரவொன்று.

அது 1987ம் ஆண்டு, ஒக்ரோபர் மாதத்தின் 12ம் நாள்.

அதிகாலை ஒரு மணியிருக்கும்.

யாழ். மருத்துவபீடத்தை அண்டிய பகுதிகளில் இந்திய இராணுவத்தின் கமாண்டோ வகையிலான தாக்குதல் திட்டம் ஒன்று தொடங்குகிறது.

யாழ் நகரிற்கு அடுத்ததாய் இருக்கும் கொக்குவில் பகுதியின் பிரம்படி பகுதியில் தங்கியிருந்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கைது செய்வதற்கான தாக்குதல் அது.

மருத்துவபீடத்தின் மைதானத்திலும், அதை அண்டிய புகையிரதப் பாதையருகேயுள்ள வெளியொன்றிலும், இந்திய படையினர் அதிரடியாக ஹெலிகொப்ரர்களில் தரையிறக்கப்படுகின்றனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட பரா கொமாண்டோக்கள் தரையிறக்கப்பட்டாயிற்று. புலிகளின் தலைவர் பிரபாகரனை கைதுசெய்து ஏற்றிச்செல்வதற்கு தயாராக ஒரு ஹெலிகொப்ரரை தரையில் வைத்திருப்பதாகவும் திட்டம். அந்த இடம் யாழ் மருத்துவ பீட மைதானம். அந்த இடத்தை கைப்பற்றி வைத்திருப்பதற்காக சீக்கிய காலாட்படையும் தரையிறங்கியது.

இந்தியப் படையின் தாக்குதலை விடுதலைப் புலிகள் எதிர் கொண்டனர்.

பெரும் சண்டை தொடங்கியது.

மருத்துவபீடத்தின் மாடிக்கட்டிடத்திற்குள் புலிகள் நிலையெடுத்துக் கொண்டனர். தரையிறங்கும் இந்தியப் படையினரை அவர்கள் இலகுவாக சுட்டுக் கொன்றனர். குறுகிய நேரத்திற்குள்ளாகவே தரையிறங்கிய சீக்கிய காலாட்படை அழிக்கப்பட்டது. இருபத்தொன்பது படையினர் கொல்லப்பட, ஒரேயொரு சீக்கிய வீரர் மட்டுமே உயிர் தப்பினார். கோரா சிங் என்ற அந்த சிப்பாய் பிற்காலங்களில் புலிகளால் விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகளின் தீவிர தாக்குதலால், முதலே திட்டமிட்டபடி அதிக துருப்புகளை இந்தியப் படையினரால் தரையிறக்க முடியவில்லை. புலிகளின் தாக்குதலில் ஒரு ஹெலிகொப்ரர் பலத்த சேதமடையவே இந்திய விமானப்படை தொடர்ந்தும் தங்களால் துருப்புகளை தரையிறக்க முடியாது என கை விரித்து விட்டது.

புலிகளின் தலைவரை கைது செய்ய வந்த பரா கமாண்டோக்களின் நிலை சிக்கலாகி விட்டது. விடியும் வரை மறைந்திருந்த கமாண்டோக்கள் நிலம் தெரியத் தொடங்கியதும் பிரபாகரன் தங்கியிருந்த வீட்டை நோக்கி முன்னேறத் தொடங்கினார்கள்.



அந்த வீடு வெளிநாட்டிற்கு புலம் பெயர்ந்திருந்த திருமதி. கருணா என்பவருக்குச் சொந்தமானது. 87ம் ஆண்டின் ஆரம்பத்திலேயே விடுதலைப் புலிகள் அந்த வீட்டை தெரிவு செய்ததற்கு காரணங்கள் பல இருந்தன.

அந்த வீட்டிற்கு ஐந்து வித்தியாசமான வழிகளால் போகலாம். குறுகிய பாதைகள், மறைவான வீடு, அத்துடன் புலிகளின் தலைவரின் மிக நம்பிக்கையான தளபதிகள் இம்ரான், பாண்டியனின் வீடுகளுக்கு அருகில் அவ்வீடு அமைந்திருந்தது.

அந்த வீட்டை நோக்கி முன்னேறிய இந்தியப் படையினர், ராஜா என்பவரையும், அவரது மருமகனான குலேந்திரன் என்பவரையும் பிடித்துக்கொண்டனர். அவர்களை பிரபாகரனின் வீட்டை காட்டச் சொல்லி துப்பாக்கி முனையில் மிரட்டியபடியே நகரத் தொடங்கினர்.

சிறிது நேரத்திற்குள்ளாகவே இளம் குடும்பஸ்தரான குலேந்திரன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தியப்படையினரைக் கண்டதும், புலிகளின் காப்பரண்களில் இருந்து தீவிர தாக்குதல்கள் தொடங்கின.

இழப்புகளைச் சந்தித்த இந்தியப் படையினர் அருகிலுள்ள வீடுகளுக்குள் புகுந்து கொண்டனர்.

இந்தியப் படை தீங்கு செய்யாது என்ற நம்பிக்கையில், வீடுகளில் தங்கியிருந்த பொதுமக்களை இந்தியப் படையினர் சுட்டுக் கொல்லத் தொடங்கினர்.

திருமதி. மங்கையர்க்கரசி விஸ்வலிங்கம் என்பவரின் வீட்டினுள் நுழைந்த இந்தியப் படையினர் அங்கிருந்த அத்தனை பேரையும் சுட்டுக் கொன்றனர். திருமதி. மங்கையர்கரசி, அவரது இரண்டு இளவயது பெண்பிள்ளைகள் உட்பட பத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். இதில் அவர்களது உறவினரான பத்து வயது பாலகன் ஒருவனும் உள்ளடக்கம்.

அந்த வீட்டிற்கு எதிரே இருந்த வீடு தனபாலசிங்கம் என்பவருக்கு சொந்தமானது. அங்கேயும் புகுந்த இந்திய கமாண்டோக்கள், அங்கிருந்த அனைவரையும் சுட்டுக் கொன்றனர். தனபாலசிங்கத்தின் ஒன்பது வயது மகனும் தப்பவில்லை. இன்னொரு சின்ன மகன் கட்டிலுக்கு அடியில் ஒளித்திருந்ததால் உயிர் தப்பினான்.

இந்த வீட்டில் இருந்த, நயினாதீவைச் சேர்ந்த ஜீவா எனும் யாழ். பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ பீட மாணவனும் அநியாயமாக கொல்லப்பட்டார்.

மாம்பழம் அன்ரி என அழைக்கப்படும் பெண் ஒருவரும் அவரது வீட்டிற்கு முன்பாக தெருவீதியில் சுட்டுக் கொல்லப்பட்டுக் கிடந்தார்.

இந்தியப் படையினர் பிரம்படி வீதியை ஆக்கிரமித்திருப்பது தெரியாமல் அவ்வழியால் போன நிறையப் பொதுமக்கள், மறைந்திருந்த படையினரால் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவனான, கோண்டாவிலைச் சேர்ந்த இன்பன் என்பவரும் வீதியில் கொல்லப்பட்டிருந்தார்,

இளம் குடும்பஸ்தவர் ஒருவரது சடலம் பிரம்படி சனசமூக நிலையத்திற்கு முன்னால் வீழ்ந்து கிடந்தது.

உள்ளூரைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர், பிரம்படி வீதிக்குக் குறுக்கே கயிற்றைக் கட்டி போக்குவரத்தை தடுத்ததால் நிறையப் பேர் உயிர் தப்பினர்.

பிரம்படி வீதியினுள்ளே, இந்தியப் படையினர் வெறியாட்டம் நிகழ்த்திக் கொண்டிருக்கையில், புலிகள் அவர்களை நான்கு முனைகளிலும் சுற்றி வளைத்திருந்தனர்.

இந்தியப்படையினர் பொதுமக்களை பணயக்கைதிகளாக உயிருடன் வைத்திருக்கின்றார்கள் என்றே புலிகள் நினைத்தனர். தங்கள் தாக்குதலைத் தீவிரப்படுத்தாமல், சுற்றி வளைத்தபடியே நிறையநேரம் புலிகள் நின்று கொண்டிருந்தனர். ஒரு சமயத்தில் ஆங்கிலத்தில் "துணிவிருந்தால் பொது மக்களை விடுவித்து விட்டு, எங்களுடன் சண்டை பிடியுங்கள்" என புலிகள் இந்தியப் படையினருக்கு சவால் விடுத்ததும் நடந்தது.

மதியத்திற்கு பின்னால் புலிகள் தங்களது தாக்குதலை சற்று தீவிரப்படுத்த தொடங்கினர். அப்போது தான் பாரிய ஷெல் தாக்குதலை இந்திய கமாண்டோக்கள் தொடங்கினர். கோட்டையிலிருந்தும் ஏவுகணைகள் பிரம்படியை சுற்றி துல்லியமாக ஏவப்பட்டன. இந்திய ஹெலிகொப்ரரும் தாக்குதலைத் தொடுத்தது.

ஏகப்பட்ட ஷெல்கள், அடிக்கொன்றாய் வீழ்ந்து வெடித்தன. நந்தாவில் வீதியைச் சேர்ந்த பாலசுப்ரமணியம் என்பவரின் வீட்டிலும் ஷெல் வீழ்ந்தது. அவரது மகன் சனிரஞ்சித் இதில் கொல்லப்பட்டார். இவர் யாழ். இந்துக் கல்லூரியில், உயர்தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தவர்.

பிரம்படியில் அகப்பட்டுக்கொண்ட இந்தியப் படையினரைக் காப்பாற்ற பலாலியில் இருந்து புறப்பட்ட மீட்புப் படையினர், வழிநெடுக புலிகளின் கடும் தாக்குதலை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. இறுதியில் கோண்டாவிலில் இருந்து, புகையிரத தண்டவாளத்தால் டாங்கிகளை ஏற்றிக் கொண்டு பிரம்படியை வந்தடைந்தனர்.

பிரம்படி வீதியில் தெருவெங்கும் வீழ்ந்திருந்த பொதுமக்களின் சடலங்களின் மேலால் இந்திய அமைதிப் படையினரின் டாங்கிகள் உருண்டன. பல சடலங்கள் அடையாளம் தெரியாத அளவுக்கு உருக்குலைந்து போயின.

பரா கமாண்டோப் படையினர் பின்வாங்கும் போது, தாங்கள் பிடித்து வைத்திருந்த ராஜாவை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தனர். ஆனால் அதிஸ்டவசமாக அவர் உயிர் தப்பிக் கொண்டார்.

புலிகளின் தலைவரை பிடிக்கும் முயற்சியில் தோல்வி கண்ட இந்தியப்படையினர், பிற்காலத்தில் பிரம்படி வீதியில் அவர் முன்னர் தங்கியிருந்த வீட்டைக் குண்டு வைத்து தகர்த்தனர்.

பிரம்படித் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்களின் சரியான கணக்கு தெரியவில்லை. குறைந்தது நாற்பது பேர்களாவது கொல்லப்பட்டிருப்பார்கள். பிற்காலத்தில் அவர்களுக்காக ஒரு சமாதி அவ்விடத்தில் எழுப்பப்பட்டிருந்தது.

இந்தியப் படையினர் இலங்கையில் செய்த படுகொலைகளில் முதலாவதும், முக்கியமானதுமான இந்த பிரம்படிப்படுகொலைகள் தான் இந்தியப்படையினரின் 'அமைதிப்படை' எனும் விம்பத்தை அழித்தது. அதன் பிறகு வந்த இரு வருடங்களும் தமிழர்களின் வாழ்வில் ஒரு வடுவாகவே மாறிப் போனது.

■ ■ ■

காந்தி தேசத்தின் இன்னொரு முகம்

# “9:05க்கு சுட வெளிக்கிட்டவன் பத்தே முக்கால் மட்டும் அடிச்சான்”

- கிறிஸ்துராஜா றீத்தாம்மா



நேர்காணல்:
**கந்தசாமி கங்காதரன்**

**அமைதிப்படையென வந்திறங்கிய இந்திய இராணுவம் மக்கள் நம்பிக் கையைத் தகர்த்து, போர் என்ற பெயரில் பொதுமக்கள் மீது தன் துப்பாக்கியைத் திருப்பிய தொடக்க நாட்களில் நிகழ்ந்த பல அட்டூழியங் கள் வெளிவராமலே போய்விட்டன. கையில் துப்பாக்கிச் சூட்டால் ஏற்பட்ட பழைய வடுக்களோடு அந்த அட்டூழியங்கள் சிலவற்றுக்குச் சாட்சியமான ஒருவரைச் சந்திக்க நேர்ந்தபோது அவர் கூறிய ஒரு சம்பவமே அவரிடம் மேலும் பல கதைகள் நிறைந்திருப்பதை உணர்த்தியது. குருநகரைச் சேர்ந்த கிறிஸ்துராஜா றீத்தாம்மா, 30 ஆண்டுகளாக மனதில் புதைத்து வைத்திருந்த துயரக் கதைகளைத் தாய்வீட்டுக்காக சொல்லத்தொடங்கினார்.**

**அகிம்சையின் தேசம் என்று பெருமை பேசும் ஒரு தேசத்தின் கோர முகத்தை அம்பலமாக்கும் ஒரு வாக்குமூலம் இது.**

எங்கட வீடு குருநகர் சென்ற் ஜேம்ஸ் மத்திய கிழக்கு வீதி, சென் அன்ரனிஸ் ரோட்டில 10ம் நம்பர்.

எங்கட குடும்பம், எங்கட தங்கச்சி, அம்மா எண்டு மூன்று குடும்பம் இருந்தனாங்கள்.

எனக்கு 7 பிள்ளைகள், 4 பொடியளும் 3 பொம்பிளைப் பிள்ளையளும்.

மூத்தவர் 71ம் ஆண்டு பிறந்தவர், 87ம் ஆண்டில கடைசி பிள்ளை பிறந்து 1 வயசு. 86ம் ஆண்டு மார்கழி மாசம் பிறந்தவர். எங்களுக்கு நடந்தது 87ம் ஆண்டு ஐப்பசி மாசம் 22ம் திகதி.

அப்ப என்ட கணவர் தொழில் செய்து கொண்டிருந்தவர். என்ட தங்கச்சி குடும் பம். அவவுக்கும் 6 பிள்ளையள். அவர் கடற் தொழில் செய்து கொண்டிருந்தவர். எங்கட அம்மாவும் அப்பாவும் தம்பிமார் 4 பேரும் இருந்தனாங்கள்.

செல்லடிச்சால் அருகில பள்ளிக்கூடத் திலதான் நிப்பம். இரவில அண்ணன் வீட்ட லைட் இருக்கெண்டு அண்ணன் வீட்டில படுப்பம். இரண்டு மூண்டு நாள் படுக் கப்போனம். அப்ப எங்கட பெடியள் வந்து சொன்னாங்கள், “இங்க நிக்கிறது எங்க ளுக்கு விருப்பமில்ல. நீங்கள் இரவில போய் சென். பற்றிக்ஸ் பள்ளிக்கூடத்தில படுக்கிறது நல்லமக்கா” எண்டு.

அப்ப நாங்க போனம்... அங்க நாங்க போகேக்க சரியான மழை வெள்ளம். எங்கள ஒருத்தரும் ஏற்க ஏலாம போய்ட் டுது. நிக்க கொள்ள இடமில்ல... நாங்க சுண்டுக்குளிக்க போய்ட்டம். சுண்டிக்கு ழிப் பள்ளிக்கூடத்துக்க போய் நிக்கேக்க அடிச்சாங்க செல். 20ம் திகதி இரவு. 21ம் திகதி ஆகப்போகுது.

முதலும் அடி நடக்குது. பற்றிக்ஸ் பக்க மும் விழுந்தது. சனம் ஓடி ஓடி திரிஞ்சது. எங்கட பக்கமும் எங்கட வீட்டுக்குள்ளயும் பெரிய செல்லொண்டு விழுந்தது. சன மில்லை... நாங்கள் ஒரு 10 குடும்பத்துக்கு கிட்ட நினைக்குறன் பற்றிக்ஸ் போயப் போய் வாறம்.

எங்கட பெரிய கோவிலுக்குப் போக அங்க ஃபாதர் சொன்னார். எங்களுக்கு சின்ன பிள்ளையள்தானே. எனக்கு 7 தங்கச்சிக்கு 6. அப்ப அவர் சொன்னார், “மழைக்குள்ள நனைஞ்சு இதுக்க நீங்க அசிங்கம் பண் ணிடப் போறியள்” எண்டு... அப்ப அந்த மழைக்குள்ள விழுந்து சுண்டிக்குழிக்கு போனம். அம்மா ஐயா எல்லாரும்.

21ம் திகதி விடியப்புறம் சுண்டிக்குழிக் குள்ள செல் விழுந்திட்டு... அதில ஒரு 15, 20 பேர் செத்திட்டினம்.

எங்கட முகமெல்லாம் சதை...ஐயாட முக மெல்லாம் சதை. செத்த சனத்தோட சதை.

அப்ப நாங்க அதுக்குள்ள இருந்து குழ றியழுதோம். பிறகு விடிய விடியவென கால்நடையாக நடந்து திரும்ப பற்றிக்ஸ்க் குப் போனம்.

பற்றிக்ஸ்க்கு போய் நிக்கவும் எங்களுக்கு ஆக்கள் சொல்லினம், “உங்கட தம்பிக்கு செல் விழுந்திட்டாம் உங்கட அம்மாவை தேடித்திரியிறாங்க” எண்டு.

அப்ப அம்மா எங்க எண்டு கேட்டா, “கொஸ்பிற்றல்ல” எண்டு சொல்ல அங்க போயிட்டம். என்ன நடந்தது எண்டு தெரியா. அம்மா கொஸ்பிற்றலுக்கு போட்டா. எங் கள சொன்னா இதுக்க நிக்க சொல்லி. நாங்க இதுக்க நிண்டா பெரிய கோயில டிக்க வந்து விழுந்திட்டு செல்லு.

பதறத் தொடங்கீட்டம். நாங்க அங்க ஏற் கனவே பெரிய துன்பத்துக்க நிண்டிட்டு வந்தனாங்க ரத்த கறையோட. இங்க எங்களால நிக்க ஏலாம போட்டுது நடுக் கம்.

அப்ப நாங்க சொன்னம் நல்லூருக்க போய் ஒரு வான் பிடிச்சுக்கொண்டு இங்கால கிளாலி பக்கம் அண்ணனாக்கள் அங்க தானே போட்டினம். அப்ப அங்க போவம் எண்டு.

அங்க போவம் எண்டுதான் நல்லூருக்க வந்து வானுக்கு ஓடித்திரிஞ்சா சொன் னாங்கள், “ஐயோ பெடியள் எல்லாம் காயப்பட்டவங்கள எல்லாம் இஞ்ச நல் லூருக்க கொண்டு வந்திட்டாங்க” எண்டு.

நாங்க அதுகும் பாக்கல. நாங்கள் டக் கெண்டு வானுக்கு ஓடித்திரிஞ்சம். ஒரு இடமும் வான் கிடைக்கேல. எங்களோட சேந்து ஒரு 5, 6 குடும்பம். எங்கட தங் கச்சிட புருசன்ட தமையனாக்களின்ட குடும் பம் எல்லாம் சேர்த்து ஒரு 7, 8 குடும் பம். நாங்கள் ஓடித்திரிஞ்சம். அப்ப சொன்னாங்கள் சாவகச்சேரிக்கு இங்கால எங்கயோ ஆமி வெளிக்கிட்டானம் எண்டு. பெடியள் வந்து சொன்னாங்கள்.

பர்மன் எண்ட பெடியன் சொன்னான், “அன்ரி அவன் வந்திட்டு இருக்கான் நீங்க இங்க நிக்காதீங்க” எண்டு.

அப்ப நாங்க அங்க இருக்கம். வான் கிடைக்கேல. 21ம் திகதி இரவு எங்க ளுக்கு வான் கிடைச்சிடும் எண்டாப்புறம் அங்க கிடக்கிறம். நல்லூரில ஒரு சின்னக் கோயிலுக்க வந்து செல் விழுந்துட்டு.

விடி விடியயெண்டு மளமளவெண்டு வானைப் பிடிச்சு கொண்டு நிக்கேக்க பேஸில இருந்து வந்து, “அமலாதாஸின்ட அக் காக்கள் இருக்கினம்” எண்டு. “அக்கா நாங்கள் ராத்திரி போய் எல்லாரையும் ஏத்திக்கொண்டு வந்திட்டம்... ஆமி மூவ் பண்ணுறான்... கோட்டையில இருந்து இதுக்கவரப்போறான்... அமலதாஸ் மாட் டன் எண்டிட்டு ஆஸ்பத்திரிக்க இருக்கி றான். அம்மாவும் இருக்கிறா” எண்டும் சொன்னாங்கள்.

கொஸ்பிற்றலுக்க... ஆமி புகுந்துட்டான்... ஒருத்தரும் போகேலாது எண்டு கேள்விப் பட்டதை நான் எங்கட ஐயாக்கும் சொல் லேல்லை.

காசு கூடினாலும் பறவாயில்ல எண்டு வானை புடிச்சுக்கொண்டு அராலித்துறைக்கு ஒரு 8, 10 குடும்பங்கள் அராலித்துறைக்கு போய் இறங்கேக்க... இந்தக் காலெல் லாம் இல்லாம கையெல்லாம் இல்லாம ஆக்கள் தங்கட குடும்பம் அழிஞ்சிட்டு எண்டு குழறி அழுறாங்கள்.

வேலணை சரவணைக்கு ஊர்காவற்துறை பக்கம் போறதுக்கு அராலித் துறைமுகத் தில நிண்டு பாக்குறம்... கொஸ்பிற்றல் எரியுது... சரியான புகை.

அராலி துறைமுகத்தில இறங்கி 9 - 10 வள்ளத்தில எல்லாருமா ஏறி வெள்ளைக் கொடி கட்டிப்போறம்.

என்ர மகள் பிறந்து அப்ப 1 வருசம்.

வேலணை சரவணைக்கு கிட்ட போகேக்க 3 வள்ளக்காறங்க இறங்கீட்டினம் அப்ப கெலி வரத் தொடங்க நாங்கள் குழறீட்டம்.

யாழ்பாணத்து ஏரிக்கு மேலால சுத்துறான்... நாங்கள் வெள்ளைக்கொடியைக் காட்டிக் குழறுறம் குழறுறம்... அவன் சிரிக்கிறான் சிகரட்டை பத்தி எறியிறான். அப்ப நான் என்ட பிள்ளையை தூக்கி காட்டுறன். அவன் சுத்துறான் சுத்துறான். இறங்கின 3 வள்ளக்காறங்கள் ஹெலிக்கு பயந்து போக்குகளுக்க ஒளிஞ்சவை.

ஒரு 10 நிமிசம் போக அப்ப ஒரு 9.05க்கு சுட வெளிக்கிட்டாங்கள். 9.05க்கு சுட வெளிக்கிட்டவன் பத்தே முக்கால் மட்டும் அடிச்சான். கிரனெட்டு எல்லாம் எறிஞ்சான்.

*தொடர்தல் 54ம் பக்கம்*

# 9:05க்கு சுட வெளிக்...

53ம் பக்கத் தொடர்ச்சி...

காலெல்லாம் கிழிஞ்சு செத்ததுகள், ஓடு கழண்டு செத்ததுகள் எண்டு வள்ளமெல்லாம் ரத்தவெள்ளம்.

பாயக்கூடிய பிள்ளையள் எல்லாம் பாஞ்சு வள்ளத்தைச் சுத்தினதுகளும் செத்ததுகளும்... வள்ளத்துக்கை எல்லாருக்கும் சூடு பட்டதே தெரியாது. செத்தவையும் காயப்பட்டவையும் ஒண்டாக் கிடக்கிறம். எங்கடை ஐயாக்கும் காயம். ஓடு கழண்டிட்டுது, அடுத்த வள்ளத்திலயும் எங்கடை தங்கச்சி புருசன்ரை தமையன் பெஞ்சாதி. அவவுக்கும் ஓடு கழண்டிட்டுது, எனக்கும் கையில சூடு. 2-3 இடத்தில காயம்.

பிறகு அடிச்சவன் போய் கொஞ்ச நேரத்தில திரும்பி வந்தான்... தப்பின நாங்கள் இறங்கி பாலத்தில ஏறுறம். மறுபடியும் வாறான்... எங்கட தங்கச்சியின்ட பிள்ளைக்கு குடலெல்லாம் வெளிய வந்துட்டுது. அப்ப குட்டிக்கு வயசு 13 - 14 இருக்கும்.

அப்ப எங்களோட வந்த ஆம்பிளையள் எல்லாம் பயத்தில ஓடிட்டாங்கள். சறமெல்லாம் கழண்டு... வெறுமேனியோடயெல்லாம் ஓடினாங்கள்... பொஞ்சாதி புள்ளையளயும் கவனிக்கேல்ல.

அப்ப எங்கட தங்கச்சியும், தங்கச்சியின்ட புருசனும் என்ர மகனும் ஆக்கள தூக்கி தூக்கி பாலத்தில ஏத்த... வந்துட்டாங்க.

எங்கள சொன்னாங்கள் ஓடெண்டு. அப்ப ஓடு ஓடெண்டு சொல்லேக்க எனக்கு என்ன செய்ய எண்டு தெரியேல.

அப்ப என்ட தங்கச்சியின்ட மகளுக்கு குடல் பலூன் மாதிரி வெளிய நிக்குது. அது சொல்லுது. ஐயோ பெரியம்மா ஓடுங்க ஓடுங்க எண்டு. மறுபடியும் வந்தவன் அடிக்குறான் அடிக்குறான். பாலத்தில நிண்ட நான் நினைக்குறன் அதுகள் எல்லாம் செத்திருக்கும் எண்டு. திரும்பி பாக்கேல. நாங்கள் ஓடுறம் ஓடுறம். போய் அந்த முள்ளுப் பத்தையளுக்க ஒளிஞ்சிட்டம்.

அப்ப பாலத்தில திருப்ப வந்து அடிச்சிட்டு போட்டான்.

நாங்கள் அப்படியே கிடக்குறம்... எங்க... ஒருத்தருக்கும் உணர்வில்ல... நடக்கவும் ஏலாது கதைக்கவும் ஏலாது... எனக்கு இப்பயே சோருது... நினைச்சா! கதைக்க முடியாமப் போச்சு... அப்படியே கிடந்தன். அப்ப அங்கால துறைமுகத்தில இருந்தவைக்கு தெரியுது... பாலத்தில அடிக்குறான். அப்ப சனம் வந்திருக்கு எண்டு தெரியுது அவைக்கு.

ட்ரக்டர் சத்தம் கேக்குது... நாங்கள் ஆமி தான் வாறான் எண்டு ஒருத்தரும் ஊ காட்டேல... ஆ காட்டேல... சத்தம் கேக்குது. அந்த சருகுகளுக்கால வருது... அப்ப வந்து பாலத்தடிக்க வரேக்க... ஆக்கள் ஏறுங்க வாங்க வாங்க எண்டு சொல்லுறான்... அப்ப நாங்கள் ஆரோ காப்பத்தப் போறாங்கள் எண்டு பார்த்தா பொதுமக்கள்...

பின்ன கிடந்த காலில்லாம உடம்பில்லாம முகமில்லாம கிடந்த செத்த ஆக்களோட என்னையும் தூக்கி போட்டாங்கள்.


என்ட மகள்... இங்க இருக்கிறா... அவாக்கு இதுக்கிள்ள(தோளில்) இவ்வளவும் இல்ல... என்ட தம்பி அவருக்கு சூடு... என்னையும் செத்த ஆக்களையும் பெருங்காய ஆக்களையும் 2 ட்ரக்டர் நிறைய போட்டுக்கொண்டு ஊர்காவத்துறைக்குதான் போறாங்கள்... மிச்ச ஆக்கள மற்ற ட்ரக்டர்கள் ஏத்திக் கொண்டு வருது...

ஊர்காவற்துறைக்குப் போகேக்கதான்

பாக்குறன்... என்ட மகளுக்கு காயம்... என்ட ஐயா... என்ட மகளுக்கு இதுக்குள்ள சூடு... வாயாலயும் காதாலயும் ரத்தம் வருது... எங்கட மாமி ஒராள்... எங்கட தங்கச்சியின்ட புருசன்ட தாய்... அவாக்கும் பெரிய கண்டம்... அதைப் பார்த்த ஏக்கத்தில அவான்ட மகளும் தாயும் ஏக்கத்தில செத்தவை.

10 - 15 பெருங்காயக்காரங்கள 22ம் திகதி 3 மணிக்கு கொண்டுபோய் போட்டவங்கள் 24 மட்டும் எங்கள பாக்கவே இல்ல. அப்ப அங்க காசெண்டு எங்களுக்கு தெரியா... மூளாய் கொஸ்பிற்றல்ல பாக்க காசெண்டு எங்களுக்கு தெரியா...!

ஆள் ஒண்டு சண்டிலிப்பாய் ஆக்கள் மூளாயில இடம்பெயந்து இருக்கினம்... எண்டு ரேடியோவில... சொல்லியிருக்கு... அப்ப இவர்ர ஃபிரண்ட் ஒராள் குடும்பம் யாழ்ப்பாணத்துச் சனம் எண்டதும் பாக்க வந்திருக்கினம்... அப்ப என்னை கண்டிட்



> நாங்கள் அப்படியே கிடக்குறம்... எங்க.. ஒருத்தருக்கும் உணர்வில்ல... நடக்கவும் ஏலாது கதைக்கவும் ஏலாது... எனக்கு இப்பயே சோருது... நினைச்சா!

ஊர்காவத்துறை கொஸ்பிற்றலுக்கு கொண்டு போனா... அங்க சொல்லிப்போட்டினம் பெருங்காயக்காரங்கள எல்லாம் மூளாய்க்கு கொண்டு போங்கோ எண்டு...சரி மூளாய்க்கு போறம்...

அப்ப காலில்ல கையில்லா பெருங்காயக்காரங்கள... என்னை எல்லாம் திரும்ப ஏத்திக் கொண்டு போர்ட்டில கொண்டு போய் ஏத்தி மூளாய்க்கு போனாங்கள். மூளாய்க்கு கொண்டு போய் அங்க ஒப்படைக்கேக்குள்ளை ஒரு பகல் ரெண்டு ரெண்டரை இருக்கும்... எங்கள கொண்டு போய் ஒப்படைச்சுட்டாங்கள். ஒப்படைச்சா... கேப்பாருமில்ல... எடுப்பாருமில்ல.

நாங்க ஒரு 10, 12 பெருங்காயக்கார ஆக்கள்... எல்லாம் எங்கட சொந்தக்காரர்.

எங்கட தங்கச்சிக்கு... அவ அப்ப நிறை மாதம்... அடுத்தமாசம் கார்த்திகைக்கு புள்ளை பெறுற மாசம்... அப்ப அவாக்கு வயிறெல்லாம் கிளிஞ்சு...அப்ப அவாவையும் அனுப்பினம்... பிள்ளைக்கு என்ன நடந்தெண்டு தெரியா.

டினம்... அந்த ஊர்ச்சனம் தான் சாப்பாடு தண்ணி வென்னி என்னெண்டாலும்...

அப்ப 23ம் திகதி 24ம் திகதி இயக்க பெடியள் வாறாங்கள்... இவற்ற ஒண்டு விட்ட அக்காட மகன்... ஏரியா பொறுப்பாளர்... கல்லுண்டாய்ல நிண்டிருக்கிறார்...

23ம் திகதி பேப்பர் ரிப்போட்டர் காரர் எங்கட பெயர் விபரங்கள எடுக்கேக்க நாங்கள் முழு பெயரை குடுத்தம். அப்ப அதை பார்த்துட்டு ஆர் இது எங்கட சொந்தக்கார பெயரா இருக்கெண்டு பதறிக்கொண்டு எங்க ஊர்ப் பெடியளும் வந்தவங்கள்...

வந்து பார்த்தா... எங்கள பாக்கேலாது... ரத்த வெடில் அடிச்சு புலுண்டிப் போய்க் கிடக்குறம். உங்களுக்கு ஆள் இருக்கா... காசிருக்கா... என்னெண்டு எதுவுமே கேக்கேல இந்த டொக்டர்மார். மனிதாபிமானம் இல்லாத செயலெல்லாம் அவங்கள் செய்தவங்கள்...

அப்ப 24ம் திகதி வந்த பெடியள் டொக்

ரர் மாரப் புடிச்சு சரியான பிரச்சனை பண்ணினாங்க... சொன்னாங்கள்... இப்ப வைத்தியம் செய்யோணும்... இப்ப திரும்ப வருவம் எண்டு சொன்னாங்கள்... அப்ப நான் வாசலிலதான் கிடந்தனான்... உடன மிஸ்மார் வந்து எங்கள தூக்கிக் கொண்டு சொல்லிச்சினம்... இண்டைக்கு உங்கள ஒப்பரேசன் தியேட்டருக்கு கொண்டுபோறம் அது இதெண்டு... அப்ப இரவிரவா ஒப்பரேசன் நடக்குது... அப்ப ஊரின் சனங்கள்தான் உடுப்புகள், சறங்கள் எல்லாம் கொண்டுவந்து தந்தவை. சின்னப் பிள்ளையளுக்கெல்லாம் கொண்டுவந்து தந்தவை...

25ம் திகதிதான் எங்கள கிளீன் பண்ணி பிழபி போட்டு மருந்துகள் கட்டி விட்டா... எங்களுக்கு என்னெண்டா புழுப் புடிச்சுட்டு. கூடு கூடா புழுப் புடிச்சு அந்தரிச்சம்...

அங்க செத்த ஆக்கள அங்கால பின்னால கொண்டுபோய்ப் போட்டாங்கள். இலையான் எண்டா தாங்க ஏலா... பிறகு 5 - 6 நாளையால தாட்டாங்கள்...

அப்ப எங்கள எல்லாருக்கும் புழு வெளிக்கிடத் தொடங்கிட்டு கட்டின இடங்களுக் கால. அப்ப என்ட மகன் அங்க நிண்ட வேப்ப மரத்தில ஏறி இலையளைப் புடுங்கிக் கொண்டுவந்து புழு வெளிக்கிடுற இடங்களுக்கு ஓட்டினவன். எல்லாருக்கும்.

அப்ப 3 நாளையால வந்த பெடியள் சொன்னாங்கள்...நாங்கள் பூச்சி போளை காச்சிக்கொண்டு வாறம்... அதை ஊத்தி கட்டுங்க எண்டு...அப்படி சரியா துன்பப் பட்டுட்டம்

28 - 29 பாக்கேக்க... அந்த முதலைக் கெலி வந்து மூளாய் கொஸ்பிற்றலின்ட ஓ.பி.டி.க்குள்ள அடிச்சுட்டான்... அடிச்சா அதுக்க நிண்ட சனமெல்லாம் செத்து போச்சு... டொக்ரர்மார் சொல்லிட்டினம்... ஏலக்கூடியவை ஓடுங்க... ஏலாத ஆக்கள விட்டுட்டு போகச்சொல்லி. எனக்கு ஏலாது. என்ட தங்கச்சிக்கு ஏலாது. ஒண்டும் செய்ய ஏலாது. எனக்கு இப்பவும் நடுங்குது...என்ட தங்கச்சியின்ட புள்ளை காயக்காரி. அப்ப அவள தூக்கிக்கொண்டு தான் ஓடோணும்... அப்ப அவள் சொன்னாள்... என்ன விட்டுட்டு ஓடுங்கோ எண்டு. அப்ப என்ட தங்கச்சி சொன்னாள் நாங்க துன்பப்பட்டு போனம்... குட்டிய தூக்க ஏலாது... வாங்க போவம் எண்டு.

நொண்டி நொண்டி நொண்டி சனமெல்லாம் போகுது ஆடு மாடு மாதிரி... மூளாய் பக்கமிருந்தும் அடிக்குறாங்கள்... வந்து விழுகுது... நாங்களும் நொண்டி நொண்டி சனத்தொட போறம்... என்ட தங்கச்சிக்கு கொஞ்ச தூரம் போகேல... அவாக்கு குழந்தை பெறுறதுக்கு சுகவீனம்...காலெட்டு வைக்க ஏலாது... அவள ரோட்டில இருத்தி... நானும் கத்துறன் குழறுறன்... மறிச்சு மறிச்சு கத்துறன்... ஒருத்தரும் நிக்க மாட்டேன்டுடாங்க...

ஒரு காரொண்டு வந்தது... முன்னால கண்ணாடியெல்லாம் உடைஞ்சு. கண்டுட்டு வந்து நிப்பாட்டி கேக்க நான் இதான்பிரச்சனை எண்டு சொல்ல... அப்ப கார்காரன் சீட்டுக்கு சாக்கெல்லாம் போட்டு... எங்க கொண்டுபோய் விடோணும் எண்டு கேக்க... நான் சொன்னன்... எங்கள கொண்டுபோய் சில்லாலையில ஒரு ஒண்ட விட்ட அண்ணன் இருக்கிறார். அங்க டொக்ரர் பாக்கியநாதன்ட வீட்டில விடுங்கோ... நாங்கள் கேட்டு போறம் எண்டு... அப்ப அந்த புண்ணியவான்... எங்கள கொண்டுபோய் டொக்ரர் பாக்கியநாதன்ட ஆஸ்பத்திரிக்க விட்டா... சனமெல்லாம் ஓடியரத் தொடங்கீட்டு... அப்ப அந்த கார்க்காரன் எங்கள... என்னையும் மகனையும் ஆஸ்பத்திரிக்க விட்டுட்டு தங்கச்சிய கொண்டுபோய் வடலிக்க விட்டான்... ஏனெண்டா தங்கச்சிக்கு குழந்தை பிறக்கப்போகுது...

தொடர்தல் 57ம் பக்கம்

**54ம் பக்கத் தொடர்ச்சி...**

அப்ப டொக்ரர் பாக்கியநாதனிட்ட நான், இப்படி என்ட அண்ணர் ஒருத்தர் மாஸ்டர் எண்டு பெயரும் சொல்ல அவர் தனக்கு தெரியும் எண்டு சொன்னார்... மாஸ்டர தெரியும் எண்டு சொன்னார்... நீங்க இருங்கம்மா எண்டு சொல்லி... எங்களுக்கு ஏலாது... கதைக்க ஏலாம நிண்டம்... அப்ப கோப்பி எல்லாம் பிஸ்கட் எல்லாம் தந்து... எனக்கும் மகனுக்கும் தந்திட்டு இருக்க...அங்க தங்கச்சிக்கு பாத்து... குழந்தை பிறந்திட்டு ஆண் குழந்தை... அது வடலிக்க பிறந்திட்டு... எங்களுக்கு தெரியா...

உடன டொக்ரர் பாக்கியநாதன் அண்ணனுன்னு ஆள்விட்டு கூப்பிட்டு... அண்ணர் வந்து எங்கள ஏத்திக் கொண்டு தன்ட வீட்டுக்கு போனா... எங்களுக்கு புழு வந்திட்டு... அப்ப நான் சொன்னன் அண்ண எங்களுக்கு பெடியள் பூச்சி போளை காச்சி தட்ட தாற எண்டு சொன்னவங்கள் எண்டு... அப்ப எங்களில வெடில்... ரத்த வாடை... ஒழுங்கா கழுவேல கொள்ளேல... கிழிஞ்ச அலங்கோல உடுப்புகளோடதான் நிண்டனாங்கள்... அப்ப அண்ணர் அவைன்ட அக்கம் பக்கத்தில சகோதரங்களிட்ட போய் பெரிய உடுப்பெல்லாம் கொண்டுவந்து தந்தார். எங்களுக்கு நடுக்கம்... நிக்க ஏலாம... அப்ப சாப்பாடும் தந்து நீங்க இருங்க... நான் போய் தங்கச்சிய பாத்துட்டு வாறன் எண்டு போனார்...

இரவு வந்து சொன்னார்...குழந்தை பிறந்திட்டு... மருந்து ஏத்தி இருக்கு... அவா சரியா பெலகீனமா கிடக்கிறா எண்டு...

பிறகு இரவு சுடுதண்ணி வைச்சு... அவற்ர பொஞ்சாதியும் மாமியும் சேந்து என்னை துடைச்சு எடுத்து... அப்ப என்ட காயமெல்லாம் மணக்குது... பின்ன சரியெண்டு... அடுத்தநாள் காலையில டொக்டர் பாக்கியநாதனிட்ட கொண்டு போனா அவர் காயத்தை பாத்துட்டு சொன்னார் இதுக்கு மருந்து கட்ட ஏலா எண்டு... ஏனெண்டா மணக்குது... சதையும் அழுகி மணக்குது...

அப்ப சரியெண்டு... நாங்கள் ஸ்பிரே பண்ணி மணக்காத மாதிரி ஏதும் செய்வம் எண்டு ஏதோ செய்தினம்...

2 - 3 நாளா எங்கள வைச்சிருந்தா அங்க பண்டத்தரிப்பு சந்திக்கு ஆமி வந்துட்டான்...மாதகலில இருந்து.

அப்ப ரேடியோவில சொன்னாங்கள்... அராலித்துறையில சூடுபட்ட சூட்டி, நீத்தாம்மா மரியதாஸ் எண்ட பெயர் குடுத்த ஆளை நாங்கள் இயக்கம் கூட்டிக்கொண்டு வந்து இங்க சங்கானையில ஒரு டொக்ரரட்டை விட்டிருக்கம் எண்டு சொன்னதும் எங்கட அண்ணர் உடன ஆக்கள விட்டு அவையையும் வடலியில கொண்டந்து விட்டாச்சு...

மாதகலில இருந்து அடிச்சு அடிச்சு வெளிக்கிட்ட ஆமி என்ன செய்தான் எண்டா வடலிக்கயும் புகுந்துட்டான்... வடலிக்கயும் ஆக்கள சுட்டிருக்கிறான்... இவா அப்ப இங்க கிடந்தவா... கட்டில்ல கிடந்தவா கீழ விழுந்து பிரேதங்களோட கிடந்தா... அடுத்தநாள் ஆமி வந்து பிரேதங்கள கிண்டி எடுத்து தப்பின ஆக்கள யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு ஹெலியிலகொண்டு போனாங்கள்.

ராவுராவா சத்தம்... அடிச்சுக்கொண்டு வாரான்... சனமெல்லாம் நடுங்கி கொண்டு கிடந்துது... விடிய நியுஸ் வந்திச்சு... வடலிக்க கிடந்தவையெல்லாம் செத்துட்டு எண்டு...

பிறகு எங்களுக்கு புழு... அப்ப சிஸ்டர்ஸ் ஃபாதர் மார் போய் இப்படி காயப்பட்ட ஆக்களுக்கு புழு பிடிச்சு அந்தரிக்குதுகள்... பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரிக்கு விடோணும் எண்டு சொல்ல அவன் விடமாட்டன் எண்டுட்டான்.









**“ அந்த முதலைக் கெலி வந்து மூளாய் கொஸ்பிற்றலின்ட ஓ.பி.டிக்குள்ள அடிச்சுட்டான்... ”**

மறுபடியும் ஒரு 10 நாள் அங்க இருந்து பூச்சி போளை அடிக்குறதுமா பாக்கியநாதன் டொக்ரர் எங்கள பாத்துக்கொண்டு ஒரு 10 நாளா அங்க இருந்தம்.

அப்ப ஃபாதர் சொன்னார் நாங்கள் நடையா போவம் எண்டு. வெள்ளை கொடியும் கட்டிக்கொண்டு ஃபாதர் சிஸ்டர் எண்டு ஆமி பெரியவங்களோட கதைச்சு அங்க வர சொன்ன பிறவு அங்க போறம்... 5 சிஸ்டர்மாரும் 3 ஃபாதரும் நானும் என்ட மகனும் தங்கையும் அண்ணரும் அங்க போறம்...

அப்ப அவன் காயத்தை பாத்துட்டு சொன்னான்... இதுக்கு மருந்து கட்ட ஏலா... நாங்கள் இவைய யவ்னாக்கு கொண்டு போறம் எண்டு... எனக்கு யவ்னாக்கு ஆமி கொண்டுபோற எண்டதும் எனக்கு நடுங்க தொடங்கீட்டு... குழறி அழ... அண்ணர் சொன்னார் நானும் வாறன் எண்டு... அப்பவும் நான் இல்ல கொண்டு குழற ஃபாதர் சொன்னார் இப்படி இவா பயந்துபோய் இருக்கிறா எண்டு... அப்ப ஒரு வாகனமும் ஓட்டமில்ல... பாஸ் தருவம். ஒரு மாட்டுவண்டியில...நாங்க சொல்லுற பாதையில தான் போகோணும் எண்டு கார்த்திகை மாசம் 11ம் திகதி பாஸ் தந்து விட்டாங்கள்...
அப்ப செக் பண்ணி பண்ணி நடந்து நடந்து ஒரு மாதிரியா யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு போய் சேர்ந்தம்... அப்பதான் தெரியும் அங்க வடலிக்க இருந்த என்ட தங்கச்சி... அவா உயிரோட இருக்கிறா எண்டது. எங்கட அண்ணராக்களுக்கு அப்பதான் தெரியும் இவளவுபேர் செத்து இவளவு பேர் தப்பி இருக்கு எண்டு.

சரியான உத்தரிப்பு... இவ்வளவு உத்தரிப்பு எதுக்கெண்டு... இத விட தேவை எண்டாகிப்போச்சு... அங்க உந்த கல்லுண்டாய் பக்கமெல்லாம் தலை சிரட்டை, கால் கை எல்லாம் மிசினால போட்டு மிதிச்சிருக்கான்... கொழுத்தியிருக்கிறான்... பாக்க ஏலாது... கல்லுண்டாய் பொம்மை வெளி எல்லாம் எரிஞ்சு... பல்லு, மண்டை, எல்லாம் நெரிஞ்சு கிடந்த... பெரிய பெரிய செயின்பிளக்கால ஏத்தியிருக்கிறான் போல... செல்லும் அடிச்சிருக்கான்...

அராலித்துறையில இருந்து போய், செத்த எங்கட ஐயா, என்ட மகள் குயின் எண்டு சொல்லுறனாங்கள் அமலநாயகி பெயர் எல்லாமா ஒரு 17 பேரை பெட்டியில கை கால் எல்லாம் முறிச்சு வைச்சு அங்கயே தாட்டனாங்கள்... அன்னரோஸ் என்ட தங்கச்சியும், அவாட புருசனும் என்ட மகனும் சேந்துதான் செத்த சனங்களை தாட்டது...

அவ்வளவும் ஊர்காவல்துறை சவக்காலையில இப்பவும் இருக்கு... இவ்வளவு பேரும் செத்த எண்டு பெயரல்லாம் ஊர்காவற்துறை கொஸ்பிற்றல்லில இருக்கு... நாங்களும் சவக்காலையில ஒரு கல்லொண்டு பிறகு பதிஞ்சு வைச்சனாங்கள்...

திரும்ப யாழ்ப்பாண கொஸ்பிற்றலில இருந்து ஒண்டரை மாசத்துக்குப் பிறகு சொந்த இடத்துக்கு போனம். ஆஸ்பத்திரியில முழுக்க காயப்பட்ட ஆக்கள்தான்... தமிழ் டொக்ரர்மாரும் நிண்டவை... சிங்கள டொக்டர் நேர்ஸ் ஆக்களும் நிண்டவை...ஆமியும் வருவான்...ஆனா இந்தியன் ஆமிதான் வருவான்.

அங்க அராலித்துறையில இருந்து போய் ஊர்காவற்துறையில இறங்கேக்க 3 கெலி அடிச்சுதானே... அடுத்த நாள் பேப்பரில செய்தி குடுத்துட்டாங்கள்... இப்படி அராலித்துறையில இருந்து போன 50க்கு மேற்பட்ட விடுதலைப்புலிகளை தாங்கள் முறியடிச்சுட்டம்... பொம்மையை காட்டினவை எண்டு இந்திய செய்தியில சொல்லினம்.


என்ரை கைக்குழந்தையைப் பாத்தாவது சுடாமல் விடுவானெண்டு பார்த்தா அவன் பொம்மையைக் காட்டினவையெண்டு வாய் கூசாம அடுத்தநாள் ரேடியோவில சொல்லுறான்.

உப்பிடியானவங்களாலைதான் எங்களுக்கு விடிவோ தீர்வோ வருமெண்டு இன் னும் நம்பிறம் பாருங்கோ. அதுதான் அழிக்க நினைக்கிறவங்கட வெற்றி.

◆◆◆

*வடலி - வடலியடைப்பு (சிறு கிராமம்)*

*முதலைக்கெலி - Mi-24 தாக்குதல் உலங்கு வானூர்தி*



gangatharan.k@thaiveedu.com

# வல்வைப் படுகொலைகள் - 1989

**இந்தியப் படைகள் வல்வையில் நிகழ்த்திய படுகொலைகள் மிகவும் பயங்கரமானவை. இக்கொலை குறித்து வல்வை. ந. ஆனந்தராஜ் 'வல்வைப் படுகொலைகள்' என்ற நூலை எழுதி 1989 இல் வெளியிட்டிருந்தார். சென்னை சோழன் பதிப்பகம் வெளியிட்ட இந்நூலில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் இங்கு தரப்பட்டுள்ளன.**

பிரித்தானியாவுக்கு ஜாலியன்வாலாபாக் படுகொலை. அமெரிக்காவுக்கு மைலாய் படுகொலை. அதேபோல், இந்தியாவுக்கு வல்வைப் படுகொலை.

1989ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 2, 3, 4ம் திகதிகளில் 63 உயிர்களைக் கொன்றும் பல அப்பாவிப் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியும் அராஜகம் புரிந்த இந்தியப் படையினர் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு ஊரடங்குச் சட்டத்தை அமுல்ப்படுத்தி வல்வை நகரத்தையே சுடுகாடாக்கினர்.

வல்வை வீதிகளிலும் இருந்தும் வீடுகளிலும் இருந்தும் இழுத்துவரப்பட்டு 52 பொது மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் குழந்தைகள், பெண்கள், மாணவர்கள், வயோதிபர்களும் அடங்குவர். 11 இளைஞர்கள் உடுப்பிட்டி இந்திய இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அடித்துக்கொல்லப்பட்டு, அங்கேயே எரிக்கப்பட்டனர்.

பல இளம் பெண்களும் 15 திருமணமான பெண்களும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

200 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து உயிர் தப்பியுள்ளனர் பலர் தமது அவயங்களை இழந்துள்ளனர்.

123 வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டுள்ளன. ஏனைய வீடுகளிலிருந்து விலையுயர்ந்த பொருட்கள் இந்தியப் படையினரால் களவாடப்பட்டன. நகரில் இருந்த 45 கடைகள் எரித்து சாம்பலாக்கப்பட்டன. சில கடைகளின் முதலாளிகள் கடைக்குள் வைத்து பூட்டப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்டுள்ளனர். 62 போக்குவரத்து வாகனங்களும் 12 மீன்பிடிப்படகுகளும், 176 மீன்பிடி வலைகளும் எரியூட்டப்பட்டன.

இவ்வாறு இந்தியப்படையினர் மேற்கொண்ட மிலேச்சத்தனமான நடவடிக்கைகள் காரணமாக வல்வை மக்கள் அயல் கிராமங்களில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்தனர். வல்வை நகரமே வெறிச்சோடிப்போயிருந்தது.


இலங்கை இராணுவம் மேற்கொண்ட வடமராட்சித் தாக்குதலினால் பல்லாயிரக் கணக்கான மக்கள் அகதிகளாகப்பட்டனர் என்று கூறிக்கொண்டு, உணவுப் பொட்டலங்களைப் போட்டு, இலங்கை மண்ணில் ஊடுருவிய இந்தியப்படை அதைவிடப் பல்மடங்கு மக்களை அகதிகளாக்கியதுடன் உயிர்களையும் சொத்துக்களையும் அழித்துக் கோரத்தாண்டவம் ஆடியது.

ஆகஸ்ட் 12, 1989 இலண்டனில் இருந்து வெளியாகும் 'தி கார்டியன்' என்ற பத்திரிகையில் அதன் கொழும்பு நிருபரான கிறிஸ் நற்றோல் பின்வருமாறு எழுதியிருந்தார்.

"மூன்று நாட்களாக ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து இந்திய இராணுவம் வல்வையில் படுகொலைகளை நடத்தியுள்ளது. இந்த விபரங்களை வெளியே தெரியாதவாறு இந்தியப் படையினர் மூடி மறைத்துள்ளனர். இத்தாக்குதலில் அக்கிராமத்தையே முற்றாக அழிப்பதற்கு முயற்சி செய்துள்ளதுடன் வைத்தியக் குழுவைக் கூட அங்கு செல்வதற்கு அனுமதிக்கவில்லை.

வல்வெட்டித்துறையே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேறுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் பிறந்த ஊராக இருப்பதாலும் பல தளபதிகள் இங்கிருந்தும் உருவாக்கப்பட்டதாலும் பழிவாங்கும் ஒரு செயலாகவே இத்தாக்குதல் அமைந்துள்ளது.

இதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 52 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அனேகமானவர்கள் தமது அவயங்களை இழந்த நிலையில் படுகாயமடைந்துள்ளனர். இந்த நகரத்திலிருந்த பெரும்பாலானோர் இடம் பெயர்ந்துள்ளதால் நகரம் இப்போது பாலைவனம் போல் காட்சியளிக்கின்றது."




> "இலங்கை இராணுவம் மேற்கொண்ட வடமராட்சித் தாக்குதலினால் பல்லாயிரக் கணக்கான மக்கள் அகதிகளாகப்பட்டனர் என்று கூறிக்கொண்டு, உணவுப் பொட்டலங்களைப் போட்டு, இலங்கை மண்ணில் ஊடுருவிய இந்தியப்படை அதைவிடப் பல்மடங்கு மக்களை அகதிகளாக்கியதுடன் உயிர்களையும் சொத்துக்களையும் அழித்துக் கோரத்தாண்டவம் ஆடியது."

1989 ஆகஸ்ட் 2ம் திகதி முற்பகல் 11:30 மணி.

திடீரென வல்வெட்டித்துறைச் சந்திப் பகுதியில் ஏற்பட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் அந்த ஊரையே ஒரு கணம் கதி கலங்கச் செய்தது. சுமார் 12:15 மணியளவில் பல்லாயிரக்கணக்கான இந்திய இராணுவத்தினர் அந்த ஊரைச்சுற்றி வளைத்தனர்.

சந்தியிலுள்ள வல்வை சனசமூக சேவா நிலையம், கடைகள், மினி வீடியோ போன்ற இடங்களில் நின்ற 30 இளைஞர்களை இழுத்து வந்து நடுத்தெருவில் உச்சி வெய்யிலில் இருக்க வைத்தார்கள். அங்கு நின்ற சீக்கிய ஜவான் திடீரென தனது தானியங்கி ரைபிளின் விசையைத் தட்டிவிட்டான். அவ்விடத்திலேயே பலர் துடிதுடித்து மரணமடைந்தனர்.

அதேநேரம் இன்னொரு பிரிவினர் கலைச்சோலை புத்தகக் கடை, கலைச்சோலை பான்சி பலஸ், சேகவன் ஸ்ரோர்ஸ் என்பவற்றை வெடிவைத்துத் தகர்த்துச் சாம்பராக்கினர். பின்னர் சிவபுர வீதியிலுள்ள அனைத்து வீடுகளையும் கொளுத்திச் சுடுகாடாக்கினர்.

புட்டணிப் பிளையார் கோயில் பகுதியில் அராஜகம் புரிந்த இந்தியக் கும்பல் மகேந்திரராஜாவின் காரையும் வீட்டுச் சாமான்களையும் எரித்துவிட்டு அவரது 42 வயதான தம்பி வேலும் மயிலும் என்பவரைக் கதவுடன் நிறுத்தி வைத்துச் சுட்டுக்கொன்றது. மகனைச் சுடவேண்டாம் என்ற கும்பிட்டவாறு ஓடிவந்த தாயாரின் முதுகிலும் சூடு விழ அவர் துடிதுடித்துக் கீழே விழுந்தார். அதே கணத்தில் மகேந்திரராஜாவும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பின்னர் தீருவில் ஒழுங்கையிலுள்ள வீடுகளை எரித்த இந்திய இராணுவக் கும்பல் அங்கிருந்த பெண்களை ஒரு பக்கமாகவும் ஆண்களை மறுபக்கமாகவும் நிற்க வைத்து பெண்கள் கதறக்கதற அவர்கள் கண் முன்னாலே அந்த 8 ஆண்களையும் சுட்டுக்கொன்றனர்.

சீக்கிய சிப்பாய்கள் சில வீடுகளுக்குள் சோதனை என்ற பெயரில் நுழைந்து இளம் பெண்களை மட்டுமல்ல தலை நரைத்துச் முதுமை தட்டிய பெண்களையும் கூட ஆடைகளைக் கழைந்து, நிர்வாணமாக்கி தங்கள் காமவெறியை அடக்கிய கோரச் சம்பவங்கள் பல்வேறு இடங்களில் நடைபெற்றன. இதனை வெளியே சொன்னால் முழுக் குடும்பத்தையே சுட்டுக் கொன்று விடுவோம் என்று மிரட்டிவிட்டே சிப்பாய்கள் சென்றனர்.

மூன்றாம் நாள் வல்வெட்டி என்ற கிராமத்தில் வீட்டினுள் இருந்த 70 வயதான மூதாட்டி நடராஜா நல்லமுத்து என்பவரையும். நாவலடி என்ற இடத்தில் 15 வயது மாணவியான பவபிருந்தா என்பவரையும் கெருடாவில் என்ற இடத்தில் 29 வயதான செல்வன் கந்தன் என்பவரையும் சுட்டுக்கொன்றுவிட்டு ஆகஸ்ட் 4, 1989 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தமது முகாம்களுக்கு இந்தியப்படை திரும்பியது. அவர்கள் போகும் போது தங்களால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உடல்களை உடனடியாக எரித்து விடும்படி கட்டளையிட்டு விட்டுச் சென்றனர்.

அந்த வெறிபிடித்த இந்திய இராணுவத்தினர் அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறியதும் தமது வீடுகளில் இறந்து அழுகி நாற்றமடித்துக் கொண்டிருந்த உடல்களை அந்தந்த இடங்களிலேயே மரக்கட்டைகளைப் போட்டு பொதுமக்கள் எரித்தனர், கணவனின் உடலை மனைவியும் தந்தையின் உடலை மகளும் மகனின் உடலைத் தாயும் தகனம் செய்த அந்தக் கொடூரமான நெஞ்சை உருக்கும் நிகழ்வுகள் அன்று வல்வையில் நிகழ்ந்தன.

வல்வைப் படுகொலைகள் பற்றி இந்திய வானொலியும் தூர்தர்ஷன் தொலைக்காட்சியும் இவ்வாறு தெரிவித்தன.

"இலங்கை யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறைப் பகுதியில் இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் 24 சிவிலியன்கள் கொல்லப்பட்டதுடன் விடுதலைப்புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டதில் சில வீடுகளும் கடைகளும் சிறிது சேதம் அடைந்தன. இம் மோதலில் ஆறு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்".

இவ்வாறு தான் 'அமைதிப்படை' என்னும் போர்வையில் இலங்கைக்கு வந்த இந்தியப்படை எமது மக்களின் ஒவ்வோரு தமிழ்க் கிராமங்களிலும் கோரத்தாண்டவமாடி விட்டு அனைத்தையும் மூடிமறைத்தது.

■ ■ ■



# இந்தியப் படையின் யாழ். நகரைக் கைப்பற்றுவதற்கான ஒப்பரேஷன் பவான் நடவடிக்கை (1987 ஒக்ரோபர்)

1. **ஒக் - 10** இந்தியப் படையினர் புலிகளைத் தாக்கி ஆயுதங்களைப் பறிமுதல் செய்ய முடிவு செய்தபின்னர் யாழ் நோக்கிய படைநடப்பினை ஆரம்பிக்கின்றனர்.

2. **ஒக் - 11** இதற்கு உதவும் நோக்குடன் காரைநகரிலிருந்து யாழ் நோக்கி இன்னொரு படைப்பிரிவு நகரத் தொடங்குகிறது

3. **ஒக் - 12** பருத்தித்துறை வீதியூடாக வந்த இன்னொரு பிரிவு கோப்பாயை அடைகிறது. இந்த அணி இருபாலையிலிருந்து நல்லூரை நோக்கிப் பயணிக்கையில் நிலக்கண்ணி வெடிகள் இருக்கும் என்பதால் தனது பயணத்தை ஒழுங்கைகளூடாகவே தொடர்ந்தது. அது நல்லூரை அண்மித்த வேளையில் வெடித்த ஒரு கண்ணிவெடியால் 6 இராணுவத்தினர் கொல்லப்படவே பதிலடியாக பலத்த வெறிகொண்ட தாக்குதகளை நடத்தியது. கள்வியங்காட்டு சந்தியடி, கடைகள் என்பவற்றில் நின்ற பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர்.

4. **ஒக் 13, 14** நாவற்குழியிலிருந்து ஒரு அணி அரியாலை, கச்சேரியடியூடாக யாழ் கோட்டையை நோக்கி நகரத் தொடங்குகிறது கண்டிவீதி வழியாக புகையிரதப் பாதை மீதாக வந்த இந்தப் படைஅணிக்கும் அரியாலையில் நிலைகொண்டிருந்த புலிகளுக்குமிடையிலான மோதலின் போது பலத்த ஷெல்லடிகள் நடத்தப்பட்டன. இந்தச் ஷெல்லடிகளின் போது கிட்டத்தட்ட 10க்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்தன. இந்தத் தாக்குதல்களில் சாதாரண பொதுமக்கள் கிட்டத்தட்ட 30 பேரளவில் கொல்லப்பட்டிருக்கலாம் எனத் தெரியவருகிறது.

5. **ஒக் 15 - 16** பலாலி வீதியால் பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ் நகர் நோக்கி வந்த படைப்பிரிவினரின் உரும்பிராய் வருகையுடன் 'உடுவில், மருதனார்மடம்-உரும்பிராய்' பாதை முழுவதும் இந்தியப்படைவசமாகிறது. யுத்த தாங்கிகள் வழி சமைத்துக் கொடுக்க பின்னால் வந்த இராணுவத்தினர் எந்த இலக்கும் இன்றி எல்லாத் திசைகளிலும் தொடர்ந்து சுட்டுக் கொண்டே போனார்கள். இந்தப் படையணியுடன் சிங்கள இராணுவத்தினரும் இணைந்து செயற்பட்டார்கள் என்பது பாதிக்கப்பட்டவர்களது தகவல்கள் மூலம் தெரியவந்தது. வீடுகளில் பயத்துடன் மறைந்து இருந்தவர்கள் வீட்டுக்கு வெளியே கூப்பிட்டு வரிசையாக நிறுத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஒக்.16 முதல் 21 வரையான காலப்பகுதில் இப்பிரதேசத்தில் மட்டும் 56க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அப்போதைய செய்திகள் தெரிவித்திருந்தன.

6. **ஒக் - 19** காரைநகர் வீதி அணி, கோட்டை அணியுடனான தொடர்பை ஏற்படுத்துகிறது. இந்த அணியின் ஒரு பகுதி ஏற்கனவே மானிப்பாய் வீதிவழி உடுவிலூடாக மருதனார் மடத்தை வந்தடைந்திருந்தது. இந்த அணி 2000க்கும் மேற்பட்ட அகதிகள் தங்கியிருந்த மருதனார்மடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் மீது முதலில் துப்பாக்கிச் சூடு நடத்தியது (ஒக் 12). பின்னர் அங்கிருந்து ஓர் 400 மீற்றர் தொலைவிலுள்ள திறந்தவெளிப் பகுதியிலிருந்து ஆச்சிரமத்தின் மீதும் புதிய இறையியல் செமினறியின் மீதும் ஷெல் தாக்குதல்களும் ஏவுகணைத் தாக்குதல்களும் நடத்தியது. பலர் படுகாயங்களுக்கு உள்ளாகினர். இதன் பிறகு தொடர்ந்து படையினர் யாழ் நோக்கிய பயணத்தின் போது நடத்திய துப்பாக்கிச் சூடுகளில் குறைந்த பட்சம் 7 பேர்வரை கொல்லப்பட்டனர். காயமுற்றவர்களில் சிலர் போதிய மருத்துவ வசதியின்மையால் இறந்து போயினர்.

7. **ஒக் 20 - 21** 'உடுவில், மருதனார்மடம்-உரும்பிராய்' பாதையிலிருந்து நகரமையத்தை நோக்கி அனைத்து அணிகளும் நகர்ந்து நிறைகின்றன. யாழ். பல்கலைக்கழகம், பிரம்படிப் பகுதிகள் முற்றாக முற்றுகைக்குள்ளாகின்றன. புலிகளின் தலைவர் பிரபாகரன் மறைந்திருக்கிறார் என்ற தகவலைக் கேள்விப்பட்டு யுத்த டாங்கிகள் சகிதம் பிரம்படி ஒழுங்கைக்குள் நுழைந்த இராணுவம் புலிகளின் எதிர்ப்பு நடவடிக்கையால் தமக்கு ஏற்பட்ட அழிவுக்கு பழிவாங்கும் நோக்குடன் சகட்டு மேனிக்கு சுட்டுத்தள்ளியும் சூடுபட்டு விழுந்தவர்கள் மேல் டாங்கிகளை செலுத்தித் துவம்சம் செய்தும் நடத்திய படுகொலை நிகழ்வில் 40 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 20க்கும் அதிகமானோர் காயமுற்றதாக அப்போது வெளிவந்திருந்த செய்திகள் தெரிவித்தன.

8. **ஒக் - 21** கோட்டையிலிருந்து வந்த படைகள் பலத்த ஷெல்லடி மற்றும் விமானக் குண்டுத் தாக்குதல் காப்புடன் வெளியேறி காரைநகர் வீதி, கச்சேரியடியூடாக வந்த அணிகளுடன் இணைந்து மருத்துவமனையை நோக்கி முன்னேறுகின்றன.

- யாழ். மருத்துவமனைப் படுகொலைகள் நடந்தேறுகின்றன.
- **ஒக் - 23** யாழ் நகர் முழுதாக முற்றுகைக்குள்ளாகிறது
- ஏராளமான அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று, ஆயிரக் கணக்கானோரைக் காயப்படுத்தி வெறும் 18 Km பகுதியைக் கைப்பற்ற நவீன போர் விமானங்கள், Mi-24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகள், ஏராளமான தாங்கிகள், பாரிய ஆட்லறிகள், ஆயிரக்கணக்கான வீரர்களுடன் 'உலகின் வல்லரசு இராணுவமெனக்' கூறிக்கொள்ளும் இந்திய இராணுவத்துக்கு 13 நாட்கள் தேவைப்பட்டன.

தகவல்: முறிந்தபனை, UTHR Report






**சிங்கத்தின் நகங்களும் அசோகச் சக்கரமும் என்கிற இந்தக் கட்டுரை அமுதசாகரனால் எழுதப்பட்டு 1988 இல் காலச்சுவடில் வெளியானது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலமாக இலங்கையில் அமைதிப் படை என்ற பெயரில் நுழைந்த இந்திய இராணுவம் வெளிப்படையாகவே இராணுவ ரீதியான அழிவுகளில் ஈடுபடத் தொடங்கிய ஆரம்ப நாட்களைப் பற்றிய ஆவணமாக இந்தக் கட்டுரை அமைகின்றது.**

# சிங்கத்தின் நகங்களும் அசோகச் சக்கரமும்

பிரதான வீதியிலுள்ள அச்சகத்திற்குக் காலை சென்றிருந்தேன். மானேஜருடன் கதைத்துக்கொண்டிருக்கையில் இடையில், அவர் மூலமாயே அந்தச் செய்தி தெரியவந்தது. முரசொலி, ஈழமுரசு பத்திரிகைக் காரியாலயங்களை இந்திய இராணுவத்தினர் குண்டு வைத்துத் தகர்த்துவிட்டார்களாம். விடியற் காலை சிறிய இடைவெளியில் அடுத்தடுத்துக் கேட்ட இரண்டு வெடிச்சத்தத்தையும் அவர் ஞாபகப்படுத்தினார். சைக்கிளை நேரே முரசொலி காரியாலயத்தை நோக்கிச் செலுத்தினேன். ஸ்ரான்லி வீதியில் சனக்கூட்டம் மொய்த்திருந்தது. கிட்டே போய்ப் பார்த்தேன். பெரிய அச்சுயந்திரம் வைத்திருந்த பகுதியும், அதை அடுத்திருந்த பகுதிகளும் வெடிப்பினால் சேதமுற்றிருந்தன. விடியற்காலம் வந்த இந்திய இராணுவத்தினர் அங்கிருந்தவர்களை வெளியேறச் சொல்லிவிட்டு, குண்டு வைத்துத் தகர்த்ததாகவும், அந்நேரம் அங்கிருந்த வேலையாட்களைத் தம்முடன் கொண்டு சென்றதாகவும் சனங்கள் கதைத்துக்கொண்டனர். "சிங்களவன்கூட இப்படிச் செய்ய இல்ல, இந்தியாக்காரன் செய்து போட்டான்." ஒருவர் எரிச்சலோடு சொன்னார். பலருக்கும் குழப்பம் இந்தியா ஏன் இப்படிச் செய்ததென்று. இலங்கை - இந்தியா ஒப்பந்தம், இந்தியாவின் நிலைப்பாடு பற்றிய விமர்சனங்கள், செய்திகள், இரண்டு பத்திரிகைகளிலும் விரிவாக முன்பு வெளிவந்துள்ளன. இந்திய அரசினால் அவற்றைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை போலும்!


நாவலர் வீதியிலுள்ள ஈழமுரசு காரியாலயத்திற்குச் சென்றேன். அங்கும் சைக்கிள்களுடன் நெருக்கியடித்துக்கொண்டு சனக்கூட்டம். இயந்திரமும், கட்டடத்தின் மேல் மாடிப்பகுதியும் சேதமுற்றிருந்தன. அங்கு கடமையாற்றிக் கொண்டிருந்த 12 பேர்களை இந்திய இராணுவம் தம்முடன் கொண்டு சென்றதாயும் தெரியவந்தது. 1981 ஜூனில் நகரின் பல பகுதிகளைச் சிங்களப் போலிசார் எரித்த வேளை, 'ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயத்தையும் எரித்தமை எனக்கு நினைவுக்கு வந்தது. 'கருத்துச் சுதந்திரத்திற்கு இவையெல்லாம் பெரியதொரு அச்சுறுத்தல்தான். வேண்டுமென்றால் இரண்டு பத்திரிகைகளையும் தடை செய்திருக்கலாம். அல்லது சீல் பண்ணியிருக்கலாம். ஜனநாயக நாடான இந்தியா இப்படிச் செய்திருப்பதை மன்னிக்க முடியாது. பலரின் அபிப்பிராயம் இப்படித்தான் இருந்தது.

பின்னேரம் இரண்டு மணிபோலக் கோட்டை இராணுவ முகாம் பக்கமாகப் பலத்த வெடிச்சத்தங்களும், துவக்குச் சூடுகளும் கேட்டன. நீண்ட காலத்திற்குப் பிறகு ஷெல் சத்தமாக அதுவும் மிகப் பலமாக முன்னர் கேட்டிராத சத்தமாய்த் தொடர்ந்து கேட்டன. "பொடியங்களுக்கும் இந்திய ஆமிக்கும் சண்டை தொடங்கியிற்றது" என்று கதைகள் பரவிற்று. தெருக்களில் சிறு சிறு கும்பலாய்ச் சனங்கள் குழுமத் தொடங்கினர். அவர்களிடை, பதட்டமும் பரவத் தொடங்கியது. மூன்று நான்கு மாதங்கள் நிலவிய அமைதி திகில் தரும் வெடிச் சத்தங்களேதும் காதில் விழாத அமைதி திடீரென்று குலுங்கியதில் பழைய மனோநிலைக்கு எதற்கும் தயாராகும், பாதுகாப்புத் தேடும் மனோநிலைக்குத் திரும்பத் தொடங்கினர்.

ஷெல் சத்தங்கள் கோட்டை பக்கமாய்க் கேட்டபடியே இருந்தன. இரண்டரை மைல் தொலைவில் 'கலட்டியில் இருந்த ஒரு நண்பரின் வீட்டிற்குக் கட்டாயம் செல்ல வேண்டியிருந்தது. சில பொருட்களை அன்றே சேர்ப்பிக்க வேண்டும். நகரப் பகுதியைத் தவிர்த்துச் சுற்று வழியில் அங்கு சென்றேன். கண்டியிலிருந்து வந்திருந்த நண்பரின் உறவினர்கள் பலரும் அங்கு இருந்தனர். வாழ்வில் முதன்முறையாகக் கேட்க நேர்ந்த ஷெல் வெடிச் சத்தங்களினால் அவர்கள் பீதியடைந்திருந்தனர்.

"இப்படித்தான் யாழ்ப்பாணத்தில் மரணத்துக்குள்ள நாங்க வாழ்ந்துகொண்டிருக்கிறம்" என்று நண்பர் கசந்த தொனியில் சிரித்தபடியே உறவினர்களிற்குச் சொன்னார். இரவு ஏழேகால் போல் திரும்பி வருகையில் வேறொரு நண்பரும் கூடவே சிறிது தூரம்வரை வந்தார். கோட்டைக்குள் இருக்கும் சிங்கள ஆமிதான் இப்படி ஷெல் அடித்திருக்குமென நான் அபிப்பிராயப்பட்டேன். நண்பர் உடனே கேட்டார். "... ஏன், இந்தியன் ஆமி அடிக்காதோ? அவங்கள் தான் அடிச்சிருப்பாங்கள். என்னெண்டு முரசொலிக்கும் ஈழமுரசுக்கும் குண்டு வைச்சவங்கள்?". என்னவோ...இந்திய ஆமி அப்படி ஷெல் அடித்திருக்காது என்றே என் மனம் நினைத்தது. ஆனால் சிங்களவர்கள் ஷெல் அடிக்க இவர்கள் சிலவேளை பார்த்துக்கொண்டும் இருக்கலாம் தமிழ் மக்கள் மத்தியில் 'பாதுகாப்பற்ற உணர்வை எழுப்புவதற்காக என்றும் ஓர் எண்ணம் நெஞ்சில் தலை தூக்கியது.

நல்லூரைக் கடந்து கைலாயபிள்ளையார் கோவிலடியில் வருகையில் அழுகுரல்கள் பலமாய்க் கேட்டன. அங்குமிங்குமாய்ச் சில ஆட்கள். மரக்கிளைகள் முறிந்து றோட்டில் கிடந்தன. மின்சாரக்கம்பிகளும் தாறுமாறாய் அறுந்து கிடந்தன. அந்தப் பகுதியில் ஷெல்கள் அடுத்தடுத்து வீழ்ந்து வெடித்ததில் பலர் இறந்திருக்கிறார்கள். பலருக்குப் பெருங்காயங்கள். "வயர் அறுந்து கிடக்கு, கவனம் கவனம்." எனக் குரல்கள் கேட்டுக்கொண்டிருந்தன. தெரு விளக்குகள் எரியவில்லை. இருட்டு வேறு. தெரியாமல் அங்கு வந்துவிட்டேன். அரைகுறை இருளில், கிடைத்த இடைவெளிளூடாய்ச் சைக்கிளைச் செலுத்தி ஒருவாறு கடந்துவிட்டேன் பயத்துடன், மின்சாரக் கம்பிகளில் முட்டுப்படாமல் தப்பியது அதிஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும்.



கோட்டையிலிருந்து ஒன்றரை மைல்களுக்கப்பால் உள்ள இந்த இடத்தில் வீடுகளிற்குள் இருந்த மக்களின் மேல்தான், ஷெல்கள் வெடித்திருக்கின்றன! எட்டோ ஒன்பதோ பேர் இறந்திருக்கிறார்கள். (நாளைய றேடியோ எட்டு பயங்கரவாதி இறந்ததாகச் சொல்லும்) பலர் காயப்பட்டிருக்கிறார்கள். கோட்டையில் இருந்து ஷெல் அடிப்பவர்களிற்கு அது எங்கே போய் விழும் என்பதே தெரியாது. ஆனால் சன அடர்த்தி நிறைந்த நகரத்தில் எங்கு போய் விழுந்தாலும் யாராவது தமிழர்கள் சாவார்கள் அல்லது காயப்படுவார்கள் - வீடுகள் சேதமடையும் என்பது மட்டும் நிச்சயமாய் அவர்களிற்குத் தெரியும். சிங்கள இராணுவம் இனவெறியுடன் இதைத்தான் நீண்டகாலமாய்ச் செய்துவந்தது. இப்போது, எம்மைப் பாதுகாக்க வந்த தாய்ச் சொல்லும் இந்திய இராணுவமும் கோட்டைக்குள் இருக்கிறது. ஆனால், இப்போதும் குடியிருப்புகளுக்குள் அப்பாவிப் பொதுமக்கள் மீது ஷெல்கள் ஏவிவிடப்படுகின்றன. கொடுமைகள் தொடர்கின்றன. வீடு சேரும்வரை வழிகளில் ஷெல் விழாமலிருக்கவேண்டுமே என்று திகிலுடன் வந்தேன். எமது ஊரிலும் வீட்டிற்குச் சமீபமாகவும் இவ்வாறு முன்பு சில ஷெல்கள் வீழ்ந்திருக்கின்றன.

**ஒக்ரோபர் - 11**

காலையில் வழமைபோல் தேநீரைக் குடித்துவிட்டு வாசித்தபடி இருந்தேன். இன்னும் குளிக்கவில்லை. ஏன் முகங்கூடக் கழுவவில்லை! எட்டுமணி போல் அறை ஜன்னல்களை அதிரச் செய்தபடி பெரிய, வெடிச் சத்தமொன்று கேட்டது. மிக அருகாமையில் 'ஷெல்' விழுந்திருக்க வேண்டும். பதட்டத்துடன் எழுந்து முன்புறம் ஓடினேன். முன்புறம், கூரையின் கீழ் அகலமான கொங்கிறீற் பிளாற் (Concrete flat) துண்டு உண்டு. ஷெல்லிற்கு ஓரளவு பாதுகாப்பு. வீட்டில் இருந்தவர்களெல்லாம் அதன் கீழ் ஓடி வந்தார்கள். நேற்றிரவு வந்து பாதுகாப்பிற்காகத் தங்கியிருந்த

தொடர்தல் 64ம் பக்கம்

# சிங்கத்தின் நகங்க...

63ம் பக்கத் தொடர்ச்சி...

உறவினர்களுடன் (கோட்டைக்கு அருகில் வசிப்பவர்கள்) இருபத்தைந்து முப்பது பேர் இருக்கும். தொடர்ந்து ஷெல்கள் வீழ்ந்து வெடிக்கும் சத்தங்கள் கேட்டன. கண்ணெதிரே ஒரே புகை மூட்டந் தெரிந்தது. சத்தங்களால் திகிலடைந்து குழந்தைகள் கத்தத் தொடங்கின. "கடவுளே... கடவுளே..." எனப் பெண்கள் மன்றாடத் தொடங்கினர்.

எதிரிலுள்ள கோவிற் பள்ளிக்கூடத்தின் மேல் அடுத்தடுத்து இரண்டு ஷெல்கள் விழுந்து வெடித்தன. ஓடுகள் சிதறின. கோவில் வளவில் புகை எழுந்தது. வீட்டிலிருந்த எல்லோருமே பெரிதாய்க் குழறினர். "எல்லோரும் நிலத்தோட படுங்க... நிக்க வேணாம்" எனக் கத்தியபடியே விரைவாய் நானும் நிலத்தில் குந்தினேன். நிலத்தில் படுப்பது ஷெல் சிதறல்களிலிருந்து சிறிய பாதுகாப்பைத்தரும் சிதறல்கள்கூட மரணத்தை ஏற்படுத்திவிடலாம். ஆனால் இடநெருக்கடியால் குந்தியிருக்கத்தான் முடிந்தது. எல்லோரும் குந்தியே இருந்தனர். இரத்தக்காயங்களுடன் இரண்டு பெண்கள் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு கத்திய படி வீட்டுக்குள் ஓடி வந்தார்கள். "ஐயோ ஓடி வாங்க... அம்மாவத் தூக்குங்க... அம்மா..." என அழுது புலம்பிய பெண்ணைத் தேற்றி கொஞ்சம் பொறுத்திருக்கச் சொன்னோம். முன்புற வாசற்படியில் இரத்தம் ஒழுகிப் படிந்தது. ஷெல் விழுந்து கொண்டிருக்கிருக்கிறபோது உடனே போவது மேலும் ஆபத்து. சத்தங்களேதுமின்றி இருந்த சிறிய இடை நேரத்தைப் பயன்படுத்தி றோட்டில் சனங்கள் ஓடிக்கொண்டிருந்தனர். நிலைமை மேலும் மோசமடையலாம். எமது ஊர்ப்பகுதி ஷெல்லிற்கும் பாதுகாப்பான பகுதியல்ல. ஆகையால் வீட்டிலிருந்து ஓடிவிடுவதே புத்தியானது. எதிர்ப்பக்கத்துக்கு ஓடும் படி தூண்டியபோது, இடத்தை விட்டு நகர எல்லோருமே பயந்தனர். குழந்தைகளோடு பெண்களும்கூடப் பயத்தில் கத்தியபடியே அசையாது இருந்தனர். எல்லோர் முகங்களிலும் மரண பயம் உறைந்திருந்தது. வெடிச் சத்தங்கள் ஓய்ந்து கொஞ்சம் அமைதி நிலவத் தொடங்கியது. இனிமேலும் தாமதிப்பது புத்தியல்ல. இதோடயே எதிர்ப்பக்கத்துக்கு ஓடும்படி மறுபடியும் கடுமையாக ஏசுங் குரலிற் சொன்னேன். வேறு இரண்டொருவரும் அதை ஆமோதிக்கவே குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு இருவர் மூவராய் மரங்களின் கீழாக வீதியோரமாய் ஓடத் தொடங்கினர். பள்ளிக்கூடத்தில் காயம் பட்டவர்களை, சிறிய வாகனமொன்றைக் கொண்டுவந்து சிலர் ஏற்றிச் சென்றனர். அவர்களில் நான்கு பேர் இறந்ததாகப் பின்னர் அறிந்தோம். வெளியிற் கிடந்த ஈர உடுப்புகளை எடுத்து வீட்டினுள் போட்டு விட்டு, எரிந்துகொண்டிருந்த சமையலறை அடுப்புகளையும் அணைத்துவிட்டு, வீட்டையும் பூட்டிக் கொண்டு சைக்கிளில் ஏறி, அவசரமாய் நானும் எதிர்ப்பக்கம் ஓடினேன். உடுத்தியிருந்த சாறத்தின் (லுங்கி) மேல் ஒரு சேர்ட்டை மட்டும் அவசரமாக எடுத்துப் போட்டிருந்தேன். வீட்டிற்கு வெளியில் சாறத்துடன் செல்லும் பழக்கம் எனக்கு இல்லை. இன்னும் பல் விளக்கவில்லை. ஷேவ் எடுக்கவில்லை. ஏன் முகங்கூடக் கழுவவில்லை. மற்றவர்களும் உடுத்தியிருந்த உடுப்புகளுடன் தான் ஓடியிருக்கிறார்கள். ஆனால் இதையெல்லாம் இப்போது பார்க்க முடியாது. உயிர். ஆம், உயிரைக் காப்பாற்ற வேண்டுமே! அது தான் இப்போது முக்கியம். நூறு இரு நூறு யார்களிற்கப்பால் சென்றதும்தான் கொஞ்சமாவது நிம்மதிப் பெருமூச்சு விட்டவர்களாய் ஓட்டத்தைக் குறைத்து சனங்கள் நடக்கத் தொடங்கினர். வீதியை நிறைத்துக் கூட்டமாய்ச் செல்லும் சனங்கள். கையில் கிடைத்த சாமான்களுடன், குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு, வயது போனவர்களையும் நோயாளிகளையும் சைக்கிளில் ஏற்றி அல்லது மெல்லக்கைத் தாங்கலாய் நடத்திக்கொண்டு... எங்கே போவது? அவர்களுக்கு நிச்சயமான ஒரு முடிவும் இல்லை. ஷெல் வரும் திசைக்கு எதிர்ப்பக்கம் எங்கு போக முடியுமோ... அங்கு. அதுதான் அப்போதைய மனநிலை. தங்குவது பற்றிப் பிறகு தீர்மானிக்கலாம். நான் நினைத்தேன்: தமிழர்களின் இந்தச் சீரழிவுகளிற்கு முடிவே கிடையாதா? சுதந்திர நாடு என்று இலங்கையைச் சொல்லுகிறார்கள். இதுதான் எங்களது சுதந்திரமா? யாழ்ப்பாணத்தின் மற்றப் பகுதிகளிலும் இப்படித்தானே சனங்கள் அவலப் படுவார்கள்? போன 'மே' மாதத்திலும் இதேபோல் தான் வீட்டை விட்டு ஓடினோம். வடமராட்சி பிணக்காடானது. இப் போதும் அதே கதை தொடங்கிவிட்டது! இப்போது எனக்குச் சந்தேகமில்லை. இந்



தியன் ஆமிதான் ஷெல் அடிக்கிறாங்க! இந்த மாதிரி பயங்கரச் சத்தங்களை முன்பு சிங்கள ஆமி ஷெல் அடிக்கும் போது கேட்கவே இல்லை. கூடிய சக்தி வாய்ந்தவற்றை இந்தியர்கள் பாவிக்கிறாங்கள் போல...

கோபமும் எரிச்சலும் பெருகியது. அதையும் மீறி 'துரோகம்' பற்றிய உணர்வு மேலெழுந்தது. எந்த மக்களைக் காப்பதற்காக வந்தோம் என்று சொன்னார்களோ அந்த மக்களையே கொல்லுகிறார்கள். திகில் கொண்டு சிதறி ஓடச் செய்கிறார்கள். இனவெறியுடனும் கண்மூடித்தனத்துடனும் எவற்றைச் சிங்கள இராணுவம் செய்ததோ அதையே ஆணவத்துடன் இவர்களும் செய்கிறார்கள். இரண்டு பேர்களிற்குமிடையில் என்ன வித்தியாசம்? எங்கட மக்கள் - நாங்கள் எல்லோரும் அழிந்த படி... தங்களிற்குள் கதைத்தபடி சென்ற யாரோ ஒருவரின் கோபமான குரல் காதில் விழுந்தது.

### ஒக்ரோபர் - 12

அடுத்த ஊரில் ஒரு பாடசாலையில் தங்கியிருந்தோம். ஆயிரக்கணக்கான மக்கள் எல்லோரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் - அங்கு புகலிடந் தேடியிருந்தார்கள். நேற்றைப் போல் அல்லாது ஷெல் சத்தங்கள் ஓய்ந்திருந்தமை மெல்லிய ஆறுதல். காலையில் இரண்டொருவராக வீடு களிற்குச்சென்று மிக அவசியமான பொருட்களை எடுத்துத் திரும்பினர். நானும் இன்னொருவரும் வீட்டிற்குச் சென்றோம். வீட்டு முற்றத்தில் நின்ற தென்னை மரங்களில் ஒன்று முறிந்து வீட்டுக் கூரைமேல் சாய்ந்து கிடந்தது. உடுப்புகள், சமையலுக்குரிய பொருட்கள் சிலவற்றை எடுத்துக் கொண்டு அவசரமாய்த் திரும்பினோம். பாடசாலையின் திறந்த வெளிகளில் கல்லுகளை வைத்துப் பலரும் சமையல் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். "நேற்றுவரை தத்தம் வீடுகளில் வசித்த மக்கள் இன்று அகதிகளாக நாடோடிகளைப்போல் வெளிகளில்... நான் நினைத்தேன்.

பின்னேரம் குண்டு வீச்சு விமானங்களின் இரைச்சல் கேட்டது. சிறு சிறு கூட்டமாய்க் குழுமி வானத்தையே பார்த்தபடி மக்கள் நின்றனர். மூன்று விமானங்கள் மிக உயரத்தில் வட்டமாய்ச் சுற்றித் திரிந்தன. ஹெலிகொப்ரர் இரண்டும் தொலைவில் தெரிந்தன.

திருநெல்வேலிப் பக்கமாகக் குண்டு வீசும் விமானங்கள் வேகமாய்க் கீழே பாய்ந்து மேல் எழும்பின. பெரும் வெடிச் சத்தங்கள் கேட்டன. குண்டு போடுகிறார்கள். திருநெல்வேலியிலுள்ள பல்கலைக்கழகக்கட்டடங்கள் அதில் சேதமுற்றது பின்னரே தெரியவந்தது. மெல்ல மெல்லச் சேதிகள் பரவத்தொடங்கின. அன்று விடியற் புறம், பல்கலைக்கழகத்தைச் சுற்றிய இடமொன்றில் இந்திய இராணுவம் பரசூட்டுகளில் இறங்கியபோது போராளிகள் தாக்கியதில் ஐம்பது பேர் வரை கொல்லப்பட்டதாகவும் பலர் சிறை பிடிக்கப்பட்டதாகவும் சிலர் கதைத்தார்கள். மக்கள் மத்தியில் பெருமிதமும் மகிழ்ச்சியும் பரவியது. நாகவிகாரைக்காணியில் இறந்த இந்திய வீரர்களின் உடல்கள் பொடியங்களால் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் சனங்கள் அதைப் பார்த்துச் செல்வதாகவும் அங்கிருந்து வந்த ஒருவர் சொன்னார். விடியற்புறச் சம்பவத்தில் போராளிகளால் சுற்றி வளைக்கப்பட்ட ஒரு தொகை இராணுவத்தினரை மீட்பதற்காகக் கவச வண்டிகளுடன்(Tanks) வந்த இன்னொரு குழுவினர் 'பிரம்படி லேனில்' 40 பொதுமக்களைச் சுட்டும், வெட்டியும் கொலை செய்ததாகவும், சில உடல்கள் கவச வண்டிகளால் நசுக்கப்பட்டிருந்ததாகவும் செய்திகள் வந்தன. தத்தம் வீடுகளுக்குள் இருந்தவர்களே இப்படிக் கொல்லப்பட்டவர்கள். இக்குரூரச் சம்பவம் ஆத்திரத்தையும், பயத்தையும் பரப்பியது.

திரும்பவும் ஷெல் சத்தங்கள் பலமாகக் கேட்கத் தொடங்கின. இப்போது, நாவற்குழி இராணுவ முகாம் பக்கமிருந்தும் சத்தங்கள் தொடர்ச்சியாகக் கேட்டன. நாவற்குழிக்குச் சமீபமாக அரியாலையில் மணியந்தோட்டப் பகுதியிலிருந்து பயத்துடன் நாங்கள் இருந்த பாடசாலைக்குப் பலர் ஓடி வந்தனர். கோட்டை முகாமுக்கும் நாவற்குழி இராணுவ முகாமுக்கும் இடையில்தான் இந்தப்பாடசாலை இருக்கிறது. சத்தங்கள் மேலும் மேலும் பெரிதாய்க் கேட்டுக்கொண்டிருந்தன. பொடியங்களின் நாவற்குழி சென்றி (Sentry)யை இந்திய ஆமி உடைத்துவிட்டதாகவும், எந்த நேரமும் இராணுவம் வெளியில் வந்துவிடுமெனவும் கதைகள் பரவியதில் சனங்களிடை ஒரே குழப்பமும், பீதியும் ஏற்பட்டது. அருகிலுள்ள கடலைக் கடந்தால் பூநகரிப் பக்கம் சென்றுவிடலாம், தற்போது அங்கு பிரச்சினையேதுமில்லை. சிறிய வள்ளங்களில் கொஞ்சம் கொஞ்சமாகக் கடலைக் கடந்து அங்கு போகத் தொடங்கினர். கடலிற் செல்வது தடைசெய்யப்பட்டிருப்பதால் அதுவும் அபாயம் சூழ்ந்த ஒன்றே! உயிரைப் பணயம் வைத்தே இரவோடு இரவாயும் கடலைக் கடந்து பெருந்தொகையானோர் அடுத்த கரைக்குச் சென்றனர்.

மறுநாள் விடி காலை எங்களின் குடும்பமும் உறவினர்களுமாகச் சுமார் நாற்பது பேர் ஒரு மோட்டார்ப்படகில் யாழ்ப்பாணத்தைவிட்டு நீங்கினோம். இருபத்தெட்டு மைல்களுக்கப்பால் பூநகரிக்கும் மன்னாருக்குமிடையிலுள்ள ஓர் இடத்தில் எமது தூரத்து உறவினரொருவர் இருந்தார். அங்குதான் படகில் சென்றோம். விடியத் தொடங்கியது. விமானம் ஏதும் வந்தால் ஆபத்து. நடுக்கடலில் தப்பவே முடியாது. கடற்படைக் கப்பல் வந்தாலும் அப்படியே. பீரங்கிகளால் அடித்தால் படகும் நாமும் சிதறி விடுவோம்! ஆகையால், கரையோரமாயே படகு சென்றுகொண்டிருந்தது. ஆபத்து ஏதும் ஏற்பட்டால் உடனே கரையில் நிற்பாட்டி உட்புறம் ஒடித்தப்ப வசதிப்படும். குறுக்கே சென்றால் நான் கரை மணிநேரம் எடுக்கும் பயணம், கரை பிடித்துச்சென்றதால் ஆறு மணித்தியாலங்களை எடுத்தது. ஒருதடவை சிறு தொலைவில் அவ்ரோ (Avro) விமானம் இரைச்சலுடன் தெரிந்தது. வழமைபோல் பெண்களிடையிலும், குழந்தைகளிடையிலும் திகில் உருவாகியது. 'கடவுளே... கடவுளே' என்ற முணு முணுப்புகள் எழத் தொடங்கின. நல்ல காலம்! விமானம் எமது பக்கம் வரவில்லை. 'முன்பு சிங்கள ஆமிக்குப் பயந்து, கடலைக் கடந்து இந்தியாவுக்குப் பலர் ஓடினர். இப்போ இந்திய ஆமிக்குப் பயந்து வேறு தமிழ்ப் பகுதிகளிற்கு ஓடுகிறோம். அதே மாதிரிக் கடலைக்கடந்து! எவ்வளவு விசித்திர ஒற்றுமை!'

கடலோரம் அமைந்திருக்கிறது அந்தக் கிராமம். கரையிலிருந்து எதிரே இரண்டு சிறுதீவுகள், ஆழம் குறைந்த கடல். முழங்கால் அளவு தண்ணிரில் ஒரு மைல் வரை செல்லலாம். சிறு நண்டுகளும் சிறு மீன்களும் காலடியில் ஓடி விலகும். எப்போதும் வெள்ளைக் கொக்குகளும் வேறு வெள்ளைப் பறவைகளும் கூட்டமாய்ப் பறந்தபடியே இருக்கும். மாலையில் சொக்லேற் நிறத்தில் பொன் மஞ்சள் நிறக்கோடுகளும் கூர்ச் சொண்டுகளும் கொண்ட சிறு பறவைகள் நூற்றுக்கணக்கில் மணி நாதமெனக் குரலெடுத்தபடி கடற்கரையில் திரியும். நாங்கள் தங்கியிருந்த தென்னந் தோட்டத்தின் நடுவில் இருந்த சிறு வீட்டில், வசதிக்காக மேலும் இரண்டு

தொடர்தல் 67ம் பக்கம்

# சிங்கத்தின் நகங்க...

64ம் பக்கத் தொடர்ச்சி...

கொட்டில்கள் போட்டுத் தென்னோலைக் கிடுகுகளால் வேய்ந்துகொண்டோம். கிளிநொச்சி மாவட்டத்தினுள் வருவதால் உணவுப் பிரச்சினை இல்லை. கூட்டுறவுச் சங்கக்கடைகள் இரண்டு இருந்தன. வெளித்தொடர்புதான் குறைவு. பத்திரிகையைக் காணவே முடியாது. வானொலிப் பெட்டிதான் முக்கிய வெளித்தொடர்பு, இடைக்கிடை காட்டுப்பாதையில் பெருந்தொலைவு நடந்து சிலர் யாழ்ப்பாணத்திலிருந்து வரும்போதும் சில செய்திகளை நேரில் கேட்டு அறியலாம். இருபத்தெட்டு மைல் தொலைவு என்றாலும் யாழ்ப்பாணத்தில் வெடிக்கும் ஷெல் சத்தங்கள், இங்கும் பெரிதாய்க் கேட்டன. வாடைக் காற்று வீசிக்கொண்டிருந்ததும், திறந்த கடல் வெளியும் அதற்குக் காரணமாயிருக்கலாம். முன்னரவிட இடி முழக்கம்போல் மூன்று நான்கு முறை களிலான தொடர் வெடிச்சத்தங்கள் கேட்கத் தொடங்கின. எங்களிற்கு ஒரு வகைப் பாதுகாப்புணர்வு இருந்தாலும், யாழ்ப்பாணத்திலுள்ள மற்றவர்கள் என்ன மாதிரி அவலப்படுவார்கள் என்ற நினைவு எம்மைக் கலக்கியபடியே இருந்தது. வீடு வாசல்களை,பொருட்களை எல்லாம் அப்படியே விட்டு விட்டு அங்கும் இங்குமாய் ஓடியிருக்கிறோம். அவை பற்றிய கவலைகளும் எப்போதும் இருந்தன. வீடு சேதமுற்றதால், பொருட்கள் களவு போனால் நாங்கள் எவ்வாறு அதிலிருந்து மீளமுடியும்? ஆனால் 'உயிர் தப்பியது காணும் மற்றது நடக்கிறது நடக்கட்டும்' என்று ஒருவாறு எம்மை நாமே தேற்றிக்கொள்ளப் பார்த்தோம்.

இடையில் வந்தவர்கள் மூலம் யாழ்ப்பாண அழிவுகளைப் பற்றிக் கேள்விப்பட்டோம். எங்கள் ஊரில் பலர் இறந்திருக்கின்றனர் ஷெல்லினாலும், துப்பாக்கிச் சூட்டினாலும், வீடுகள் பல சேதமடைந்துள்ளன.

கல்முனையிலிருந்து (பூநகரிப் பகுதியிலுள்ளது) கடுமையான நோயாளிகள் இருவரைச் சிகிச்சைக்காக ஏற்றிச் சென்ற மோட்டார்ப் படகைக் ஹெலிகொப்றர் தாக்கியதில் நான்கு பேர் இறந்ததோடு, மற்றும் பலர் படுகாயங்களிற்கு உள்ளானார்கள். இவ்வாறே அராலித் துறையினூடாக லேலணைப்பகுதிக்கு வள்ளங்களில் செல்ல முயன்ற எமது ஊரவர்களை ஹெலகொப்றர் சுட்டதில் பதினேழு பேர் கொல்லப்பட்டனர். இவர்களை விட இன்னும் முப்பது ஊரவர்கள் இறந்ததைப் பின்னர் அறிந்துகொண்டேன். உணவுப் பொருட்களிற்கு அங்கு பெருந்தட்டுப்பாடு நிலவியது. விலைகளெல்லாம் ஆனை விலை, குதிரை விலையாக மாறியது. ஒரு கிலோ எட்டு ரூபாவுக்கு முன்பு விற்பனையான அரிசி முப்பதைந்து ரூபா நாற்பது சதத்திற்குச் சென்றது. எட்டு ரூபா விற்ற கோதுமை மா முப்பது ரூபாவுக்கும், பதினேழு ரூபா விற்ற சீனி நாற்பது ரூபாவுக்கும், ஐந்து ரூபா விற்ற ஒரு தேங்காய் இருபது ரூபாவுக்கும், ஏழரை ரூபாய்க்கு விற்ற ஒரு போத்தல் மண்ணெண்ணெய் முப்பத்தி ரெண்டு ரூபா விற்கும் விற்பனையானதாம். கொஞ்சப் பொருட்கள் தான் கிடைக்கக்கூடிய நிலைமை. ஆனால் அவற்றை வாங்க எல்லோரிடமும் காசு இருந்ததா? இல்லை. கால வரையறையற்ற ஊரடங்கு உத்தரவு. உணவுப் பொருள்கள்தான் தட்டுப்பாடான நிலைமை. கைகளில் போதிய பணமின்மை. வைத்திய சாலைகள் பலவும் இயங்க முடியாததில் நோயாளிகளிற்கு மருந்தற்ற நிலை என்பவற்றால், வாழ்வு எவ்வளவு அவல முற்றதாய் மாறிவிட்டிருந்தது என்பதையெல்லாம் அறிந்தோம். குடா நாட்டில் பல பகுதிகளிலும் உள்ள எட்டு லட்சம் மக்களில் ஐந்து லட்சம் மக்கள் வீடுகளை விட்டு ஓடி அகதிகளானதாகப் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பி.பி.சி தமிழோசை நிகழ்ச்சியின் மூலமும் பிலிப்பைன்சின் 'வெரித்தாஸ்' வானொலி மூலமும் அறியமுடிந்தது. ஆனால் இந்திய வானொலிச்செய்தி அறிக்கைகளும், விசேட நிகழ்ச்சிகளும் அவற்றுக்கு மாறானவற்றையே தொடர்ந்து வெளியிட்டு வந்தன: பேராளிகளே பொதுமக்களைக் கொலை செய்வதாகவும், வீடுகளைச் சூறையாடுவதாகவும், மின்சார டிரான்ஸ் போமர்களை உடைத்து குடா நாட்டை இருளில் மூழ்கச் செய்துள்ளதாகவும் பிரச்சாரம் செய்தன. "போராளிகள் பெண்களையும், குழந்தைகளையும், முதியவர்களையும் முன்புறம் வரிசையாக இருத்திவிட்டு இந்திய இராணுவத்தின் மேல் குண்டுகளை வீசியபின் உடனே எல்லோரும் எழுந்து நிற்குமாறு கட்டளையிடுவார்களாம். இதனால் திருப்பித் தாக்கமுடியாத நிலையில் இந்திய இராணுவத்தினர் உள்ளனர்' என்பது போன்ற கோமாளித்தனமான பிரச்சாரக் கதைகளைக் கூட அவை கட்டவிழ்த்து விட்டன. அங்கு இங்கென நடந்த சண்டைகளில் போராளிகள் கொல்லப்பட்டதாகச் சில எண்ணிக்கைகளைத் தினமும் சொல்லிவந்தன. இறந்தவர்களில் பெரும்பாலோர் அப்பாவிப் பொதுமக்களே என்பதை பி.பி.சி. போன்றவை மூலம் நாங்கள் அறிந்தோம். முன்பு சிறீலங்கா இராணுவமும் இப்பிடித்தான் அங்குமிங்குமாய் ஷெல் தாக்குதல்களாலும், துவக்கினாலும், விமானங்களினாலும் அப்பாவித் தமிழ் மக்களை பெண்கள், வயோதிபர், குழந்தைகள் எனப் பேதம்பாராமல் கொல்லும். உடனே இலங்கை வானொலியும், கொழும்பிலுள்ள ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளும் 'லங்கா புவத்'தை (இலங்கை அரசின் செய்தி நிறுவனம்) மேற்கோள் காட்டி 'பயங்கரவாதிகள்' கொல்லப்பட்டதாகவும் பொது மக்களில் சிலர் சண்டையின் இடையில் (Crossfire)அகப்பட்டு இறந்ததாகவும் பிரச்சாரம் செய்யும். இது நான்கு ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் பழகிப்போன பிரச்சார மோசடியாகும். இந்திய வானொலியை 'இன்னொரு லங்கா புவத்' என்று மக்கள் கிண்டலாய்க் குறிப்பிடுவது வழக்கமாகிவிட்டது. அதிலும் சென்னை வானொலியின் 'நேசக்கரங்கள்', 'அன்பு வழி', 'வெற்றி மாலை' போன்ற நிகழ்ச்சிகள் முழுப்பொய்களை வாந்தி எடுத்தபடியே அன்பு, கருணை, மனிதத்தன்மை, பாரதப் பண்பாட்டின் பெருமை பற்றிப் புகழ்ந்தபடி இலங்கைத் தமிழர்களிற்கு உபதேசிக்கத் தொடங்கியிருந்தமையும் தமிழர்களைக் கௌரவமாக வாழ வைப்பதற்காகவே அமைதிப்படை இங்கு போராடிக் கொண்டிருக்கிறது எனத் தினமும் சொல்லி வந்தமையும் அருவருப்பையும், சிரிப்பையும் மட்டுமல்லாது ஆத்திரத்தையும் எழுப்பிக்கொண்டிருந்தன. ஷெல் தாக்குதல்களால் எமது உடல்களையும், வீடுகளையும் சிதறச் செய்வது எங்களின் நன்மைக்காகவாம் பயங்கரச் சூழ்நிலையில் உணவற்று, நோய்க்கு மருந்தற்று, பாதுகாப்பான இருப்பிடங்களற்று உயிரைக் கைகளில் பிடித்தபடி அங்குமிங்குமாய் அலையும்படி செய்வது, எம்மைக் கௌரவமாக வாழவைப்பதற்காகவாம். இவற்றை நாங்கள் நம்ப வேண்டுமென டெல்லியிலுள்ள கூலிகளும் எதிர்பார்க்கிறார்கள். இக்கேலிக்கூத்துகளைத் தினமும் கேட்டு ஒரு கவிதையை எழுதத் தோன்றியது:

**சென்னை வானொலிக்கு**

*நேசக் கரங்கள் நீண்டு*
*பீரங்கி வெடிக்க*
*பொம்பர் சுற்றிக் குண்டுகள் போட*
*அரிய மனிதப் பிறவிகள், வீடுகள்*
*சிதறு தேங்காய்.*
*புகலிடந் தேடிச் சனங்கள்*
*புலம்பி ஓட*
*கவச வண்டிகளில்*
*அமைதிப் புறா நசி பட*
*'வெற்றிமாலை சூடி*
*'அன்புவழியில்*
*முன்னேறி வருகிறது*
*அமைதிப் படை,*
*பராக்...*



திடீரென ஒரு நாள் இந்த வானொலி நிகழ்ச்சியொன்றில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் நோயாளிகள் போல் வேஷமிட்டுத் தாக்குதல் செய்த விடுதலைப் புலிகள் பலர் கொல்லப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அதைக் கேட்டுக்கொண்டிருந்த எல்லோருமே நினைத்தோம். நோயாளிகளை அமைதிப்படை கொன்றிருக்கிறது. அதை மறைக்கும் பிரச்சாரமாகவே இது இருக்குமென. நாங்கள் நினைத்தது சரியெனப் பின்னர் அறிந்துகொண்டோம். ஆஸ்பத்திரிக்குள் புகுந்த அமைதிப்படை 'கிரேனேட் (granade) வீசியதிலும், சுட்டதிலும் எண்பத்தியொரு பேர் கொல்லப்பட்டனர். அதில் மூன்று வைத்தியர்கள் உட்பட 21 பேர் ஆஸ்பத்திரி அலுவலர்கள். மிகுதிப் பேர் நோயாளிகளும் அவர்களிற்கு உதவியாகத் தங்கியிருந்தவர்களுமாவர். இப்படியாக இருந்தது அமைதிப்படையின் கரைபுரளும் மனிதாபிமானமும், இந்திய வானொலிச் செய்திச் சேவையும்.

ஜெயகாந்தனின் ஆவேசமான பேச்சும் இடையில், சில நாட்கள் தொடர்ந்து ஒலிபரப்பானது. அமைதிப்படை நடவடிக்கைகளை ஆதரித்துச் சென்னையில் நடந்த கூட்டமொன்றில் அவர் பேசிய பேச்சே அதுவாகும். மிகவும் உரத்த குரலில் கத்தியபடி எல்லாம் தெரிந்த பாவனையில் தான் அவரது பேச்சு இருந்தது. " ... புத்தருக்குப் பிறகு அவரது கொள்கைகளை அமைதிப்படைதான் நிறைவேற்றுகிறது..." என்ற மாதிரியும் பேச்சிடையில் வருகிறது. பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த எனது அத்தான் (அக்காவின் கணவர்) "... ஆர் இவன்? உளறுறான். இங்கே நடக்கிற அட்டூழியங்கள் அவருக்குத் தெரிய இல்ல... புத்தற்ற கொள்கைகள் நிறைவேற்றினமாம்..." எனச் சத்தமாய்ச் சொன்னார்.

"இவர் ஜெயகாந்தன் எண்டு பெரிய எழுத்தாளர்" என்று நான் சொன்னேன்.

"வெறிகாரன் மாதிரி கத்துறான். இவன் என்ன எழுத்தாளன்?" என்று அவர் திருப்பிக்கேட்டார். நான் மௌனமானேன். கொம்யூனிஸத் தலைவர் எம். கல்யாணசுந்தரத்தின் பேச்சையும் இரண்டொரு நாட்களின் பின் கேட்டபோது இருவருமே இந்திய தேசிய வெறிக்கு உட்பட்டிருப்பதாக உணர்ந்தேன். இங்குள்ள சீனக் கொம்யூனிஸ்றுகளும் ரஷ்யக் கொம்யூனிஸ்றுகளும் எமது விடுதலைப் போராட்டந்தொடர்பாக, துரோக நிலைப்பாடுகளையே கொண்டுள்ளனர். இவர்களெல்லாருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்' என்ற உணர்வு தவிர்க்கவியலாது எழுந்தது. 1971ல் நடந்த ஜே.வி.பி. கிளர்ச்சி பற்றி 'அங்குள்ள ஒருவருக்கும் தெரியாது. எனக்கு மட்டுந்தான் தெரிவதால் சொல்லுகிறேன்' என்ற தொனியில் ஜெயகாந்தன் தெரிவித்ததும், உண்மையல்ல. ஜெயகாந்தனின் திமிரும் அறியாமையும்தான் அதில் தெரிந்தன. விடுதலைப் புலிகளை "அவர்கள் புலிகள் அல்ல. நரிகள்" என்று கிண்டல் பண்ணிவிட்டு, "காஸ்ட்ரோவின் வரலாறு என்னை விடுதலை செய்யும்' நூலைப் படியாதவர்களை எல்லாம் எப்படிப் புரட்சிக்காரர்கள் என்று சொல்ல முடியும்?" என்றும் கேள்வி கேட்டார். சரி! அந்தப் புத்தகத்தைப் படித்துக் கிழித்துவிட்ட ஜெயகாந்தனின் 'புரட்சிகரம்' பற்றி எங்களிற்குத் தெரியாதா? ஆனந்த விகடன், குமுதம், தினமணி கதிர் என்று தொடங்கி இன்றுவரையான வியாபாரத் தளங்கள் பற்றியெல்லாம் நாங்கள் அறிந்திருக்கவில்லையா என்ன? கோட்பாடு ரீதியாக கூட முரண்படலாம். ஆனால் மனித அவலம், துன்பம் பற்றி ஒரு வரிகூடச் சொல்லத் துணியாத இவர்களிடம் நேர்மை சிறிதளவாவது இருக்கும் என்பதை நான் சந்தேகிக்கிறேன்.

ஒன்றரை மாதங்களின் பின்னர் யாழ்ப்பாணம் வந்தோம் மறுபடியும் கரையோரங்களை அண்டித்தான். யாழ்ப்பாண ஜெற்றியில் இறங்கி, குறுக்கு வீதியில் நடந்து பெரிய றோட்டை அண்மிக்கையில் இரு புறமும் குறுகிய இடைவெளிகளில் ஆயுதந் தாங்கிய இராணுவத்தினர் ரோந்து சென்றனர். கைகளில் தூக்கிய சிறு சாமான்களுடன் வந்த எம்மைத் திரும்பி உறுத்துப் பார்த்தபடியே நேரே சென்றனர். வெறுப்பும், குரோதமும், ஆணவமும், உறைத்த முகங்கள்.

ஆக்கிரமிப்பு இராணுவங்களுக்குரிய அதிகார நடை முதலில் சிங்கள இராணுவம் எனத்தான் நினைத்தேன். ஆனால் அவர்கள் இந்தியர்கள்தான்! 'புதிய சப்பாத்தின் கீழ்' கவிதைகளில் வரும் வரிகள் சில நினைவுக்கு வந்தன.

தொடர்தல் 68ம் பக்கம்

# சிங்கத்தின் நகங்க...

67ம் பக்கத் தொடர்ச்சி...

*நிறந்தான் மாறியது:*
*மொழிதான் மாறியது:*
*நாங்கள் இன்றும்*
*அடக்கு முறையின் கீழ்...*

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் சிறிது குறைந்த போதிலும், தட்டுப்பாடே நிலவியது. வாகனப் போக்குவரத்திற்கு இந்தியப் படை விதித்திருந்த பெருங்கட்டுப்பாடுகளினாலேயே, பொருட்களைக் குடா நாட்டினுள் கொண்டு வர முடியாத நிலை. அன்றாடத் தொழில் செய்வோரிற்கு வருமானமேதுமில்லை. மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாது. அரசு ஊழியர்களிற்கும் சம்பளம் பெற முடியாத நிலை. பெரும் பணக்காரரையும் வர்த்தகர்களையும் தவிர்த்த ஏனையோரின் நிலைமை மிகமோசம். ஊர்களில் அமைந்திருந்த பெரிய தடை முகாம்களில் இடைக்கிடை கொடுக்கும் உணவுப் பொருள்களிற்கு முண்டி அடிப்பதைத் தவிர, வேறு வழியேதுமில்லை. பொருட்கள் கொடுக்கப்படும் நாட்களில் கூட்டம் அலைமோதும், நீண்ட வரிசையில் நெடுநேரங் காத்திருந்தால் சிறிய தகரப்போணி (small tin)யால் கொஞ்ச அரிசி அல்லது கோதுமை மா, ஒரு கைப்பிடியளவு சீனி (Sugar), கொஞ்சம் கடலை எண்ணெய் (இதை எமது மக்கள் விரும்புவதில்லை. தேங்காய் எண்ணெய் தாராளமாகக் கிடைக்கும் நாடல்லவா) கிடைக்கும். இவற்றை விநியோகத்திற்கும் 'வீரர்களின்' கெடுபிடிகளையும், மரியாதைக் குறைவான நடத்தைகளையும் தாங்கிக்கொண்டு தான் இவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஓர் ஆளின் ஒரு நாட்தேவைக்கே இது போதாது. இரண்டு மூன்று குடும்ப உறுப்பினர்கள் (வளர்ந்தவர்கள்) வரிசையில் நின்றால்தான் கொஞ்சமாவது சமாளிக்கலாம். இதுதான் நாம் அனுபவித்த யதார்த்தம். ஆனால் 'அன்பு வழி'யும் 'வெற்றிமாலை'யும் தொடர்ந்து ஓலமிடும், "... யாழ்ப்பாண மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும், மற்ற அத்தியாவசியப் பொருள்களையும் 'அமைதிப்படை' தாராளமாக வழங்கி வருகிறது..." என. தமது தேவைக்காக மற்றவர்களிடம் கையேந்தி வாழும் நிலைமையில் வாழ்ந்தவர்களல்லர் எமது மக்கள். பொதுவாக எமது வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. மிகவும் அடித்தட்டில் உள்ளவர்கள் கூட பட்டினியின்றிச் சமாளிக்கும் நிலையே பொதுவானது. நாற்பது ஆண்டுகளாகத்தொடர்ந்து வரும் பௌத்த சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைகளிற்கு எதிராக - சுதந்திரத் தாயகத்தை அமைக்க நாங்கள் போராடினோம். ஆனால் ஆயுத முனைகளினால் அடக்க முயன்றுகொண்டு, மறைமுகப் பொருளாதாரத் தடையை நடை முறைப் படுத்திக்கொண்டு, அரிசியையும், கோதுமையையும், ஒரு கையினால் கிள்ளிப் போட்டபடி... தனது 'மனித நேச'த்தைப் பற்றித் தம்பட்டமடிக்கிறது இந்திய அரசு.

யாழ்நகரெங்கும் நூற்றுக்கணக்கிலான வீதித்தடை முகாம்கள். ஒவ்வொரு தடை முகாமிலும் ஆயுதந்தரித்த இருபது இருபத்தைந்து இராணுவத்தினர். அவர்களின் முன்னால் சைக்கிளில் ஓட முடியாது. இறங்கி நடந்துதான் செல்ல வேண்டும். அடிக்கடி இறங்கி நடந்து பிறகு ஏறிச் செல்ல வேண்டி நேர்வதில், மனது சங்கடப்படும். 'எங்கிருந்தோ வந்தவர்கள் எங்களை ஆட்டுவிக்கிறார்கள்' என்ற உணர்வே எரிச்சலோடு மேலெழும்பும். மிக அவசியமான தேவைகளுக்கல்லாமல் வெளியே வருதைக் குறைத்துக்கொண்டேன். பலரும் அப்படித்தான். அப்படி வரும்போது இயன்ற வரை தடை முகாம்களைச் சந்திக்காமல் செல்வதற்குரிய ஒழுங்கைகளையே (by lanes) அது எவ்வளவு சுற்றுப்பாதையாக இருந்தபோதிலும் மனம் விரும்பியது.

சிலவேளைகளில் முகாம் அருகில் சைக்கிளை உயரே தூக்கிச் செல்லும்படி சொல்லுவார்கள். வீதியருகில் நிலத்தில் (வெயிலிலும்) பல மணி நேரம் குந்தியிருக்கச் செய்வார்கள். சில வேளைகளில் சேர்ட்டுக்களை உடனே கழற்றி வைத்து விட்டே குந்தியிருக்கச் செய்வார்கள். உங்களிற்கு எவ்வளவோ அவசர வேலைகள் இருக்கும்... அவர்களிற்கு அதுபற்றிப் பொருட்டில்லை. தமது மேலாதிக்க மனோபாவத்தைத் திருப்திப்படுத்த இத்தகைய இராணுவ விளையாட்டுகள் அவர்களிற்குத் தேவை போலும். நல்ல வேளை. நான் ஒருபோதும் இவ்வாறு அவஸ்தைப் படவில்லை. ஆனால், எனது நண்பர்களிற் சிலர் இரண்டு மூன்று முறை துன்பப்பட்டிருக்கின்றனர். இத்தகைய தடை முகாம்களிலும் வேறு இடங்களிலும் மொழி பிரச்சினையாய் இருக்கிறது. பெரும்பாலான இராணுவத்தினர் தமது தாய் மொழிகளிலேயே கேள்வி கேட்கின்றனர். ஆங்கிலம் சிறிது (இரண்டு மூன்று சொற்களில்) கதைப்பவர்களையும் அரிதாய்த்தான் காணலாம். இதனால் துன்புறுபவர்கள் எமது மக்கள்தான். முன்பு சிங்களத் திணிப்பினால் விளைந்து வந்த கசப்புணர்வு இன்று பல்வேறு மொழிகளின் திணிப்பினால் விரிவடைந்திருக்கின்றது. பல இடங்களில், பெரிய எழுத்துக்களில் ஹிந்தியில் பெயர்களை எழுதி வைத்திருப்பதைப் பார்க்கையில் தமிழகத்தில் நடந்த ஹிந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் நினைவுக்கு வருகின்றன.



எமது இளம் பெண்களில் அதிகமானோர் மேற்சட்டையும் (blouse), Frocksம் அல்லது 'கவுன் (Gown) அணிவதே வழக்கம். இரண்டு வகை உடுப்புகளுமே முழங்கால் களிற்குச் சிறிது கீழிறங்கி நிற்கும். வெளித்தெரியும் கால்களின் கீழ்ப் பகுதிகளைக் கண்டு இந்திய வீரர்கள் தடுமாறுகிறார்கள் போலும். இத்தகைய வீதித் தடை முகாம்களில் இளம்பெண்களைக் கூடிய நேரம் நிறுத்தி, மேற்புறச் சட்டைக்குள் கைபோட்டுப் பார்க்கிறார்கள். அவ்வாறே இடுப்புப் பகுதிகளைக் கைகளால் பிசைந்து பிசைந்து பார்க்கிறார்கள். கிரனேட் (எறிவெடி) தேடுகிறார்கள்.

ஒரு தடவை டெம்பிள் ரோட்டில் வந்து கொண்டிருந்தேன். சிறு தொலைவில் சைக்கிளை விட்டிறங்கி உருட்டிக்கொண்டு வருகையில், தடை முகாமின் முன் 18 வயதளவிலான ஒரு மாணவி தனது சைக்கிளுடன் நிற்கக் கண்டேன். ஓர் இராணுவ வீரன், சிறிது தள்ளி நின்றபடி அந்த மாணவியை ஏதோ கேட்டான். மாணவி அடையாள அட்டையைக் கையில் பிடித்தபடி மிரட்சியுடன் நின்று கொண்டிருந்தாள் என விளங்கிவிட்டது. இரண்டொருவர்தான் அவ்வேளை, முகாமைக் கடந்து சென்றனர். நான் வேண்டுமென்றே மெதுவாக நடந்து போனேன். இராணுவத்தான் தனது யூனிபோமை இரண்டு கைகளாலும் தொட்டுக் காட்டியபடி அந்தப்பெண்ணை நோக்கி 'Open, open ...' என்று சொல்லுவது கேட்டது. அந்த இளம் பெண்ணின் மேற்சட்டையைத் திறந்து காட்டச் சொல்லுகிறான். இவன் 'கை தொடாமல் கிரனேட் தேடும் வீரன் போலும். நான் எரிச்சலுடன் அவனையும் பெண்ணையும் பார்த்தபடியே நகர்ந்தேன். திடீரென மண் மூட்டை அரணின் பின்னிருந்து தலைதூக்கிய கிழட்டு இராணுவத்தான் 'Go! Go!' எனக் குரல் கொடுத்தபடி கையையும் ஆட்டினான். தப்பினேன் பிழைத்தேன்' என்பது போல் அந்த இளம் மாணவி சைக்கிளில் ஏறி அவசரமாய் ஓடினாள். அப்பாடா! பசித்த ஓநாய்களிடமிருந்து ஓர் ஆட்டுக்குட்டி தப்பிவிட்டது. 'மதிப்புக்குரிய பாரத வீரனொருவன்' 79 வயது தமிழ் மூதாட்டியையும் கற்பழித்திருக்கும் மகத்தான செயல் ஒன்று, இலங்கை நாடாளுமன்றம்வரை சென்றிருக்கிறது. பல தடவைகளிலான முறைப்பாடுகளின் பின் இத்தகைய இராணுவ லீலைகள்' குறைந்துள்ளன. சோதனைகளிற்காகப் பெண் போலீசார் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 80,000 இந்திய இராணுவத்தினர் தற்போது உள்ளனர். ஆகவே இராணுவப் பிரதேசங்களாகவே இவை மாறிவிட்டன. குறிப்பாக வடக்கில் கெடுபிடிகள் அதிகம். நாம் நினைப்பவற்றைப் பேசும், எழுதும் சுதந்திரம் நிலவவில்லை. நீண்டகால இடைவெளியின் பின் இரண்டு தினசரிப் பத்திரிகைகள் (முன்பு நான்கு வெளிவந்தன) வருகின்றபோது, பல்வேறு கட்டுப்பாடுகளுக்குட்பட்டே வெளிவருகின்றன. இந்திய இராணுவ நடவடிக்கைகளையோ, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையோ அவை விமர்சிக்க முடியாது. அச்சக உரிமையாளர்களை வரவழைத்து யாழ்ப்பாணத்தில் நடத்திய கூட்டமொன்றில் நகரப் படைத் தலைமை அதிகாரி வெளிப்படையாகவே குறிப்பிட்டார்: "இந்திய நலன்களிற்கு விரோதமாக, போராளிகளிற்கு ஆதரவாக எதையாவது அச்சடித்தால், அந்த அச்சகத்தைக் குண்டு வைத்துத் தகர்ப்பது தவிர்க்கவியலாது."

ஆயுதங்களை வைத்திருப்பதாலேயே அமைதி குலைகின்றது என்று சொல்லிக் கொண்டே, இராணுவ நடவடிக்கைகளில் அமைதிப்படை ஈடுபடுகிறது! ஐந்து மாதங்கள் சென்ற பின்னரும் வடக்கு - கிழக்கில் அமைதி திரும்பவில்லை. நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தை அறிவித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதின் மூலம் அமைதியை நிலைநாட்ட இந்திய அரசைக் கோரி, மட்டக்களப்பு அன்னையர் முன்னணியைச் சேர்ந்த இருவர் தற்போது உண்ணாவிரதம் இருந்துவருகின்றனர். இந்த காந்திய வழிமுறைக்கும் இந்தியா மதிப்புக் கொடுக்கவில்லை என்பதோடு செய்தியாளர் மகாநாடொன்றில் இந்தியத்தூதர் ஜே.என். தீக்ஷித் கிண்டல் வேறு செய்கிறார்: "உண்ணாவிரதம் இருப்பவர்கள் அன்னையர் முன்னணியர் அல்லர். பாட்டிமார் முன்னணியினர். இனிமேல் தாத்தாமார் முன்னணியும் தோன்றலாம்." யாழ்ப்பாணச் சுவரொன்றில் ஒரு வாசகம் பெரிதாய் எழுதப்பட்டிருக்கிறது: "கோட்சே காந்தியைக் கொன்றான். ராஜீவ், காந்தியத்தையே கொன்றுவிட்டார்!' இது, அர்த்தபுஷ்டி நிறைந்த வசனமாகவே எனக்குத் தெரிகிறது.

•

எல்லா அவலங்களிற்கும் காரணமாக இரண்டு முக்கிய விடயங்களே அமைந்துள்ளன.

## இந்திய - இலங்கை ஒப்பந்தம்:

நாங்கள் ஒரு தேசிய இனம், வடக்கு - கிழக்கு மாகாணங்கள் எமது பாரம்பரிய தாயகம். இப்பிரதேசத்தில் எமது சுயநிர்ணய உரிமையை நிலைநிறுத்துவதற்கான தேசிய விடுதலைப் போராட்டத்தினையே நடத்திக்கொண்டிருக்கிறோம். இந்திய - இலங்கை அரசுகள் தமக்கிடையில் செய்து கொண்ட இந்த ஒப்பந்தம், எமது சுயநிர்ணய உரிமையினை ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ்த் தேசிய இனத்தின் பிரதிநிதிகள் யாரும் கையெழுத்திடாத நிலையில் அதனை எம்மீது திணிக்க முயல்வது, எமது சுயநிர்ணய உரிமையினை மறுத்தலேயாகும். ஒப்பந்தத்தில் தான் கைச்சாத்திடுவதற்கு முந்திய நாளே, தமிழ் விடுதலை இயக்கத் தலைவர்களுடன் ராஜீவ் காந்தி பேச்சுவார்த்தை நடத்தினார். அவர்கள் தமது அதிருப்திகளை வெளிக்காட்டியபோது ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டு அரசுகளின் நலன்களையே அந்த ஒப்பந்தம் நிறைவேற்றுகிறது. அதிகாரமற்ற மாகாணசபை, தற்காலிக வடக்கு - கிழக்கு இணைப்பு, அரசியற் கைதிகளின் விடுதலை (இவர்களிற் பெரும்பாலோர் சந்தேகத்தில் வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவிகள்) தமிழும், ஆங்கிலமும், அரசாங்க மொழிகளாக்கப்படலாம் (எனவே அது கட்டாயமல்ல) என்ற ஆலோசனை என்பனவே அதில் தமிழர்கள் பற்றி வருவன. இந்தியாவிற்கு விரோதமான சக்திகள் இலங்கையில் நிலைகொள்வதைத் தடுப்பதும், அதன் மூலம் தனது பிராந்திய மேலாதிக்க நலன்களைப் பேணுவதுமே இந்திய அரசின் முக்கிய நோக்கம். அதை அடைவதற்காகவே இந்த ஒப்பந்தத்தினை உருவாக்கியது. தமிழர்களின் நலன்களைக் காப்பதற்காகவே ஒப்பந்தம் என்று சொல்லியது. பிரச்சார நோக்கங்களிற்காகவே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட சில நாட்களின் பின்னர் சென்னை மெரீனா கடற்கரையில் நடந்த மாபெரும் கூட்டமொன்றில், "தமிழ் நாட்டுக்கு உரிய அதிகாரங்களைப் போன்ற கூடிய அதிகாரங்கள், இலங்கைத் தமிழர்களிற்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் கேட்டதையும் விடக்கூடுதலாக இந்த ஒப்பந்தம் வழங்கியுள்ளது" என்று ராஜீவ் சொன்னார். இது அப்பட்டமான மோசடியாகும். இலங்கைத் தமிழர்கள் கேட்டது சுதந்திரத் தனி நாடு. அவர்களிற்குத் தற்போது வழங்கப்பட்டிருப்பது வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்ட, அதிகாரங்களற்ற இரண்டு மாகாண சபைகளாகும். தீவிரத் தன்மையற்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களே (T.U.L.F) இது பற்றிய தமது அதிருப்திகளை இப்போது வெளியிட்டுள்ளனர். இலங்கைத் தமிழர்களின் நலன்களிற்காகவே ஒப்பந்தம் செய்யப்பட்டது என்று இதுவரை கூறிவந்த இந்தியத் தலைவர்கள், இப்போது "இந்தியாவிற்கு எதிரான சக்திகள் இலங்கையில் நிலைகொள்வதைத் தடுப்பதற்காகவும், இந்தியாவின் நீண்டகால நலன்களைப் பேணுவதற்காகவுமே ஒப்பந்தம் செய்யப்பட்டது" என்று வெளிப்படையாகவே கூறுகின்றனர். ராஜீவ் காந்தி, நட்வர்சிங், கே.சி. பந்த் ஆகியோர் இவ்வாறு பேசியுள்ளனர். "பைகள் இருந்த பூனை இப்போது வெளியே வந்துவிட்டது."

இந்தியாவின் நலன்கள் பேணப்படுவதற்கு இலங்கைத் தமிழ்த் தேசிய இனம் எதிரானதல்ல. ஆனால் தனது நலன்களை அடைவதற்காக, விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருந்த ஒடுக்கப்பட்ட தேசிய இனமாகிய எமது நலன்களைப் பலிகொடுத்து இந்திய அரசு செய்துகொண்ட பெறுமதியற்ற ஒப்பந்தத்தையே நாம் எதிர்க்கிறோம். இந்தியாவின் முன்னாள் வெளியு

தொடர்தல் 71ம் பக்கம்

**ஈழத்தில் இந்திய இராணுவம் செய்த அழிவுகளைப் பதிவுசெய்யவேண்டும் என்கிற பிரக்ஞையுடன் உண்மைச் சம்பவங்களின் தொகுப்புகள் இரண்டு தொகுதிகளாக 'அம்மாளைக் கும்பிடுறானுகள்', 'வில்லுக்குளத்துப் பறவைகள்' என்கிற பெயர்களில் முறையே ஆவணி 1994, ஆடி 1995 இல் வெளியாகியிருந்தன. இந்திய இராணுவம் ஈழத்தில் இழைத்த மானுடத்துக்கு எதிரான வன்முறைகளுக்காக, சாட்சியங்களான இந்த தொகுப்புகள் இன்னும் பரவலாகச் சென்றடையவேண்டியன. வில்லுக்குளத்து பறவைகளில் இருந்து அதே பெயரில் வெளியான பதிவொன்று இந்தத் தொகுப்பிற்காகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

சறோ அக்கா முற்றத்திற்கு வந்தாள்...

வாசலில் துப்பாக்கியும் கையுமாக இந்தியப் படை வெறியர்கள்.

"நட முகாமுக்கு" என்று கத்தினான் ஒரு முரடன்.

அக்கா நடந்தாள்.

பிள்ளைகள் வாய்விட்டு அழத்தொடங்கிய போது, "ஏன் பிள்ளையள் குழறுறீங்கள்... எதையோ கேட்கிறதுக்குத்தானே கூட்டித் துப் போறானுவள். விட்டுடுவானுகள்" என்று தேற்றினாள் அவள்.

கொஞ்சநேரத்தில் ஊரே கூடிவிட்டது.

"பாவம்... இவளை எதுக்குத்தான் கொண்டு போறானுவளோ..." என்று படபடத்தார் பக்கத்து வீட்டுக் கிழவர்.

சம்பூர் நூல்நிலையத்தை இந்தியப்படை முகாமாக மாற்றியிருந்தார்கள். கிராம மக்களுக்கு அறிவூட்ட, ஒருகாலத்தில் ஊர்ப் பெரியவர்களால் அந்த நூல்நிலையம் அமைக்கப்பட்டது. இன்று வல்லாளுமை வெறியர்களின் கொடிய அடக்குமுறையை ஒரு வரலாற்றுப் பாடமாக, சம்பூர் மக்கள் இங்கே படிக்கிறார்கள். அன்றாடம் சித்திரவதைகள்- பெண்வதைகள் - கொலைகள்...

முகாமின் முற்றத்தில் நின்ற சறோ அக்கா நினைத்துப் பார்த்தாள்... இந்த முகாமை ஒட்டினாற்போல் சம்பூர் வில்லுக்குளம். குளத்திற்கு மறுபக்கத்தில் - தூரத்தில் கூனித்தீவும் - அவள் வீடும். வீட்டில் பிள்ளைகள் என்ன செய்யுமோ...?

இரவாகி...உலகம் இருண்டுபோய்க் கிடந்தது. துப்பாக்கிகளோடு படை வெறியர்கள் அங்கும் இங்குமாக...

அப்போதுதான்...

அந்தக்கொடிய சிரிப்பை அவள் கேட்டாள். அறையிலிருந்து வெளியே எட்டிப் பார்த்த இந்தியப் படை மேஜர், அவளை உள்ளே வருமாறு அழைத்தான்... பின்பு அவளுக்குத் தெரியும் - அவன்தான் மேஜர் 'கோர்'.

உள்ளே நடுங்கிக்கொண்டே போனாள் சறோ அக்கா. சாராயத்தின் நெடி மூக்கைத் துளைத்தது.

"சூடைக்குடா ராயப்பு யேசுராஜாவின் சாவீட்டுக்குப் போனாயா...?"

யாரோ ஒருவன் மேஜர் கோரின் ஆங்கிலத்தைத் தமிழில் மொழிபெயர்த்துக்கொண்டிருந்தான்.

அக்காவிற்கு இப்போது நிலைமை தெளிவாயிற்று. இரண்டு நாட்களுக்கு முன்புதான் அவள் யேசுராஜாவின் சாவீட்டிற்குப் போய் வந்தாள். யேசுராஜா விடுதலைப் புலி அல்ல - ஆனால் இந்தியப் படையால் தேடப்பட்டவன். கொடுமையான சித்திரவதையின் பின்பு அவனைக் கொன்று பிணமாக வீசினார்கள். அண்மையில் திருமணமானவன் யேசுராஜா - மனைவிக்குச் சின்ன வயது. போய் அவளுக்கு ஏதாவது ஆறுதல் கூறவேண்டும் போல், சறோ அக்காவுக்குத் தவிப்பாய் இருந்தது. "யேசுராஜாவின் சாவீட்டிற்கு யாரும் போகக்கூடாது" என்று இந்தியப் படை போட்ட தடையையும் மீறி அவள் அங்கே போனாள். அந்தப் பெண்ணின் கண்ணீரை முடிந்த வரை துடைத்து, ஏதோ ஒரு மன அமைதியோடுதான் அவள் வீடு திரும்பினாள். அதற்குள்...

"ஓம்... போனனான்தான்... சாவீடு எண்ட படியாத்தான் போனனான்..."

அக்கா ஒப்புக்கொண்டாள்.

மேஜர் கோர் இன்னொருமுறை அதிர்ந்து சிரித்தான்.

பின்பு அறையிலிருந்த மற்ற இந்தியப்படை ஆட்களை வெளியே போகச் சொல்லி விட்டுக் கதவைப் பூட்டினான் அவன்.

அக்காவை ஒரு நாற்காலியில் உட்காரச் சொல்லிக் கையால் காட்டிவிட்டு, முன்னால் ஒட்டினாற்போல் இன்னொரு நாற்காலியைப் போட்டு உட்கார்ந்தான் மேஜர்.

விலங்குத்தனத்தின் இறுக்கமான பிடி... கொடிய வெறியின் திணிப்பு... மனிதத் தன்மையின் சமாதி...




அந்த இரவு கொடுமையானது.

எங்கே ஓடமுடியும்?

காலையில் கதவு திறக்கப்பட்டதும் - "நீ போகலாம்" என்று சொன்னான்... கோர்.

அக்கா தெருவுக்கு வந்தாள்.

சினத்தோடு காறித் தெருவில் துப்பினாள்.

"இவனுகள் என்னதான் செய்தாலும் எண்ட தமிழீழ உணர்வை அழிக்க முடியாது" என்று உறுமினாள் அவள்.

கூனித்தீவில் தண்ணீர்த் தாங்கிக்குப் பக்கத்தில்தான் சறோ அக்காவின் வீடு. இரண்டு அறைகளும், பாதி முன் மண்டபமும். வீட்டிற்குப் பின்னால் அழகான அந்த வில்லுக்குளம்.

தாயகத்தோடு ஒன்றிப்போன உணர்வுகள் - கணீரென்ற மிடுக்கான பேச்சு - கள்ளம் கபடமில்லாத சிரிப்பு - துணிச்சல் - கூனித் தீவில் அக்கா நிழல்மரம்.

"வாங்க ஆச்சி...இருங்க... சங்கத்து வேலை எல்லாம் ஒழுங்கா நடக்குதுதானே? எப்படி அண்ணன், பானைகளை சூளையில வச்சீட்டீங்களா?

கேள் புள்ளை... சிங்கள 'ஆமி'க்காரனுகள் நம்மட பொம்புளையள படுத்துகிற பாட்டை கட்டுரையா எழுதி வெளி உலகத்துக்குத் தெரியப்படுத்த வேணும்..."

வீட்டில் எல்லோரும் நிறைந்துபோய் இருப்பார்கள். அக்காவின் குரல் 'கணீர்' என்று ஒலிக்கும். மட்பாண்டச் சங்கத் தலைவி - மாதர் சங்கத் தலைவி அன்னையர் முன்னணித் தலைவி - சைவ மங்கையர் கழகத் தலைவி - மக்கள் குழு உறுப்பினர் என்று கூனித்தீவில் எல்லாமே அக்காதான் என்பதால், அக்கா வீடு கலகலப்பாகவே இருக்கும்.

1984ல் அக்காவுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிமுகமானார்கள். புலேந்திரன், சந்தோஷம், கணேஸ் போன்ற திருகோணமலை மாவட்டப் புலிகள் தலைவர்கள் அக்காவை அடிக்கடி சந்தித்த நாட்கள்... அக்கா புலிகள் இயக்கம் அல்ல ஆனால் புலிகளின் பெரிய விடுதலை வேட்கையும் ஈடிணையற்ற வீரமும் அவர்களின் மாபெரும் உயிரிழப்புக்களும், அவள் நெஞ்சைத் தொட்டன.

சறோ அக்காவுக்கு 42 வயது. கணவனோடும் 7 பிள்ளைகளோடும் அவள் வாழ்க்கை. மூத்தவளுக்கு வயது 18. கடைசிப் பெடியன் இப்போதுதான் 6 வயதைத்தாண்டிக் கொண்டிருக்கிறான். இந்த நீண்ட வாழ்வில் தமிழீழத்தின் போராட்ட வரலாற்றை அவள் நன்கு அறிவாள். தமிழர் போராட்டத்தில் இயலாமைகள் - போலித்தனங்கள் - தொய்வுகள் எல்லாம் நிறைந்துபோன ஒரு காலத்தில்தான், விடுதலைப் புலிகள் தோன்றினார்கள். அவர்கள் வாழ்க்கை எத்தனை பெரியது...!

தொலைவில் எங்கோ காட்டில் நீண்ட ஒதுக்குப்புற வயல் வெளிகளில் அவர்கள் புல்லோடு புல்லாகப் படுத்திருப்பார்கள். அக்கா சோறும் கறியும் சமைத்துக் கொண்டு போய்க் கொடுப்பாள்.

"நீங்கள் எண்ட புள்ளையளைப்போல இல்லையில்லை... நீங்கள் எண்ட புள்ளையள்" என்பாள் அக்கா. வீட்டிலும் இப்படித்தான்... அடுப்பில் எப்போதும் தேநீர்ப் பானை கொதித்துக்கொண்டேயிருக்கும்.

காயப்பட்ட விடுதலைப் புலிகள் பலதடவை அக்கா வீட்டில் மருந்து கட்டியிருக்கிறார்கள். புலிகளுக்கு மட்டுமல்ல கூனித்தீவுக்கே அக்கா வீடு ஒரு மருத்துவ நிலையம் போலத்தான். சிறிலங்காப்படைகள் வெறிக்கூத்தாடிய 1985 - 86 - 87 களில், சறோ அக்காவைச் சிங்களப்படைகள் வெறிகொண்டு தேடின. அப்போது சிலகாலம் தலைமறைவாக அவள் வாழ நேர்ந்தது. "உன்னுடைய பிள்ளையளுக்காக நீ மறைந்து வாழத்தான் வேண்டும்" என்று யாரோ அவளுக்கு அறிவுரை சொன்ன போது, அக்கா திருப்பிக் கூறினாளாம் - "பெற்ற பிள்ளைகளுக்காக மட்டுமல்ல மற்றப் பிள்ளைகளுக்காகவும்தான் நான் தலைமறைவாகிறேன்."

ராஜீவ் - ஜே. ஆர். உடன்படிக்கையைத் தொடர்ந்து, சறோ அக்கா வெளிச்சத்துக்கு வந்தாள். விடுதலைப் புலிகளின் மேடைகளில் மக்கள் அவளைப் பார்த்தார்கள். திலீபனின் இரங்கல் கூட்டங்களில் அவள் குரல் இடியாய் முழங்கியது.

அக்கா இந்தியப் படைக்கும், 'றோ'வின் கைக்கூலிகளுக்கும் அடிவயிற்றில் நெருப்பானாள்.

•

13. 07. 89 தான் அந்த நாள்.

காலையில் படுக்கை விட்டெழுந்ததும் சறோ அக்கா வழமைபோல் சுறுசுறுப்பானாள்.

எத்தனை துன்பங்கள்.

87 ஒக்ரோபர் 10ல் இந்தியப் படைக்கும் புலிகளுக்கும் போர் தொடங்கிய நாளிலிருந்து, இரண்டு மூன்று தடவைகளுக்கு மேல் அவளை இந்தியப் படை வெறியர்கள் முகாமுக்குக் கொண்டுபோய், என்ன பாடெல்லாம் படுத்திவிட்டார்கள்.

அக்கா நெருப்பில் நனைந்து நிற்கிறாள்.

எப்போதும் போல அடுப்பில் தேநீர்ப் பானை கொதிக்கிறது.

மனைவியின் துன்பங்கள் அவளுக்கு ஏற்பட்ட கொடுமைகள் - எல்லாவற்றையுமே அமைதியோடு தாங்கிக்கொண்ட கணவனுக்கு ஆசையோடு தேநீர் போட்டுக் கொடுத்துவிட்டு, ஐந்தாவது பெண் மனைவைக்கூப்பிட்டு மடியில் வைத்துக்கொஞ்சினாள் அக்கா.

மனாதான் அக்காவுக்குச் செல்லப் பெண்.

நடுப்பகல் ஆயிற்று.

சாப்பிட உட்கார்ந்த அக்கா சொன்னாள் "காட்டிலையும் மேட்டிலையும் பிள்ளையள் என்ன பாடு படுகுதோ...?"

எப்போதும் அக்காவுக்குப் புலிகளின் நினைவுதான்.

விடுதலைப் புலி லிங்கம் அடிக்கடி அக்கா

தொடர்தல் 71ம் பக்கம்

# இந்திய 'அமைதி'ப்படையும் நினைவில் ஊர்ந்து திரியும் புழுக்களும்...

தமிழ்நதி

மேலாதிக்க இந்தியாவும் பேரினவாத இலங்கை அரசும் தமிழர் பிரச்சினையை முன்னிறுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு முப்பது ஆண்டுகளாகிவிட்டன. எத்தனை தசாப்தங்கள் ஆனாலும், இந்தியா எமக்கு இழைத்த துரோகத்தை, கொடுமைகளை மறக்கமுடியாது. உயிரிழப்பு, சிறை, உடல் உளரீதியான சித்திரவதை, அங்கயீனம், காணாமலடிக்கப்படல், சொத்தழிப்பு என எம் வாழ்வை சின்னாபின்னப்படுத்திய இந்தியப்படைகளை வேறொரு காரணத்திற்காகவும் நாங்கள் மறக்கவும் மன்னிக்கவும் மாட்டோம். தமிழ்ப்பெண்களுக்கு அவர்களால் இழைக்கப்பட்ட பாலியல் வன்கொடுமையே அது!

'அமைதி'ப் படை வந்திறங்கிய போது சாதாரண சனங்களது முகங்களிலே தான் எத்தனை விகசிப்பு! மலர் மாலைகளோடும் ஆரத்தித் தட்டுக்களோடும் நன்றி துலங்கும் புன்னகையோடும் மக்கள் அவர்களை வரவேற்றார்கள். தம்மை வியப்பின் கண்களால் உற்றுப் பார்த்த குழந்தைகளுக்கு இந்தியப் படை இனிப்புகளை வழங்கியது.

வரலாறு பலசமயங்களில் மீள்திரும்புகிறது! பொஸ்னியாவின் செர்ப்ரெனிக்கா நகரத்தினுள் நுழைந்த ஜெனரல் மிலாடிச்சும், அவனது சேர்பியப் படைகளும் முஸ்லிம் குழந்தைகளுக்கு முதலில் இனிப்பு கொடுத்தார்கள். நகரத்தை ஆக்கிரமித்து, எட்டாயிரத்திற்கும் மேலான ஆண்களைக் கூட்டுப் படுகொலை செய்த பிற்பாடு, பொஸ்னிய முஸ்லிம் பெண்களுக்கு குழந்தைகளைக் கொடுத்தார்கள். 'வல்லுறவு முகாம்கள்' என்றழைக்கப்பட்ட வதைமுகாம்களில் பொஸ்னிய முஸ்லிம் பெண்களை அடைத்து வைத்திருந்து கர்ப்பந்தரிக்க வைத்ததன் மூலமாக பொஸ்னிய இனத்தூய்மையை அழித்துவிட்டதாக சேர்பியர்கள் எக்காளமிட்டார்கள்.

இந்தியப்படைகள் 'வல்லுறவு முகாம்'களை உத்தியோகபூர்வமாக நிர்மாணிக்கவில்லை என்பதையிட்டு இந்தியா பெருமைகொள்ளவியலும். மற்றபடி, சேர்பியப் படைகளுக்கு நிகரான பாலியல் துன்புறுத்தல்களை, இந்தியப் படைகளும் இழைக்கவே செய்தன.

ஜெனிவா உடன்படிக்கையின் நான்காவது ஷரத்தில், 'பெண்களின் கௌரவத்திற்குப் பங்கம் விளைவிக்கும் எந்தவொரு தாக்குதல்களிலிருந்தும் அவர்கள் பாதுகாக்கப்படல் வேண்டும். குறிப்பாக, பாலியல் வன்புணர்ச்சி, வலுக்கட்டாயமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுதல் எந்த வடிவத்திலேனும் அவர்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் இழிவுபடுத்தல்களிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்படல் வேண்டும்.' என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், பெண்களை தாயாகவும் தெய்வமாகவும் போற்றுவதாகக் கூறிக்கொள்ளும் இந்தியாவிலிருந்து வந்த படையினரோ பெண்களை தமது பாலியல் வக்கிரத்தைக் கொட்டும் உடல்களாக மட்டுமே பார்த்தார்கள்.

விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்குமிடையில் சண்டை தொடங்கிய பிற்பாடு, ஆண்கள் வகைதொகையின்றி கைதுசெய்யப்பட்டார்கள். கொல்லப்பட்டார்கள். வெளியேறும் வாய்ப்புக் கிடைத்த ஆண்கள் தப்பிச் சென்றார்கள். சண்டையின் உக்கிரம் தணிந்து, அகதி முகாம்களிலிருந்தும் புலம்பெயர்ந்துசென்று தங்கிய இடங்களிலிருந்தும் வீடுகளுக்குத்திரும்பியவர்களுள் பெரும்பாலானோர் பெண்களாகவே இருந்தனர். அன்றாட வாழ்வினைக்கொண்டு நடத்தவேண்டிய சுமையைத் தனித்துத் தாங்கியதோடல்லாமல், இந்தியப் படைகளின் பாலியல் வன்முறை வடிவிலான போருக்கும் முகங்கொடுக்க வேண்டியவர்களாக அந்தப் பெண்களே இருந்தார்கள். போர் மும்முரமாக நடந்த போது பல பெண்கள் இந்தியப் படைகளின் பாலியல் தினவுக்குப் பலியானதோடல்லாது கொல்லப்பட்டும்விட்டிருந்தனர்.



> பெண்களை தாயாகவும் தெய்வமாகவும் போற்றுவதாகக் கூறிக்கொள்ளும் இந்தியாவிலிருந்து வந்த படையினரோ பெண்களை தமது பாலியல் வக்கிரத்தைக் கொட்டும் உடல்களாக மட்டுமே பார்த்தார்கள்.

கோண்டாவிலைச் சேர்ந்த ராஜினி என்ற இளம்பெண் மலக்குழியிலிருந்து பிணமாக மீட்டெடுக்கப்பட்டாள். கனடாவுக்குச் செல்லவிருப்பதைத் தனது உறவினர்களுக்குத் தெரிவிக்கச் சென்ற அவள் வீடு திரும்பவில்லை. தாய்-தந்தை இருவரையும் இலங்கை இராணுவத்தின் எறிகணை வீச்சில் இழந்திருந்த இன்னொரு பெண்ணை இந்தியப் படையினர் பாலியல் வன்கொடுமை செய்தனர். அதைத் தொடர்ந்து அவள் கிணற்றில் வீழ்ந்து தன்னுயிரைப் போக்கிக்கொண்டாள். அப்போது கடுமையான செய்தித் தணிக்கை நிலவியது. (அதைப் பற்றி மூத்த பத்திரிகையாளர் கோபு அவர்களால் எழுதப்பட்ட 'ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை'யில் விபரிக்கப்பட்டுள்ளது.) ஆகவே, அத்தகைய வன்கொடுமை சம்பவங்களைப் பற்றிய தகவல்கள் பெரும்பாலும் வாய்வழிச்செய்திகளாகவே அறியக்கிடைத்தன.

நல்லூர் அகதி முகாமில் சில நாட்கள் தங்கியிருந்தபின், எனது பெற்றோரின் பூர்வீக கிராமத்திற்குச் சென்றுவிட்டோம். நாங்கள் வாடகைக்கு இருந்த 'பழம் றோட்' வீட்டுக்கு ஒன்றரை மாதம் கழித்துத் திரும்பி வந்து கண்ட காட்சிகள் எங்களை அதிர்ச்சியில் உறைந்து போகவைத்தன. நாட்பட்ட பிண வாடையோடு வீசிய காற்று, சிதைந்துபோனவையும் ஆளரவமற்றவைகளுமான வீடுகள், குண்டுங் குழியுமான வீதிகள். பசியோடு அலைந்து திரிந்த நாய்கள்... நரகம் என ஒன்றிருக்குமானால் அது அப்படித்தானிருக்க முடியும்! போதாக் குறைக்கு, பெண்கள் கத்தியழும் ஓசை இரவிரவாகக் கேட்டுக் கொண்டிருந்தது. நெஞ்சைப் பிளக்கும் மன்றாட்டமான கதறலது! அடுத்த நாள் காலையே முதல் பேருந்தில் ஏறி வவுனியாவுக்குச் சென்றுவிட்டோம். ஆண்டுகளால் மறக்கடிக்கப்பட முடியாத இரவு அது.

சில நாட்களிலேயே நாங்கள் திரும்பிவர வேண்டியிருந்தது. பிறகு கோண்டாவிலுக்கு வீடு மாறிச் சென்றுவிட்டோம்.

நள்ளிரவுகளில் நாய்கள் குரைக்கும் ஓசையைக் கேட்டு கண்விழிப்போம். எமது மூச்சே எமக்கு எமனாகிவிடுமோ என்ற பயத்தில் மூச்சை அடக்கிக்கொண்டு, ஓசைகளைக் கிரகித்தபடி படுத்திருப்போம். கனத்த சப்பாத்துக் காலடிகளின் ஓசையும் கடலை எண்ணெய் மணமும் மங்கித் தேயும்வரை நெஞ்சின் படபடப்பு நிற்காது. இந்தியப்படையினர் பெரும்பாலும் வாசல்களைப் பயன்படுத்துவதில்லை. அதற்கான அவசியம் இல்லாதபடி மதில்கள் சரிக்கப்பட்டு, வேலிகள் பிய்த்தெறியப்பட்டிருந்தன. கனத்த ஆயுதங்களையும் தொலைதொடர்புச் சாதனங்களையும் தோளிலேற்றியபடி காணிகளுக்கூடாக ரோந்து செல்வார்கள்.

விடுதலைப் புலிகளைத் தேடுகிறோம் என்ற கோதாவில் படையினர் வீட்டுக்குள் நுழைவார்கள். நாய்களின் குரைப்பொலி கேட்டவுடன், பெண்கள் உடனடியாக வீட்டை விட்டு வெளி முற்றத்துக்கு வந்துவிடுவார்கள். படையினரோ "உள்ளே போ.... வீட்டைக்காட்டு" என்று உடைந்த தமிழிலோ ஆங்கிலத்திலோ அதட்டுவார்கள். ஆண்களால் சுற்றிக்காட்டப்படும் வீடுகள் அவர்களுக்குத் திருப்தி அளிப்பதில்லை! தேடுதல் வேட்டைகளின்போது தனியே அகப்படும் பெண்கள், இந்தியப் படையினரால் கூட்டுப்பாலியல் வன்புணர்ச்சிக்குட்படுத்தப்பட்டார்கள். அங்கு நடந்ததைப் பற்றி எவருக்கும் கூறக்கூடாது என்று படையினர் எச்சரித்துவிட்டுப் போவார்கள். ஆனால், அந்த எச்சரிக்கையையும் மீறி, பொறுப்பார்ந்த அதிகாரிகளிடம் துணிச்சலோடு முறைப்பாடு செய்த பெண்களும் இருக்கத்தான் செய்தார்கள். அப்படிச் செய்வது அரிது. அதனிலும் அரிது, ஆளடையாள அணிவகுப்பில் இனங்காட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படுவது. பெரும்பாலும் இடமாற்றம்! அதுவே குற்றம் இழைத்த படையினருக்கு வழங்கப்படும் உச்சபட்ச தண்டனை. இது இந்தியப் படைகள், இலங்கைப்படைகள் ஆகியோரிடையில் மட்டுமல்லாது உலகமெங்கும் நிலவிவரும் பொதுவிதி.

விடுதலைப் புலிகளோடு தொடர்புள்ளவர்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டு முகாம்களுக்குக் கொண்டுசெல்லப்படும் பெண்கள் பலத்த தாக்குதலுக்கும் பாலியல் வன்கொடுமைக்கும் ஆளாக்கப்பட்டார்கள். புலிகளின் தங்ககங்களாக இருந்த வீடுகளின் சொந்தக்காரர்கள், அவர்களுக்கு சாப்பாடு கொடுத்தவர்கள் ஆகியோர் காட்டிக்கொடுக்கப்பட்டு கடுஞ் சித்திரவதைகளை அனுபவித்தார்கள்.

பெரும்பாலான பெண்கள் தங்களுக்கு நேர்ந்த கொடுமையை வெளியில் சொல்லாது மறைத்தார்கள். காரணம், விசாரணைக்கென்று முகாம்களுக்குக் கொண்டு சென்றுபின் வெளியில் விடப்படும் பெண்கள் வேறுவிதமாகவே பார்க்கப்பட்டார்கள். பாதிப்பை ஏற்படுத்திய படையினருக்கு மட்டுமல்லாது, சமூகத்துக்கும் சிலசமயங்களில் தம் குடும்பத்துக்கும்கூட அவர்கள் அஞ்சினார்கள். 'வழுக்கி விழுந்தவள்', 'கெட்டுப் போனவள்' என எத்தனையெத்தனையோ பெயர்கள் அவர்களுக்குச்சூட்டப்படுவதற்கென்றே காத்திருந்தன. சில விதிவிலக்குகள் தவிர்த்து, தான் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டவள் என்பதை கணவனுக்கோ காதலனுக்கோ கூட தயக்கமின்றிச் சொல்லமுடியாத நிலைமைதான் இன்றுமிருக்கிறது. பெண்களின் உடல்களில் தங்களது மானத்தின்(?) கனத்தை ஏற்றியிருக்கும் ஆண்களைக் குறித்து பிறிதொரு சமயம் கதைக்கலாம்.

மனக்காயத்தை மறைப்பதைப் போல உடற்காயங்களை எளிதில் மறைக்கமுடிவதில்லை. வைத்தியசாலைக்குச் செல்லவும் கூச்சப்பட்டுக்கொண்டு, வேதனையைத் தாங்கிக்கொண்டு இருந்தவர்கள் அநேகர்.

நாங்கள் மாதகல் நுணசை முருகன் கோவிலில் அகதிகளாகப் போய்த் தங்கியிருந்த போது எனக்கு இளம்வயது. திருமணமாகியிருக்கவில்லை. என்னையொத்த பெண்கள் இந்திய இராணுவத்தின் கண்களில் விழுந்துவிடக்கூடாதேயென்பதற்காக தாய்க்கோழிகள் தம் குஞ்சுகளை சிறகுகள் பொத்தி வைப்பதைப் போல தாய்மார் பொத்திவைத்திருந்தார்கள். பகலில் படையினர் வெளிவேட்டைக்குச் சென்றுவிடுவார்கள். இரவுகளில் அவர்களது தேடுதல் வேட்டை அகதி முகாமினுள் ஆரம்பமாகும். இருளில் மிதந்து வரும் 'டோர்ச் லைட்'

தொடர்தல் 71ம் பக்கம்

# இந்திய ‘அமைதி’...

70ம் பக்கத் தொடர்ச்சி...

எங்களை நோக்கி வரும் ஆட்கொல்லியாகவே தோன்றியது. நாங்கள் திருமணம் முடித்த பெரிய பெண்களாக இந்திய இராணுவத்தின் கண்களில் தோன்ற வேண்டுமென்பதற்காக, எங்களுடைய தாய்மார் எங்களுக்கு சேலை உடுத்திவிட்ட ‘கொடுமை’யும் அப்போது நடந்தது. இதை எனது ‘பார்த்தீனியம்’ நாவலிலும் எழுதியுள்ளேன். எண்பது வயதான முதிய பெண்களையே இந்திய இராணுவம் பாலியல் வன்கொடுமை செய்தது எனும்போது, சேலை கட்டியதன் மூலம் திருமணம் முடித்த பெண்களாக எங்களைக் காண்பித்து அவர்கள் கண்களிலிருந்து தப்பிக்க எண்ணியதை என்னவென்பது!

ஆனையிறவு மற்றும் இராணுவ முகாம்களைத் தாண்டிப் பயணிக்கும் பேருந்துகள் சோதனைக்காக நிறுத்தப்படும் போது ஆண்கள் இறங்கி நடந்துசெல்லப்பணிக்கப்படுவார்கள். இந்தியா பெண்களைத் தெய்வமாக வணங்குகிற தேசம். ஆகவே இப்படிச் செய்கிறதென்று ஆரம்பத்தில் சிலர் எண்ணியிருக்கக் கூடும். ஆனால், பெண்களின் உடல்களை தமது தினவைத் தீர்க்கும் பாலியல் பண்டமாக்கி ‘தேடுதல்’ நடத்தும் அருவருக்கத்தக்க நோக்கமே அந்த ‘இரக்க’த்தின் பின் ஒளிந்திருந்தது வீதிச் சோதனைகளின்போதும் வீடுகளில் தேடுதல் நடத்தியபோதும் இதுவே நிகழ்ந்தது. அப்போது உடலும் மனமும் குன்ற கண்ணீர் வழிய நின்றது நினைவிருக்கிறது. இந்த வினோதமான ‘தேடுதல்’ நடவடிக்கைகள் குறித்து இந்தியப் படையினரிடம் தமிழர் தரப்பிலிருந்து கேள்வி எழுப்பப்பட்டபோது, (மென்மையாகத்தான்) ‘மார்புச் சட்டையுள்ளும் கால்களுக்கு நடுவிலும் குண்டுகளைத் மறைக்கும் பெண்கள் இருந்த காரணத்தினாலேயே’ அவ்வாறு சோதனை செய்யப்பட்டதாகப் பதிலளிக்கப்பட்டது.

விதிவிலக்காக சில நேர்மையான அதிகாரிகளும் இருக்கத்தான் செய்தார்கள். அவர்களுடைய கண்காணிப்பின் கீழ் வரும் சிப்பாய்கள் இந்தச் சேட்டைகளில் ஈடுபடுவதில்லை. அப்போதெல்லாம் வக்கிரத்தின் ஆற்றாமையை அந்தச் சிப்பாய்களின் விழிகளில் காணக்கூடியதாகவிருந்தது.

யாழ்ப்பாணத்துக்குப் பொறுப்பதிகாரியாக இருந்த பிரிகேடியர் காலோனின் படைப்பிரிவிலிருந்த நான்கு இராணுவத்தினர், யாழ்ப்பாணத்தில் பாலியல் வல்லுறவு செய்தார்களென்ற குற்றச்சாட்டின்பேரில் இராணுவ நீதிமன்றத்தின்முன் நிறுத்தப்பட்டதைப் பற்றி, குறிப்பிட்ட பிரிகேடியரிடம் ஒரு செய்தியாளர் வினவியபோது, “இந்தியச் சிப்பாய்கள் தேவன்களில்லை, நாங்கள் சாத்தான்களுமில்லை. வன்புணர்வு எல்லா இடங்களிலும் நடக்கிறது, மேற்கிலும்கூட” என்று பதிலளித்தார். மேலும், ‘யுத்தத்தால் படையினருக்கு ஏற்படுகிற களைப்பே அவர்களை இவ்வாறு நடந்துகொள்ளத் தூண்டுவதாக’வும் படைத்தரப்பிலிருந்து காரணஞ் சொல்லப்பட்டது.

‘பார்த்தீனியம்’ நாவலில் ஓரிடத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கும்: ‘விரும்பித்தொடப்படுகிற தொடுதல்களைக்கூட ஒரு பெண் மறந்துபோகக்கூடும். ஆனால், தன்னுடல் விருப்பமின்றி ஒரு பொருளைப்போலக் கையாளப்பட்ட அவமானத்தையும் அருவருப்பையும் அவளால் ஒருபோதும் மறக்க முடியாது. முதுமை கூடி நினைவு தடம் மாறிப் பிறழும்வரை மனதில் ஊர்ந்து திரியும் புழு அது’.

மீட்பர்கள் என்ற பெயரில் உள்நுழைந்து ஆக்கிரமிப்பாளர்களாக மாறிய இந்திய ‘அமைதி’ப் படையின் ஞாபகம், நினைவில் ஊரும் புழுவாயிருப்பது எத்தனை கேவலம் என்பதை, ‘ஈழத்தில் இந்திய அமைதிப்படை பாலியல் வல்லுறவில் ஈடுபடவில்லை’ என்று கூறியவர்களின் மேலான சிந்தனைக்கு விட்டுவிடுகிறேன்.

tamilnathy@thaiveedu.com



# சிங்கத்தின் நகங்க...

68ம் பக்கத் தொடர்ச்சி...

றவுச் செயலாளர் ஏ.பி. வெங்கடேஸ்வரன் கூறிய கருத்தொன்றும் நினைவுக்கு வருகிறது: “ஒரு ஒப்பந்தம் எவ்வாறு செய்யப்படக் கூடாது என்பதற்கு, இந்த ஒப்பந்தமே சரியான உதாரணமாகும்.”

### இராணுவத் தாக்குதல்கள்:

தமிழர் மத்தியிலுள்ள முக்கிய விடுதலை இயக்கமும், தமிழ் பேசும் மக்களும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்வதற்கே ஆயுதக் களையெடுப்பு என்று சொல்லிக்கொண்டு, பிரகடனப்படுத்தாத யுத்தமொன்றை இந்திய அரசு கட்டவிழ்த்துவிட்டது. ‘இராணுவத் தீர்வின் மூலம் அரசியல் தீர்வைக் காணுதல்’ என்ற தந்திரோபாயத்தையே, இதுவரை இலங்கை அரசு கையாண்டது. இந்தப் போக்கினைக் கண்டித்து வந்த இந்திய அரசும் அதே பாதையில்தான் தற்போது செயற்படுகிறது. தான் விரும்பிய அரசியல் தீர்வினை இராணுவ பலத்தின் மூலம் திணிப்பதே நடைமுறைப்படுத்துவதே அதன் நோக்கம். இதற்காகவே தனது உலகின் நான்காவது பெரிய இராணுவத்தினதும் விமானப் படையினதும் உதவியுடன், ஏற்கனவே இலங்கை அரசுப்படைகளால் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருந்த மக்களின் மேல் எந்த மக்களின் துயரங்களுக்காக மனிதாபிமான ரீதியில் தான் குரல் கொடுப்பதாக முன்பு இந்தியா சொல்லி வந்ததோ அதேமக்களின் மேல் காட்டு மிராண்டித்தனமான தாக்குதலைச் செய்வதில் ஈடுபட்டுள்ளது. வேறு வார்த்தைகளிற் சொன்னால் ‘ஜெயவர்த்தனாவும் அவரது படைகளும் செய்துவந்த அதே செயல்களை ராஜீவ் காந்தியும் இந்தியப் படைகளும் செய்கின்றன. இலங்கை அரசிற்குப் பதிலளிக்கையில் முன்பொருமுறை ராஜீவ் காந்தி சொன்னார்: “ஷெல் தாக்குதல்களையும் செய்து கண்மூடித்தனமாகச் சொந்த நாட்டு மக்களையே நீங்கள் கொல்வது போல் பஞ்சாபில் நடைபெறவில்லை. ஆனால் ராஜீவ் காந்தி, இன்று இலங்கையில் அதைத்தான் செய்கிறார். விமானத்தாக்குதலை ஒருபோதும் செய்யவில்லையென இந்திய அரசு மறுத்தது. ஆனால் கல்முனைக் கடலில் (பூநகரிப் பகுதி), அராலிக்கடலில், கிழக்கு மாகாணப் பகுதிகளில் என்ன நடந்தது? சாவகச்சேரிச்சந்தையில் பொருள்களை வாங்கிக்கொண்டிருந்த மக்களின் மேல் மிக் - 24 ரக விமானத்தினால் தாக்கியதில் 55 பேர்கள் இறந்தனர். ஏராளமானோர் காயமடைந்தனர். விமானங்கள் குண்டு வீசியதில்தான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடக் கட்டடமும் கணிதப் பகுதியிலுள்ள மைக்ரோ கம்ப்யூட்டர் செக்‌ஷனும் நூலகத்தில் தென்னாசியப் பிரிவிலுள்ள பெறுமதி வாய்ந்த சஞ்சிகைகள் சேமிப்புப்பகுதியும் சேதமடைந்தன. இது வரை ஐயாயிரம் வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டும், பல்லாயிரக்கணக்கானோர் அங்கங்கள் சிதைக்கப்பட்டும், காயங்களிற்கும் உள்ளாக்கப்பட்டனர். அகதி முகாம்களில் இருந்தவர்கள்கூடக் கொல்லப்பட்டுள்ளனர். உதாரணமாக, கொக்குவில் இந்துக் கல்லூரியினைக் கவச வண்டியினால்(Tank)தாக்கியதில் முப்பது பேர் கொல்லப்பட்டனர். நூற்றி ஐம்பது பேர்கள் காயமடைந்தனர். பெரும்பாலானோர் உளவியல் நெருக்கடிகளுக்கும் உள்ளாகினர். ஏராளமான பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். வேறு வகையான பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர். நூறுகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் வீடுகள், பாடசாலைகள், கோவில்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. பெறுமதி மிக்க பொருள்கள் தங்க நகைகள், பணம், றேடியோ, டி.வி. போன்ற எலக்ரோனிக்பொருட்கள், தையல் மெஷின்கள் போன்றன ‘அமைதிப்படை வீரர்களால் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. ‘உலகின் மிகவும் ஒழுக்கங்கெட்ட இராணுவம்’ என்ற பெயரைச் சில வெளிநாட்டுப் பத்திரிகைகள் இலங்கை இராணுவத்திற்கு வழங்கியிருந்தன. தனது நடவடிக்கைகளின் மூலம், அந்த விருதினை இந்திய அமைதிப்படை சுவீகரித்துக்கொண்டுவிட்டது. இந்த மகத்தான விருதும், ஆயிரம் பேர் வரை இழந்தால் கிடைத்தது (சுதந்திரத்தின் பின் இந்தியா ஈடுபட்ட யுத்தங்களெல்லாவற்றிலும் இதிலேயே கூடுதலான இழப்புகளை ஏராளமான உயர் அதிகாரிகளின் மரணம் உட்பட அடைந்திருப்பதாக இராணுவ நோக்கர்கள் மதிப்பிட்டிருக்கின்றனர்.) தம்மை இரட்சகர்களென நம்பிக்கொண்டிருந்த தமிழ் மக்களின் வெறுப்பும்தான் இந்த இராணுவ நடவடிக்கைகளால் இந்தியா பெற்ற பலன்கள். நானூற்றி ஐம்பத்தி மூன்று போராளிகள் மட்டுமே இறந்துள்ளனர். தமிழ்ப் பகுதிகளில் நிலைமையை இன்னும் வழமைக்குத் திரும்பச்செய்யவும் முடியவில்லை.

இவ்வளவெல்லாம் நடந்த பிறகும் இந்தியாவின் நலன்களும், தமிழ் பேசும் மக்களின் நலன்களும் பரஸ்பரம் பேணப்படக்கூடிய வழிமுறைகளும் நடைமுறைகளுமே எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். இந்திய அரசினையும் தமிழர் நலன்களையும் மோதவிடுவதில் இலங்கை அரசு தற்காலிகமாக வெற்றியடைந்திருக்கிறது. ஆனால், தென்னிலங்கையில் வளர்ந்துவரும் இந்திய எதிர்ப்பு (இதற்கு ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியுமுண்டு) அணிக்குள் பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா, இஸ்ரேல் என விரியும் பரந்த வட்டத்தினுள் நாங்களும் இணைந்துகொள்வது தற்கொலைக்கு ஒப்பானது. தமிழ்த்தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையினை ஒடுக்க முயலும் எத்தகைய சக்திகளிற்கும் எதிரான போராட்டம் தொடரும் என்பது நிருபிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்த்தேசிய இனத்தின் நலன்களைப் பேணியபடியே தான் இந்திய நலன்கள் பேணப்பட வேண்டும் என்ற நிலைமையினை நிர்ப்பந்திப்பதற்கு எமது மக்களினதும், தமிழக மக்களினதும், இந்திய மக்களினதும் விழிப்பினை உருவாக்குவதிலேயே எமது எதிர்காலம் தங்கியிருக்கிறது.

■ ■ ■

# வில்லுக்குளத்துப்...

69ம் பக்கத் தொடர்ச்சி...

வீட்டுக்கு வந்து போவான். அண்மையில் தான் இந்தியப் படையின் கைக்கூலிகள் அவனைப் பிணமாகப் போட்டார்கள். புலிகளின் மருந்துப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்தவன் லிங்கம். அவன் அக்காவிடம் எப்போதும் சொல்லுவான், “கண்ட கண்ட ஆட்களையெல்லாம் வீட்டுக்குள்ள எடுக்காத அக்கா... யார் நல்லவன் யார் கள்ளன் என்டு கண்டுபிடிக்க முடியாத காலம்.”

உண்மைதான்...

அக்காவின் வீட்டில் நன்றாகப் பழகி - சோறுண்டு சென்றவர்களில், இந்தியப் படையின் கையாட்களும் இருக்கவேசெய்தார்கள்.

துரோகம் எங்குதான் இல்லை? விடுதலைப் புலிகளின் பெரிய உயிரிழப்புக்களையும் வீரத்தையும் கண்முன் கண்டும் அவர்களைக் காட்டிக்கொடுக்கும் தலையாட்டிகள் எத்தனை பேர்...?

கொடிய உலகம்... கொடிய மனிதர்கள்...

பின்னேரம் அக்கா அழகான அந்த வில்லுக்குளத்துக்குக் குளிக்கப்போனாள்... பச்சைப்புற்கள்... ‘தளதள’ என்ற தண்ணீர்... கொக்குகள்... மீன்...

ஒரு தொல்லையும் இல்லாமல் முழு விடுதலையைச்சுவைத்தபடி வெள்ளைச் சிறகை நீள விரித்து வானத்தில் பறந்த பறவையை நீண்ட நேரம் பார்த்துக்கொண்டே இருந்தாள் அக்கா.

இரவு ஆயிற்று.

•

ஓ...!

அந்த இரவு கொடியது.

7 மணி இருக்கும்.

சாவு அக்காவின் படலையைத் தட்டிய முரட்டுத்தனமான மணித்துளிகள்.

மனா அம்மாவின் சேலையைப் பிடித்துக்கொண்டிருந்தவள் பதற்றத்தோடு கடப்படியைப் பார்த்தாள்... இருளில் ஆட்களின் முகம் தெரியவில்லை... ஆனால்... நான் கைந்து பேர்.

“வெளியே வா...!

யாரோ அக்காவைக் கூப்பிட்டார்கள்.

சறோ அக்கா படபடப்போடு கடப்படிக்குப் போனாள்.

“ஐயோ எண்ட பிள்ளைகளே!” என்று வானம் இடிய ஓலமிட்டாள் அவள்... முன்னால் நின்றவர்களின் கைகளில் கத்தியும் கோடரியும்...

ஒருவன் அக்காவின் கையை முரட்டுத்தனமாகப் பிடித்து தெருவில் ‘கொற கொற’ என்று இழுத்தான்.

பதறி அடித்துக்கொண்டு தெருவுக்கு ஓடி வந்த பிள்ளைகளையும் கணவனையும்... “யாரும் வெளியே வரக்கூடாது தெரியுதா?” என்று ஒரு தடித்த குரல் எச்சரித்தது.

“ஐயோ... மனா... மனா... “ என்று ஏங்கிக் கத்தினாள் அக்கா.

ஊர் மூலையில் நாய்களின் ஊளை...

அக்காவின் வீட்டுக்குக் கொஞ்சம் தள்ளினாற்போல அதே தெருவில் அவள் உடலின்மீது கத்தி வீசப்பட்டது.

“நீயாடா பாவி...?” என்று அக்கா கூச்சலிட்டதைத் தெருவில் நின்றவர்கள் கேட்டார்கள். அறிமுகமானவர்களுக்கு அவன் முகம்கூடத் தெரிந்தது.

இந்தியப் படையின் அந்தக் கைக்கூலியை கூனித்தீவு முன்பே அறியும். அக்கா வீட்டுச் சோறுகூட அவன் உடலில் தசையாய்... செந்நீராய்...

கத்திகளாலும் கோடரியாலும் அக்கா மாறி மாறி விறகுகட்டை போல் பிளக்கப்பட்டாள்.

நொடிப்பொழுதில் அந்தத் தாய் ஓவியம் தெருவில் கிழிந்து கிடந்தது.

அக்கா போய்விட்டாள்.

■ ■ ■

# இந்தியப்படையும் ஊடகங்களும்!

- எஸ்.கே. விக்னேஸ்வரன் -

கலிபோனிய செனட் சபையின் உறுப்பினராக இருந்த Hiram W Johnson முதற் தடவையாக அச்சபைக்கு தெரிவுசெய் யப்பட்ட காலம் முதலாம் உலக யுத்தம் நடந்து கொண்டிருந்தகாலம். தனது உரையொன்றின்போது அவர் தெரிவித்த, ஒரு வசனத்துக்காக, மற்றைய அரசியல்வாதிகளது பலத்த விமர்சனங்களுக்குள்ளானவர் அவர். ஆனால் பின்னர் பிரபலமான ஒரு மேற்கோளாக மாறிவிட்ட அந்த வசனத்துக்காகவே அவர் இன்றுவரை உலகம் பூராவும் பேசப்பட்டு வருகிறார். அவர் அன்று பேசிய வசனம் இதுதான்: 'The first casualty when war comes is truth'. ('போரொன்று வரும்போது அதில் முதற் பலியாவது உண்மையே'). அவர் தனது இறுதி மூச்சை நிறுத்திய தினத்தில் தான் அமெரிக்கா தனது அணுக்குண்டுத் தாக்குதலை ஜப்பான் மீது நடத்தியது என்பது ஒரு சம்பந்தமற்ற தற்செயல் நிகழ்வு என்றபோதும், அவரது இந்த மேற்கோள் மேலும் புகழடையக் காரணமாக அமைந்தது!

ஆனால், இலங்கையின் வடக்குக் கிழக்கில் சமாதானத்தை மீட்டெடுக்கவென்று கூறிக்கொண்டு வந்திறங்கிய இந்தியப்படை, அங்கு தனது யுத்தத்தைத் தொடங்குவதற்கு முன்பாகவே, உண்மையைக் காவுகொள்ளும் நடவடிக்கைகளை நிறைவேற்றி விட்டிருந்தது. ஆம். உண்மை வெளித் தெரியக்கூடிய ஊடகங்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தியதன் மூலம் அது இந்த இந்த மேற்கோளைத் திரும்பவும் மெய்ப்பித்திருந்தது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அடுத்து வந்திறங்கிய இந்திய அமைதிப்படையின் 'சமாதானத் தூதுவர்கள்' என்ற சாயம், ஒரு மாத காலத்துக்கு சற்று அதிகமான காலத்துக்குள், சரியாக சொல்வதானால் 1987 செப்ரெம்பர் மாதமளவில் கொஞ்சம் கொஞ்சமாக வெளுக்கத் தொடங்கிவிட்டிருந்தது. சாகும்வர உண்ணாவிரதமிருந்த திலீபனின் உயிர் 12வது நாளான செப்ரெம்பர் 26ம் திகதி அன்று பிரிந்ததற்குப் பின்னான நாட்களில் அமைதிப் படையினரின் கண்களில் தீவிரத்தன்மை வலுக்கத் தொடங்கியிருந்தது. வேட்டை நாய்களுக்குரிய தீவிரத்தன்மையுடன் அவர்கள் மக்களை மோப்பம் பிடிக்கத் தொடங்கியிருந்தனர். அதுவரை விடுதலைப் போராளிகள், சமாதானம் என்று உச்சரித்து வந்த அவர்களது வாய்கள் தீவிரவாதிகள் அல்லது பயங்கரவாதிகள் என்று உச்சரிக்கத் தொடங்கின. சமாதானத்தின் பெயரால் சமாதானத்தை இல்லாதொழிக்கும் முயற்சியில் அவர்களது நிகழ்ச்சிகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படத் தொடங்கின. ஒக்ரோபர் மாத முதல் வாரத்தில் அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்துகொண்டிருந்த இரு பிரதான தினசரிகளான முரசொலி, ஈழமுரசு பத்திரிகைக் காரியாலயங்களுக்குச் சென்று அங்குள்ள பத்திரிகையாளர்களை நோட்டம் விடுவதன் மூலமாக எச்சரிக்கை செய்யத் தொடங்கியிருந்தனர். அது மட்டுமல்ல, இந்திய ஊடகங்களுக்கும் ஏனைய செய்தி நிறுவனங்களுக்கும் செய்தி வழங்குவது தொடர்பான கவனக்குவிப்புக்களும் ஆரம்பமாகிவிட்டிருந்தன. ஆயுதங்களை மீளக் கையளிப்பது தொடர்பாக எழுந்த சிக்கல்களை தொடர்ந்து ஆயுதக்களைவு நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்ற முடிவுக்கு இந்தியப்படை வந்துள்ளதை வெளிப்படுத்துவதாக அவர்களது நகர்வுகள் அமைந்திருந்தன.

அப்போது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்துகொண்டிருந்த ஒரே ஆங்கில வார இதழான 'சற்றடே றிவியூ'. பத்திரிகையின் பிரதம ஆசிரியராக காமினி நவரத்ன என்ற புகழ்பெற்ற சிங்கள பத்திரிகையாளர் கடமையாற்றி வந்தார். இந்த 1987 ஒக்ரோபரின் ஆரம்ப நாட்களில், அதாவது இந்திய இராணுவம் இப்படி ஊடகங்களுக்கு மறைமுகமான நெருக்கடிகளைத் தொடுக்கத்தொடங்கிய நாட்களில், அந்த நெருக்கடி சற்றடே றிவியூவையும் விட்டுவைக்கவில்லை. அங்கிருந்து இனியும் சுதந்திரமாக பத்திரிகையைக் கொண்டுவர முடியாத நிலை வரவுள்ளதை அவர் அடையாளம் கண்டுகொண்டார். தமது அலுவலகத்துக்கு வந்த 'ஜவான்'களுடன் நடந்த தனது 'மிகவும் சுமுகமான சந்திப்பை'



திருமலே, பலாலியில் 3000 அமைதி காக்கும்

இந்திய படையினர் தரையிறக்கப்பட்டனர்

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

31-7-1987

1700 போர் வீரர்கள்

எமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்துக்குள்

எவரையும் ஆக்கிரமிக்கவிடாது

தொடர்ந்தும் போராடுவோம்

பிரதமர் காந்திக்கு புலிகள் அறிவிப்பு

அணிவகுப்பு மரியாதையின்போது

ராஜீவ் கடற்படை வீரர் ஒருவரால் தாக்கப்பட்டார்

அடுத்து, 1984 முதல் அதன் ஆசிரியராக இருந்த துணிச்சலும் அர்ப்பணிப்பும் கொண்ட சிறந்த பத்திரிகையாளரான அவர் இனியும் பத்திரிகையைச் சுதந்திரமாக கொண்டுவர முடியாது என்று தனக்குத் தெரிந்ததாக பின்னர், இது தொடர்பாக பேசிக்கொண்டிருந்த ஒரு வேளையில் என்னிடம் தெரிவித்தார். 'யாழ்ப்பாணத்திலிருந்து இந்திய சமாதானப்படையின் 'ஆசீர்வாதத்தின்' கீழ் என்னால் பத்திரிகையைக் கொண்டுவர முடியாது' (I don't edit a paper under the 'auspicious' of IPKF') என்பதால் தான் அங்கிருந்து வெளியேறி, கொழும்பிலிருந்து அதைக் கொண்டு வரலாம் என்ற முடிவுடன் தான் கொழும்பு திரும்பியதாக தெரிவித்தார். ஆயினும் பத்திரிகையை வெளியிட்ட நியூ ஈரா பதிப்பக நிறுவனம் இதற்கு உடன்படவில்லை. (எவ்வாறாயினும் சற்றடே றிவியூ வின் ஒக்ரோபர் 17ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த இதழே அதன் கடைசி இதழாக ஆகிவிட்டது. இந்த இதழ் வெளிவரும்போது காமினி கொழும்பிலிருந்தார்,) இதனால், தனது சொந்த முயற்சியில் கொழும்பிலிருந்து இயங்கிய தனது 'சந்தேசிய' செய்தி நிறுவனத்தினூடாக சற்றடே றிவியூ பத்திரிகையை, கொண்டுவர முடிவுசெய்தார். இந்த முடிவை அவர் எடுத்த ஒரு சில நாட்களுக்குள்ளேயே யாழ்பாணத்திலிருந்து பத்திரிகையை நடத்த முடியாது என்ற அவருடைய கணிப்பு சரியென்பதை முழு உலகமும் அறிந்துகொண்டது. ஆம். ஒக்ரோபர் 10ம் திகதி காலை ஈழமுரசு, முரசொலி பத்திரிகைக் காரியாலயங்களுக்குள் புகுந்த இந்தியப் படையினர், அங்கிருந்த பத்திரிகையாளர்கள் ஊழியர்கள் அனைவரையும் கைதுசெய்ததுடன், அங்கிருந்த அச்சியந்திரங்கள் மற்றும் இதர பொருட்கள் அனைத்தையும் குண்டுவைத்துத் தகர்த்தெறிந்து விட்டுச் சென்றனர். கூடவே புலிகளின் ஒலி ஒளிபரப்பு நிறுவனமான நிதர்சனத்தையும் இதே நாளில் முற்றுகையிட்டு அங்கிருந்த சாதனங்கள் அனைத்தையும் அழித்தொழித்துவிட்டுச் சென்றிருந்தனர். ஒக்ரோபர் 9ம் திகதி, புலிகளை தடைசெய்யப்பட்ட அமைப்பாக ஜே.ஆர் அறிவித்ததைத் தொடர்ந்து, இந்தியப்படை, ஆயுதக் களைவை மேற்கொள்வதெனவும், தேவைப்பட்டால் வன்முறையைப் பாவிக்கலாமெனவும் டெல்கி மேலிடத்திலிருந்து தளபதி சுந்தர்ஜியூடாக அறிவுறுத்தலைப் பெற்றுக்கொண்டது. 'ஒப்பிரேசன் பவான்' என்ற பெயரில் நடவடிக்கையை ஆரம்பிக்க அவர்கள் முடிவுசெய்திருந்தனர். இதன் முதற்கட்ட நடவடிக்கையாகவே, ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் நடைபெற்றன.

இதற்குச் சிலகாலங்களின் பின்னர் கொழும்புக்கு வந்துசேர்ந்த சற்றடே றிவியூ பத்திரிகையின் உதவி ஆசிரியர்களாக இருந்த ஏ.ஜே. என்று அறியப்பட்ட ஏ.ஜே. கனகரத்ன, கவிஞர் சேரன் ஆகியோரும் காமினியின் கொழும்பிலிருந்து சற்றடே றிவியூ பத்திரிகையைக் கொண்டுவரும் முடிவுக்கு ஆதரவாக இருக்கவே கொழும்பிலிருந்து அது வெளிவரத் தொடங்கியது. ஆயினும், அவ்வாறு ஓரிரு இதழ்கள் வெளிவந்த போது, நியூ ஈரா பதிப்பத்தினர், அந்தப் பெயர் தமக்கு சொந்தமான பத்திரிகையின் பெயரென்பதால் அந்தப் பெயரில் காமினி பத்திரிகை நடத்த முடியாதென்றும், அதை வெளியிடுவதை நிறுத்த வேண்டுமென்றும் கோரி சட்ட நடவடிக்கை எடுத்தனர். இதன் காரணமாக 'நியூ சற்றடே றிவியூ' என்ற பெயர் மாற்றத்துடன் அந்தப் பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. இந்தப் பத்திரிகை வெளிவரத் தொடங்கிய காலங்களில் காமினியின் 'சந்தேசிய' அலுவலகத்துக்கு அடிக்கடி போய் வந்துகொண்டிருந்தேன். அங்கே, சிங்கள பத்திரிகையாளர்கள், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் என்று பலர் காமினியை சந்திக்க வருவார்கள். காமினி இல்லாவிட்டாலும், ஏ.ஜே கனகரத்னா அங்கே நிச்சியமாக இருப்பார். வந்திருக்கும் பத்திரிகையாளர்களுடனான உரையாடல்கள், செய்திப் பரிமாற்றங்கள், அரசியல் சர்ச்சைகள், விவாதங்கள் என்று அலுவலகம் ஒரே அமளியாக இருக்கும். இந்தக் காலத்தில், வடக்குக்கிழக்கில் இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக பல செய்திகள் வந்துகொண்டிருந்த போதும் சர்வதேச ரீதியாக அச்செய்திகள் செல்ல முடியாத அளவுக்கு இந்திய ஊடகங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. தவிரவும், பெரும்பாலான இந்திய ஊடகங்கள் இந்திய அமைதிப்படை தமிழ் மக்களுக்குப் பெரும் தியாகத்தின் மத்தியில் நல்லவற்றை செய்து வருவதாகவே உலகுக்கு அறிவிக்க விரும்பின. இதற்காக அவர்கள் முடிந்தளவுக்கு சுயதணிக்கைகளை மேற்கொண்டிருந்தன. மக்கள் மத்தியிலான எறிகணை வீச்சுக்கள், இராணுவத்தினரின் பாலியல் பலாத்காரம், வல்லுறவு, திருட்டுக்கள் போன்ற விடயங்களை முடிந்தளவுக்கு மூடிமறைத்தன. அல்லது, அவற்றுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று எழுதின.

நியூ சற்றடே றிவியூ ஒருசில இதழ்களுடன் நின்று போய்விட்ட போதும் காமினியின் அலுவலகம் ஒரு சந்திப்பு மையமாக இருந்து வந்தது. மீண்டும் பத்திரிகையை கொண்டுவருவதில் காமினியும் நாடு திரும்பியிருந்த சேரனும் முயன்றுகொண்டிருந்த காலத்தில், ஒரு நாள் இந்து பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ராம், காமினியின் அலுவலகத்துக்கு வந்திருந்தார். அவர் அங்கு வரும்போது, என்னுடன் ஏ.ஜே, நண்பர் குகமூர்த்தி (பின்னாளில் கடத்திச்செல்லப்பட்டுக் கொல்லப்பட்ட மனித உரிமை செயற்பாட்டாளர். 'சரிநிகர்' பத்திரிகை வருவதற்காக முன்நின்று பங்காற்றியவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடமயாற்றிய இவர், நியூ சற்றடே றிவியூ பத்திரிகை விநியோகிக்கும் பொறுப்பை தனது கடமையாக கருதி, ஊதியம் பெறாத பகுதிநேர வேலையாக செய்துகொண்டிருந்தார்) மற்றும் இரண்டு சிங்களப் பத்திரிகையாளர்கள் அங்கு இருந்தார்கள். ஏ.ஜேயை தவிர யாருக்கும் அவரைத் தெரிந்திருக்கவில்லை. யாழ் சென்று திரும்பி வந்திருந்த அவர் அங்கிருந்த நிலமை பற்றி சொல்லிக்கொண்டிருக்கும் போதே காமினி வந்துவிட்டார். அதன் பின் அவர்கள் மத்தியில் உரையாடல் தொடங்கியது. வழமைபோல அவர் எங்கள் எல்லோரையும் ராமுக்கு அறிமுகப்படுத்தி விட்டு தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். ஒரு

தொடர்தல் 73ம் பக்கம்

# இந்தியப்படையும்...

72ம் பக்கத் தொடர்ச்சி...

கட்டத்தில் சிங்களப் பத்திரிகையாளர்கள் எழுந்து சென்றுவிட, எங்களைப் பார்த்த காமினி இவர்கள் மூவரும் யாழ்ப்பாணத் தவர்கள் தான். உங்கள் சந்தேகங்களை இவர்களிடமும் கேட்கலாம் என்று காமினி ராமுக்குத் தெரிவித்தார். இந்தச் சந்தர்ப் பத்தில் கவிஞர் சேரனும் அங்கு வந்திருந்தார். இந்திய இராணுவத்தினால் பெருமளவில் மக்கள் கொல்லப்பட்டதைப் பற்றி குறிப்பிட்ட ஏ.ஜே, சேரன் ஆகயோர் ஒரு அமைதிப்படைக்கு எந்தவகையில் பொருத்தமான நடவடிக்கைகள் இவை என்று கேட்டனர். இந்தக் கேள்வியால் சற்று சினமடைந்த ராம், "இதுதான் இங்குள்ள சிக்கல். இங்குள்ள தமிழ் மக்களுக்காக வென்று வந்த இந்திய படையினரில் எவ் வளவு பேர் கொல்லப்பட்டுவிட்டார்கள். தமது உயிர்களைப் பரித்தியாகம் செய்து செயற்படும் படையினர் பற்றி யாழில் யாரும் கதைப்பதில்லை. இவை பற்றியே எல்லோரும் பேசுகிறார்கள்" என்று தனது அதிருப்தியை வெளியிட்டார். எனக்கு அப் போது வந்த ஆவேசத்தை அடக்கிக்கொண்டு 'அவர்களை இங்கு வரச்சொல்லி யார் கேட்டார்கள்?' என்று கேட்டேன். சற்று நேரம் மவுனமாக இருந்த அவர், அதை தவிர்த்து விட்டு வேறு விடயங்களைப் பேச ஆரம் பித்தார். காமினி அவரை இடை மறித்து அந்தக் கேள்வி பதிலளிக்கப்படாமல் இருக்கிறது என்று ஞாபகப்படுத்தினார். ராம் எந்தப் பதிலும் சொல்லவில்லை. பிறகு காமினியே சொன்னார்: மிஸ்டர் ராம், இந்திய அமைதி காக்கும் படையை இங்கு வரவளைத்தது தமிழ் மக்கள் அல்ல. அது ஜே.ஆர். இந்த உரையாடல் காமி னிக்கு வந்த ஒரு தொலைபேசி அழைப் பால் நின்று போய்விட்டது. பின்னாளில் இந்தியப்படையின் விலகல் காலத்திய படைகளின் தளபதியாக இருந்த லெப்ரின்ண்ட் ஜெனரல் கல்கட், இந்தியப்படை இலங் கைக்கு வந்த காரணத்தை மிகத் தெளி வாக ஊடகவியலாளர் Josy Joseph உட னான பேட்டியொன்றில் தெரிவித்திருந்தார். (President Jayewardane wanted to withdraw his troops from Jaffna to control the riots in the South. And it was he who said, 'I want some Indian troops to come in to ensure security in Jaffna and Trincomalee because I am withdrawing my Sinhalese troops to maintain law and order here.'

And Mr Rajiv Gandhi - I was present - said, Are you sure you want our troops? Because India can be criticised, Sri Lanka can be criticised. He said, I am going to give you a formal written invitation. Mr Gandhi said, Let us first sign the agreement, and then in your letter, if you think it is necessary, you say to ensure the efficient implementation of the agreement you want the troops. So it was a separate matter. (http://www.rediff.com/news/2000/mar/25lanka.htm)

இந்தச்சம்பவம் அன்றைய இந்திய வெகு ஜன பத்திரிகையாளர்களின் பொதுவான மனோபாவம், அவர்கள் வெளிப்படுத்த விரும்பிய அரசியல், தணிக்கை செய்ய விரும்பிய விடயங்கள் என்பவற்றை தெளிவு படுத்தக் கூடிய ஒரு நல்ல உதாரணம் என்று நாம் பின்னர் பேசிக்கொண்டோம். இதை இந்தக் காலகட்டத்தில் வெளியான இந்தியப் பத்திரிகைகளின் செய்திகளில் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. உதாரணமாக ஒரு சிறு தகவலை குறிப் பிடலாம்: 1987 ஒக்ரோபர் 13 திகதி த ஹிந்து பத்திரிகையில் ஒரு செய்திக் கட் டுரை. தலையங்கம்: புலிகளின் கோட்-டையை ஐ.பி.கே.எவ் தகர்த்தது.

செய்தியில் திருமதி லக்ஸ்மி பூரி என்ற இந்திய உயர் ஸ்தானிகராலய பேச்சாளரை மேற்கோள்காட்டி இவ்வாறு எழுதப்படு கிறது:

'புலிகளின் கோட்டையை நோக்கி குறைந்த பட்சம் நான்கு திசைகளில் படைகள் நகர்ந்துகொண்டிருக்கின்றன. ஐ.பி.கே.எவ் கடந்த சனிவரையான காலப்பகுதில் 27 பேர் கொல்லப்பட்டு 141 பேர் காயமடைந் துள்ளார்கள். இந்திய அரசாங்கத்தின் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாதென்ற பொறுப்புணர்வு காரணமாக, விமானத்தா-குதலின் பாதுகாப்புடன் படைநகர்த்தப்ப டுவதை தவிர்க்க வேண்டும் என்ற அறி வுறுத்தல் காரணமாக பொதுமக்களுக்கு பெரியளவு பாதிப்புக்கள் எதுவும் இல்லை. புலிகள் தரப்பில் 200 பேர்வரை கொல் லப்பட்டிருக்கிறார்கள். இதே வேளை, கடந்தகாலத்தில் இலங்கை இராணுவம் நடத்திய தாக்குதலுக்கும் இதற்கும் எந்த வேறுபாடும் இல்லை என்று ஒரு வெளி நாட்டு பத்திரிகையாளர் தெரிவித்த போது அதற்குப் பதிலளித்த லக்ஸ்மி பூரி, பாரிய வித்தியாசம் இருக்கிறது. விமானத் தாக் குதல்கள் எதுவும் இல்லை. அதேவளை புலிகள் பொதுமக்களைக் கேடயங்களா கப் பாவித்து, அவர்களின் பின்னின்று தாக்குதல் நடத்துகிறார்கள். என்று தெரி வித்தார்.'

ஆனால் இதே நாள் நடந்த சம்பவம் தொடர்பாக நியூ சற்றடே றிவியூ என்ன எழுதுகிறது என்று பாருங்கள்:

நடந்து முடிந்த காட்சிகள் என்று தலைப் பிட்டு வந்த முன்பக்கச் செய்தியில் இவ் வாறு வருகிறது:

திங்கள் மாலை (ஒக்.12) 5 மணியளவில் மார்ச்செட்டி குண்டு வீச்சு விமானங்கள் யாழ் நகரப் பகுதியை சுற்றி வட்டமிட்டுப் பறக்கின்றன. ஆனால் குண்டுகள் எதை யும் போடாமலே போய்விடுகின்றன.

செவ்வாய் (ஒக் 13) காலை ஒரு உலங்கு வானூர்தி தாழப்பறந்து சுட்டுக்கொண்டே யாழ் நகரப் பகுதியை வட்டமிடுகிறது. முத்திரைச் சந்தியில் ஒருவர் கொல்லப் பட்டது பின்னர் தெரியவருகிறது.

இது நடந்து சிறிதுநேரத்தின் பின் மார்ச் செட்டி குண்டுவீச்சு விமானங்கள் வட்ட மிட்டு வருகின்றன. கிட்டத்தட்ட 20 குண் டுகள் போடப்படுகின்றன

விளைவு?

யாழ். பல்கலைக் கழகத்தின் பௌதிக, இரசாயன, கணித பீடங்களின் கட்டடங் கள் மோசமான அழிவைச் சந்தித்தன.

இப்படி விபரங்களுடன் அந்தச் செய்தி நீண்டு செல்கிறது.

ஊடகங்களின் மீது இந்தியப்படை கொண் டிருந்த அணுகுமுறைபற்றி இன்னமும் எவ்வளவோ சொல்லலாம். யாழ் போதனா வைத்திசாலை மீதான தாக்குதல், பிரம் படி தாக்குதல் என்பன இதற்கு மிகச் சிறந்த உதாரணங்கள். (யாழ் ஆஸ்பத் திரிப் படுகொலை நடந்தபின் ஹிந்து இதழில்(ஒக் 27) வெளிவந்த செய்தி ஒன் றின் தலைப்பு இவ்வாறு இருந்தது: யாழ் வைத்தியசாலக்கு நடந்தது ஒரு சிறிய ளவிலான பாதிப்பு மட்டுமே - Jaffna hospital suffered a little).



விரிவஞ்சி அவற்றை தவிர்த்து யாழ். நக ரின் இரண்டு குண்டுவைக்கப்பட்ட பத் திரிகைகளான முரசொலி, ஈழமுரசு பத்தி ரிகைகளின் பிரதான ஆசிரியர்களை வலைவீசித் தேடித்திரிந்தது பற்றிய குறிப் புகளுடன் இந்தக் கட்டுரையை முடிக் கலாம் என்று நினைக்கிறேன். இந்தக் கட் டுரை எழுதுவதற்காக அக்காலப்பகுதி யில் வெளியான செய்திகள், பிரசுரங்கள், நூல்கள் மற்றும் கள நிலவரக் குறிப்புக் களை தேடிய போதுதான் ஒரு உண்மை தெரியவந்தது. அதாவது, அவை பற்றிய தகவல்கள் எவையும் இலகுவில் கைக் கெட்ட முடியாத நிலையிலேயே இருக் கின்றன என்பது. மிகத் திட்டமிட்ட வகை யில், ஊடகங்கள் தொடர்பான விடயங்கள் எவையும் கிடைக்க முடியாத அளவுக்கு பதிவுகள் முடக்கப்பட்டிருக்கிறதோ என்ற சந்தேகம் எழுவதை தவிர்க்கமுடியவில்லை.


ஈழமுரசு குண்டுவைத்துத் தகர்க்கப்படுகி றது. ஈழமுரசு பத்திரிகையின் பிரதம ஆசிரியரான எஸ்.எம்.ஜி என அறியப் பட்ட எஸ்.எம். கோபாலரத்தினம் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டபின், அவர் தலைமறை வாகி, பத்திரிகையை வெவ்வேறு இடங்க ளில் இருந்து பெரும் சிரமத்தின் மத்தியில் நடத்திவருகிறார். பின்னர் இது பற்றி, 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற நூலை எழுதுகிறார். முரசொலி ஆசிரியர் திருச்செல்வம் அவர்களது வீட்டுக்குச் சென்ற சிலர் அவரை கைதுசெய்ய முயன்ற போது அவர் தப்பி, தலைமறை வாகி-றார். ஆனால், அவர் சரணடைந்தால்தான் விடுவிக்கப்படுவார் என்று கூறி அவரது மகனை கைதுசெய்து தம்முடன் கொண்டு செல்கிறார்கள். ஆனால் திருச்செல்வம் அவர்களது மகன் விடுவிக்கப்படவே இல்லை. அவர் சுட்டுக் கொல்லப்பட்ட தாக பின்னர் தெரியவந்தது.

இப்பத்திரிகைகளின் பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டு, கண்கள் கட்டப்பட்ட நிலையில் கோட்டைக்கு கொண்டு செல் லப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். சிறுநீர் கழிக்கக்கூட வெளிச்செல்ல விடா மல் தாம் தடுக்கப்பட்டது பற்றி எழுதும் எஸ்.எம்.ஜி, தவிர்க்க முடியாமல், உணவு சாப்பிடவென வழங்கப்பட்ட கிண்ணத்தில், மறுநாள் அதை கழுவிவிட்டு சாப்பிடலாம் என்று, அதிலே சிறுநீர் கழிக்க வேண்டி யிருந்தது என்றும் தனது நூலில் எழுதுகி றார்.

கண்கள் கட்டப்பட்ட நிலையில் அவரை ஒரு சிறையிலிருந்து இன்னொரு சிறைக்கு மாற்ற எப்படி இந்தியப்படையினர் அழைத் துச் சென்றார்கள் என்பதை அவர் இவ் வாறு குறிப்பிடுகிறார்:

திடீரென்று இருவர் என்னைத் தூக்குவது தெரிந்தது. மறுகணம் நான் வீசப்பட் டேன். தடால் என்று போய் விழுந்தேன். நல்ல வேளை... மூஞ்சி அடிபடவில்லை. ஓர் ட்ரக் அல்லது லொறியாக இருக்க வேண்டும். அதனுள் தான் என்னைத் தூக்கி வீசியிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள அதிக நேரமாகவில்லை. மெதுவாக நகர்ந்து ஒருபுறமாக ஒதுங்கி உட்கார்ந்துகொண்டேன். தொடர்ந்து ஒவ் வொருவரும் அரிசி மூட்டை போல வந்து விழுந்தனர். விழுந்தவர்கள் ஒருவர் ஒரு-வராக நகர்ந்து இரு ஓரங்களிலும் இடம் பிடித்துக்கொண்டனர்.


ஆனால், இந்திய இராணுவம் தமிழ் மக் களுக்காக, அவர்களது நலன்களுக்காக தம்மை பரித்தியாகம் செய்து கடமையில் ஈடுபட்டு வருவதாக இந்திய அரசும், அரசு சார்பான ஊடகங்களும், ஊடக நிறுவ னங்களும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தன. இவ்வாறுதான் அன்றைய உலகுக்கு ஊடகங்கள் செய்திகளை வழங் கிக்கொண்டிருந்தன. இந்திய அரசாங்கத் துடன் கருத்து மாறுபாடுகொண்ட ஊட கங்களும் கூட, இந்தியப்படை நியாய மாக நடந்ததாகவே சொல்லிக்கொண்டி ருந்தன. அல்லது அவர்கள் தவறாக வழி நடத்தப்படுவதாக அனுதாபத்துடன் எழு-தினர். அந்த நிலை இன்றுவரையும் கூட தொடரவே
செய்கிறது!



vickneaswaran.sk@thaiveedu.com

# இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் 'முரசொலி' மீது கொண்ட மோகம்!

திரு எஸ். திருச்செல்வம்
அரசியற் செயற்பாட்டாளர்; முதன்மை ஆசிரியர் தமிழர் தகவல் (கனடா), முன்னைநாள் பிரதம ஆசிரியர் - முரசொலி (யாழ்ப்பாணம்).



1987 அக்டோபர் 10ம் திகதி தமிழுக்கு அந்த வருட புரட்டாதி மாத கடைசிச் சனிக்கிழமை.

அதிகாலைவேளை, இந்திய அமைதிப் படை என்ற பெயரில் தமிழர் பூமியை ஆக்கிரமித்திருந்த இந்திய இராணுவம் தமிழர்களின் குரலாக வெளிவந்து கொண்டிருந்த ஊடகங்கள் மீதான தனது எதேச் சாதிகார நடவடிக்கையை மேற்கொண்ட கரிநாள் இது.

யாழ்ப்பாணத்தில் நான் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய முரசொலி தினசரியையும் மற்றொரு தினசரியான ஈழமுரசுவையும் ஏன், எதற்காக என்ற காரணம் சொல்லாது இந்திய இராணுவத்தால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு 30 ஆண்டுகளாகிறது. இந்த இரண்டு பத்திரிகைகளினதும் ஸ்தாபக ஆசிரியர் நான் என்னும் வகையில் இந்தத் தாக்குதலால் எழுந்த மனக்காயம் மூன்று தசாப்தம் கடந்தும் இன்னமும் ஆறவில்லை.

இந்திய இராணுவத்தின் இந்த காட்டுமிராண்டிச் செயலை விபரிப்பதற்கு முன்னர், 1987 யூன் இறுதியில் இந்திய இராணுவத்தின் வருகையைத் தொடர்ந்து இடம்பெற்ற சில நிகழ்வுகளை நினைவுக்குட்படுத்த வேண்டியுள்ளது.

அப்போது பலாலியிலிருந்த இந்திய இராணுவத் தலைமையத்தில் பணியாற்றிய கேர்ணல் ஹரிகரன் என்பவரே யாழ்ப்பாணப் பத்திரிகைகளுடன் நேரடியான தொடர்பை ஏற்படுத்தி, தினமும் ஐந்து பிரதிகளை எம்மிடமிருந்து இலவசமாக பெற்றுக்கொண்டிருந்தார். இவரில்லாத வேளைகளில் இவரால் அறிமுகப்படுத்தப்பட்ட மேஜர் ரத்தினசபாபதி என்பவர் அடிக்கடி தொடர்பு கொள்வார்.

கேர்ணல் ஹரிகரன் தம்மைப் பொதுஜன தொடர்பு அதிகாரியென்றும், கொழும்பில் நீண்டகாலம் கல்வியதிகாரியாகக் கடமையாற்றிய யாழ்ப்பாணத்தவரான கே.லட்சுமண ஐயர் தமது சித்தப்பா என்றும் எனக்கு அறிமுகம் செய்து, தனது தொடர்பை இறுக்கமான நட்பாக்க முயன்றார். அவர் இந்திய இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைமை அதிகாரி என்பதை எப்படியோ அறிந்து கொண்ட நான் மிக விழிப்பாக இருந்துகொண்டேன்.

முரசொலியில் இந்திய இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகள் தொடர்பாக வெளிவரும் செய்திகளை உடனுக்குடன் மொழி-பெயர்த்து, யாழ்ப்பாண சிவில் கமாண்டராகவிருந்த சீக்கியரான பிரிகேடியர் கார்லோனின் அலுவலகத்துக்கு ஹரிகரனின் அலுவலகம் அனுப்புவதை, கார்லோன் அலுவலக அதிகாரிகள் கேட்கும் கேள்விகளூடாக என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

நாளாக நாளாக இந்தியப்படையின் வருகையின் நோக்கமும் அதன் போக்கும் மக்கள் மத்தியில் மட்டுமன்றி எம்மிடமும் சந்தேகத்தை ஏற்படுத்தியது. இவ்வேளையில் இந்தியா ஒப்புக்கொண்ட பணியை முறையாகச் செயற்படுத்த ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து செப்டம்பர் 13ம் திகதி விடுதலைப் புலிகள் கொழும்பிலிருந்த இந்தியத் தூதுவரிடம் ஒரு கடிதத்தைக் கையளித்தனர்.

இந்தக்கோரிக்கைகளை வலியுறுத்தி விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப்பொறுப்பாளர் திலீபன் அதே மாதம் 15ம் திகதி நல்லூரில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். 26ம் திகதி அவர் தியாகியாக மரணத்தைத் தழுவும் வரையான 12 நாட்களும் தமிழ் மக்கள் உணர்ச்சிப் பிழம்பாக வெடித்துக் கொதித்திருந்த நாட்கள். இந்தப் பன்னிரண்டு நாட்களிலும் எழுதப்பட்ட முரசொலி ஆசிரிய தலையங்கங்கள் (இதயநாதம்), திலீபனின் உண்ணாவிரதக் கோரிக்கைகளை வலியுறுத்தியதாகவும் மக்கள் உணர்வுகளை வெளிப்படுத்திய-தாகவும் இருந்தது.

"திலீபனுக்கு ஏதாவது நடந்தால் இந்தியாவே பொறுப்பு" என ஏழாம் நாள் எழுதப்பட்ட தலையங்கம்மீது இந்தியத் தூதுவர் கொண்டிருந்த கோபம் கலந்த விசனத்தை, அவரது அலுவலகத்திலிருந்து அன்று பிற்பகல் வந்த தொலைபேசி அழைப்பு எனக்குப் புரிய வைத்தது.

அடுத்த நிகழ்வாக விடுதலைப் புலிகளின் தளபதிகளாகவிருந்த குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு போராளிகள் பலாலி இராணுவ முகாமில் சைனைட் அருந்தி தம்மை அழித்துக்கொண்ட சம்பவம் தாயகத்தில் பெரும் புயலை உருவாக்கியது.



★ கிளிநொச்சியில் கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பேச்சு:
ஒப்பந்தத்தில் தமிழருக்கு சந்தேகமுண்டு!
REGISTERED AS A NEWSPAPER
முரசொலி
தேசிய தமிழ்த் தினசரி
MURASOLI
இந்திய பொலிஸார் 4000 பேர்
யாழ்ப்பாணம் வருகின்றனர்!
60 அதிகாரிகள் ஹெலி மூலம்

அக்டோபர் 5ம் திகதி தீருவிலில் இவர்களது உடல்கள் தீக்கிரையாக்கப்பட்டதையடுத்து குடாநாட்டில் ஒருவகையான அக்கினிச் சுவாலை உருவானது. மக்கள் உணர்வுகளை அப்படியே பதிய வைக்கும் ஏடான முரசொலி தனது தனித்துவத்தை இங்கு பேணியது.

இதனால் இந்திய இராணுவ அதிகாரிக-ளிடமிருந்து எனக்கு அச்சுறுத்தல் கலந்த சில பணிப்புரைகள் அதிகளவில் வர ஆரம்பித்தது. சிலதடவை யாழ் நகரில் பணியாற்றிய கப்டன் / மேஜர் தர இந்திய அதிகாரிகள் நூற்றுக்கணக்கான சிப்பாய்களோடு ஆயுதம் தாங்கியவர்களாக முரசொலி அலுவலகத்துள் புகுந்து மறுநாள் வெளிவரும் செய்திகள் பற்றி அறி-வதில் முனைந்துள்ளனர்.

இந்திய இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகள் தொடர்பான செய்திகளை யாழ்ப்பாணத்திலிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். அலு-வலகத்துக்கு அனுப்பி அவர்கள் அனு-மதியளித்தால் மட்டுமே அவற்றைப் பிரசுரிக்க வேண்டும் என்ற இவர்களின் எழுதாத சட்டத்தை நான் முழுமையாக நிராகரித்ததை இராணுவம் எதிர்பார்க்கவில்லை. இதனைத் தொடர்ந்த நாட்கள் எம்மைச் சுற்றி ஏதோ ஒரு வலைப்பின்னல் அமைக்கப்படுவதை இங்கு கடமையாற்றிய அனைவரும் தெரிந்துகொண்டோம்.

இதனால் முரசொலியின் செய்திப் பிரிவில் பணியாற்றியவர்கள் பற்றி அதீத கவனத்தை நான் செலுத்த நேர்ந்தது. செய்திப் பிரிவில் பணியாற்றிய அனைவரும் இத்தொழில்மீதான ஆர்வம் காரணமாக இணைந்துகொண்ட இளைஞர்கள் (இ.பாரதி கிறிஸ்டி ரஞ்சன், ரூபன் மரியாம்பிள்ளை, வாசகன் இரத்தினதுரை, துரைராஜா துஷ்யந்தன், சிவகுரு பிறேம், எட்வேர்ட் லியோன், மயில்வாகனம் நிமலராஜன், செல்லையா ராஜ்மோகன் உட்பட இன்னும் சிலர்) தங்கள் பாதுகாப்பில் காட்டிய அக்கறையைவிட, என்மீதான பாதுகாப்பில் கூடிய அக்கறையைச் செலுத்தினர்.

அக்டோபர் 9ம் திகதி இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சராகவிருந்த கே.சி.பந்த் திடீரென கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, அமைச்சர் அத்துலத் முதலி உட்பட சிறிலங்காவின் பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகளுடன் முக்கிய சந்திப்பை நிகழ்த்திவிட்டு அன்றிரவே இந்தியா திரும்பினார். அன்று நள்ளிரவை அண்மிக்கும் வேளையில் கொழும்பிலுள்ள ஆங்கிலப் பத்திரிகையொன்றின் ஆசிரியரான எனது நண்பர் ஒருவர் முக்கியமான தகவலொன்றை தொலைபேசியூடாகத் தெரிவித்தார்.

"மறுநாள் பத்தாம் திகதி வடக்கில் ஊரடங்கு பிறப்பிக்கப்படும், விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்பட்ட மன்னிப்பு ரத்தாகும், இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளை சுற்றி வளைத்துப் பிடிப்பதற்கான அல்லது கொலை செய்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்" என்று அவர் தந்த தகவல் எனக்கு பிரத்தி-யேகமான ஒரு செய்தியாகத் தெரிந்தது. அக்டோபர் 10ம் திகதி முரசொலியின் முன்பக்கத் தலைப்பு செய்தியாக இதனை வாசகர்கள் புரியும் வகையில் பூடகமாக எழுதியிருந்தேன். இரவு அலுவலகத்தில் தங்கிவிட்டு காலை ஐந்து மணியளவில் இரண்டு மைல் தூரத்திலுள்ள எனது வீட்டுக்குச் சென்றுவிட்டேன்.

வீட்டுக்குள் நுழைந்த சில விநாடிகளில் பாரிய குண்டு வெடிப்புச் சத்தம் அடுத்தடுத்து இரண்டு மூன்று தடவை கேட்டது. எனது வீடே அதன் அதிர்ச்சியால் ஆடியது. ஏதோவொரு பாரிய தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது என்று எண்ணிக் கொண்டிருந்த வேளையில் முதல் நாளிரவு கொழும்புப் பத்திரிகை நண்பர் தந்த தகவல் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. ஆனால், அடுத்த சில நிமிடங்களில் முரசொலி அலுவலகம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது என்ற செய்தி என்னை வந்து சேர்ந்தது.

எதுவாயிருந்தாலும் தாங்கிக் கொள்வதென்ற மனநிலையில் அலுவலகத்துக்குச் சென்றபோது மிகப்பெரிய கூட்டம் அங்கு நின்றது. மூன்று மாடிக் கட்டடத்தின் கண்ணாடிகளும் தளபாடங்களும் ஸ்ரான்லி வீதியில் சிதறிக் கிடந்தன. நிலப்பகுதியில் அமைந்திருந்த அச்சகம் நிர்மூலமாகியிருந்தது. ஒரு சில ஊழியர்கள் மட்டும் வெளியில் அச்சத்துடன் நின்றனர்.

தொடர் வாகன அணியில் வந்த இந்திய இராணுவத்தினர் அங்கிருந்த அச்சகப் பிரிவு ஊழியர்களை வெளியேற்றிவிட்டு உள்நுழைந்து அச்சு இயந்திரங்களுக்குள் குண்டுகளை வைத்து தங்கள் கைங்கரியத்தை நிறைவேற்றியதை அவர்கள் கலங்கியவாறு தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் சுபாஷ் விடுதியில் தங்கியிருந்த பல இந்திய ஊடகவியலாளர்கள் அங்கு படங்கள் எடுத்துக்கொண்டிருந்ததை கண்டேன். சிலர் நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தனர். இருப்பினும் ஒருவர்கூட அங்கு நடந்ததை தங்கள் பத்திரிகைகளில் எழுதவில்லை. விடுதலைப் புலிகள் இதனைச் செய்திருப்பார்கள் என்ற எதிர்பார்ப்போடு கொட்டை எழுத்துச் செய்திக்காக ஓடி வந்தவர்களுக்கு, இந்திய இராணுவம் செய்த வேலை ஏமாற்றத்தை அளித்திருக்கலாம்.

ஆனால் அன்று காலையும் மாலையும் 'ஆல் இந்திய ரேடியோ'வின் மாநிலச் செய்தியும், டில்லிச் செய்தியும் இந்தக் குண்டுத் தாக்குதல் பற்றி ஒலிபரப்பிய செய்தி விநோதமானது.

"யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் முரசொலி, ஈழமுரசு ஆகிய பத்திரிகைகளை இந்திய இராணுவம் இன்று காலை முடக்கியது..." என்று அந்தச் செய்தியறிக்கையில் சொல்லப்பட்டது.

குண்டினால் தகர்ப்பது என்பதை இந்திய ஊடக மொழிநடையில் 'முடக்குவது' என்று சொல்வது என்பதை அன்றுதான் நான் அறிந்து கொண்டேன்.

இராணுவம் பத்திரிகை நிறுவனங்களை தகர்த்ததைவிட, அதனை மூடி மறைத்து 'முடக்கப்பட்டது' என்று செய்தி வழங்கிய இந்திய வானொலியின் ஊடக சுதந்திரமே எனக்குப் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியது.

அக்டோபர் 10 முதல் 21ம் திகதி வரையான நாட்கள் கொழும்பில் (9ம் திகதி) எடுக்கப்பட்ட முடிவின்படி எதுவுமே தவறாது இடம்பெற்றன. குடாநாடு இந்திய இராணுவத்தின் குண்டு மழையாலும் வேட்டு அதிர்வுகளாலும் நனைந்து பிளந்த நாட்கள் இவை. இலட்சோபலட்சம் மக்கள் ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் கோட்டைச் சிறைக்குள் என்னை இந்திய இராணுவத்தின் 'விருந்தினராக' 82 நாட்கள் தடுத்து வைத்திருந்த வேளையில், அதன் தளபதி பிரிகேடியர் மஞ்ஜித்சிங்கிடமும், தினசரி என்னைச் சந்தித்த கப்டன் சுரேஷிடமும் நான் கேட்ட ஒரேயொரு கேள்வி, "ஏன் முரசொலி குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது?" என்பதுவே. எவருமே இதற்கான பதிலை இதுவரை கூறவில்லை.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடெனக் கூறப்படும் இந்தியாவும், உலகின் நான்காவது பெரிய இராணுவம் எனக் கூறிக் கொள்ளும் அந்நாட்டு இராணுவமும் தமிழர் தாயகத்தில் தங்கள் வரம்பு மீறி எல்லை கடந்து ஊடக சுதந்திரத்தை அராஜகக் கரங்களால் முறித்த சம்பவங்களுக்கு இதுவரை உரிமை கோரவுமில்லை, அதற்கான நஷ்டஈடு வழங்கவுமில்லை.

■ ■ ■

# புண்ணிய பாரதம்:

## ஜுலை 1987 - மார்ச் 1990

- சேரன் -

1

1987 ஜுலை மாதத்தின் இறுதி நாட்கள். இந்தியப் படையினர் பெருங் கவச வாகனங்களில் பல்லாயிரக் கணக்காக வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி நான் சென்றேன். என்னைப் பாதுகாப்பாக அப்போது அழைத்துச் சென்றவர்கள் Saturday Review (சற்றர்டே றிவியூ) வார இதழின் ஆசிரியர் காமினி நவரத்னாவும் இன்னொரு நெருங்கிய நண்பரும்(அவருடைய பெயரை இப்போதைக்குத் தவிர்த்து விடுகிறேன்). கொழும்பில் மகரகமவில் இருந்த காமினியின் வீட்டில் ஓரிரு நாட்கள் தங்கியிருந்த போது இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு எதிரான தீவிரமான போராட்டம் வெடித்தது. ஜே.வி.பியும் அதனோடு இணைந்த பலரும் மகரகம சந்தியில் இலங்கை அரசுக்குச் சொந்தமான பல வாகனங்களுக்குத் தீ வைத்த போது நானும் காமினியின் மைத்துனரும் மகரகம சந்தியில் இருந்து காமினியின் வீட்டுக்குச் செல்லும் சிறு தெருவில் ஓட்டோவுக்காக காத்திருந்தோம். நான்கு பிக்குமார் அந்த அழிப்பில் முன்னணி வகித்தார்கள். கடைகள் சிலவும் கொளுத்தப்பட்டன.

மகரகம பாதுகாப்பில்லை என உணர்ந்த காரணத்தால் குமாரி ஜயவர்த்தன அவர்களின் ஏற்பாட்டில் ஹெந்தல எனும் இடத்தில் அமைந்திருந்த அவரது கடலோர வீட்டிற்குச் சென்று தங்கி இருந்தேன்.

அந்த நாட்களில் தான் யாழ்ப்பாணத்தில் நான் பணிபுரிந்து வந்த சற்றர்டே றிவியூ அலுவலகத்துக்கு இந்தியப் படையின் உயரதிகாரிகள் சிலர் 'நல்லெண்ண விஜயம்' மேற்கொண்டிருந்தார்கள். ஆசிரியர் காமினி நவரத்னவும் நானும் அங்கிருக்கவில்லை என்பதால் எமது நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான கனக ராஜநாயகத்தை அவர்கள் சந்தித்தார்கள். அவர் துணிச்சலானவர். அவரை 'ஆடு' என்று தான் ஏ.ஜே. அழைப்பார். அந்தச் சந்திப்பு ஒரு நல்ல அறிகுறி அல்ல என்பது நமது நிறுவனத்தினருக்கு அப்போதே தெரிந்து விட்டது. எமது அச்சகம், அலுவலகம், எம்மிடம் இருந்த கோப்புகள் எல்லாவற்றையும் அவர்கள் பார்வையிட்டார்கள். எமது கருத்தியல் என்ன? என்று கேட்டார்கள் 'சேரன் ருத்ரமூர்த்தியைக் கட்டாயம் பார்க்க வேண்டும். அழைத்து வர முடியுமா?' என்று பணிப்பாளரைக் கேட்டார்கள். நல்ல காலம். அப்போது நான் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிவிட்டேன்.

பத்திரிகை ஆசிரியர் குழுவுக்கும் அதன் நிர்வாகத்தை கவனித்து வந்த விஸ்வலிங்கம் அவர்களுக்கும் பல காலமாக நல்ல உறவு இருக்கவில்லை. எனவே பத்திரிகை தொடர்பான முக்கியமான தீர்மானங்கள் எடுப்பதில் எப்போதும் முரண்பாடுகளும் குழப்பங்களும் ஏற்படும்.

ஒகஸ்ட் இரண்டாம் வாரம் நான் இலங்கையை விட்டு வெளியேறி நெதர்லாந்துக்குச் சென்றுவிட்டேன். ஓரிரு நாட்களில் மறுபடியும் போர் ஆரம்பமாகிவிடும் என்பதையும் ஊகித்திருந்தேன். இப்படி ஊகிப்பதற்கு நுண்ணறிவு எதுவும் அன்று தேவைப்பட்டிருக்கவில்லை. ஒகஸ்ட் 22, 1987ல் நயினாதீவிலும் முல்லைத்தீவிலும் தமிழ் மக்கள் மீது இலங்கைப் படையால் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பூநகரியில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் எங்களுடைய பத்திரிகை செய்தி வெளியிட்டது. Accord Runs into Snags? என்று தலைப்பிட்டு ஏ.ஜே. எழுதியிருந்தார். ஒகஸ்ட் 18, 1987 அன்று ஜே.ஆர் ஜயவர்த்தன மீதும் அவரது அமைச்சரவை மீதும் நடத்தப்பட்ட கைக்குண்டு வீச்சில் மாவட்ட அமைச்சர் கீர்த்தி அபேவிக்கிரம கொல்லப்பட்டார். பிரேமதாச, லலித் அதுலத்முதலி ஆகயோர் காயமடைந்தனர். ஒப்பந்தத்தை எதிர்த்த தென்னிலங்கைக் கட்சிகளின் ஆதரவாளர்கள், உறுப்பினர்களுள் சிலரே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் எனக் குற்றஞ் சாட்டப்பட்டது.

பிற்பாடு திலீபன் உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தமை, இடைக்கால நிர்வாக அமைப்பை வடக்குக் கிழக்கில் ஏற்படுத்துவதற்கு ஜே.ஆர். அரசு ஏற்படுத்திய நெருக்கடிகள், குமரப்பா, புலேந்திரன், பிற உறுப்பினர்கள் கடலில் கைது செய்யப்பட்டதால் ஏற்பட்ட சிக்கலும் அவர்கள் தற்கொலை செய்தமையும் ஒப்பந்தம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அவநம்பிக்கை, இந்திய உளவு சேவை மறையை இயக்கங்களுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் வழங்க ஆரம்பித்தமை, ஜே.என். டிக்சிற்றின் அகங்காரம் மிக்க செயற்பாடுகள் எனப் பல்வேறு காரணங்களால் இந்தியப்படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஒக்டோபர் 11, 1987 போர் மூண்டது.


சற்றர்டே றிவியூ வெளிவருவது சாத்தியமில்லை என்பது ஏற்கெனவே தெரிந்திருந்தாலும் ஒக்டோபர் 17 அன்று வரை பத்திரிகை வெளியாகியது. இந்தியப்படையினரால் நடத்தப்பட்ட கொக்குவில், தலையாழிப் படுகொலைகள், பிரம்படிப் படுகொலைகள் போன்றவற்றை விவரமாக வெளியிட முடிந்திருந்தாலும் 'ஈழமுரசு', 'முரசொலி' ஆகிய நாளிதழ்களை வெடிவைத்துத் தகர்த்தது போல 'சற்றர்டே றிவியூ' தகர்க்கப்படவில்லை. எல்லாவற்றையும் முடிவிட்டுச் சென்றுவிடவேண்டும் அல்லது வெடிவைப்போம் என்ற எச்சரிக்கை மட்டுமே விடப்பட்டது. போர் உக்கிரமாக நிகழ்ந்த போதும் இந்தியப் படையினர் நிகழ்த்திய படுகொலைகள் பற்றிய தகவல்களும் விவரங்களும் கொழும்பு ஊடகங்களில் வரவில்லை அல்லது அவற்றுக்கு முற்றாகத் தெரிந்திருக்கவில்லை. அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் தங்கி நின்று சற்றர்டே றிவியூக்கு எழுதிக் கொண்டிருந்த டி.பி.எஸ். ஜெயராஜ் கொழும்புக்குத் தப்பிச்சென்று அங்கே விவரமாகக் கட்டுரைகளை வெளியிட ஆரம்பித்தபோதே இந்தியப்படையின் படுகொலைகளும் தாக்குதல்களும் பற்றிய விவரங்கள் பரவலாகத் தெரிய ஆரம்பித்தன.

ஒக்டோபர் 21, அன்று யாழ் மருத்துவமனைப் படுகொலைகள் நிகழ்ந்த பிற்பாடு கொழும்பிலிருந்து காமினி நவரத்தின New Saturday Review என்று ஒரு பத்திரிகையைக் வெளியிடத் துவங்கினார். அது போட்டோக்கொப்பி வடிவத்திலேயே முதல் வெளியிடப்பட்டது. அதன் முதலாவது இதழிலேயே படுகொலைகள் பற்றிய விவரங்கள் வெளியிடப்பட்டன.

ஆளுமைகள் றேச்சல் கூரியனின் நண்பர்கள். நெதர்லாந்து வந்தால் அவர்கள் றேச்சல் கூரியனின் வீட்டில் தங்குவது வழமை. எங்களுடைய இலக்கிய, அரசியல் ஒன்று கூடல்கள் பலவும் அவரது வீட்டிலேயே நடைபெறுவது வழக்கம். இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் நா. சண்முகதாசன், Saturday Review / TRRO நிறுவனர் கந்தசாமி ஆகியோர் நெதர்லாந்து வந்திருந்த போதும் றேச்சல் கூரியன் வீட்டிலேயே ஒன்று கூடல்கள் நிகழ்த்தியிருந்தோம்.

1987 நவம்பர் மாதம் முதல் வாரம் என்ற நினைவு 'இந்து' ராம் நெதர்லாந்து வருகிறார் என்று றேச்சல் கூரியன் சொன்னார். இலங்கை இந்திய ஒப்பந்தத்தினதும் இந்தியப் படைகளதும் தீவிரமாக ஆதரவாளராக அவர் இருந்தார் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தது. எனினும் இந்தியப் படைகளின் படுகொலைகள், அண்மைக் கால நிகழ்வுகள் பற்றி அவருடன் கலந்துரையாடலாம் என றேச்சல் கூரியன் கருதினார். இரவு நேரச் சிறு ஒன்று கூடலுக்கு ஏற்பாடு செய்தார் அவர். New Saturday Review வின் இரண்டு இதழ்களை அப்போது வெளியிட்டிருந்தோம். யாழ். மருத்துவமனைப் படுகொலைகள், பிரம்படிப் படுகொலைகள், யாழ். பல்கலைக்கழக வளாகத்திலும் நூலகத்திலும் இந்தியப் படையினர் பலர் மலங்கழித்து மாசாக்கிய அவலம் பற்றிய விரிவான செய்திகள் அவற்றில் வெளிவந்திருந்தன.

'இந்து' ராமுடனான உரையாடல் துவக்கத்தில் இணக்கமாக இருந்தாலும் இந்தியப் படையினரின் படுகொலைகளைப்பற்றிப் பேசிய பொழுது கடினமாக மாறி விட்டது. 'ஒரு கையைப் பின்புறமாகக் கட்டிக் கொண்டுதான் அவர்கள் போர் புரிகிறார்கள். மிகப் பண்பட்ட படையினர் அவர்கள். நீங்கள் சொல்கிற மாதிரி எத்



படம்: Walter Keller
www.third-eye-photography.de

2

New Saturday Review இதழ்களைக் காமினி நவரத்தினா உடனுக்குடன் நெதர்லாந்திலிருந்த எனக்கு அனுப்பிவைப்பார். அங்கே அவ்விதழ்களின் இன்னொரு பதிப்பை நானும் அங்கு படித்துக் கொண்டிருந்த சித்திரலேகா மௌனகுருவும் வெளியிட்டு ஐரோப்பாவிலுள்ள செய்தி நிறுவனங்களுக்கும் மனித உரிமை அமைப்புக்களுக்கும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அனுப்பிவந்தோம். இந்த வெளியீட்டைச் செய்ய எம்முடன் பணிபுரிந்தவர்கள் பேராசிரியர் றேச்சல் கூரியன், போராசிரியர் அம்ரிதா சாச்சி, திரு. யான் பிரெண்ஸ்மா ஆகியோர். இவர்கள் அனைவரும் நெதர்லாந்தில் நான் கல்வி கற்ற Institute of Social Studies என்ற பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்தவர்கள். அங்குதான் நானும் சித்திரலேகாவும் சுனிலா அபேசேகராவும் படித்துக் கொண்டிருந்தோம்.

றேச்சல் கூரியன் தான் என்னுடைய ஆய்வு நெறியாளராக இருந்தவர். இலங்கை மலையக மக்களின் குடியரிமைச் சிக்கல்கள், கூலி உழைப்பின் நெருக்கடிகள் பற்றிய பல ஆய்வுகளைச்செய்தவர். 'இந்து' ராம், கலாநிதி நீலன் திருச்செல்வம் போன்ற

தொடர்தல் 78ம் பக்கம்

# புண்ணிய பாரதம்: ...

77ம் பக்கத் தொடர்ச்சி...

தகைய படுகொலைகளையும் அவர்கள் புரிந்திருக்கமாட்டார்கள்' என்று உணர்ச்சி வசப்பட்டார் அவர். New Saturday Review இதழ்களை அப்போது நான் அவருக்குக் கொடுத்தேன். அவருக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டது. 'இவையெல்லாம் புலிகளின் பொய்ப்பிரசாரம். இவற்றையெல்லாம் நீங்கள் ஏன் காவிக்கொண்டு திரிகிறீர்கள்?' என்று மிகவும் காட்டமாக எங்களைக் கேட்டார்.

'இல்ல இது காமினி நவரத்தினா வெளியிடுவது. அவர் உங்களது நண்பர்தானே. அவரும் புலியா? இதனை நானும் ரேச்சலும் இங்கே இருக்கிற மற்றை நண்பர்களும் தான் இங்கே வெளியிடுகிறோம்' என்று அவருக்குச் சொல்லும் போதே அவர் கோபத்துடன் எழுந்து தன்னுடைய அறைக்குப் போய்விட்டார். இந்தியப் படையினர் எத்தகைய அநியாயமும் புரியாதவர்கள் என்று தீவிரமாக நம்புகிறவர்கள் இப்போதும் பலர் இருக்கிறார்கள் என்பது ஆச்சரியமான ஒன்றல்ல.

யாழ்.பல்கலைக்கழக நூலகத்தில் ஏராளமான இந்தியப் படையினர் மலங்கழித்தமை பற்றிப் பெயர் குறிப்பிடாமல் ஏ.ஜே. கனகரத்தினா New Saturday Review வில் எழுதியிருந்த கட்டுரை இந்திய மற்றும் இந்தியப் படை ஆர்வலர்கள் பலரது கோபத்தைக் கிளப்பியிருந்தது. அந்தக் கட்டுரையில் நோபல் பரிசு பெற்ற எழுத்தாளரான வி.எஸ். நைப்பால் எழுதிய An area of Darkness (1964) என்ற இந்தியப் பயண நூலில் இருந்து ஏ.ஜே. மேற்கோள் காட்டியிருந்தார். நைப்பால் இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர். ட்ரினாட் (Trinidad) டில் பிறந்து வாழ்ந்தவர். அவர் முதல் தடவையாக இந்தியாவுக்குச் சென்ற அனுபவப் பண்பாட்டு அதிர்ச்சி பற்றியதே அந்த நூல். இந்தியா எங்கிலும் பொது இடங்களில் மக்கள் மலம் கழிப்பது சாதாரணமாக இருந்தமையைக் கண்ணுற்ற நைப்பால், இந்தியாவைப் போகுமிடமெங்கும் சுரணையற்று மலங்கழிக்கும் ஒரு மிகப் பெரிய புட்டமாக உருவகப்படுத்தி இருந்தார்.

'இந்தியர்கள் எல்லா இடங்களிலும் மலம் கழிக்கிறார்கள். பெரும்பாலும் ரயில் தண்டவாளங்களுக்கு அருகில் மலம் கழிக்கிறார்கள். கடற்கரையில் மலம் கழிக்கிறார்கள். ஆற்றங்கரைகளில் மலம் கழிக்கிறார்கள். தெருக்களில் மலம் கழிக்கிறார்கள். அவர்களுக்கு ஒளிவு மறைவு தேவையே இல்லை.' என்று நைப்பால் குற்றம் சாட்டியிருந்தார். இத்தகைய பின்னணியில் யாழ். பல்கலைக்கழக வளாகத்திலும் பல்கலைக்கழக நூலகத்திலும் இந்தியப் படையினர் மலங் கழித்ததில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது என்பதே கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

புலிகளுக்கும் இந்தியப்படைகளுக்கும் யாழ்ப்பாணத்தில் உக்கிரமான சண்டை நிகழ்ந்த வேளை காயப்பட்ட பொதுமக்களை மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றவர்களையும் இந்தியப் படையினர் கொன்றனர். காயமுற்றவர்களையும் கொல்வது என்பது இந்தியப் படையினரின் நடைமுறையாக இருந்தது. இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதல்களின் போது கோவில்களில் தஞ்சமடைந்திருந்த மக்களையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. எனது அம்மம்மாவின் சகோதரியின் மகளான ராணி அக்காவும் (நாங்கள் அக்கா என்றுதான் கூப்பிடுவோம்) அவர் குடும்பமும் சண்டிலிப்பாயில் இருந்தனர். எறிகணை வீச்சு மோசமாக இருந்ததால் அவர்களும் கோவிலில் தஞ்சம் அடைந்திருந்தனர். மோசமாகக் காயப்பட்டிருந்த ஒரு வயோதிபரை ஒருவரும் கவனிக்காத நிலையில் ராணி அக்காவின் கணவர் மருத்துவமனைக்குக் காரில் அழைத்துச் சென்றார். இடையில் இந்தியப் படையினர் காரை மறித்து, காரோடு அனைவரையும் சேர்த்து எரித்துவிட்டார்கள்.

3

1989 மே மாதம் நான் நெதர்லாந்திலிருந்து யாழ்ப்பாணம் திரும்பினேன். சுன்னாகம் ரயில் நிலையத்தில் இருந்து அளவெட்டிக்கு நானும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலாசாரக் குழுவில் ஒன்றாகப் பணியாற்றிய ஞானசேகரனும் வந்தோம். அளவெட்டி தலைகீழாக மாறியிருந்தது. எங்களுடைய வீட்டிலிருந்து சற்றுத்தொலைவில் மூன்று புறமும் இந்தியப் படைமுகாம்கள் இருந்தன. அவர்களுடைய காவலரண்களையும் முகாம்களையும் கடக்காமல் எங்குமே போகமுடியாமல் இருந்தது. நான் ஊர் சேர்ந்த மறுநாள் இந்தியப் படையினர் வீட்டைச் சுற்றி வளைத்து விட்டனர். ஊரில் புதிதாக யார் வந்தாலும் அவர்களுக்கு எப்படியோ விவரம் தெரிந்துவிடுகிறது என்பதைப் பின்னர் தெரிந்து கொண்டேன். ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் நாட்டில் இல்லாமல் இருந்தேன் என்பதை எனது கடவுச்சீட்டைப் பார்த்து உறுதி செய்த பிற்பாடு அவர்கள் திரும்பிச்சென்று விட்டனர்.

காயப்பட்ட பொதுமக்களை மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றவர்களையும் இந்தியப் படையினர் கொன்றனர். காயமுற்றவர்களையும் கொல்வது என்பது இந்தியப் படையினரின் நடைமுறையாக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் எனக்கு வேலை எதுவும் இருக்கவில்லை. சற்றர்டே ரிவியூ வெளியீட்டாளர்களான நியூ ஈரா நிறுவனத்தினர் 'திசை' என்னும் வார இதழை அப்போது வெளியிட்டு வந்தார்கள். மு.பொன்னம்பலம் ஆசிரியராக இருந்தார். அ. யேசுராசா முக்கிய பொறுப்பில் இருந்தார். இரு வாரத்துக்கொருமுறை 'ஏகாந்தன்' என்ற பெயரில் 'அங்கிங்கெனாதபடி' என்று ஒரு பத்தி எழுத ஆரம்பித்தேன். எனினும் அரசியல் கட்டுரைகள் எதுவும் எழுத முடியவில்லை. கலை, பண்பாடு சார்ந்தே எழுத முடிந்தது. நிலைமை அவ்வளவு மோசமாக இருந்தது.

அளவெட்டியில் இருந்து யாழ் நகர் வரும் போதெல்லாம் பல இந்தியப்படை முகாம்களில் சைக்கிளை விட்டு இறங்கி நடந்து போகவேண்டும். இது ஆரம்பத்தில் எனக்குத் தெரியாதபடியால் தெல்லிப்பழையில் மகாஜனக் கல்லூரியின் சிற்பி என அழைக்கப்படும் அதிபர் தெ.து. ஜயரத்தினம் வீட்டில் அமைக்கப்பட்டிருந்த படைமுகாமில் இருந்த படையினர் எனது தலைக்கு மேலால் சுட்டார்கள். அன்றிலிருந்து, "சைக்கிள் சிற்யூ வோக் (Cycle sit; You walk!) என்ற அவர்கள் கட்டளை எனக்குத் தாரக மந்திரமாகி விட்டது.

அந்த முகாமிலிருந்தவர்களும் அளவெட்டியில் இருந்த முகாம்களில் இருந்தவர்களும் பாடசாலைக்கு மாணவர்கள் செல்லும் நேரம் வரிசையாகத் தெருவால் நடந்து போவார்கள். வேலிகளில் இருக்கும் பூவரசு, கிளுவை மரங்களில் கிளைகளை ஒடித்து அவற்றால் சைக்கிளில் செல்லும் பாடசாலை மாணவிகளுக்கு அடிப்பதை அவர்கள் வழமையாகக் கொண்டிருந்தார்கள். சிலர் தெருவின் குறுக்கே நின்று மாணவிகளின் மார்பகங்களையும் பிடிப்பார்கள். இவற்றையெல்லாம் வெறுப்போடும் கோபத்தோடும் பார்த்துக் கொண்டு தான் நான் செல்ல வேண்டி இருந்தது.

அளவெட்டியில் எமது பல நோக்குக்கூட்டுறவுச் சங்கக் கடைக்கு அருகாமையில் இருந்த இந்தியப் படை முகாம் சித்திர வதை முகாமாகவே பெரும்பாலும் இயங்கியது. எங்கள் ஊரில் இந்தியப் படையால் பிடிக்கப் பட்டு அங்கு கொண்டு செல்லப்பட்டவர்களின் தாய், தந்தையர் சிலரோடு நான் மொழிபெயர்ப்பாளனாக அங்கு செல்லவேண்டி இருந்தது. அங்கிருந்த ஒரு அதிகாரிக்கு ஆங்கிலம் தெரிந்திருந்தது. வதைகூடத்துக்குப் பொறுப்பாக ஒரு தமிழர் இருந்தாலும் அவர் பேசுவதற்கோ உதவுவதற்கோ வரவில்லை.

இக்காலகட்டத்தில் விடுதலைப் புலிகளும் சிறு சிறு குழுக்களாக எல்லா இடங்களிலும் திரிந்தார்கள். இரவுகளில் திடீரென யாராவது வீட்டுக்குச் சென்று அன்றிரவு அங்கே தங்கி விடுவார்கள். அதிகாலையில் சென்றுவிடுவார்கள். இந்தத் தகவல் இந்தியப்படைக்குத் தெரிந்துவிட்டால் வீட்டுக்காரரைச் சுட்டுவிடுவார்கள். இப்படியாகக் கொல்லப்பட்டவர்கள் ஏராளம் பேர். எனது பாடசாலை நண்பன் நிமலன் கொல்லப்பட்டதும் இப்படித்தான். அவனுடைய சாவீட்டுக்குக்கூட என்னால் போக முடியவில்லை. நாடக அரங்கக் கல்லூரியைச் சேர்ந்தவர்களும் நடிகரும் நெறியாளருமான வீ.எம். குகராஜாவும் இக்காலப் பகுதியிலேயே இந்தியப் படைகளால் கொல்லப்பட்டனர். எங்கள் ஊரில் இறைகுமாரன் அவர்களது தாயாரும் இந்தியப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். (இக்காலப் பகுதியில் இந்தியப் படையாலும் விடுதலைப் புலிகளாலும் மற்றைய இயக்கங்களாலும் கொல்லப்பட்ட நூற்றுக் கணக்கானோரின் பெயர் விவரங்களை மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) தமது அறிக்கைகளில் பதிவு செய்திருக்கிறார்கள். அவை இணையத்தில் கிடைக்கின்றன).

1989 நடுப்பகுதியில் எனது தங்கையின் திருமணம் தொடர்பில் மட்டக்களப்பு செல்ல நேர்ந்தது. அப்போதுதான் 'தமிழ்த் தேசிய இராணுவத்துக்கான' கட்டாய ஆட்சேர்ப்பில் இந்தியப்படையுடன் சேர்ந்தியங்கிய இயக்கங்கள் இறங்கியிருந்தன. வாகனங்களை இடைமறித்து இளைஞர்களையும் மாணவர்களையும் கடத்திச்செல்வது, வீடுகளுக்குள் புகுந்து கடத்திச் செல்வது என மிகத் தீவிரமாக 'ஆள்பிடி' நடந்த நேரம். மட்டக்களப்பு செல்லும் வழியில் வவுனியாவில் என்னையும் கட்டாயமாக வாகனத்தில் இருந்து இறக்கிப் 'பயிற்சி' முகாமுக்கு இழுத்துச் சென்றுவிட்டார்கள். நான் என்ன சொல்லி விளங்கப்படுத்த முயன்றாலும் அவர்கள் கேட்பதாயில்லை. என்னுடைய தலைமயிரையும் குறுகத் தறித்துவிட்டார்கள்!

முகாமுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் ஒருவரையும் என்னால் அடையாளம் காண முடியவில்லை. அவர்கள் பிடித்து வைத்திருந்தவர்களில் நான் தான் வயதில் சற்றுக் கூடியனவாக இருந்தேன். இரவு எங்களை வேறு ஓர் இடத்துக்கு மாற்றுவதாக இருந்தது. எங்களை அழைத்துச் செல்ல வாகனங்கள் வந்தவேளையில் தற்செயலாக எங்களோடு பல்கலைக்கழகத்தில் படித்த நண்பன் கணேசமூர்த்தியைக் கண்டேன். அவன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்தவன். கலைத்துறைப் பட்டதாரி. 'மாயமான்' என்ற எமது வீதி நாடகத்தை 1985ல் பல இடங்களில் நிகழ்த்த உதவியவன். நான் பிடிபட்டிருந்த முகாம் அவர்களுடைய இயக்கத்தினது அல்ல. எனினும் என்னை மீட்டெடுத்து மட்டக்களப்புவரை தனது வாகனத்தில் கொண்டு வந்து சேர்த்தான். கணேசமூர்த்தியையும் அவனது தோழர்களையும் பின்னர் விடுதலைப்புலிகள் மட்டக்களப்பில் சுட்டுக் கொன்று விட்டார்கள்.

4

நினைவில் அழியாத இப்படியான பல நிகழ்வுகள் தந்த அதிர்ச்சி, துயரம், கையறு நிலை, கோபம், ஆற்றாமை எல்லாவற்றினதும் பிரதிபலிப்பாகவும் சாரமாகவும், இந்தியப் படைகளின் காலத்தில் நான் எழுதிய கவிதைகளின் தொகுதிதான், 'எலும்புக்கூடுகளின் ஊர்வலம்'. அப்போது இதனை யாழ்ப்பாணத்திலும் வெளியிடமுடியவில்லை. கொழும்பிலும் வெளியிட முடியவில்லை. இந்தியாவிலும் வெளியிட முடியவில்லை. பத்திரிகைகளில் வெளியிடவும் முடியவில்லை. நண்பரும் கவிஞரும் திசை ஆசிரியருமான மு.பொ. அவர்கள் கவிதைகள் ஒரு சிலவற்றையேனும் 'திசை' இதழில் வெளியிடத் தயங்கினார். கருத்துச் சுதந்திரத்தின் நிலை அப்படி! எனினும் எனது நீண்ட கால நண்பர் வேலு (ஜெயமுருகன்) எப்படியாவது இந்தத் தொகுதியை வெளியிட்டுவிடுவோம் எனத் தீர்மானித்தார். வேலு, ஈரோஸ் அமைப்பின் மாணவர் பிரிவான ஈழ மாணவர் பேரவையின் (General Union of Youths and Students-GUYS) வடமராட்சிப் பொறுப்பாளராக இருந்தவர். ஓவியர் அருந்ததி பொருத்தமான அட்டைப்படம் ஒன்றும் வரைந்து தந்திருந்தார். கவிதைகள், அட்டைப்படம், எனது முன்னுரை எல்லாவற்றையும் சேர்த்து ஒரு மாதிரி வடிவமைப்புடன் (dummy) அச்சகத்துக்கு எடுத்துச் செல்லும் வழியில் இந்தியப் படைகளுடன் ஒத்தாசையாக வேலை செய்து வந்த இயக்ககாரர் வேலுவைக் 'கைது' செய்து விட்டார்கள். யாழ்ப்பாணத்தில், 'எலும்புக் கூடுகளின் ஊர்வலத்தின்' முடிவு அப்படியாயிற்று. வேலுவை யாழ்ப்பாணம் அசாகா ஹோட்டல் முகாமுக்குக் கொண்டு சென்றனர். எனினும் ஈரோஸ் தலைவர் பாலகுமாரன் தலையீட்டால் வேலு பின்னர் விடுதலை செய்யப்பட்டார். 'எலும்புக்கூடுகளின் ஊர்வலம்' பிற்பாடு, தேடகம் நண்பர்களால் கனடாவில்தான் வெளியிடப்பட்டது.

வேலுவின் கைதுக்குப் பிற்பாடு நான் கொழும்பு வந்து சேர்ந்தேன். அப்போது தான் 'புதிய சற்றர்டே ரிவியூ' என்பதைத் திருப்பியும் கொண்டுவருவோம் என காமினி நவரத்னா சொன்னார். சில நண்பர்கள் நிதி உதவி செய்தனர். பத்திரிகை வெளிவர ஆரம்பித்தது.

மார்ச் மாதம் 1990ல் இந்தியப்படைகள் வெளியேறியபோது அவர்களுக்குப் 'பிரியாவிடை' கொடுக்க நானும் நண்பர் குகமூர்த்தியும் ஜேர்மன் ஊடகவியலாளர் வால்டர் கெல்லரும் திருகோணமலை சென்றோம். துறைமுகத்துக்குள் போக அவர்கள் எங்களை அனுமதிக்கவில்லை. வரிசையாக உள்ளே சென்று கொண்டிருந்த இந்தியப் படையினரிடம், 'நேரே காஷ்மீருக்குத்தான் போகிறீர்களா?' என்று வால்டர் கெல்லர் புன்சிரிப்புடன் கேட்டார். நல்ல காலம். எங்களைக் கடந்து சென்ற இந்தியப் படைக் குழுவுக்கு இந்தியை விட வேறு மொழி தெரிந்திருக்கவில்லை என்பதால் தப்பித்தோம். இன்னும் இரண்டு மாதங்களில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் போர் மூண்டுவிடும் என்பது தெரிந்திருக்கவில்லை. எனினும் இலங்கைச் சூழலில் 'சமாதானம்' ஆயுள் குறைவானது என்பது எப்போதும் போலவே அப்போதும் எனக்குத் தெரிந்திருந்தது.



cheran@thaiveedu.com

# இந்திய இராணுவம் கொண்டாடிய தீபாவளித் திருவிழா

**இந்திய இராணுவம் ஈழத்தில் நிகழ்த்திய படுகொலைகளில் யாழ்ப்பாண வைத்தியசாலைப் படுகொலை (Jaffna hospital massacre) என்று நினைவுகூறப்படும் படுகொலைகளும் முக்கியமானவை. திட்டமிடப்பட்டு, மானுடத்துக்கு எதிராக செய்யப்பட்ட இந்த வன்முறைகள் (Crime against humanity) 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம், 22ஆம் திகதிகளில் இடம்பெற்றவை. இந்தப் படுகொலைகள் இடம்பெற்ற இடத்தில் உயிர்தப்பியவர் இந்தக் கட்டுரையாளர். அவருடைய தந்தையும் இந்தப் படுகொலைகளில் கொல்லப்பட்டார். 2011 ஆம் ஆண்டில் இந்தப் படுகொலைகளின் 24வது ஆண்டு நிறைவின்போது 'அபிஷேகாவால்' எழுதப்பட்டு கீற்று இணையத் தளத்தில் வெளியிடப்பட்ட இக்கட்டுரையானது இங்கே மீள்பிரசுரமாகின்றது.**

அமைதிப்படை என்னும் பெயரோடு தமிழர் தாயகத்திற்கு வந்த இந்திய இராணுவம் நடத்திய கோரத்தாண்டவங்கள் ஏராளம். அதில் குறிப்பிடத்தக்கதொன்று, யாழ் போதனா வைத்தியசாலை வளாகத்தில் நிகழ்ந்த படுகொலைகள். இந்தியப்படையின் துப்பாக்கிச்சூட்டில், வைத்தியசாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த மூன்று வைத்தியர்கள், இரண்டு தாதிமார்கள், மேற்பார்வையாளர், ஊழியர்கள் உட்பட இருபத்தியொரு பணியாளர்களும், நோயாளார் விடுதிகளில் சிகிச்சை பெற்றுவந்த நாற்பத்தியேழு நோயாளர்களுமாக, மொத்தம் அறுபத்தியெட்டு பேர் கொல்லப்பட்டார்கள். 1987ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ம் நாள் நடத்தப்பட்ட அந்தக் கோரப் படுகொலையின் இருபத்து நான்காம் ஆண்டு நினைவு நாள் இன்று.

இன்றுவரை மறக்க முடியவில்லை. அந்தச் சம்பவத்தில்தான், வைத்தியசாலையின் நோயாளர் காவு வண்டிச் சாரதியான எனது அப்பாவும் சுட்டுக்கொல்லப்பட்டார். தந்தையை இழந்து, மனிதவேட்டை நடந்த பகுதிக்குள் இருந்து உயிர் தப்பிய சம்பவம் இருபத்திநான்கு வருடங்கள் கழிந்தும் மனதை விட்டு அகலாமல் ரணமாகப் பதிந்துள்ளது. தற்போதும் கனவாக வந்து தூக்கத்தை கலைத்துக் கொண்டிருக்கின்றது. இரத்தமும் கண்ணீரும் மரண ஓலமுமாகக் கழிந்த நிமிடங்கள். இப்போது நினைத்தாலும் மனதை உலுக்கும் சம்பவம் அது.

அப்போது எனக்குப் பதினைந்து வயது. பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். எனக்கு மூன்று தம்பிமார். யாழ்நகரத்தில் இருந்து ஆறு கிலோமீற்றர் தூரத்தில்தான் எங்களது வீடு இருந்தது. எங்கள் ஊரிலிருந்து ஏறத்தாழ ஏழு கிலோ மீற்றர் தூரத்தில், இலங்கை இராணுவத்தின் முதன்மை இராணுவ முகாம்களில் ஒன்றான பலாலி தளம் இருந்தது. அங்கு அடிக்கடி பாரிய சண்டைகள் நடக்கும். அவ்வாறான நேரங்களில், இராணுவத்தின் எறிகணை எங்கள் ஊர் மனையிலும் வீழ்ந்து வெடிக்கும். இதனால் எங்களது பகல், இரவுகள் பல பதுங்குகுழிக்குள்ளேயே கழிந்தன.

அந்த நேரத்தில்தான், இந்தியா ஈழத்தமிழர்களுக்கு தீர்வு பெற்றுத்தர வரப்போகின்றது. அதற்காக இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது எனப் பரவலாகப் பேசப்பட்டது. சில நாட்களில் தமிழர் தாயகப்பகுதிக்கு வந்த இந்திய இராணுவம், இலங்கை இராணுவம் நிலைகொண்டிருந்த இராணுவ முகாம்களில் நிலைகொண்டது. இனிப்பிரச்சனையில்லை, அச்சப்படத் தேவையில்லை, இந்தியா எங்களைப் பாதுகாக்கும் என சந்தோசமடைந்தோம். ஆனால் அந்த சந்தோசம் சில நாட்கள் கூட நீடிக்கவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்த வந்த இராணுவம் அதைச்செய்யவில்லை. இதனால் ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கோரி பல அகிம்சைப் போராட்டங்கள் மக்களால் முன்னெடுக்கப்பட்டன. இதன் உச்சகட்டமாக, நீராகாரம் கூட அருந்தாமல் உண்ணாவிரதமிருந்த தியாகி திலீபன் அவர்களும் தியாக மரணமடைந்தார். அதைத் தொடர்ந்து சில நாட்களில் சண்டை தொடங்கியது. மீண்டும் எறிகணைச் சத்தங்கள், விமானக்குண்டு வீச்சுக்கள் என்ற பழைய அவல வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டோம். விமானங்களின் பயங்கர இரைச்சல்கள் முன்னரைவிட அதிக அச்சத்தைத் தந்தன.

(ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி சமாதானத்தை ஏற்படுத்த வந்த காந்தி தேசத்து அமைதிப்படை, காந்திய வழியில் நியாயம் கேட்டு ஓர் உயிர் ஆகுதியாக்கப்பட்ட பின்னும் தனது சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவில்லை. மாறாக ஆயுதவழியில், ஈழத்தமிழ் மக்களின் போராட்டத்தை நசுக்கும் செயற்பாடுகளை துரிதப்படுத்தியது. இதன் முதற்கட்டமாக சமகால அரசியல் நிலைமை தொடர்பான கருத்துக்கள் மக்களைச் சென்றடையாத வண்ணம், யாழ்ப்பாணத்தில் இயங்கிய பத்திரிக்கை அலுவலகங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. சுயாதீன வானொலிகள்,தொலைக் காட்சி சேவைகள் அனைத்தும் முடக்கப்



பட்டன. தொடர்ந்து, விடுதலைப்புலிகளின் தலைமையை அழிக்கும் நோக்கில் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட வளாகத்தில் இந்திய சிறப்பு பரா துருப்பு ஒக்ரோபர் 10ம் நாள் உலங்குவானூர்தி மூலம் தரையிறங்கி தாக்குதலை ஆரம்பித்தது. அதே வேளை பலாலி, கோட்டை, நாவற்குழியில் அமைந்திருந்த முகாம்களில் தரித்திருந்த இந்தியப்படையினர் கனரகப்பீரங்கிகள், விமானப்படையினரின் பக்க உதவியுடன் முன்னேற்ற முயற்சிகளை மேற்கொண்டனர். பலாலியில் இருந்தும் நாவற்குழியில் இருந்தும் நகர்ந்த இராணுவம் விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதலை எதிர்கொண்டு ஒவ்வொரு இடமாகக் கைப்பற்றிக்கொண்டு வந்தது. ஆனால் யாழ்ப்பாணம் கோட்டைப்பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவம் விடுதலைப்புலிகளின் எதிர்த்தாக்குதலால் முகாமிற்குள் முடக்கப்பட்டிருந்தது. யாழ்மாவட்டத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதே இராணுவ நடவடிக்கைகளின் பிரதான நோக்கமாக இருந்தது)

இராணுவம் முகாம்களில் இருந்து அகோரமான எறிகணை மற்றும் விமானத்தாக் குதல்களை நடத்திக் கொண்டு முன்னேறியது. ஆட்லறி, எறிகணைகள் மக்கள் வாழ்விடங்களுக்குள் வீழ்ந்து வெடித்துச் சிதறின. விமானப்படை மக்கள் குடியிருப்புக்களை, மக்கள் அதிகம் கூடுமிடங்களை இலக்குவைத்துத் தாக்குதலை மேற்கொண்டது. இதனால் பல நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதுடன் காயமடைந்த பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். இந்திய இராணுவத்தின் தொடர் தாக்குதல்களால் திகிலடைந்த மக்கள் எங்கு பாதுகாப்புத் தேடுவது என தெரியாமல் தவித்தனர். பலர் பதுங்குகுழிகளை வெட்டி தற்காப்பு தேடினார்கள். சிலர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியிடங்களுக்கு அகதிகளாக வெளியேறினர். பலர் பாதுகாப்பானது எனக் கருதி கோயில்களிலும் தேவாலயங்களிலும் அடைக்கலம் தேடினர்.

சிறிலங்கா இராணுவத்தின் எறிகணைத்தாக் குதலில் இருந்து பாதுகாக்க வீட்டில் நானும் தம்பிகளுமாகச் சேர்ந்து வெட்டியிருந்த பதுங்குகுழியை மீளத் துப்பரவாக்கினோம். இந்திய இராணுவத்தின் எறிகணைத்தாக் குதல்கள் அகோரமாகவும் தொடர்ச்சியாகவும் இருந்த காரணத்தினால் சில இரவுகளும் பல பகல்களும் பதுங்குகுழிக்குள்ளேயே கழிந்தன. இருந்தாலும், இராணுவம் எங்கள் ஊரை நெருங்கி வர வர எறிகணைத்தாக்குதல்களும் அதிகமாகின. மக்கள் வாழ்விடங்களுக்குள் குண்டுகள் சரமாரியாக விழுந்து வெடித்துக் கொண்டிருந்தன.

பணி நிமித்தம் அப்பா வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்தார். அன்றைய அசாதாரண சூழ்நிலையில் தொடர்ச்சியாக பணியாற்றிக்கொண்டிருந்த அவர், கிடைத்த சிறிய இடைவேளையில் எங்களைப் பார்க்க வந்தார். கலவரத்துடன் இருந்த எங்களது முகங்களைப் பார்த்த அவரது முகத்தில் மிகுந்த கவலை தென்பட்டது. ஏனெனில் எங்களை தனியே விட்டுச்செல்ல முடியாது. கடைசித்தம்பி அப்பாவைக் கட்டிப்பிடித்து அழுதான். சிறிது நேரம் யோசித்த அவர், "எல்லாரும் என்னோட வந்து விடுதியில் தங்குங்கோ வைத்தியசாலைதானே பாதுகாப்பாயும் இருக்கும்" எனச் சொன்னார். நாங்களும் அப்பாவுடன் போவதற்குத் தயாரானோம். அப்போது என்னுடைய நண்பனிடம் நாங்கள் வைத்தியசாலைக் குச்செல்லும் விடயத்தை கூறினேன். அவன் தானும் எங்களுடன் வருவதாகக் கூறி, அவனுடைய பெற்றோரிடம் சொல்லி விட்டு வந்தான். அத்துடன் உறவினர் ஒருவரின் மகளான பிரியாவும் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) எங்களுடன் வந்தாள். மூன்று தம்பிகள், நான், அம்மா, மற்ற இருவரும் சேர்த்து மொத்தமாக ஏழு பேர் வைத்தியசாலையில் சென்று அப்பாவுடன் விடுதியில் தங்கினோம்.


(யாழ் நகரத்தில் அமைந்துள்ள யாழ் போதனா வைத்தியசாலை யாழ் குடாநாட்டில் வாழ்கின்ற எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு மட்டுமன்றி அயல் மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் போன்றவற்றுக்கும் பிரதான வைத்தியசாலையாக உள்ளது. தினசரி ஆயிரம்பேர் வரையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதோடு, சத்திரசிகிச்சைப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு எனப் பல பிரிவுகளையும் தன்னகத்தே கொண்ட வடமாகணத்தின் பிரதான வைத்தியசாலை மட்டுமல்ல அது ஒரு போதனா வைத்தியசாலை ஆகவும் இருந்தது.)


இந்திய அமைதிப்படை நிலைகொண்டிருந்த முகாம்களில் ஒன்றான கோட்டை முகாம் யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்து கிட்டத்தட்ட ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தது. அங்கிருந்த இராணுவம் முன்னேறுவதற்கு தனது கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. அதனால் நகரம் மற்றும் நகரத்தை அண்டிய பகுதிகள் எங்கும் எறிகணைகள் சரமாரியாக வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன. வைத்தியசாலை பாதுகாப்பானது எனக் கருதியிருந்தாலும், அங்கு கேட்டுக்கொண்டிருந்த கடுமையான எறிகணைச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் விமானப்படை தாழப்பறந்து நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களும் அச்சத்தையே தந்து கொண்டிருந்தன. ஆயினும் இராணுவம் வைத்தியசாலைக்குள் தாக்குதல் நடத்தாது என்ற நம்பிக்கை எல்லோரிடமும் இருந்தாலும் எறிகணைத் தாக்குதல்கள் செறிவாக நடைபெறும் போது, அப்பாவின் விடுதிக்கு அருகில் இருந்த கதிரியக்கப் பகுதி மற்றும் பிரதான அலுவலகத்தை உள்ளடக்கிய மேல் மாடிக்கட்டடத்திற்குள் போய் பாதுகாப்புத் தேடுவோம். இரவு வேளையில் பணியாளர்கள், நோயாளர்கள், விடுதியில் தங்கியிருந்தவர்கள் என எல்லோரும் அக்கட்டடத்தின் நடைபாதையில் தான் படுப்போம்.


தொடர்தல் 83ம் பக்கம்


# 1987ம் ஆண்டு ஒக்ரோபர் 21,22ம் திகதிகளில் யாழ்ப்பாண வைத்தியசாலையில் கடமையிலிருந்த போது இந்திய அமைதிப் படையால் படுகொலை செய்யப்பட்டவர்கள்



திரு. க. செல்வராஜா



திரு. வை. சண்முகலிங்கம்



செல்வன். மு. துரைராஜா



Dr. A. சிவபாதசுந்தரம்


செல்வன். க. சிவராஜா


திரு. க. கிருஸ்ராஜா



Dr. S. பரிமேலழகர்



செல்வன். கோ. உருத்திரன்



செல்வன். க. சிவலோகநாதன்



திருமதி. P. வடிவேலு


செல்வி. இரா. மங்கையர்க்கரசி



செல்வி. மு. லீலாவதி



செல்வன். க. வேதாரணியம்



திரு. இரா. சுப்பிரமணியம்



திரு. சி. ஜெகநாதன்



செல்வன் இரா. இரத்தினராஜா


செல்வன். பொ. வரதராஜா


Dr. M.C. கணேசரட்ணம்


செல்வன். S. மார்க்கண்டு


செல்வன். இரா. சுகுமார்


செல்வன். க. ஜோன்பீற்றர்

83ம் பக்கத் தொடர்ச்சி...

இராணுவத்தாக்குதலில் காயமடைந்து பல பகுதிகளில் இருந்தும் கொண்டுவரப்பட்ட பொதுமக்களால் வைத்தியசாலை நிரம்பியிருந்தது. நோயாளர் விடுதிக்குச் சென்று காயமடைந்து வரும் பொதுமக்களைப் பார்க்கும்போது மிகவும் அச்சமாக இருந்தது. (அந்த அழிவின் கோரம் நெஞ்சை உறையவைக்கும்). பலர் கால் இழந்து கையிழந்து கொண்டுவரப்பட்டார்கள் சதைத் துண்டங்களாக வந்தவர்களைப் பார்க்கும் போது அச்சமாக இருந்தது. அப்பாவுக்கு நிற்க நேரமில்லை. நோயாளர் காவுவண்டியில் காயக்காரரை ஏற்றுவதும் இறக்குவதுமாக ஓடிக்கொண்டிருந்தார். வெளியே சென்ற அப்பா திரும்பிவரும் வரை வாசலில் நின்று வந்திட்டாரா! என பல தட-வைகள் காத்திருந்திருக்கிறோம். எதிர் பார்த்திருந்த கணங்கள் ஏராளம். அப்பா திரும்பி வந்துவிட வேணும் என பல கடவுள்களை வேண்டிக் கொண்டு இருந்திருக்கின்றோம்.

தீபாவளித் தினமான அன்று கடுமையான எறிகணைத்தாக்குதல்களையும் விமானத் தாக்குதல்களையும் நடத்திக் கொண்டு முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டது இந்திய இராணுவம். எல்லோரும் வழமை போல் கட்டடப்பகுதிக்குள் சென்று பாதுகாப்புத் தேடினோம். எறிகணைத்தாக்குதல் குறைவாக இருக்கும் சமயங்களில் அம்மா ஓடிச்சென்று சமைத்தார். 11.30 மணியளவில் வெளி நோயாளர் பிரிவு இயங்கும் பகுதியில் செல்விழுந்து வெடித்தது. மத்தியானம் ஒரு ஓய்வு நேரம் பார்த்து அப்பா எங்களுக்கு சாப்பாட்டைக்குழைத்து உருண்டைகளாக்கித் தர, அக்கட்டடத்தின் ஓரத்தில் நின்று சாப்பிட்டோம் (அவருடைய கையால் நாங்கள் சாப்பிடும் கடைசிச்சாப்பாடு என்பதை அறியாமல்). எங்களுக்கு குழைத்துத் தந்து விட்டு, அப்பா தானும் சாப்பிட்டார். மீண்டும் எறிகணைத்தாக்குதல் அதிகமாக, உணவை முடித்த உடனேயே நாங்கள் கட்டடங்களுக்குள் சென்றுவிட்டோம்.

சிறிது நேரத்தின் பின் ஒரு எறிகணை எட்டாம் இலக்க நோயாளர் விடுதியின் மீது வீழ்ந்து சிதறியதால் அங்கிருந்த நோயாளிகள் ஏழு பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். இதனால், அலுவலகக்கட்டடப் பகுதிக்கு அருகிலிருந்த நோயாளர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்களையும் அக் கட்டடத்திற்குள் கொண்டு வந்து சேர்த்தார்கள். எழுந்து நடக்க முடியாதவர்களை தள்ளுவண்டிகளிலும் தோள்களிலும் சுமந்து கொண்டு வந்து மெத்தைகளை நிலத்தில் போட்டு படுக்கவைத்தனர். அதில் சிலர் சேலைன் மருந்து ஏற்றியபடியே கொண்டுவந்து விடப்பட்டனர். இதனால் அவ்விடம் நோயாளர்கள், வைத்தியர்கள், பணியாளர்களினால் நிரம்பியிருந்தது.

பிரதான அலுவலகத்திற்குப் பக்கத்தில் இருக்கும் வெளிவாசலுக்கு நேரே நின்று பார்த்தால் யாழ் மணிக்கூட்டுக் கோபுரப் பகுதி தெரியும். அந்த வாசல் வழியாகத் தான் நோயாளர்களை வைத்தியசாலைக்குள் கொண்டு வருவார்கள். இடையிடையே வாசலுக்குச் சென்று வெளியில் என்ன நடக்கின்றது என பார்த்துக் கொண்டிருந்தேன். மாலை மூன்று மணியளவில், அலுவலகத்திற்கு நேரே இருக்கும் பிரதான வாசலில், வெள்ளைக் கொடியுடன் வந்த வாகனம் ஒன்று பிரதான வீதியிலிருந்து வைத்தியசாலைக்குள் வருவதற்கு திரும்பியபோது, மணிக்கூட்டு கோபுரத்தடிக்கு முன்னேறி வந்திருந்த அமைதிப்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகியது. அதிலிருந்து சாரதி மட்டும் வைத்தியசாலைக்குள் ஓடிவந்தார். காயக்காரர்களுடன் சேர்த்து வாகனம் தீப்பிடித்து எரிந்தது. தப்பி வந்த சாரதி "நான் குருநகரில் இருந்து காயக்காரரை ஏத்திக் கொண்டு வந்தனான். உள்ளுக்குள்ள கொண்டு வர முன்னம் இப்பிடி நடந்து போச்சுதே" என்று கதறிக் கொண்டிருந்தார்.

"அங்க சனமெல்லாம் வீதியிலையும் வீடுகளிலையும் காயப்பட்டும் செத்தும்போய் கிடக்குதுகள் அவங்களை ஏத்திக் கொண்டு வர ஒண்டுமில்லை ஆக்களுமில்லை. இவங்களாவது பிழைக்கட்டும் எண்டு ஏத்திக் கொண்டு வந்தன். கடைசியில வாசல்ல வைச்சே அவங்களையும் கொன்றுபோட்டாங்களே.....அங்க தெருவெல்லாம் பிணமாத்தான் கிடக்குது" என்றார். இதைக் கேட்டபோது உடல் ஒருகணம் நடுங்கியது.

கோட்டையிலிருந்த இராணுவம் நகருக்குள் முன்னேறி வந்துவிட்டதாக எல்லோரும் பேசிக்கொண்டனர். நான் அப்பா இருந்த அலுவலக அறைக்குச் சென்றேன். அங்கு அப்பாவுடன் எனக்கு அடுத்த தம்பியும் கடைசித்தம்பியும் இருந்தனர். அப்பா என்னை அம்மாவுடன் நிற்குமாறு கூறினார். நான் அம்மாவிடம் வந்து விட்டேன். அம்மாவும் நானும் மூன்றாவது தம்பியும் நண்பனும் பிரியாவும் கதிரியக்க கட்டடப்பகுதிக்குள் நின்று கொண்டிருந்தோம். அம்மா மூன்றாவது தம்பியுடன் மாடிப்படியில் இருந்தார். நான் நண்பனுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். அங்கிருந்த எல்லோரும் பயத்துடன் என்ன நடக்குமோ என பேசிக் கொண்டிருந்தனர்.

கிட்டத்தட்ட நான்கு மணியளவில் திடீரென துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் மிக அண்மையில் கேட்கத்தொடங்கியது. வைத்தியசாலை வளாகத்திற்குள் நுழைந்த இராணுவம் நாம் இருந்த பகுதியை நோக்கிச் சுட்டுக்கொண்டு வந்தது. எல்லோரும் சத்தமிட்டவாறே ஆளுக்காள் தள்ளுப்பட்டுக் கொண்டு ஓடினார்கள், நோயாளர்கள் செய்வதறியாது கத்தினார்கள். தம்பிக்கு பக்கமாக இருந்த சுவரில் துப்பாக்கிவேட்டு ஒன்று பட்டுத் தெறித்தது. இராணுவம் வைத்தியசாலைக்குள் வந்தால் அவர்களுடன் பேசலாம் என நம்பிக்கையுடன் வைத்தியசாலைச்சீருடையணிந்து முன்னுக்கு நின்ற பணியாளர்கள் பிணங்களாகச் சரிந்து கொண்டிருந்தார்கள்.

தம்பியை இழுத்துக் கொண்டு வந்த அம்மா என்னை கதிரியக்கப் பகுதிக்கு எதிர்ப்பக்கம் தள்ளிவிட்டார். நானும் நண்பனும் ஒரு அறைக்குள் செல்ல, பின்னுக்கு வந்த அம்மாவும் தம்பியும் அறைக்குள் நுழைய முயற்சித்தனர். அது முடியாமல்

தொடர்தல் 85ம் பக்கம்

# இந்திய ராணுவம் கொண்டாடிய...

84ம் பக்கத் தொடர்ச்சி...

போக எதிர்ப்பக்கமாக இருந்த அறைக் குள் செல்ல எத்தனித்தார், அதுவும் முடியவில்லை. உடனே அந்தக் கொறிடோரில் விழுந்து படுத்து விட்டனர். அதேசமயம் அந்த இடத்தில் வீழ்ந்து வெடித்த கைக்குண்டில் பிரியா காயமடைந்து விழுந்தாள். தொடர்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் வைத்தியசாலை வளாகத்தை அதிர வைத்துக் கொண்டிருந்தன. ஐயோ! ஐயோ! என்ற கூக்குரல்கள் முருகா! முருகா! நல்லூரானே! அம்மாளாச்சி காப்பாற்று காப்பாற்று என எல்லா குலதெய்வங்களையும் கதறி அழைத்துக் கொண்டிருந்தார்கள். மேலும் 'வி ஆர் சிவிலியன்ஸ், வி ஆர் சிவிலியன்ஸ்' என்ற சத்தங்களும் பலமாகக் கேட்டுக்கொண்டிருந்தன. மக்களின் கதறல்கள் எதையும் செவிமடுக்காத 'அமைதிப்படையின்' கொலை வெறியாட்டம் ஒரு மணித்தியாலமாகத் தொடர்ந்து கொண்டிருந்தது.

ஒரு மணித்தியாலத்தின் பின் மக்களின் அழுகுரல் சத்தங்கள் சற்று அடங்கிக் கொண்டு போக, துப்பாக்கிச் சத்தமும் அடங்கிக் கொண்டு போனது. அந்தி சாய்ந்து, இருள் கவிழ்ந்தது. கீழ்த்தளப்பகுதியில் உள்ளவர்கள் கொல்லப்பட்டு விட்டதாக எண்ணியிருந்தனரோ என்னவோ! அங்கு படையினர் நடமாட்டம் குறைந்து, மேல்மாடியில் வைத்தியர்கள் தங்கும் பகுதியில் படையினரின் நடமாட்டம் கூடுதலாக இருந்தது. அத்துடன் அங்கிருந்து வெளிப்பகுதியை நோக்கி சுட்டுக்கொண்டிருந்தனர். இந்தியப்படையின் ஹிந்தி உரையாடல்கள் இராணுவ சப்பாத்துச் சத்தங்களைத் தவிர, வளாகத்தில் மயான அமைதி நிலவியது. எங்களுக்கு வெளியே என்ன நடந்தது என்று தெரியவில்லை, என்ன செய்வதென்றும் புரியவில்லை. கொறிடோர்ப் பகுதியில் இருந்த அம்மாவுக்கும் தம்பிக்கும் என்ன நடந்தது! காயமடைந்த பிரியா எப்படியிருக்கின்றார்! அப்பாவுக்கு என்ன நடந்தது! அப்பாவுடன் இருந்த தம்பிகளுக்கு என்ன நடந்தது! எந்தக் கேள்விகளுக்கும் விடை தெரியாமல் பயத்தில் உறைந்துபோய் இருந்தோம்.

அங்கிருந்து வெளியேறிச்செல்ல முடியாது. இடையிடையே கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் காதைப் பிளந்தன. அறை வாசலில் இருந்து மெதுவாக தலையை நீட்டி கோறிடோரில் இருந்த அம்மாவும் தம்பியும் எப்படியிருக்கிறார்கள் என்று பார்த்தேன். இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. அந்த இடத்தில் பலர் படுத்திருந்தார்கள். எல்லோருமே பிணங்களுடன் பிணங்களாகப் படுத்திருந்தனர். சத்தமாகவும் பேசமுடியாது. மெதுவாக இது அம்மாவா? தம்பியா? என தவழ்ந்து சென்று விசாரித்தேன். பக்கத்திலிருந்தவர்கள் 'சத்தம் போடாமல் படுத்திரு, அசைவு தெரிந்தால் சுடுவாங்கள்' என்று சொன்னதால் எனது தேடலைத் தொடர முடியவில்லை. அப்படியே படுத்தேன், மனது வலித்தது. ஒவ்வொரு நிமிடமும் கனமாக இருந்தது.

கிருஷ்ண பகவான், கொடூரகுணம் கொண்ட நரகாசுரனை வதம் செய்து மக்களைக் காப்பாற்றிய நாளை, இந்தியதேசம் தீபாவளித் திருநாளாகக் கொண்டாடும் தினத்தில் நிகழ்ந்தது இந்தக்கொடூரம். அங்கு மக்களைக் காப்பாற்ற கிருஷ்ணன் வரவில்லை. இந்திய அமைதிப்படை உருவத்தில் வந்த நரகாசுரனிடமிருந்து தங்களைக் காப்பாற்ற முருகா! முருகா! என மக்கள் கத்தியழைத்த போதும் முருகன் வரவில்லை. அன்று நரகாசுரனாக வந்த இந்திய அமைதிப்படை தனது கொலை வெறியை நிறைவேற்றி எங்கள் கண்ணீரில் அந்தத் தீபாவளியைப் பதிவு செய்தது. நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. மக்களிடையே மயான அமைதி. இராணுவத்தின் குரல்கள் மட்டும் இடையிடையே பலமாக கேட்டுக்கொண்டிருந்தன. அந்த மயான அமைதிக்குள் 'ஐயோ என்னைக்காப்பாற்றுங்கோ! என்னைக் காப்பாற்றுங்கோ!' என்ற ஒரு பெண்ணின் அவலக்குரல் போராடி ஓங்கி ஒலித்து பின்னர் தளர்ந்து அடங்கிக்கொண்டிருந்தது. அந்த அவலக் குரலைத் தாண்டிக் கேட்ட இராணுவச் சிப்பாய்களின் வெறிக்கூச்சல்கள் கட்டடத்தை அதிரவைத்தன. எல்லோரும் கொல்லப்பட்டு விட்டார்களா? என்பதை அடிக்கடி சுற்றி வந்து உறுதிப்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்பது இடையிடையே கேட்ட 'பூட்ஸ்' சத்தங்கள் மூலம் உணர முடிந்தது. அதனால்தான் அதிலிருந்தவர்கள், சத்தம் போட வேண்டாம் கதையாதைங்கோ! என மற்றவர்களை கட்டுப்படுத்தினார்கள். அந்த இரவின் நிசப்தத்தில்,



பெற்றோர்கள் எங்கே? தம்பிகள் எங்கே? என்ன நடந்திருக்கும்? என்ற கேள்விகள் மனதை மேலும் மேலும் குடைய நண்பனுடன் மட்டும் பகிர்ந்து கொண்டு படுத்திருந்தேன்.

நாங்கள் கொறிடோரின் முடிவுப்பகுதிக்கு சற்றுமுன்னால் இருந்த அறை வாசலில் இருந்தோம். அக்கொறிடோரில் பலர் கொல்லப்பட்டிருந்தனர். பலர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை அவர்களின் முனகல் சத்தங்களை வைத்துப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. நடு இரவில் ஒருவர் 'வீ ஆர் சிவிலியன்ஸ் பிளீஸ் டோன்ற் கில் அஸ்' என சத்தமாகக் கூறினார். சிறிது நேரத்தில் மேல்மாடியிலிருந்து இராணுவம் நடந்து வரும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து குரல் வந்த பகுதியை அதிரவைத்த குண்டு சத்தமும் தொடர்ந்து கேட்ட துப்பாக்கி வேட்டுச்சத்தமும் அமைதியைக் குலைத்தன. அதன் பின்னர் அந்த மனிதரின் சத்தம் கேட்கவேயில்லை. பலர் காயப்பட்டு சிகிச்சையின்றி இறந்தனர். சிலர் இரத்தம் போக தண்ணீர் கேட்டு முனகிக் கொண்டிருந்தார்கள். காயப்பட்டு மரணத்தின் விளிம்புக்குச் சென்றுகொண்டிருந்தவர்கள் தங்களின் உயிரைக் காப்பாற்றலாம் என்ற ஆதங்கத்திலே அல்லது சுய நினைவின்றியோ காப்பாற்றுமாறு எழுப்பிய அபயக்குரல் அவர்களின் ஆத்மாவிற்கு விடைகொடுத்துக்கொண்டிருந்தது. இடையிடையே துப்பாக்கிச்சத்தங்கள் பல தடவைகளாகக் கேட்டுக்கொண்டிருந்தன. ஒவ்வொரு தடவையும் ஏதோ ஒரு உயிர் பறிக்கப்படுகின்றது என்பதை மட்டும் உணரக்கூடியதாக இருந்தது. யார் இறந்து விட்டார்கள், யார் யார் இறந்து கொண்டிருக்கின்றார்கள், தப்புவோமா! என்பது எதுவும் தெரியாமல் கழிந்தது அந்த இரவு.

மறுநாள் மரணத்தின் கணங்களுடன் விடிந்தது காலைப்பொழுது. மோசமான இரத்த வாடையும் வெடிமருந்தின் மணமும் காற்றில் பரவி நின்றன. அம்மாவும் தம்பியும் எங்காவது கண்ணில் தென்படுகின்றார்களா? என எட்டிப்பார்த்தபோது கொறிடோரின் முடிவில் அம்மாவும் தம்பியும் வேறு சிலரும் படுத்திருந்தது தெரிந்தது. காயப்பட்ட பிரியா அம்மாவிற்கு முன் படுத்திருந்தார். அவர்களுக்கு முன்னுள்ளவர்கள் கொல்லப்பட்டிருந்தனர். சிலர் காயத்துடன் கிடந்தனர். எல்லோரும் பிணங்களுடன் பிணங்களாகவே கிடந்தனர். அடுத்தது என்ன நடக்குமோ! கொல்லப்பட்டு விடுவோமா! என்ற அச்சம் ஒன்றுசேர, ஒருவரையொருவர் நிசப்தமற்றுப் பார்த்துக்கொண்டிருந்தோம். நான் தலையை சற்று உயர்த்தி அம்மாவின் கண்களைப் உற்றுப்பார்த்தேன். அம்மா தம்பியை கட்டிப்பிடித்துக்கொண்டு ஒரு வாங்கிற்கு கீழே அசைவற்றுப் படுத்திருந்தார். என்னைப்பார்த்ததும் சிறு நிம்மதி அவரின் முகத்தில் தெரிந்ததுடன் உதட்டசைவில் கவனம் என சொன்னார். அதையும் தாண்டி ஏக்கம், பயம் கலந்த பரிதவிப்பு அவரின் முகத்தில் தெரிந்தது. கொரிடோரில் கொல்லப்பட்டிருந்த பிணங்களைக்கடந்து இராணுவம் வரவில்லை. அதனால் பின்னால் இருந்தவர்கள் உயிர்தப்பியிருந்தனர். மேல்தளத்தில் இந்தியப்படையினர் கதைக்கும் சத்தங்களும் சிரிப்பொலிகளும் தெளிவாகக் கேட்டுக்கொண்டிருந்தன. பத்து மணியளவில் இந்திய இராணுவத்திற்கும் சிலருக்குமிடையில் சம்பாசணை நடைபெறுவதை கேட்கமுடிந்தது. இங்கு நோயாளர்களும் ஊழியர்களும் மட்டுமே இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் பொது மக்கள் என ஆங்கிலத்தில் தெளிவுபடுத்தப்படுகின்றது. மனதுக்குள் ஒரு சிறுதுளி நம்பிக்கைக் கீற்று. நாங்கள் காப்பாற்றப்படலாம். யாரோ எங்களுக்காக கதைக்கின்றனர் என்ற நினைப்பு சிறு தெம்பைத் தர, சற்று தலையைத் தூக்கிப்பார்த்துக் கொண்டிருந்தபோது வைத்தியசாலைச் சீருடையுடன் நால்வர், இந்திய இராணுவச் சிப்பாய்களிடம் யாராவது உயிருடன் எஞ்சியிருந்தால் காப்பாற்றலாம் என்ற நம்பிக்கையில் கதைத்துக் கொண்டிருப்பதாக புரிந்துகொண்டேன். அப்போது இராணுவத்தினர் ஆயுதங்களின்றியே (ஏறக்குறைய எல்லோரும் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்ற நினைந்திருந்தனர் போலும்) கதைத்துக் கொண்டிருந்தனர்.

திடீரென ஒரு சீக்கிய இராணுவத்தினன் மேல்மாடிக்குச் ஓடிச்சென்றான். திரும்பி வந்தவன் கையில் துப்பாக்கி. வந்த வேகத்தில் அவர்களை நோக்கிச் சுடத் தொடங்கினான். முதலில் தாதி இரண்டாவதாக வைத்தியர் பின்னர் மற்றைய தாதி தொடர்ந்து மற்றைய ஊழியர் என வரிசையாகச்சுட்டான். வைத்தியர் சூடுபட்டு விழும் போது முருகா என்ற சத்தத்துடன் விழுந்து இறந்தார். அந்தச் சம்பவம் எமக்கு ஏற்பட்ட சிறு நம்பிக்கையை மட்டுமல்ல அவர்களின் உயிரையும் சேர்த்துப்பறித்தது. மக்களுக்காக கெஞ்சிக் கொண்டிருந்த அவர்களது உடல்கள் 'தொப்' என்று விழுந்து இரத்தத்தில் குளித்தன. அங்கு அசைவின்றிப் படுத்திருந்த மக்களின் வற்றிய கண்களில் இருந்து கண்ணீர்த் துளிகள் வடிந்தன. அதில் சூடுபட்ட ஒருவர் பஞ்சபுராணமும் சிவபுராணமும் பாடியபடியே கிட்டத்தட்ட ஒன்றரை மணித்தியாலங்களின் பின் இறந்துபோனார்.

தப்பியிருந்த மக்களின் முகங்களில் ஏற்பட்ட சிறு நம்பிக்கையும் தகர்ந்தது. நாம் ஏன் கொல்லப்படுகின்றோம் என்று புரியவில்லை. கொல்லப்பட்டவர்கள் நோயாளிகளும் வைத்தியசாலை ஊழியர்களும் என்பதை உறுதிப்படுத்துவதில் யாருக்கும் சிரமம் இருக்காது. தொடர்ந்து இன்று வைத்தியசாலையின் இன்னுமொரு பக்கத்திலிருந்து வந்த வைத்தியர் மற்றும் தாதியர்கள் படுகொலை நடந்த இடத்திற்கு வந்து காப்பாற்ற முற்பட்டபோதும் ஏன் சுடப்பட்டார்கள் என்பது புரியவில்லை. தொடர்ந்து என்ன நடக்கப்போகுதோ! என் நண்பனின் பார்வையில் இருந்து புரியமுடிந்தது. தாய் தந்தையரை விட்டு அவனையும் கூட்டிவந்தது தவறோ? என மனம் எண்ணியது. காயப்பட்டவர்கள் தங்களின் வேதனைகளையும் கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியாகக் கிடந்தனர். அடுத்தகணம் என்ன நடக்கப்போகின்றது எனத் தெரியாமல் அப்படியே அசைவற்று பேச்சற்றுப் பிணங்களைப்போல படுத்திருந்தோம். மதியத்தைத் தாண்டியும் அங்கு எந்த மாற்றமும் இல்லை. அப்படியே இருந்தோம்.

மாலைவேளையில் ஒரு பெண்ணின் அழுகுரல் சத்தம் கேட்டது. இங்கு நோயாளர்களும் வைத்தியர்களும் வைத்தியசாலை ஊழியர்களும்தான் இருக்கிறார்கள் எனக் கூறி கதறி அழுதது அந்தப் பெண்குரல். தொடர்ந்து இராணுவத்தினர் கதைக்கும் சத்தமும் கேட்டது. நம்பிக்கையின்றி, எங்களுக்காக இருன்னுமொரு உயிரா! என எண்ணிக்கொண்டிருந்தவேளை, அப்பெண், அவர் ஒரு வைத்தியர், அழுகையுடன் "தப்பியிருப்பவர்கள் கையை உயர்த்திக் கொண்டு வெளியில் வாங்கோ" எனச் சொன்னார். என்ன செய்வதென்று புரியவில்லை. மருத்துவர் பொன்னம்பலம் அவர்கள் உட்பட பல வைத்தியர்களும் அந்த அறையில் இருந்தனர். அடுத்து என்ன நடக்கப் போகின்றது எனத் தெரியாமல் எழும்பி நடக்கத்தொடங்கினார்கள்.

தொடர்தல் 86ம் பக்கம்

# இந்திய ராணுவம் கொண்டாடிய...

85ம் பக்கத் தொடர்ச்சி...

நானும் கைகளை உயர்த்திக் கொண்டு பார்க்க, அந்தக் கொறிடோரில் இறந்த உடல்கள் இங்குமிங்குமாகக் கிடந்தன. ஒருவருக்கு மேல் ஒருவர் வீழ்ந்து கிடந்தனர். கால்வைத்து நடக்க இடமில்லை, இரத்தம் உறைந்து சேறு போல இருந்தது. இறந்தவர்களின் உடல்கள் வீங்கியிருந்தன. அம்மாவும் தம்பியும் எழுந்து கையை உயர்த்திக்கொண்டு நின்றனர். முன்பக்கம், மேல்மாடிப்படிகளுக்கு அருகில் கிடந்த பிணங்களுக்கிடையில் வைக்கப்பட்டிருந்த பரலின்மேல் கொக்கோக் கோலாக் கேஸ் ஒன்று இருந்தது. அதற்கு அருகில் சீக்கியச் சிப்பாய் துப்பாக்கியை உயர்த்தியபடி நின்றான். சோடா குடிச்சுக்குடிச்சுத்தான் எல்லோரையும் இரவிரவா சுட்டிருக்கிறானா! என நினைத்தேன்.

இரத்த வெள்ளத்தில் படுத்திருந்திருந்த பிரியா பலவீனமான குரலில் கூப்பிட்டார். அவரை நோக்கி அடி எடுத்து வைக்க முன்னர், துப்பாக்கியை நேரே பிடித்தபடி நின்ற இந்திய சீக்கியப்படையினன் நட என அதட்ட, கண்களினால் ஆற்றாமையையும் பயத்தையும் வெளிப்படுத்தி எந்த நம்பிக்கையுமற்று எல்லோருடனும் கையை உயர்த்திக்கொண்டு நடக்கத்தொடங்கினேன். அங்கு கிடந்த உடல்களுக்கு இடையில் இருந்த இடைவெளிகளில் காலை வைத்த போது உறைந்த இரத்தம் கணுக்கால் வரை தொட்டு நின்றது. அடிப்பாதத்தில் உடைந்த எலும்புகளும் தசைகளும் மிதிபட்டது போன்ற உணர்வு. மிக மோசமான இரத்தவாடை. அப்படியே பார்த்துப்பார்த்து நடந்து சென்றோம்.

கொறிடோரின் வாசலில் வைத்திய நிபுணர் சிவபாதசுந்தரம், அருகில் கிடந்த தாதிகளின் உடலைப் பார்த்தபோது, காலையில் எங்களைக் காப்பாற்ற வந்து இறந்தவர்கள் இவர்கள்தான் என்பதைப் புரிந்து கொண்டேன். மேலும் பல உடல்களும் அந்தப்பகுதியை நிறைத்திருந்தன. நோயாளர் வண்டியில் படுத்திருந்த நோயாளர்கள் அந்த வண்டிகளிலேயே கொல்லப்பட்டுக் கிடந்தனர். விழுந்து சாமி கும்பிடுவதைப்போல பலர் கும்பிட்டபடியே இறந்திருந்தனர். நோயாளர் வண்டி ஒன்றில் தனது குழந்தையைக் கிடத்தியிருந்த தாய் அந்தக் குழந்தையை கட்டிப்பிடித்தபடியே இறந்துபோய் கிடந்தார். மகளைத் தனது உடலுக்கு அடியில் மறைத்துக் கட்டிப்பிடித்தபடி இறந்திருந்த தகப்பன் என ஆங்காங்கு சுடப்பட்டு இறந்திருந்த உடல்கள், திகிலடைய வைக்கும் காட்சிகளைப் பார்த்துக்கொண்டு, அம்மாவும் நானும் மூன்றாவது தம்பியும் நண்பனுமாக இருபத்தி ஆறாவது வாட்டிற்குள் வந்து சேர்ந்தோம். அம்மா, அப்பாவையும் மற்றைய இரு தம்பிகளின் பெயரையும் கூறிக் கதறி அழுது கொண்டே வந்தார். சிறிது நேரத்தில் பிரியாவையும் நோயாளர் விடுதிக்கு கொண்டு வந்து சிகிச்சை கொடுத்தார்கள். அப்பகுதியில் உயிருடன் இருந்த அனைவரும் வந்து விட்டனர், ஏனையோர் இறந்துவிட்டார்கள் என சொன்னார்கள். அப்பாவும் இரண்டு தம்பிகளும் வரவில்லை.

அப்போது அலுவலக அறையில் இருந்து காயப்பட்டு வந்த ஊழியர் ஒருவரிடம் அப்பா எங்கே என்று கேட்டபோது, 'கடைசித்தம்பிக்கு காயம். அவருக்கு நிறைய இரத்தம் போய் தண்ணி கேட்டுக்கொண்டிருந்தான். அப்பா கொஞ்சம் பொறுத்துக் கொள்ளப்பு எண்டு சொன்னார். ஆனால் அவனால் அதைத் தாங்க முடியேல்லை சின்னப்பிள்ளைதானே, இரத்தம் அதிகமா வெளியேறிக் கொண்டிருந்ததால் தாகத்தை அடக்க முடியாமல் மீண்டும் தம்பி தண்ணியை கேக்க, அப்பா மேசையில் இருந்த தண்ணியை எடுத்துக் குடுக்க மெதுவாக எழும்பினவர். அப்ப யன்னல் பக்கமாக இருந்து சுடப்பட்டதில் அப்பிடியே விழுந்தவர்தான். அவற்றை சத்தம் அதுக்குப் பிறகு கேக்கவே இல்லை, அப்பதான் எனக்கும் சூடுபட்டது, வரக்கிலதான் பாத்தன் அப்பா இறந்திருந்தார். நான் மற்றத் தம்பியைக்காணவில்லை, காயப்பட்ட தம்பி மயங்கிக் கிடந்தான், என்னால தூக்கிவர ஏலாமல் போயிட்டுது" என்றார். இரவு வேளை இடையிடையே கேட்ட வெடிச் சத்தத்தில் ஒன்று என் அப்பாவையும் பலி கொண்ட வேட்டொலி என்பது புரிந்தது. மரண வீட்டு ஓலங்கள் அந்த நோயாளர் விடுதியில் பரவியிருந்தது. அப்பா இறந்து விட்டார். காயமடைந்தவர்களைக் கொண்டு வந்த ஊழியர்களும் அங்கு இனியாரும் உயிருடன் இல்லை என்றனர். மேலும் அந்த கட்டடப் பகுதிக்கும் அப்பாலும் பலரது உடல்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள்.

தம்பிகள் இருவருக்கும் என்ன நடந்தது என்பது புரியவில்லை. அலுவலக அறையிலிருந்து ஒவ்வொருவரிடமும் விசாரித்தேன். எங்கும் சரியான பதிலில்லை. இரவு



வந்துவிட்டது. அப்போதுதான், இறந்தவர்களின் உறவினர்கள் இருந்தால் அங்கு சென்று சடலங்களை இனங்காணுமாறு இந்திய இராணுவத்தினர் சொன்னார்கள். பதைபதைப்புடன் அங்கு சென்றோம்.

கும்மிருட்டு ஆங்காங்கு சடலங்கள், அப்பா இருந்த அலுவலகத்திற்குச்சென்று, டோர்ச் வெளிச்சத்தில் தேடிப் பார்த்தபோது அப்பாவின் உடல் குப்புற கிடந்தது. அப்பா படுத்திருக்கிற மாதிரியே கிடக்கிறார் என அம்மா கத்தியழுதார். மெதுவாகத் தொட்டுத் திருப்பினேன். நெத்தியில் குண்டுபட்டு முகம் வீங்கியிருந்தது. நாக்கை பற்களால் கடித்தபடி இருந்தார். இறந்து போயிருந்த அவரின் சடலத்தின் மேல் தலையை அடித்து அம்மா அழுதார். அழுது கொண்டே தம்பிகள் எங்கேயென்று கேட்டுக் கதறினார். கடைசித்தம்பி காயப்பட்டிருந்ததாகச் சொன்ன இடத்தைப் பார்த்தேன். அதில் அவனைக் காணவில்லை, அவ்விடத்தில் உடலை இழுத்தால் வரும் அடையாளம் போல நிலத்தில் உறைந்திருந்த இரத்தத்தில் அடையாளம் தெரிந்தது. என்ன நடந்திருக்கும் என்பதை ஊகிக்க முடியவில்லை, அம்மா தம்பிகளையும் நினைச்சு கத்தியழுதார். நான் என்ன செய்வது என்று புரியாமல் அங்கிருந்த ஏனைய சடலங்களையும் ஒவ்வொன்றாகப் பார்க்கத் தொடங்கினேன். அப்பாவை இழந்த வலி ஒருபுறம், இது தம்பிகளின் உடல்களாக இருக்கக் கூடாது என்ற பதைபதைப்பு ஒருபுறம், ஒவ்வொரு சடலமாகப் புரட்டிக்கொண்டிருந்தேன். ஏறக்குறைய அங்கிருந்த அனைத்து சடலங்களையும் பார்த்தேன. அவர்களின் உடல்கள் அதில் இல்லை. எங்கே போனார்கள்? என்ன நடந்தது? என்ற கேள்வி மனதை அழுத்தியது.

மறுநாள் விடிந்ததும் அங்கிருந்த சடலங்களை வைத்தியசாலையின் பிணவறைக்குப் பக்கத்தில் இருக்கும் பின்பக்க பாதைக் கருகில் போட்டு எரிப்பதற்கு இந்திய அமைதிப்படை தீர்மானித்தது. கட்டைகளை அடுக்கி சடலங்களை அதற்கு மேலே கொண்டு வந்து வைக்கச் சொன்னார்கள். நான் முதற்பிள்ளை என்பதால் அப்பாவுக்கு கொள்ளி வைக்க அனுமதி வாங்கித்தருமாறு கேட்டேன். வைத்தியர்கள் இருவர் இராணுவத்துடன் கதைத்து அதற்கான அனுமதியைப் பெற்றுத்தந்தார்கள்.

அப்பாவின் சடலத்தை நோயாளர் தள்ளு வண்டியில் வைத்து வைத்தியசாலை ஊழியர்களுடன் நானும் தம்பியும் சேர்ந்து தள்ளிக்கொண்டுபோய் பிணவறைக்கு அருகில் நின்றோம். ஒவ்வொரு உடலையும் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கொண்டுவந்தனர் அதில் பலரும் தெரிந்தவர்கள். இறுதியாக ஏற்கனவே இறந்து பிணஅறையில் இருந்தவர்கள் உட்பட எண்பதிற்கும் மேற்பட்ட சடலங்களும் ஒன்றாக, குவியலாக அடுக்கப்பட்டன. அதில் ஒரு ஓரத்தில் அப்பாவின் உடலை தனியாகக் கிடத்தி நெஞ்சாங்கட்டையை நானும் தம்பியும் வைத்தோம். இந்தியச் சிப்பாய் ஒருவன் பேப்பரில் நெருப்பைக் கொளுத்தி அப்பாவிற்கு கொள்ளி வைக்கத் தந்தான். நான் அப்பாவிற்கு கொள்ளி வைத்துவிட்டு திருப்பி அதைக்கொடுக்க, அப்பிணக்குவியலைச் சுற்றி நெருப்பு வைக்குமாறு கூறினான். நானும் அவ்வாறே அப்பாவுடன் சேர்த்து அனைத்து சடலங்களுக்கும் நெருப்பை வைத்து விட்டு தம்பியையும் கூட்டிக்கொண்டு வந்தேன்.

அனைத்து சடலங்களும் ஒன்றாக எரியூட்டப்பட்டன. பின்னர், பிற்பகல் வேளை, அப்பாவுடன் வேலை செய்த ஒருவரின் துணையுடன் அஸ்தி எடுக்கச் சென்றேன். அங்கு சென்று பார்த்தபோது உடல்கள் முழுமையாக எரியவில்லை. அரைகுறையாக எரிந்த நிலையில் கருகியிருந்தன. மரங்களைக் கீழே மட்டும் போட்டு எரித்ததினால் கீழிருந்த உடல்களே எரிந்திருந்தன். மேலேயிருந்த உடல்கள் எரியாமல் இருந்ததுடன் நெஞ்சாங்கட்டை வைத்து எரிக்காததால் சில உடல்கள் நிமிர்ந்தும் இருந்தன. அப்பாவின் உடலின் அரைவாசி எரியாது இருந்தது. உடலின் மேற் பக்கத்தில் எரிந்த இடத்தில் மூன்று இடங்களில் இருந்தும் எரிந்திருந்த எலும்பை உடைத்தும் சாம்பலாக்கி எடுத்தேன். நேற்று சோறு ஊட்டிய என் அப்பாவை சாம்பலாக எடுத்து பத்திரப்படுத்தி அம்மாவிடம் கொடுத்தேன்.

அதன்பின் வைத்தியசாலையில் ஒளிந்திருக்கக் கூடிய பல இடங்களுக்கும் சென்று தம்பிகளைத் தேடினேன். கிட்டத்தட்டப் பதினைந்து நாட்களுக்கு மேல் அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் தேடிக்கொண்டிருந்தோம். ஊரடங்குச் சட்டம் இருந்ததால் யாரும் வெளியில் நடமாட முடியவில்லை. பதினைந்து நாட்களாக இருந்த இந்தியப்படையின் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டு மக்கள் நடமாட அனுமதிக்கப்பட்டனர். அப்போது தான் இரண்டு தம்பிகளும் நல்லூர் கோயிலில் இருக்கின்றார்கள் என அங்கிருந்து வந்த வைத்தியர் ஒருவர் கூறினார். எங்களை வைத்தியசாலையிலேயே இருக்கச் சொல்லிவிட்டு, அம்மா நல்லூர் கோயிலுக்குப் போய் அவர்கள் இருவரையும் கூட்டிக் கொண்டு வந்தார். நீண்ட நாட்களுக்குப்பிறகு தம்பிகளைச் சந்தித்தது சந்தோசத்தைக் கொடுத்தது.


கடைசித்தம்பி படுகொலைச் சம்பவம் நடந்த இடத்திற்கு வர பயமாயிருக்கு எனக் கூறி வரமறுத்துவிட்டான். இரண்டாவது தம்பியிடம் "ஏன் ஓடினீங்கள்?" எனக் கேட்டேன். "உங்களை ஆமி கையை உயர்த்திக் கூட்டிக்கொண்டு போனபோது அம்மா எங்கட பெயரைக்கூப்பிட்டு அழுது கொண்டு போனது கேட்டது. அதனால உங்களையும் ஆமி சுடப்போறாங்களோ! எண்ட பயத்தில எழும்பேல்லை. பிறகு அப்பகுதியில் ஆமியைக் காணல்லை. வைத்தியசாலை ஊழியர் ஒராளும் காயப்பட்டு எழும்பாமல் எங்களோடயிருந்தார். அவர் நாங்கள் இங்கயிருந்து தப்பி ஓடுவம் என்றார். நானும், தம்பியையும் தூக்கிக் கொண்டு மதில் ஏறிப் பாய்ந்து நல்லூர் கோயிலுக்கு ஓடினான். அதோட அப்பாவின் சட்டைப் பையில் இருந்த அம்புலன்ஸ் சாவியையும் நல்லூரில் கோயிலில் நின்ற வைத்திய பொறுப்பதிகாரி நச்சினாக்கினியரிடம் கொண்டு போய் கொடுத்து நடந்ததைக் கூறினேன்" என்றான்.

தம்பியும் பிணத்தோடு பிணமாகத்தான் அந்த சம்பவத்தில் உயிர் தப்பியிருந்தான். "ஆமி சுட்டுக்கொண்டு வந்தபோது நான் வாசல்லதான் நிண்டனான். அவன் சுட்டதில் எனக்கு முன் நின்றவர்கள் இரண்டு பேரும் வெடிபட்டு எனக்குமேல் விழுந்து விட்டினம். நான் அப்பிடியே அசைவில்லாமல் அவர்களின் உடலுக்கு கீழ கிடந்தன். ஆமி பிறகு சுட்டது எனக்குப் படேல்ல. கொஞ்ச நேரத்தில் என்ர காலும் விறைச்சுப் போட்டுது. ஆமி வந்து என்ர காலை தனது சூக்காலால் தட்டிப்பார்த்தான். எனக்கு ஒன்டும் தெரியவில்லை, நானும் சத்தம்போடாமல் இருந்திட்டன். அதால நான் இறந்திட்டதா நினைச்சு விட்டுட்டுப் போயிட்டான். எனக்கு மேல இறந்து விழுந்தவர்கள் பயங்கர பாரம் ஒன்டும் செய்ய முடியாததால அப்படியே இருந்தன்" எனக்கூறினான்.

அன்றைக்கு வைத்தியசாலை மட்டுமல்ல யாழ்நகரை அண்டிய பகுதிகளில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். அன்றிலிருந்து தீபாவளி தினம் வலிகள் நிறைந்த ஒரு நாளாகவே இன்றும் தொடர்கின்றது. இன்றுவரை ஆறாத ரணமாக இருக்கும் சம்பவங்கள் எத்தனை. என் அப்பாவோடு மகிழ்ந்திருந்த காலங்கள், அப்பாவை இழந்து அனுபவித்த வேதனைகள் பல. எங்கள் எல்லோரையும் இச்சம்பவம் கடுமையாகப் பாதித்தது. குடும்பத்தில் இருவர் விடுதலைப்போராட்டத்தில் தங்களை இணைத்துக்கொண்டனர். அதில் இரண்டாவது தம்பி 1991ம் ஆண்டு கப்டன் வாணனாக வீரச்சாவடைந்தான்.

எனது அப்பாவுடன் கொல்லப்பட்ட வைத்தியர்கள், பணியாளர்கள் மற்றும் அன்றைய தினம் கொல்லப்பட்ட அனைத்து அப்பாவிப் பொதுமக்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

■ ■ ■



# அமைதியின் பெயரால்

**இலக்கியம் என்பது ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதுடன் ஒடுக்கப்படுகின்ற மக்கள் பற்றி பரிவுடனும் கரிசனையுடனும் அணுகுவது என்கிற புரிதலே பொதுமனநிலையில் இருக்கின்றது. ஆயினும் ஈழத்தில் இந்திய இராணுவம் நிகழ்த்திய படுகொலைகளையோ பேரழிவுகளையோ பற்றி தமிழகத்தில் பரந்த அளவுக்கு பதிவுகளும் கவனமும் இல்லை. இந்திய இராணுவம் செய்த அழிவுகளை மறைத்தும் அதற்கு நியாயம் கற்பித்தும் மாபெரும் வரலாற்று மோசடி ஒன்றையும் ஒருசில எழுத்தாளர்கள் செய்துவருகின்றனர். இவ்வாறாக பொதுவெளியில் பரப்பப்படும் வரலாற்று மோசடிகளுக்கு எதிராக, ஒடுக்கப்படும் மக்கள் தமது நினைவுகளையும் கதைகளையும் தமக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களையும் கலை இலக்கிய வெளிப்பாடுகளூடாகப் பதிவுசெய்யவேண்டியது மிக அவசியமானதாகும். அந்த வகையில், நூல்களில் எவ்விதம் ஈழப்போர் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தொடர்ச்சியாக எழுதிவருகின்ற மு. புஷ்பராஜன் 'ஈழத்தில் இந்திய இராணுவம் இழைத்த அநீதிகளையும் அழிவுகளையும்' பதிவுசெய்திருக்கின்ற சில படைப்புகளையும் பதிவுகளையும் இந்த இதழுக்காகத் தொகுத்து அளித்திருப்பது முக்கியமானதாகும்.**

**- மு. புஷ்பராஜன் -**

ஈழத் தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றில் வல்லாதிக்க சக்திகள் பதித்து விட்டுச்சென்ற துயர வடுக்கள் தமிழ் மக்கள் மனதில் என்றும் நீங்காதவை. இந்திய அமைதிப் படையினர் எம்மண்ணில் கால் பதித்து நின்ற காலங்கள் அதிலொன்று. அது அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் வெறுப்பையுமே எம்மிடம் விட்டுச்சென்றுள்ளது. வரலாறு வெற்றியாளர்களினாலேயே எழுதப்படுகின்றது. வெற்றியாளர்களது நியாயங்களும் எக்காளமுமே அதில் ஒலித்துக்கொண்டிருக்கும். தோற்கடிக்கப்பட்டவர்களது கண்ணீருக்கும் பெருமூச்சுக்களுக்கும் அங்கு இடமிருக்காது. எமது கண்ணீரையும் பெருமூச்சுக்களையும் பதிவில் வைத்திருக்கவேண்டியது நமது வரலாற்றுக் கடமை. படைப்பிலக்கியங்களிலேயே வரலாற்றிலிருந்து வழிந்துபோன மன உணர்வுகள் பட்டிருக்கும். இந்தியா எமது மண்ணில் கால்பதித்து நின்ற கால நிகழ்வுகள் எவ்வாறு அக்கால இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்பது பற்றி அவதானித்தபோது கவிதைகளும் சிறுகதைகளுமே வெளிவந்திருந்தன. அத்தகைய படைப்புக்களில் கவிதை தவிர்ந்த சில சிறுகதைகளை இங்கே பகிர்ந்துகொள்கிறேன். இங்கே நான் பகிர நினைத்த 'பிரம்படி' என்கிற சிறுகதை முழுமையாக மீழ்பிரசுரமாவதால் அதனைத் தவிர்த்துக்கொள்கிறேன்.

## சாந்தனின் 'அசோகவனம் அல்லது வேலிகளின் கதை':

இந்திய இராணுவம் யாழ்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கில் முன்னேறி வருகையில், ஏற்படவிருக்கும் உயிராபத்தையும் உயிரிழப்புக்களையும் தவிர்ப்பதற்காக மக்கள் பாடசாலைகள், கோவில்கள் ஆகியவைகளில் தங்கி இருப்பதும் பின்னர், அதுவே அகதி முகாம்களாக மாறிப் போவதும் உண்டு. இக்காலங்களில் இந்திய இராணுவத்தினர் அடிக்கடி சில பகுதிகளைத் திடீரென முற்றுகையிடுவதும் குறிப்பிட்ட பொது இடங்களில் மக்களை ஒன்றுகூடும்படி அறிவித்தல் விடுப்பதும் அவர்கள் சோதனை செய்யப்படுவதும் வழமையான நிகழ்வுகள். பொதுமக்களுள் விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளனரா என்பதை கண்டுபிடிப்பதே இதன் நோக்கம். இராணுவத்தினர் உத்தரவிடும்வரை ஒன்றுகூடியவர்கள் வீடுசெல்ல அனுமதிக்கப்படுவதில்லை. இவ்வாறான ஒரு பின்னணியில், அங்கு தங்கியிருந்தவர்களது உணவுத் தேவைகளுக்காக, மேலதிகாரியிடம் உரையாடுவதற்கு ஆங்கிலம் தெரிந்தவர்களை இந்திய சிப்பாய் ஒருவன் அழைக்கிறான். முன்வந்தவர்கள்தான் சிங்கரும் கிருஷ்ணனும். கதை செல்லி கிருஷ்ணனே.

'சலோ' என்ற சிப்பாயின் குரலோடு சிங்கரும் கிருஷ்ணனும் நடக்கிறார்கள். அவர்கள் முன்னாலும் பின்னாலும் இரு இராணுவத்தினர். பி.கே.சிங் அவர்களை வழி நடத்திச்செல்கிறான். சிங்கர், கிருஷ்ணனை விட வயதானவர். அவர்கள் நடந்துசெல்லும் 'தெருவின் இருபுறத்து வேலிகளும் எரிந்து. கதிகால்கள் கருகி... மதில்கள் உடைந்து கிடக்கிறது... பொன்னையர் வீட்டுப் போட்டிக்கோ கூரையின் மேல் அவர் வளவின் முன்மதில் கல்லெல்லாம் ஏறி, அது ஒரு கொத்தளமாகி, ஓட்டையில் இருந்து ஒரு துவக்கு நீட்டிக்கொண்டிருந்தது.' 'துரைசிங்கம் வேலி வெட்டி அடி வளவு வரை தெரிகிறது. கார்க்கொட்டிலில் துரையரின் மொறிஸ் மைனர் எரிந்து கருகி வெறும்கோதாய்...' 'அந்தா குணம் வீட்டு மதிலின் பின், இரண்டு இடங்களில் ஒட்டைகளுக்கூடாக நீட்டிய துவக்குகள். குணம் வீட்டிற்கு அந்தப்பக்கமும் அதேபோல் இரண்டு. பாக்கியமக்கா வீடு, பரம்சோதியார் வீட்டுமதில்களின் கற்கள்! செல்வத்தின் சைக்கிள் கடையின் முன்னாலிருந்த பத்தியின் தகரங்களையும் காணவில்லை. அவைதான் போலும் மேலே! முழு இடமும் புயலடித்து ஓய்ந்த மாதிரி!' குறுணிக் கற்களில் அவர்கள் முரட்டுச் சப்பாத்துக்கள் நறுநறு என்கிற நடையொலியுடன் நடக்கிறார்கள். வேலிக்ரைகளோடு வரிசை வரிசையாய் குந்தியும் சப்பாணி கட்டியும் பீடிகளை உறுஞ்சியபடி சிப்பாய்கள். இவர்களின் வரிசை நடுவால் அவர்கள் நடந்து செல்கையில் 'இங்கொன்று அங்கொன்றாக, ஆங்கார உறுமல்கள் முணுமுணுப்புக்கள். இருந்தாற்போல் ஒரு சீழ்க்கை! எல்லா முகங்களும் ஒரேமாதிரி மரத்துக் கிடந்தன. பார்க்காமலே நடந்தார்கள். திடீரென ஒருவன் தலையை உயர்த்திக் கறுவினான். கத்திய சத்தம் திடுக்கிட வைத்தது. எல்.ரி.ரி.ஈ என்ற மாதிரிக் கேட்டது.

இப்போது அவர்கள் இராணுவ முகாமாக மாறியிருந்த பரமசிவம் வீட்டிற்குள் நேரே வந்துவிட்டார்கள். அது பரபரப்புடன் இயங்கிக்கொண்டிருந்தது. அவர்களை அழைத்து வந்தவன் ஒரு தென்னை அருகில் இவர்களை நிற்கச் சொல்லிவிட்டு முகாம் அதிகாரியிடம் ஏதோ சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான். சென்றவன் சென்றதுதான். இவர்களை யார் என ஒருவரும் கேட்கவில்லை. அகதியாகத் தங்கி இருப்பவர்களுக்கு சாப்பாட்டிற்கு ஒழுங்குசெய்ய வந்த கருணையாளர்கள் இப்போது குற்றவாளிகள் போல் நின்றார்கள். வெகு நேரத்தின் பின்னர், மேஜர் பதா என்பவன் காலுக்குமேல் கால் போட்டபடி கதிரையில் இருந்து விசாரணைக்காகக் கிருஷ்ணனைக் கூப்பிட்டான். அந்த விசாரணையின் முக்கியமானவைகள் இவ்வாறு வருகிறது.

'என்னுடைய கேள்விக்கு ஒழுங்காகப் பதில் சொல்லவேண்டும். பொய் சொல்லித்தப்ப நினைக்கக்கூடாது. ... ... நீ ஒரு எல்ரிரியா?

'இல்லை'

'பொய் சொல்லாதே சொன்னால்...' இந்த இரு கேள்விகளும் அதற்கு இல்லை தெரியாது என்ற பதில்களும் வேறுவேறு வகையாக தர்க்கங்களுடனும் பயமுறுத்தல்களுடனும் தொடர்ந்தது. கிருஷ்ணனின் 'நான் ஒரு ஆசிரியன். குடும்பகாரன். என்ற பதிலையெல்லாம் மேஜர் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. இறுதியில் மேஜர் பதா தனது அதிகாரத்தின் எல்லை என்ன என்பதை உணர்த்த முனைந்தான். 'இப்போ நான் உன்னை ஓடும்படி சொல்லமுடியும்... ஆனால் நீ எவ்வளது தூரம் ஓடிவிடுவாயென்று நான் பார்த்துவிடுவேன்.' ' அவன் சொன்னது விளங்கச் சிலவிநாடிகள் பிடித்தன! கிருஷ்ணனுக்கு வியர்த்தது. உன்னைச் சுடுவேன் என்பதை இதைவிட வேறெப்படி சொல்ல முடியும்' என்று கிருஷ்ணன் நினைத்தான்.

தொடர்தல் 88ம் பக்கம்

# அமைதியின்...

87ம் பக்கத் தொடர்ச்சி...

இப்போது சிங்கரின் முறை. வயதானவர். படித்தவர். பண்பாக எடுத்துச்சொல்லமுடி யும் என்று நினைத்திருக்கலாம். 'தோளில் கிடந்த சால்வையைச் சரியாக இழுத்து விட்டபடி நின்றார். உண்மையைச் சொல்ல வேண்டும் என்று பதா உறுமினான். அதற்கு அவர் 'நாங்கள் இந்தியாவை எங்கள் தாய்நாடாக மதிப்பவர்கள்' அவன் அவரை முடிக்கவிடவில்லை.

'உன்னுடைய புலுடாவை நிறுத்து! கத்தி னான். இந்தியாவுக்கு எதிரானவர்கள் இந்தியாவுக்குள்ளே கூட இருக்கிறார்கள். ஸோ உனக்கு ஒருவரையும் தெரியாது.

'தெரியாது'

போய் நில்! பதா கத்தினான்.

'எக்ஸ்யூஸ் மி...' சிங்கர் நிதானமாகச் சொன்னார். நீங்கள் எங்களைத் தவறா கப் புரிந்துவிட்டீர்கள் என்றும் தாங்கள் எதற்காக வந்தோம் என்பதையும் எடுத்து ரைத்தார். அதைக் கேட்கக்கூடிய மனநி லையில் பதா இல்லை. முகம் சிவக்க 'ஷட் அப்! இரண்டுபேரும் அந்த மதிலோடு நில்' என்று தன் அதிகாரத்தை வெளிப்ப டுத்தினான்.

## விவேக்கின் 'சிறை மீட்பு':

கிளிநொச்சியைச் சேர்ந்த குமாரசாமியின் மகன் கொழும்பில் ஆசிரியராக வேலை செய்கிறான். புலிகள் - இந்திய இராணுவ மோதலினால், விடுமுறையின்போது கிளி-நொச்சிக்கு வரவேண்டாம் என்ற செய்தி தந்தையால் அனுப்பப்படுகிறது. இரண்டு விடுமுறைகளுக்கு வராமல் இருந்தவன் மூன்றாவது விடுமுறைக்கு தனது தாயைப் பார்ப்பதற்காக வரும்பொழுது, புளியங்கு ளம் முகாமில் பிடித்து வைக்கப்பட்டுள் ளான். மூன்று மாதங்களாகியும் விடுதலை செய்யப்படவில்லை. குமாரசாமியின் நண் பர்தான் கதைசொல்லி.

'குமாரசாமியின் வீடு மூன்று மாதங்களா கச் செத்த வீடு மாதிரி இருந்தது. அவனது மனைவி சரியாகச்சாப்பிடுவதுகூட இல்லை. இந்த மூன்று மாதத்தில் உடல் மெலிந்து வருத்தக்காரிபோல் ஆகிவிட்டாள். ஒவ் வொரு நாளும் அழுகைதான். இரண்டு நாட்களுக்கொருமுறை என குமாரசாமி புளியங்குளம் இராணுவ முகாமுக்கு போய் வருவது ஒரு தொழிலாகிவிட்டது. ஆனால், எந்தப் பலனும் இல்லை.' யாரையாவது பிடித்துக் கதைத்துப் பார்க்கலாமென குமாரசாமியும் கதைசொல்லியும் புளியங் குளம் செல்கிறார்கள். அங்குள்ள கடை யில் தேனீர் குடித்தபின் முகாமின் நடை முறைகளை அறியும் பொருட்டு, கடைக் காரனிடமும் விடயத்தைக் கூறுகிறான். கடைக்காரனும் பீடீ வாங்கவந்த இந்தி யச் சிப்பாயிடம் விடயத்தைத் தெரிவிக் கிறான். அந்தச் சிப்பாய் தமிழன் அவன் இவர்களைப் பரிதாபமாகப் பார்த்து கூறு கிறான்

'நாங்க என்னய்யா செய்யிறது. தமிழர் ரெண்டு மூணு பேர்தான் இங்கே இருக் கோம் எல்லோரும் இந்திக்காரனும், சீக் கியனும்தான். நீங்க பேசுறது அவனுக்குப் புரியாது. அவன் பேசுறது உங்களுக் குப்புரியாது. என்ன பண்ணப்போறீங்க...?

'ஐயா நாங்களும் தமிழர் நீங்களும் தமி ழன். மகனை ஒருக்கா பாக்கிறதுக்கு எண் டாலும் உதவி செய்யுங்கோ குமாரசாமி அழும் குரலில் வேண்டினான்.

'நான் ஒண்ணும் செய்ய முடியாதுங்க. எல்லாம் உங்க ஆளுக செய்யிற வேல ஆ... அங்க பாருங்க . முன்னாடி ஒரு 'சென்றி' தெரியுதே. அங்க உங்க ஆளு ஒருத்தன்தான் முகமூடி போட்டுக்கிட்டு. பஸ்சில் வாறவங்க போறவங்க எல்லோ ரையும் காட்டிக்குடுக்கிறான். தா... ளி'

ஆனாலும் அந்தச் சிப்பாய் பரிதாபப்பட்டு பெயர் விலாசத்தை தரும்படியும் ஆளைப் பார்த்துவிட்டு என்ன நிலையில் இருக்கி றான் என்பதையாவது கூறுவதாகச் சொல் கிறான். அதன்படி எழுதிக்கொடுத்து விட்டு திரும்பவும் மறுநாள் வருகிறார்கள். இப் போது குமாரசாமியின் மனைவியும் கூட வருகிறாள்.அதே தேனீக் கடையில் வந்த சிப்பாய் 'ஏன்யா, பையன் ஸ்கூல்மாஸ ரர்னு சொன்னீங்க. அவன் எல்.ரீ.ரீ.ஈ. என்று வாக்குமூலம் கொடுத்திருக்கிறான்.' அந்த ஏழைகளால் என்ன செய்ய முடி



யும். என்ன நடந்திருக்கும் என்பதை அவர்களால் ஊகிக்க முடியும். இராணுவ அடக்குமுறையின் நீண்ட அனுபவத்துள் இதைத் தெரியாமலா அவர்கள் இருக்கி-றார்கள்? கிளிநொச்சி குளத்தடி முகாமில் தமிழன் ஒருவன் பெரியவனாக இருப்ப தறிந்து அவனூடாக முயற்சிக்கலாம் என்று, கிளிநொச்சி 'சிட்டிசன் கொமிட்டி' ஆள் மூலம் அந்த பெரியவன் பெயர் மேஜர் நடராசா என அறிந்து, சிட்டிசன் கொமி டிக்காரரின் உதவியுடன் அவரைச் சந் திக்கச் சென்றனர். ஒரு மணித்தியாலக் காத்திருப்பின் பின் சந்திக்க முடிந்தது. 'புளியங்குளத்தில் சந்தித்த சிப்பாயின் முகத்தில் தெரிந்த இளகிய தன்மை மேஜர் நடராசாவின் முகத்தில் தெரியவில்லை. சற்று இறுக்கமான முகமாகவே தோன்றி யது.

கதைசொல்லி, தாங்கள் வந்த நோக்கம் பற்றியும் புளியங்குளத்தில் போய்க்கதைத்த விபரங்களைக் கூறிக்கொண்டிருக்கும் போது மேஜர் இடையில் குறுக்கிட்டான். 'ஆமா நீங்க யாரு?

'நான் இவரோட சினேகிதன்'

'ஏன் இவங்களுக்குப் பேசவராதோ'

'இல்லை...'

'நீரு இடையில என்ன...புறோக்கர் வேலையா பார்க்கிறீரு?'

'இல்ல... வந்து'

'யோவ் நீ போசாம இரு. அவங்க சொல் லட்டும்.'

இப்போது குமாரசாமியும் அவரது மனை வியும் நடந்த விடயங்களைச் சொன்னா கள். எல்லாவற்றையும் கேட்ட மேஜர் ஒரு விசமப் புன்னகை செய்தான். தொண்டை யைச் செருமிக்கொண்டு பின் பேசத் தொடங்கினான். 'நீங்க எல்லோரும்தான் எல்.ரீ.ரீ.ஈயை சாப்பாடு போட்டு வளக்கி றீங்க. எல்லேரையும்தான் தண்டிக்கணும். ஒவ்வொருத்தனும் பல பேர்ல உலாவு-றான். வீட்டில ஒரு பேரு. றோட்டில ஒரு பேரு. காட்டில ஒரு பேரு. ஒவ்வொருத்த னுக்கும் ஒம்பது பேர் இருக்கு. முழிச்சிக் கிட்டு இருக்கப்போவே கண்ணுல மண் ணத்தூவுறான். திடீரனு வந்து சுட்டுட்டு ஓடுறான். முந்தா நாள் 'திரீஸ்டார்' காரங்க நாலு பேரை உள்ள புகுந்து சுட்டாங்க. இவங்களை எல்லாம் சும்மா விடமுடியாது. அம்பது பேரை புடிச்சா அதுல அஞ்சு பேராவது எல்.ரீ.ரீ.ஈ. இருப்பாங்க. அதைத் தான் நாங்க செய்யப்போறோம். இப்ப புளியங்குளத்தில அதைத்தான் ஆரம்பிச் சிருக்கோம்.' அவன் கதைக்கும்போது அவன் முகம் சிவந்து ஆவேசம் கூடிக் கொண்டு போனது. அவன் தொடர்ந்தான்

'ஸ்கூல் மாஸ்டர்ன்னா எல்.ரி.ரி.ஈ. இல் லைன்னு எங்கள நம்பச் சொல்றியா. எங்களுக்கு எல்லாம் தெரியும். விக்கியைத் தெரியுமா விக்கி.'

'சொல்லுங்கய்யா விக்கியைத் தெரியாதா யோவ் நீ சொல்லய்யா உனக்குத் தெரி யாதா'

அவர்களுக்கு ஏன் வந்தோம் என்று ஆகி விட்டது. ஊரில் சின்னக் குழந்தைக்கும் விக்கியின் பெயர் தெரியும். நகரில் அடிக் கடி ஊடுருவித் தாக்குதல் செய்துவிட்டு மறைவது விக்கியின் குரூப். சிலவேளை தனியாக வந்தும் தாக்கிச் செல்வான். அப்பகுதி இந்திய படையினருக்கு விக் கியின் பெயர் சிம்ம சொர்ப்பனமாக இருந்ததை நினைவுகூருகிறான். மேஜர் நடராசா ஆவேசத்துடன் 'தொடர்ந்து துப் பாக்கி மாதிரி வார்த்தைகளைப் பொழிந் தான்'

'எல்.ரி.ரி.ஈ.க்கு யாரு சாப்பாடு குடுக்கி றது, வீட்டில தங்க வைக்கிறது, தகவல் சொல்லுறது, எல்லாம் எங்களுக்குத்தெரி யும். ஸ்கந்தபுரத்தில் தபாலாபீசுலே வேலை செய்யிற நாராயணனைத் தெரியுமாய்யா உனக்கு? அவன் வீட்டிலதான் இந்த விக் கிபய தங்கிறது,. சாப்பிடுறது எல்லாம். முதலில அவனைப் புடிக்கனும். புடிச்சி நாயைச் சுடுறமாதிரி சுட்டுத் தள்ளணும். அப்பதான் நீ எல்லாம் திருந்துவ. பாரு பாத்துக்கிட்டே இரு. இன்னும் ஒரு வாரத் தில் அந்த விக்கியை நாங்க புடிப்போம். புடிச்சு நாய் மாதிரி தெருத் தெருவாக இழுப்போம். அவனை மட்டுமில்லை சாப் பாடு போடுற அத்தனை பேரையும் புடிச்சு சுட்டுத் தள்ளுவோம்.'

அவன் பேசிக்கொண்டிருக்க சிப்பாய்கள் பலர் வரிசையில் எங்களைக் கடந்து வரி சையாக ஓடினார்கள். முன்னால் நின்ற 'ரக்'குகளில் பாய்ந்து ஏறினார்கள். 'பாரு, இவங்க எல்லாம் விக்கியைப் பிடிக்கத்தான் போறாங்க, எப்படியும் புடிச்சுடுவாங்க. போங்கையா ஓடுங்க ஒருத்தனும் இந்தப் பக்கம் வரப்படாது. ஸ்கூல் மாஸ்டர் மட் டுமில்லை எவனையும் நாங்கள் நம்பமாட் டோம். எல்லோரும் ஒண்ணுதான். போங் கய்யா போங்க' அவன் எங்களை விரட் டுவதுபோல் இருந்தது. பயத்துடன் அசடு வழிய முகாமை விட்டு திரும்பினோம். சிறைச்சாலையிலிருந்த விடுபட்டதைப் போன்ற உணர்வு.

அவர்கள் திரும்பி வரும் வழியில் கனக புரம் வீதியில் அதே விக்கி. உடம்பில் சட்டையில்லாமல் தலையில் தலைப்பா கையுடன் சைக்கிளில் வாழைக்குலை கட்டிக்கொண்டு முன்னால் ஒரு பசளை 'பாக்'கில் ஏதோ சுற்றிக் கட்டிக்கொண்டு ஒருவன் இவர்களைக் கடந்துசென்றான். கதை சொல்லிக்கு அது விக்கியின் முகம் போல் இருந்தது. 'இவ்வாறான வேடத் தில் தான் விக்கி நகருக்குள் புகுந்து தாக்குதல் நடத்துவதாக ஊரில் பலர் பேசிக்கொள்கிறார்கள்... ... ... காதுகளைக் சுர்மையாக்கிக்கொண்டு நடந்தேன். சில சமயம் வெடிச்சத்தங்கள் கேட்கலாம்'.

## ஓநாய்களின் மகிழ்ச்சிக்காக:

('அம்மாளைக் கும்பிடுகிறானுகள்', உண் மைக் கதைகள் -தொகுதி 1 என்ற குறிப் புடன் வெளிவந்த தொகுப்பில் உள்ளது இச் சிறுகதை. எழுதியவர்களின் பெயர் கள் எவையும் குறிப்பிடப்படவில்லை.)

20-04-1989ல் வெளியான 'உதயன்' நாளேட் டின் பக்கங்களைப் புரட்டுகிறார் கதை சொல்லி. கொடுமை நடந்த செய்தி பிர சுரிக்கப்பட்டுள்ளது. நிகழ்வு நடந்த நாள் மட்டும் செய்தியில் இல்லை. கதை சொல்லி அது 1989 பங்குனியில் நிகழ்திருக்கவேண் டும் என்று நினைக்கிறார். செய்தியை வாசித்த அவர் கண்களில் கண்ணீர். அவ ரது மகள் 'ஏனப்பா அழுறீங்க' எனக் கேட்க, மகளுக்கு கதையைக் கூறுகிறார்.

தமிழீழத்தின் எல்லையில் 'கட்டுமுறிவு' அழகான சிற்றூர். ஒரு காலத்தில் இரண்டு மூன்று குடிசைகளோடு மட்டக்களப்புப் பெருநிலத்தின் ஒரு மூலையில் இந்தப் பழைய காட்டுக் கிராமம் கிடந்தது. தேக்கு, கருங்காலி, முதிரை என்று ஓங்கி வளர்ந்த மரங்களின் நிழலில் இந்தப் பச்சைக்காட் டில் வேட்டையாடுகிறவர்கள் தங்கிச்செல்

தொடர்தல் 88ம் பக்கம்


# அமைதியின்...

87ம் பக்கத் தொடர்ச்சி...

வார்கள். செழிப்பான மண். காலை விடியலில் பறவைகளின் கீச்சொலி கிளம்பும் நெடிய மரங்களில் குரங்குகளின் தாவல். சோளக் கொல்லையில் விழும் கிளிகளை விரட்டும் சிறுவர்களின் அட்டகாசம். ஓரிரு கட்டை மாட்டுவண்டிகள் 'கடமுட' என்று கோடு கிழித்து நடக்கும்' கிராமம். சிங்களக் குடியேற்றங்களை அந்த மக்கள் இணைந்து முறியடித்திருக்கிறார்கள். இந்த மக்களில் ஒருவர்தான் பந்தக்குட்டி மரகதம். நாற்பது வயதான இவர் மண்ணின் மீது ஈர்ப்போடு வாழ்ந்தவர். இயற்கையை நேசிப்பவர். அவர் அந்த மக்களைப் பார்த்துப் பல தடவை இவ்வாறு கூறியுள்ளார். 'கட்டுமுறிவில் இருக்கிற மனுசனுகள் மட்டும் தான் தமிழர்களா? இல்லடா... இந்த மரங்கள் கூடத் தமிழ் மரங்கள் தான். இது தமிழ் மண்'. இந்தியப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் யுத்தம் ஆரம்பமாகியபோது 'புலிகளின் போராட்டம் நியாயமானது எனக் கருதும் பல லட்சம் தமிழ் மக்களில் அவர் ஒருவர்'. யுத்தம் ஆரம்பமானது தொடர்பாக அவர் ஊரில் யாரைப் பார்த்தாலும் இவ்வாறுதான் கூறுவார் 'இது பஞ்சமா பாதகம் இல்லையாட தம்பி'

ஒரு நாள் இரவு இந்தியப் படைகள் 'நீதானே மரகதம்' எனக் கேட்டு அழைத்துச் செல்கிறார்கள். கலங்கிய மனைவி 'என்னத்துக்கு இவரைக் கொண்டுபோறீங்க எண்டு சொல்லுங்க ஐயா .. பயமா இருக்கு' என கேட்டபோது வந்தவர்களுள் பெரியவன்போல் இருந்தவர் 'ஒண்டுமில்லை. சும்மாதான்' எனக் கூறுகிறான். மறுநாள் மரகத்தின் மனைவி இந்தியப்படை முகாமிற்கு சென்று விசாரித்தபோது 'அவரை விடுதலை செய்துவிட்டோம் எனக் கூறுகிறார்கள். ஒரு படை வீரன் முரட்டுத்தனமாக அவளைப் பார்த்துச்சிரித்தான். இன்னொருவன் 'ஒரு விதமாகத் துப்பினான்'. 'நரிகளிடமிருந்து எப்படியோ தப்பி புதரை நோக்கித்தாவும் முயலைப் போல் முகாமை விட்டு வெளியேறினார்கள். ஆனால், மரகதம் வீட்டிற்கு வரவில்லை. பிள்ளைகள் தாயிடம் அப்பாவை விசாரிக்கின்றார்கள். ஐந்தாம் நாள் இந்தியப் படையினர் மீண்டும் அங்கு வந்து 'பெரிய ஐயா உன்னையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வரட்டாம் என்கிறார்கள்'. எதற்கு என்ற கேள்விக்கு உன் புருசனைப் பார்க்கத் தான் என்றவுடன், பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு முகாமை நோக்கிச் சென்றாள். அவள் மனதில் அமைதியில்லை. 'வீட்டு முற்றத்தில் சிரித்தார்களே... ஏன்?. அவர் உயிரோடு இருக்காரா? இல்லையா? திரும்பவும் நம்பிக்கை உடைந்து பொல பொல என்று துண்டுகளாய் சிதறி விழ ஒடுங்கி நடந்தாள் மரகதத்தின் மனைவி'

முகாமினுள் அடி உதையினால் சுருண்டு கிடந்தார் மரகதம். தலையை நிமிர்த்தி மனைவி பிள்ளைகளைப் பார்த்தார். அவர் கண்களில் நீர் காட்டாறாய் பொங்கிற்று. 'உன் புருசன் கடைசியாக உன்னைப் பார்க்க ஆசைப்படுகிறான் அதுதான் உன்னை வரச் சொன்னது' தமிழ் தெரிந்த இந்தியப் படை வீரன் சொல்கிறான். அவள் அவரை விட்டுவிடச் சொல்லிக் கெஞ்சுகிறாள். அப்போது பெரிய ஐயா சிரித்துக் கொண்டு கையில் இருந்த இயந்திரத் துப்பாக்கியைத் தன் தொடையில் அடித்துக்கொண்டு கூறுகிறார் 'எங்கள் படை ஆட்களை விடுதலைப் புலிகள் கொல்லும் போது நாங்களும் யாரையாவது கொன்றால்தான் எங்களுக்குச் சந்தோசம்' திரும்பவும் அதே அட்டகாசத்துடன் சிரிப்பு படை வீரர்களிடம். எதையோ குசுகுசு என்று கூறிவிட்டு பெரிய ஐயா சென்றுவிடுகிறார். மரகத்தை இந்தியப் படையினர் அருகில் இருந்த கடையை நோக்கி கழுத்தைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு போனார்கள். 'சுவரில் சாய்ந்து நில் என்று ஒரு வெறியன் கத்துவது கேட்டது. மரகதத்தின் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் ஒன்றும் புரியவில்லை. ஒரே ஒரு மணித்துளிதான்... வெடிகுண்டு ஒன்றின் பேரோசையோடு கடைச்சுவர் உடைந்து உடல் மேல் விழ பிணமாய்ச் சாய்ந்தார் மரகதம். மனைவியும் பிள்ளைகளும் தூரத்தில் நின்றபடியே வெறி பிடித்துக் கத்தினார்கள். ஜீப் வண்டி ஒன்றும் 'ட்றக்'குகளும் வரிசையாக முகாமைவிட்டு புறப்பட்டு போயின. அடுத்த 'சந்தோசத்திற்காக' அவர்கள் எங்கே போகிறார்களோ...'



"எங்கள் படை ஆட்களை விடுதலைப் புலிகள் கொல்லும் போது நாங்களும் யாரையாவது கொன்றால்தான் எங்களுக்குச் சந்தோசம்."

## சண்முகம் சிவலிங்கத்தின் 'உன்னை வாழ்த்திப்பாடுகிறேன்':

கல்முனைப் பிள்ளையார் கோவிலடியில் இந்திய இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் பின்னர் ஐந்து ஊர்களைச் சேர்ந்த பிரமுகர்கள் இந்திய இராணுவ மேஜர் நேத்தாவின் கட்டளைக்கு அமைய முகாமருகே கூட்டி வரப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் சசியும் ஒருவர். இந்தத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட விடுதலைப் புலிகளின் போராளிகளில் ஒருவரின் தந்தையாகவே சசி குறிப்பிடப்படுகிறார். மத்தியானம் சாப்பிட்ட கையோடு வேகாத வெய்யிலில் வந்தவர்கள் மூன்று மணியாகியும் நேத்தா வெளிவரவில்லை. வந்திருப்பவர்கள் 'அரச மரத்தடி நிழலை அண்டியும் குந்தியும் குமைவதுமாக' அலுத்துக்கொண்டிருக்கிறார்கள். கதை இவ்வாறு ஆரம்பமாகிறது.

'எனக்கு மனம் தொதித்தது. நாங்கள் பியர் குடித்து மகிழ்ந்த வாடி வீடு இப்போது இந்தியன் வசம் ஆகிவிட்டதே என்று',

சசியின் நண்பன் முருகவேள். இவர்கள் நண்பர்களாக இருந்தாலும் அரசியல் போக்குகள் இருவருக்கும் வேறுவேறானவை. முருகவேள், 'தமிழுக்கு உரிமை கிடைக்கும்வரை சவரம் செய்யமாட்டேன் என் தாடியை என்று சபதமெடுத்த சாவகச்சேரி நவரத்தினத்தின் வாரிசு. எவ்வளவு வைராக்கியம். தமிழுக்கு உரிமை கிடைக்குமென்று எவ்வளவு நம்பிக்கை. அன்றிலிருந்து இன்னுவரை இளமையில் பூண்ட தேசிய உடையை பல்கலைக்கழகத்திற்குப் போயும்' அவன் மாற்றிக்கொண்டவனல்ல. ஆனால் சசி? இதை அவரே கூறுகிறார்

*'சமஷ்டி என்ற தீர்வைச் செமித்துக்கொண்டு அதனை முன்னெடுக்கின்ற சக்திகளை ஆதரிப்பதோடுதான் என் அரசியல் தொடங்கியது... ... ... சமஷ்டிக்கு எதிரான சக்திகளை முறியடிக்க நான் பாடுபட்டேனே தவிர சமஷ்டித் தலைவர்களுக்கு மாலை போடவும் இல்லை, கட்சித் தொண்டனாக மாறவும் இல்லை. தலைவர்களை ஆராதிக்க என்னால் முடியவில்லை. அவர்களை நெருங்கிப் போக நான் நினைக்கவில்லை'*

முருகவேள் அரசியல் போக்கு விலகியிருந்தாலும் சசியிடமிருந்துதான் அவன் ஆதர்சம் பெற்றவன். சசியின் நினைவின் தொடர்ச்சியாக

*'வரலாற்று நதி ஒருகால கட்டம் அளவு முருகவேளின் காலைத்தொட்டுக்கொண்டு சென்றது உண்மைதான். 'கொண்டுவந்தது பனிக்கட்டி, கரைந்து விரல் இடுக்கில் ஓடிற்று' என்று நான் எழுதியதும் உண்மைதான். எனினும் துப்பாக்கிகள் ஒலிக்கத் தொடங்கின. இது எந்தச் சகாப்தம் என்ற கேள்வி எழுந்தது. ஊதாக் கனவுகள் சகாப்தங்களில் வழுவிற்றோ என்ற சந்தேகம். சகாப்தங்களை இணைத்த மாஓவைப் போல் மாவோக்கள் சாடை-காட்டினர். என்ன இருந்தாலும் ஒரு சமூகத் தகர்வு வீறுகொள்ளச் செய்தது. சரியான திசையில் துப்பாக்கி ஒலித்தால் சமூக மாற்றமும் ஏற்படலாம் என்ற நம்பிக்கை துளிர்த்தது.'*

இவ்வாறான நினைவுகளிடையில் மேஜர் நேத்தா அவர்கள் முன் வந்தார். 'கையில் ஒரு மஞ்சள் நிறப் புத்தகம். பேப்பர் பைன்ட். மலிவான ஒரு நாவல்போல. நாவலின் பெயரைப் பார்த்துவிட என் காக்காய் கெழிவுகள். பரவாய் இல்லை - The space odyssey by arthur C. Clerk 'த இன்ரலெஷுவல் ஜெனரல்' என்று எங்கோ படித்த நினைவு. தளபதி எவ்வழி மேஜர் அவ்வழி 'இவ்வகை சசியின் நினைவுகளுக்கிடையில் மேஜர் நேத்தா பேசினார்...

*'...நான் எனது பையன்களை அடிப்பேன், புடைப்பேன், உதைப்பேன், எதுவும் செய்வேன். ஆனால் என்னுடைய பையன்களுக்கு வேறு எவராலும் ஒரு சிராய்ப்புக் கூட ஏற்பட நான் அனுமதிக்கமாட்டேன். சொல்லப்பட்டிருக்கிறது பெரிய நீதிவான்கள் எழுதிய தீர்ப்புகளிலும் நூல்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது, ஒரு அப்பாவி பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அவசியமானால் ஆயிரம் ஆயிரம் குற்றவாளி-களைத் தப்பிக்கச் செல்லவிடலாம் என்று. ஆனால், நான் உங்களுக்குச் சொல்கிறேன், ஒரு குற்றவாளியைத் தண்டிப்பதற்காக நான் ஆயிரம் அப்பாவிகளை ஆயிரம் அல்ல, லச்சக்கணக்கான அப்பாவி-களைக் கொன்றொழிப்பேன். ஆம் மீண்டும் சொல்கிறேன், ஒரு குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்காக நான் ஆயிரம் அப்பாவிகளையும் பலியிடத் தயங்கமாட்டேன்... உங்களுக்குத் தெரியும் அந்த பிள்ளையார் கோயில் தாக்குதல் பற்றி. இந்தப் பகுதியில் முதன்முதலாக எங்களுக்கு எதிராக நடந்த தாக்குதல்... ... ... சம்பந்தப்பட்டவர்களின் தகவல் எனக்கு வேண்டும். இல்லாதபட்சத்தில் இங்குள்ள எந்த அப்பாவியும் குற்றவாளிதான். என் பையன்களுக்கு இனியும் ஏதாவது நடந்தால், உங்கள் ஒவ்வொரு ஊரையும் எரிப்பேன். எல்லா ஊரையும் ஒரு இரவுக்குள் எரித்து முடிக்க எனக்கு ஏலும். இதை மனதில் வைத்துக்கொண்டு நீங்கள் போகலாம்...'*

மேஜர் நேத்தாவின் இந்த உரையைப் பற்றி சசி இவ்வாறு கூறுகிறார் 'இடி முழக்கங்களுடன் ஷெல் அடிகளும் கேட்டன. பீரங்கிகளும் முழங்கின. மின்னல்கொடி இப்பிடித்தான் பேசியிருப்பானோ? கடல் காற்று அவனடைய பேச்சை எங்கெல்லாமோ கொண்டுசென்றது. ... ... கிறிஸ்துவின் மலைப் பிரசங்கமும் இப்படித்தான் நிகழ்ந்திருக்குமோ'? வந்திருந்த பிரமுகர்களுக்கும் மேஜரிடம் கூற சில கோரிக்கைகள் இருந்தன.

*'உங்களுடைய சிப்பாய்களின் ரோந்தை நீங்கள் குறைக்கவேண்டும். பிளீஸ்.. பிளீஸ்...பிளீஸ் பகலில்தான் எப்படியென்றாலும் இரவில் அதை அறவே நிற்பாட்ட வேணும்'.*

*'ஏன் உங்கள் தம்பிகளின் வசதிக்காகவா? இன்னுமொரு பிள்ளையார் கோயில் தாக்குதலுக்கு இடம்கொடுக்கவா'?*

*'எங்களுக்குத் தேவை மக்களின் பாதுகாப்பு. நீங்கள் ரோந்து போகும்போது மோதல் நடக்கலாம் என்று மக்கள் பயப்படுகிறார்கள். மோதல் நடந்தால் உங்கள் துப்பாக்கிக் குண்டுகள் பாயப்போவது எங்கள் அப்பாவி மக்கள்மீதுதான்'*

*'அதைப் பற்றித்தான் நான் சொன்னேன். இது ஒரு கெரிலாச்சண்டை. மறைந்திருக்கிற கெரிலாவை வெளியே இழுப்பதுதான் எங்கள் றோந்துகளின் நோக்கம். நான் ஒரு தூண்டில்காரன். எனது வீரர்கள் இரை போல் பாசாங்கு செய்வதுதான் ரோந்து. எதிரி இந்த இரையைக் கவ்வ முயற்சி செய்வான். அது அவனுக்குத் தவிர்க்க முடியாதது. அப்போது தூண்டிலில் படுமே மீன் அதுதான் அவன் நிலை...'*

மக்களை இரையாக்காதே என்றுதான் அவர்களால் சொல்ல முடிந்தது. 'கூட்டம் கூடி கலகம் செய்தால் சுட்டுவிடுவேன்' என்றார் மேஜர்', முதலில் என்னைச் சுடுங்கள் என்று முருகவேள் சேட்டைத் திறந்து நெஞ்சை நிமிர்த்தி நின்றான். மேஜர் சிரித்துக்கொண்டு மற்றவர்களைப் பார்த்தான். கூட்டம் மெல்ல விலகி நடக்கத் தொடங்கியது.

குறியீட்டு விபரிப்புக்களுடன் கூடியது இக் கதை. 'ஊர் முழுவதும் என் கண்ணுள் வந்தது. ஊர் முழுவதும் கடலாக நிறைந்தது. கடல் மாறிமாறி கரையில் மோதுகின்றது. கடல் அலைகள் ஓய்கின்றன. கடல் முழுவதும் பென்குயின் பறவைகள். துருவப் பிரதேசத்திலிருந்து கடலூடாகவே நடந்து வருகின்றன. மீண்டும் கடலலைகள் கரை முழுவதும் 'கடல் அலைகள் மடி-நோக்கி கரையிலிருந்து மீள்வனவே' கடலின் மடியிலிருந்து ஆயிரமாயிரம் பென்குயின் பறவைகள். அவை கரை நோக்கி ஓடி வருகின்றன. கடல் முழுவதும் பெரிய படைபோல ஒடி கடலோர வீதியில் தாவுகின்றன. வீதியில் பென்குயின்கள். பென்குயின்கள் அளவேயான அனுமார்கள் ஆகிவிடுகின்றன. பென்குயின் அனுமார்கள் பின்னர் ஆள் உயர அனுமார் ஆகின்றன. இப்போது ஆஸ்பத்திரி வீதியில் அனுமார்கள் செல்கின்றனர்' இவை போன்றவைகள் வெறும் கடலலையும் பென்குயின்கள் பற்றியவை அல்ல என்பதை தேர்ந்த வாசகர்கள் அறிவார்கள்.



pushparajan.m@thaiveedu.com

# அந்நியர் இட்ட தீ

- ஞானதாஸ் காசிநாதர் -

“நான் வழக்கம் போல பருத்தித்துறைக்கு வேலைக்குப் போயிட்டன்... என்டை மனைவியின்டை பெரியப்பா, அவர் ஒரு றிட்டையார்ட் போஸ்ட்மாஸ்டர். அவர் இருக்கிறது பருத்தித்துறையிலை. அங்கை பிரச்சினை எண்டு குடும்பத்தோடை இங்கை எங்களோடை வந்திருந்தவர். அந்த பீரியட்டிலை எலக்ட்ரிசிட்டி இல்லை. பாங்கிலை பவர் இல்லாமால் வேலை செய்யேலாது எண்டபடியால் நான் பாங்குக்கு போகேக்கை ஒரு போர்ட்டபிள் ஜெனரேட்டர் கொண்டு போறனான். அண்டைக்கு பெரியப்பாதான், அதாவது நடராஜா போஸ்ட்மாஸ்டர், அவர்தான் அதை எனக்கு சைக்கிள் கரியரிலை வைச்சு வடிவாக் கட்டி, கவனமாப் போட்டு வாங்கோ எண்டு அனுப்பிவிட்டவர்.

மத்தியானம் போலை அறிஞ்சன், வல்வெட்டித்துறையில் ஏதோ பிரச்சினை எண்டு. நான் வெளிக்கிட்டு வந்தால், இங்கை உள்ளை ஒரிடத்தாலேயும் என்டர் பண்ணேலாது. அப்பிடியே எல்லாப் பக்கத்தாலையும் ரவுண்டப் பண்ணி நிக்கிறாங்கள். என்டை அண்ணான்டை ஊர், பக்கத்திலை கம்பர் மலை. அங்கை வந்து நிண்டிட்டு அடுத்தநாள் போனன். என்டர் பண்ண முடியேல்லை, அதுக்கடுத்தநாள்... ஊஹூம்.

நாலாம் நாள், ஓகஸ்ட் 5, நான் பின்னாலை வந்து சுவராலை ஏறிவிழுந்து வந்து பாத்தா எங்கடை வீட்டுக்குள்ளை ரண்டு பொடி கிடக்கு. ஒண்டு என்டை பெரியப்பான்டை, காலமை என்னை வழியனுப்பி வைச்ச போஸ்ட்மாஸ்டர் நடராஜான்டை. மற்றது அவரின்டை அக்காடை மகன். அதாவது என்டை மனைவியின்டை மச்சான். சீமெண்ட் பஃக்ட்றியிலை வேலை செய்யிறவர். எல்லா இடமும் இரத்தக்கறை. என்டை மனைவி எங்கடை இரண்டாவது மகளை, அவள் அப்ப கைக்குழந்தை தூக்கி வைச்சிருந்தபடி உறைஞ்சுபோய் நிக்கிறா.”

என்று உணர்ச்சி பொங்கச் சொல்கிறார் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற வங்கி உதவிப் பொது முகாமையாளர் என். சிவரத்தினம் அவர்கள்.

1989 ஓகஸ்ட் 2ம் திகதி முதல் 5ம் திகதி வரை இந்திய அமைதிப்படை வல்வெட்டித்துறையில் நடத்திய ‘வெறியாட்டம்’, இலங்கைப் படையினர் கூட செய்யத் துணியாத ஒன்று. ஆம் அப்படித்தான் அந்த மக்கள் அந்தப் படுகொலையை வர்ணிக்கிறார்கள். ஆனால் அது பற்றி மக்கள் யாரும் விரிவாகப் பேசவும் தயாரில்லை. அந்த வெறியாட்டத்தில் மிஞ்சியவர்கள் பெரும்பாலும் பெண்களும் கைக் குழந்தைகளும் மட்டுமே. தம் கண்ணில் அம்பிட்ட ஆண்கள் எவரையும் இந்திய இராணுவத்தினர் உயிருடன் விடவில்லை, அதிஸ்டவசமாகத் தப்பியவர்களைத் தவிர. அப்படித் தப்பிய பெண்களும் சரி ஆண்களும் சரி தம் கண் முன்னால் தம் தந்தைமார், கணவன்மார், சகோதரர்கள், உறவுனர், கொல்லப்பட்ட கொடூரத்தை மீள நினைவுபடுத்திப் பார்க்கவும் அதை மற்றவருடன் பகிரவும் விரும்பவில்லை. பொதுப்படையாக ஓரிரு விடயங்களைச் சொல்லிவிட்டு விலகிக்கொள்ளவும், அவரைக் கேளுங்கள் இவரைக் கேளுங்கள் என தப்பித்து கொள்ளவுமே செய்கிறார்கள். அவர்கள் அரசபடைகளுக்கும், புலனாய்வுத் துறையினருக்கும் பயந்து அவ்வாறு நடந்து கொள்கிறார்கள் எனச்சொல்ல முடியவில்லை. ஆனால் அந்தச் சம்பவம் பற்றிய பேச்சு வந்தவுடன் ஒரு பெரும் கொடூரம் ஏற்படுத்திவிட்ட தாக்கத்தை அவர்களின் கண்களிலும் முகத்திலும் பார்க்க முடிகிறது. அவர்கள் இன்னமும் உறைந்து போய்த்தான் உள்ளார்கள். ஆனாலும் உறையாதவர்கள் போல் தம்மை தாம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு அன்றாட வாழ்வியல் இன்பங்கள், கொண்டாட்டங்களில் தம்மை இணைத்துக்கொள்கிறார்கள், தாம் துவண்டு விடுவதில்லை என்பது போல்.

சிவரத்தினம் சற்று வித்தியாசமானவர். 28 வருடங்களுக்கு முன்னர் நடந்த இந்த



உறவினர்களுடன் எரிக்கப்பட்ட தனது வீட்டில் சீவரத்தினம்



எரிக்கப்பட்ட தனது வீட்டில் சீவரத்தினம் தனது மனைவி பிள்ளைகளுடன்

கொடூரத்தின் பாதிப்பில் இருந்து தன்னை வேறுவிதமாக ஆற்றுப்படுத்தி வருபவர். தான் கண்ட கொடூரத்தின் விளைவுகளையும் தன் குடும்பம் கண்ட இழப்புகளையும் மற்றவர்களுடன் ஒன்றும் விடாமல் மனம் விட்டுப் பகிர்வதன் ஊடாக தன்னை ஆற்றுப்படுத்திக் கொண்டு ஓர்மத்துடன் வாழ்ந்து வருகிறார். நான்கு நாட்காளாக நடைபெற்ற வெறியாட்டத்தில் அவரவர் வீட்டில் வைத்தும், தெருவில், கடைகளில் வைத்தும் கொல்லப்பட்ட ஆண்கள் மற்றும் இந்தியப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு சித்திரவதைக்குள்ளாகி இறந்து போன ஆண்களும் போக வெளியிடத்துக்கு வேலைக்குப் போனவர்களும் மற்றும் தந்திரமாக ஓடித் தப்பிய ஆண்களும் மட்டுமே உயிர் தப்பியவர்கள் எனச் சொல்லலாம். அப்படித் உயிர்தப்பிய ஆண்கள் எவரும் இந்தியப்படையினரின் நான்கு நாள் வெறியாட்டத்தின் பின் வெளியேறிய பின்னரும் ஊர் திரும்பாத நிலையில், செத்த உடல்களுடன் வீடுகளுக்குள் அடைந்து இருந்த பெண்கள் எவரும் வெளியே வராத நிலையில் முதன் முதலாக பின்வழியாக மதில் ஏறிக் குதித்து வீடு திரும்பியிருந்தார் சிவரத்தினம். கொல்லப்பட்டு நாலு நாட்காளகி விட்ட வெற்றுடல்களுடன் வீட்டுக்குள் அடங்கியிருந்தனர் அவரது மனைவி, பிள்ளைகள், மாமியார், மற்றும் உறவினர். முதல் வேலையாக அந்த வெற்றுடல்களை அப்புறப்படுத்த வேண்டியிருந்தது. உடல்களைத் தூக்கிப் பார்த்தார். அவை அழுகிப் போய் சிதிலங்களாகக் கையோடு ஒட்டிக் கொண்டு வந்தன.

துணைக்கு யாரையாவது அழைத்து வரலாம் என தெருவுக்கு இறங்கினார். ஆள் அரவமே இல்லாத தெருவில் அவர் கண்களில் இருவர் பட்டனர். அவர்கள் திருடர்கள் என்பதை ஊகிக்க சிவரத்தினம் அவர்களுக்கு நேரம் எடுக்கவில்லை. இராணுவத்தினர் ஊரைவிட்டுச் சென்று மக்கள் திரும்ப ஊருக்குள் திரும்புவதற்கு முன்னர் உள்ள இடைப்பட்ட பொழுதில் திருடர்கள் ஊருக்குள் புகுந்து தம் தொழிலைப் பார்த்துக் கொண்டு திரும்புவது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பொதுவான வழமையாக இருந்த காலமது. ஆயினும் சிவரத்தினம் அது பற்றிக் காட்டிக் கொள்ளாமல் தன் பிரச்சினையை திருடர்களுக்குக் கூறி தனக்கு உதவும்படி கேட்டார். திருடர்களும் மறுக்காமல் வந்தார்கள். அவர்களின் உதவியோடு இரண்டு உடல்களையும் வீட்டில் இருந்து அகற்றி தெருவில் கொண்டு வந்து போட்டார்கள். திருடர்கள் அதுக்கு மேல் நிற்கத் தயாரில்லை. கழண்டு சென்று விட்டார்கள்.

“இப்ப எரிக்கிறது என்னத்திலை? அக்கம் பக்கம் ஏதாவது கிடைக்கும் எண்டு உலாவிக் கொண்டு போனால் அங்காலை பெரியகுளம், அதுக்கங்காலை இன்னொரு தெரிஞ்சவன், சொந்தக்காரன் எண்டு பொடி எல்லாம் காலுக்க கையுக்க எண்டு தெருத் தெருவாக் கிடக்கு. இப்ப என்டை வீட்டை மட்டும் க்ளீன் பண்ணினால் போதாதே. இது எண்டை ஊர்! ஊரையே க்ளீன் பண்ண வேணும்.

பக்கத்து ஊருக்குப் போய் கொஞ்சப் பேரைக் கூட்டிக்கொண்டு வந்து கண்ணிலை



சுட்டுக்கொல்லப்பட்டோரது உடலங்கள் கிடந்த இடம்

பட்ட பொடி எல்லாத்தையும் கொண்டு வந்து பெரியப்பா, மச்சான் ஆக்களின்டை

தொடர்தல் 91ம் பக்கம்

# அந்நியர் இட்ட தீ...

90ம் பக்கத் தொடர்ச்சி...

பொடியோடை போட்டன். போட்டு வீட்டிலை இருந்த மேசை, கதிரை, மெத்தை, பாய், தலைகணி, குஸன் எல்லாம் போட்டு எரிச்சன். அப்ப என்னட்டை ஒரு கேமராவும் இருந்திச்சு. எரிக்க முன்னம் எல்லாத்தையும் நானே படம் எடுத்தன். எரிச்சு முடிய சைக்கிள் எடுத்துக் கொண்டு எல்லா இடமும் போனன். றோட்டுக்கு றோட் பொடி. அழுகினது சிலது. அரை-குறையாக எரிஞ்சது சிலது. எரிஞ்சு கருகிப் போன சைக்கிளுகள், மோட்டச் சைக்கிளுகள், வீடுகள். சில வீடுகளுக்குள்ளே இருந்து பிணம் எரிகிற நாத்தம். கன சனம் வெளியாலை வரப் பயந்து தங்கடை தங்கடை சொந்தக்காரரை வீட்டுக் குள்ளே வைச்சே எரிச்சினம். எத்தினை நாளைக்கு பொடியை வீட்டுக்குள்ளை வைச்சிருக்கிறது?"

சிவரத்தினம் அவர்கள் கடந்த 28 வருடமாக இந்தச் சம்பத்தை ஒன்றும் விடாமல் மற்வர்களுக்குச் சொல்வது பற்றி அவர் மனைவி பிள்ளைகளுக்கு உடன்பாடு கிடையாது. அவர் அதைப் பற்றி யாருட

இருந்த வீட்டுக்குள்ளை கடகடவெண்டு நுழைஞ்சாங்கள். அவங்கடை கண்ணைப் பாத்த உடனேயே எனக்கு அஞ்சும் கெட்டும் அறிவும் கெட்டுப் போச்சு. சிவத்த கண். ஏதோ கொலை செய்யிறதுக்கெண்டே பழக்கப்பட்டவங்கள் மாதிரி. ஒண்டும் கேளாங்கள். நாங்கள் கதைக்கிறது ஒண்டும் அவங்களுக்கு விளங்காது. அவங்கடை பாசையும் வேறை. அவங்கள் உள்ளை நுழைய பெரியப்பா என்டை தங்கச்சிமார் இரண்டு பேரையும் தனக்குப் பின்னாலை கையாலை இப்பிடி மறைச்சுக் கொண்டு அவங்களோடை கதைக் கிறார், "நான் ஒரு ரிட்டடையார்ட் போஸ்ட் மாஸ்டர்..." அப்பிடியிப்பிடி எண்டு. அவன் ஒண்டையும் கேக்கேல்லை. சடசவெண்டு சுட்டான். பெரியப்பா அப்பிடியே விழுந் திட்டார். அவர் சரி.

நாங்களெல்லாம் விறைச்சுப் போய் அறையுக்குள்ளே அடைஞ்சு நிக்கிறம். நான் இவவை, (கடைசி மகள்) அப்ப கைக் குழந்தை. தூக்கி வைச்சிருக்கிறன். எல்லாரையும் வா வா எண்டு துவாக்கா-லேயே காட்டுறான். நாங்கள் பேசாமல் நிக்க கடகடவெண்டு சுட்டான் வெளியாலை.

> அந்தப் பெரியப்பாவையும் சுட்டிட்டாங்கள்.
> வீட்டைப் பத்த வைச்சாங்கள். போட்டாங்கள்.
> அதோடை இவவுக்கு (கடைசி மகள்) பால் இல்லை.
> எனக்கு பால் உறைஞ்சு போச்சு.

னாவது கதைக்கத் தொடங்கினால் அவர்கள் அந்த இடத்தை விட்டுச் சென்றுவிடுவார்கள். உண்மையில் இந்தச் சம்பவத்தால் அதிக அதிர்ச்சிக்குள்ளாகி பாதிக் கப்பட்டவர் அவருடைய மனைவி அருந் தவம்தான். அவர் அது பற்றி எங்களுடன் கதைக்கச் சம்மதித்தது அவருடைய கணவருக்கே ஆச்சரியம், அதோடை அது அவருக்கு ஒருவித ஆறுதலாகவும் இருந் தது.

"மத்தியானம் எல்லாரும் சாப்பிடுவமெண்டு இருக்க தூரத்திலே வெடிச்சத்தம் கேட்டுது. சமைச்ச சாப்பாட்டை அப்பிடியே மேசையிலை மூடி வைச்சிட்டு அங்காலை, அதுவும் எங்கடை வீடுதான் கொஞ்ச நேரம் நிண்டிட்டு வருவம் எண்டு எல்லாரும் அங்கை போனம். எங்கடை பாட்டி ஒராள் இருந்தவ. அவவுக்கு 89 வயது. அவ எழும்பி நடக்கக்கொள்ளமாட்டா. அவவை கட்டிலோடை வீட்டுக்குள்ளை விட்டிட்டுப் போனம்.

வந்தாங்கள் கடகடவெண்டு. நாங்கள் அங்கை நிண்டு பாக்கிறம். வீட்டுக்குள்ளை போனாங்கள். ரண்டு பேர் பாட்டியை தூக்கிக் கொண்டு வந்தாங்கள் வெளியாலை. இதிலை ஒரு வாங்கில் இருந்தது. வாங்கிலிலை அவவை வைச்சாங்கள். கடகடவெண்டு பொஸ்பரஸ் அடிச்சாங்கள் மேலை, வீட்டுக் கூரையிலை. வீடு பத்தி-யெரியுது. இங்கை விறாந்தையிலை ஒரு சாளியும் எட்டுச் சைக்கிளும் நிண்டது. பருத்தித்துறையிலை இருந்து வந்த சொந்தக் காரரின்டையும் எங்கடையும். எட்டுச் சக்கிள் கடகடவெண்டு ஒண்டுக்கு மேலை மாறி மாறி அடுக்கினாங்கள். சாளியைத் தூகி அதுக்கு மேலை வைச்சாங்கள். பெட்றோல் டாங்கைத் திறந்திட்டு நெருப்பு வைச்சாங்கள். எல்லாம் எரிஞ்சு போச்சு.

கொஞ்சப் பேர் அங்காலை நாங்கள் டீவியிலை சுடு, கதிரையிலை சூடு, சோகேசிலை சுடு, கீழே மேலையெல் லாம் சடசடவெண்டு சுட்டான். சூட்டுபட்ட கதிரை ஒண்டு இப்பவும் கிடக்கு, அப்பிடியே சூடுபட்ட அடையாளத்தோடை. (கதிரையக் காட்டுகிறா) இதுக்கு மேலை ஒண்டும் செய்யேலாது. எப்பிடியோ சுடத் தான் போறான். நாஙகள் வெளியாலை வந்தம். எங்களில்லை மச்சான் ஒராள்தான் ஆம்பிளை. என்டை வயதோட்டவர். மிச்ச மெல்லாம் பொம்பிளையள். அவனுக்கு ஓடர் ஆம்பிளையள் எல்லாரையும் சுட்டிட்டு வா. வல்வெட்டித்துறையிலை ஒரு ஆம்பிளையளும் இருக்கக்கூடாது. நாங்கள் ஒவ்வொருத்தரா வெளியாலை வர மச்சானைப் பிடிச்சான். ஒரு கதையும் இல்லை. அப்பிடியே ஒரு அடி சுவரோடை. அடிச்சிட்டு சடசடவெண்டு சுட்டுப்போட்டு அப்பிடியே அடுத்த வீட்டுக்குப் பின்பக் கத்தாலை போனாங்கள், அங்கையும் சடசடவெண்டு சத்தம் கேட்டிது. அங்கை இன்னொரு பெரியப்பாவும் இரண்டு தங் கச்சி மாரும். அந்தப் பெரியப்பாவையும் சுட்டிட்டாங்கள். வீட்டைப் பத்த வைச் சாங்கள். போட்டாங்கள். அதோடை இவ வுக்கு (கடைசி மகள்) பால் இல்லை. எனக்கு பால் உறைஞ்சு போச்சு. பிறகு தாய்ப்பால் இல்லாமல்தான் இவ வளந் தவ. கண்ணுக்கு முன்னாலை பெரியப் பாவைச் சுட்டாங்கள், மச்சானைச் சுட் டாங்கள். கஸ்டப்பட்டுக் கட்டின வீட்டை எரிச்சாங்கள். பால் உறைஞ்சு போச்சு. குழந்தைக்குத் தாய்ப்பால் இல்லை. ஆனாலும் நாங்கள் விடயில்லை. வீட்டைப் படிப்படியாக் கட்டினம். பிள்ளையளை வளத்தம். படிப்பிச்சம். கடைசி மகளுக்கு 30 வயதாகப் போகுது. பாங்கிலை வேலை செய்யிறா. எங்கடை சனம் எல் லாத்துக்கும் ஒருநாள் விடிவு வரும் எண்டு இண்டைக்கும் நம்பிக்கொண்டுதான் வாழு றம்."

■ ■ ■




1989 - யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 63 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.





1989 ஒகஸ்ட் வல்வைப் படுகொலைகளின்போது உடைத்து எரிக்கப்பட்ட வீடுகள்

# அண்ணி

- சேகர் தம்பிராஜா -



மழைக்கு கொட்டுண்ட சருகுகள் அண்டைக்கு எறித்த வெய்யிலுக்கு காய்ந்துபோய் கிடந்தது. அதனை கூட்டி துப்பரவாக்கும் வேலையில் கொஞ்சநேரம் அக்காவுக்கு துணையாக நின்று விட்டு வந்து ரியூசனுக்கு போவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். எதிரே அண்ணி சற்று வேகமாக நடந்து வந்து 'பாரதி நெடுகலும் பிள்ளையளுக்கு ஒரே சாப்பாட்டை கொடுத்து வெறுத்து போச்சு. இண்டைக்கு இடியப்பம் அவிச்சு குடுப்பம் எண்டு வெளிக்கிட்டன். என்ர இடியப்ப உரல் சரியில்லை. குழைச்ச மா காயுது. உங்கட உரலை ஒருக்கால் தருவியளோ? அவிச்சுப் போட்டு உடன கொண்டு வந்து தாறன்'. இதுதான் நான் நிண்டு கேட்டது. வாங்கினது வாங்காதது தெரியாது. நான் ரியூசனுக்கு நடக்கத் தொடங்கிவிட்டேன்.

ரியூசன் தொடக்கி கொஞ்ச நேரத்தில நாய் குலைக்கும் சத்தம் கிட்டக் கிட்ட கேட்கத் தொடக்கி குறைஞ்சுகொண்டு போச்சு. அப்ப நாய் குலைக்கிற தொனியிலும் நேரத்திலும் தெரியும் உது உந்த நாத்தம் பிடிச்ச ஆமிக்குத்தான் குலைக்குது எண்டு. இந்திய இராணுவம் குடிகொண்டிருந்த அந்தக் காலப்பகுதியில் பலரை காப்பாற்றியது அவரவர் ஊர் நாய்கள் தான். நாங்களும் ஒரு பதட்டமும் இல்லாமல் வகுப்பிலே மூழ்கிவிட்டோம். ஒரு அரைமணித் தியாலம் கழித்து ரியூசன் ஆசிரியரின் மனைவி பதைபதைக்க ஓடி வந்து 'இஞ்சேரப்பா தெற்கால வெடிச்சத்தம் கேட்டது. உந்த விழுவாரும் போனவங்கள். உவையல வச்சிருக்காதேங்கோ; விடுங்கோ'.

அவர் சொன்னதைக் கேட்டு ஆசிரியரும் 'நீங்கள் போட்டு அடுத்த வகுப்புக்கு வாங்கோ. பாத்து போங்கோ. றோட்டால போகாம ஒழுங்கையளுக்கால போங்கோ' என்று ஆசிரியரும் சொல்ல; எங்களுக்கு நல்ல புளுகம். நானும் நண்பன் தரனும் (கிரிதரன் என்ற பெயரை நாம் 'தரன்' என அழைப்போம்) ரியூசன் வேளைக்கு விட்ட சந்தோசத்தில அந்த ஒழுங்கையலுக்க நிண்ட வெள்ளமெல்லாம் விளையாடிக்கொண்டு வீடு நோக்கி போனோம். எதிரில் இந்த சனியன் பிடிச்ச ஆமிக்காரர் முயல் வேட்டைக்கு போய் திரும்பி வாற நாய் போல ஒரு மூர்க்கத்தனமாக வந்து கொண்டிருந்தாங்கள். எங்களை ஒண்டும் செய்யவில்லை. ஆனால் மனதுக்குள் பயம் குடிகொண்டு விட்டிருந்தது. அந்தக் காலத்தில்தான் ஆயுதக் குழுவொன்று வலுக் கட்டாயமாக 'தொண்டர் படை' எண்டு சொல்லி ஆட்களை வீடு பூந்தெல்லாம் தூக்கி சேர்த்துக் கொண்டிருந்தது. உந்த பிள்ளைபிடிக்காரர்களுக்காவே நாங்கள் வெளியில் எங்கும் தலைகாட்டுவதில்லை. யாரும் நீளக்காற் சட்டைகூட அணிவதில்லை. கட்டைக் காற்சட்டை அணிந்து, சின்னப் பிள்ளைகள் போலவே நடமாடித் திரிந்தோம்.

அவர்கள் கழிந்த பின்னர் மீண்டும் நாங்கள் வெள்ளத்தில் விளையாடி விளையாடி வீடு நோக்கி நடக்க தொடங்கி விட்டோம். அப்படியே நடந்து நாங்கள் இருவரும் பிரிந்து செல்லும் சந்திப்பு வர எதிரில் வந்த கந்தையா அண்ணர் 'என்ன உன்ர கொண்ணிய சுட்டுப்போட்டாங்கள்;. நீ வெள்ளம் விளையாடிக்கொண்டு நிக்கிறாய்' எண்டதும் நாம் இருவரும் அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றோம். அவர் மீண்டும் 'உன்ர அண்ணியத்தான்... பிரவன்ர பொஞ்சாதிய உந்த அழிவார் சுட்டு போட்டு போறாங்கள்...' என்று நடக்க தொடங்கியவர்... 'கடவுளே! நாசமாப் போவார்; பாடையில போவார்; பத்தி எரிவார்;' என்று ஆமிக்காரனை திட்டிக்கொண்டு செல்வது எமக்கு கேட்டது. நண்பனும் நானும் அப்படியே உறைந்தபடி ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டு நின்றோம். ஏதும் பேசவில்லை. சிறிது நேர அமைதியின் பின்னர் எங்களது வீடுகள் நோக்கி விரைவாக நடக்க தொடங்கினோம்.

சுடப்பட்டது நண்பன் தரனின் அண்ணி. நாங்களும் அவரை 'அண்ணி' என்றே அழைப்பது வழக்கம். தரனின் மூத்த அண்ணன் பிரபாகரனை திருமணம் முடித்து மூன்று பிள்ளைகளின் அம்மாவாக எங்களது ஊரில் வாழ்ந்து வந்தவர். நான் வீடு போய் விடயத்தை சொல்லிக்கொண்டிருக்க, றோட்டை கூட்டிக்கொண்டிருந்த அக்கா 'இப்பதானே என்னட்டை இடியப்ப உரல் வாங்கி கொண்டு போனவா' என்று அவளும் அதிர்ச்சிக்கு உள்ளாகி கதைத்து கொண்டிருக்கும் பொழுது அம்மாவும் வெளியே இருந்து வந்து நடந்தவற்றை கூறினார்.

அண்ணியின் வீட்டுக்கு எதிரே உள்ள வீட்டில் மறுநாள் ஒரு பிறந்தநாள் கொண்டாட்டம் நடைபெற இருந்தது. அதற்காக அன்று உறவினர்கள் அனைவரும் கூடி பலகாரம் சுட்டுக்கொண்டிருந்ததை அங்கு வந்த ஆமிக்காரன் அவதானிக்கவில்லை. ஆமிக்காரனின் அச்சுறுத்தலுக்கு ஏற்ப ஒரு வீட்டிலும் வேலிகள் கிடையாது. எல்லாவற்றையும் வெட்டி 'ஓவென்ற' வெளியாகத்தான் அனைவரது வீடுகளும் அச்சறுக்கை இன்றி இருந்தது. அண்ணியின் வீட்டில் அன்று நடந்த கொடுமையெல்லாத்தையும் எதிர் வீட்டில் இருந்து பலகாரம் சுட்டு கொண்டிருந்த அனைவரும் பார்த்துக்கொண்டு இருந்திருக்கிறார்கள். அவர்களோடுதான் எங்கட அம்மாவும் இருந்து பலகாரம் சுட்டுக்கொண்டு இருந்தவா. வந்த இந்திய ஆமிக்காரன் அவரது வீட்டினை சுற்றிவளைத்து வீட்டில் இருந்து சமைத்து கொண்டிருந்த அண்ணியை காரணம் ஏதுமின்றி தங்களது முகாமுக்கு 'விசாரணை'க்கு வருமாறு அழைத்திருந்தான். இவரோ மாட்டேன் மாட்டேன் என மறுத்துள்ளார்.'...நான் செத்தாலும் சாவேனேயொழிய உங்கட காம்புக்கு வரமாட்டன்;' என்று பிடிவாதமாக நின்றுள்ளார். அப்படி விசாரணைக்கென்று முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் உயிருடன் திரும்பிவராத சம்பவங்களும் எங்கள் ஊரில் நடந்ததனை யாவரும் அறிவர். அவர்கள் மறுபடியும் மறுபடியும் வலுக் கட்டாயமாக இழுத்துள்ளனர். பிறந்து சில மாதங்களேயான தனது கைக்குழந்தையையும் மற்றைய இரு பிஞ்சுக் குழந்தைகளையும் இறுகப் பிடித்தபடி மறுத்துள்ளார்.

இப்படி இழுபறிப்பட்டு பின்னர், பிள்ளைகளை பறித்து தூர எறிந்து விட்டு வீட்டு வாசலிலேயே வைத்து அண்ணி சுட்டுக் கொல்லப்பட்டார். அங்கே என்ன நடக்கிறது என்று அறியாத அவரது பிஞ்சுக் குழந்தைகளின் கண் முன்னே, உறவுகளின் கண் முன்னே அயலவர்களின் கண்முன்னே... ஒரு அப்பாவிப் பெண்ணை சுட்டு வீழ்த்தி 'வீரம்' என்று சொல்லிக்கொண்ட கோழைத்தனத்தை காட்டிக்கொண்டது அமைதி காக்கவந்த இந்திய வல்லரசு இராணுவம். நாங்கள் சொல்லும் வரை அவரை உடலை யாரும் தொடக்கூடாது என உத்தரவும் போட்டுச் சென்றதோடு மட்டுமன்றி, அடுத்த நாள் மரணச் சடங்கு நடக்கும் பொழுதும் வந்து அதற்கும் இடையூறு செய்து விட்டு சென்றது காந்தி தேசத்து அமைதிப்படை.

அமைதி என்று உலகுக்கு கூறிக்கொண்டு உள்ளே வந்த இந்திய இராணுவம் அங்கு வாழ்ந்த ஒரு இனத்தின் அமைதியைக் குலைத்து தனது வெறியாட்டத்தை ஆடி முடித்தது. வடகிழக்கு மக்களின் சொத்துக்களை சூறையாடி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு முட்டுக்கட்டையாக இருந்தது மட்டுமன்றி பல ஆயிரக்கணக்கான பொதுமக்களது உயிர்களையும் குடித்து தனது கோர முகத்தை காட்டி சென்றது.

இறுதிச்சடங்கு முடிந்து அடுத்தநாள் போய் பார்க்கும் பொழுது அடுப்படியில் இடியப்பம் புளிந்த குறையுடன் உரலில் மா காய்ந்தபடி கிடந்தது, முற்றத்து மண்ணில் உறைந்து போய் கிடந்த அவரது குருதி போல்.

■ ■ ■

# பெண்குறி ஆயிரம்!

87 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி. இந்தியப் படையின ரின் ஆட்சியில் நாங்கள் அச்சத்துடன் உழன்று கொண்டிருந்த நாட்கள். படையினர் எப்போது வீட்டுக்குள் புகுவார்கள், எந்த வழியால் வருவார்கள் என்பதையெல்லாம் நாங்கள் ஊகிக்க முடியாது. நாய்கள் தான் எங்கள் காவலர் கள். நாய்கள் குரைக்கும் சத்தத்திலி- ருந்துதான் எந்த ஒழுங்கையினூடு இந்தி யப் படையினர் வருகிறார்கள் என்பதை நாங்கள் துல்லியமாகக் கணிக்கப் பழகி- யிருந்தோம்.

தாக்குதல்கள், சுற்றி வளைப்புகள் நடந்- தால் அன்று நாங்கள் வீட்டில் இருப்ப தில்லை. அப்படி ஒரு நாள் தனித்திருப் பதற்குப் பயந்து எங்கள் ஊர் மாரியம்மன்

**- ஔவை -**



கோவிலில் எங்கள் கிராம மக்கள் அனை வரும் பாதுகாப்புக்காகக் கூடியிருந்தோம். வீடுகளில் தனித்திருப்பது மிகவும் ஆபத் தானது என்பதை நாங்கள் உணர்ந்து பல மாதங்களாகிவிட்டன.

பசி வயிற்றைப் பிடுங்கியது. பகல் 11 அல்லது 12 மணியிருக்கும். அம்மாவும் நானும் அன்று வீடுக்கு சமைப்பதற்காக வந்திருந்தோம். மிகவும் அவதானமாகச் சமைக்க வேண்டியிருந்தது. புகை போக்கி யினூடு புகை வெளிவந்தால் அந்த வீட்டை நோக்கி இந்தியப் படையினர் வந்துவிடு- வார்கள். பயத்துடனேயே சமைக்கத் தொடங் கியிருந்தோம். வீட்டில் ஒருதுளி சீனியும் இருக்கவில்லை. அதனால் அயல் வீடு ஒன்றில் சீனி வாங்குவதற்காக அம்மா சென்றுவிட்டார். நான் மிகவும் கவனமாக சூழலை அவதானித்தபடி சமைத்துக்கொண் டிருந்தேன். ஒரு சோறும் சாம்பாறும் சமைப்பதற்குப் பெரும் பாடுபட்டுக்கொண் டிருந்தேன். திடீரென நாய்கள் குரைத்தன. பிரதான வீதியிலிருந்து எங்கள் வீடுக்கு வரும் ஒழுங்கை வழியாக நாய்கள் குரைக் கும் சத்தம் கேட்கத் தொடங்கியது. நான் நீரூற்றி அடுப்பை அணைத்துவிட்டு அறைக்குள் சென்று கட்டிலுக்குக் கீழே ஒளித்துவிட்டேன். சில நிமிடங்களில் வெளியே சென்ற அம்மா முச்சிரைக்க, வயல்வெளிக்கூடாக ஓடி வந்து பின் கதவால் வீட்டுக்குள் புகுந்து என்னுடன் கட்டிலுக்கடியில் படுத்துக்கொண்டார்.

அரை மணித்தியாலத்தின் பின்னர் நாய் கள் குரைத்த சத்தம் ஓய்ந்தது. இந்தியப் படையினர் போய்விட்டார்கள் என்ற துணி வில் எழுந்து மீண்டும் அடுப்பை மூட்டி சமைக்கத் தொடங்கினோம். பெரும் அழு குரல் கேட்டது. எமக்கு மிகவும் தெரிந்த அயலில் இருந்த நான்கு பிள்ளைகளின் தாய் அழுது புலம்பியபடி ஒழுங்கையால் தள்ளாடியபடி வந்து கொண்டிருப்பதைக் கண்டோம். அம்மாவும் நானும் ஓடிப்போய் என்ன நடந்தது என்று விசாரித்தோம். உடனே அம்மாவைக் கட்டி அணைத்துக் கதறி அழத் தொடங்கினார் அவர். அவரு டைய மாமனுக்கும் நான்கு குழந்தைக ளுக்கும் முன்னால் இந்தியப் படையினர் தன்னை அநியாயம் பண்ணி விட்டார்கள் என்று கதறினர். மேலும் ஒரு காலடி கூட எடுத்து வைக்க முடியாதளவுக்கு வலியி னால் துடித்தார். தண்ணீர் தரும்படி கேட் டார். நாங்கள் அவரை வீட்டுக்குள் அழைத்து வந்து தண்ணீர் கொடுத்து அமைதியாக்கினோம். கத்தி அழுது யாருக் கும் தெரியப்படுத்தவேண்டாம். இப்போது அதனால் ஒரு பயனும் இல்லை. துணிவாக அடுத்து என்ன செய்ய செய்ய வேண்டு மென்று யோசிப்போம் என்று அம்மா சொன்னார்.

நான் விறைத்துப் போயிருந்தேன். ஒருவ- னல்ல, இரண்டுபேரல்ல, அடுத்தடுத்து எட்டுப் பேர் அந்த நான்கு பிள்ளைகளின் தாயை வன்புணர்வு செய்திருந்தார்கள். ஆவேசமும் கோபமும் கொதித்தெழுந்தா லும் அக்காலத்தில் நாம் கைதிகளாக இருந்தோம். அமைதியாக எல்லாவற்றை யும் மூடி மறைத்தோம். எதுவும் நடக்கா தது போல் பாசாங்கு செய்தோம்.

பல சந்தர்ப்பங்களில் பாலியல் வன்மு- றைக்குள்ளான பெண்கள், சமூகம் தந்து விடக் கூடிய அவப்பெயரையும் இராணுவ அச்சுறுத்தலையும் மீறிப் புகார் செய்த போதும், அவர்கள் 'போராளிகளுடன் தொடர்பு கொண்டவர்களாக இருந்ததால் தான் இப்படி முறைப்பாடு செய்கிற துணிவு வரும்' என்பதே இந்தியப் படை யின் உயர் அதிகாரிகளின் கருத்தாக இருந்தது. 'போர்ச் சூழலில் இது வழமை' என்று அவர்கள் புன்சிரிப்புடன் கூறியதை எனது தோழிகள் சிலர் பதிவு செய்துள் ளனர்.

இந்தியப் படையினரைத் தேவர்களாகக் கொண்டாடியவர்கள், தேவர் தலைவன் இந்திரனுக்கு உடலெங்கும் ஆயிரம் பெண்குறிகள் முளைத்த கதை அறியார்!

■ ■ ■

# கண்ணீர் இனி வேண்டாம்!

முறிந்த பனை-நூலில் இருந்து மருத்துவர் ராஜினி திரணகம எழுதிய, 'No More Tears Sister' எனும் அத்தியாயத்திலிருந்து சில பகுதிகளைக் கீழே தருகிறோம்:

சில தினங்களுக்கு முன்னர்தான் வயதுக்கு வந்திருந்த சிறுமிகளிலிருந்து மாதவிடாய் நின்று போன மூதாட்டிகள் வரை பெருந் தொகையினரான பெண்கள் இந்தியப் படையினரால் பாலியல் வன்முறைக்குள்- ளாக்கப்பட்டிருந்தனர்.

1.

இது பதினெட்டு வயதான ஒரு பெண் ணின் கதை. இவளுடைய தகப்பனார் ஒரு சுருட்டுச் சுற்றும் தொழிலாளி. இருந் தாலும் மகளை க.பொ.த. உயர்தரம் வரை படிக்க வைத்திருந்தார். இந்தச்சம்பவம் 1987 டிசம்பர் 23ம் திகதி நடந்தது. சில நாட்களுக்கு முன்னர் இந்திய இராணு- வத்தினர் கோழி பிடிப்பதற்காக அவர்க ளுடைய வளவுக்குள் வந்து போயிருக்கி றார்கள். குறிப்பிட்ட அத்தினத்தன்று அங்கு வந்த இரண்டு இராணுவ வீரர்கள் தாயை மகளிடமிருந்து பிரித்து, துப்பாக்கி முனை- யில் நிறுத்தி, மகளை இருவரும் மாறி மாறி பாலியல் வன்முறைக்கு உட்படுத் தினர். அவளோ ஒரு இளம் கன்னிப்பெண். இந்தப்பெண் மற்றவர்களைப் போலன்றி, அந்தப் பாதகர்களை அடையாளங்காட்டி அவர்களுக்குத் தண்டனையும் வாங்கிக் கொடுத்தாள். இவளைப் பரிசோதனை செய்த டாக்டர் இந்தக் கதையைத் தெளி வாக ஞாபகத்தில் வைத்திருக்கிறார். அவர் கூறினார்: 'அவ்வளவு துடிப்பான பெண் ணுக்கு இது ஒரு கோரமான சம்பவமே. அந்தப் பெண்ணுடைய துணிவை நான் மெச்சுகிறேன்".

2.

இன்னுமொரு பாலியல் வன்முறைச் சம்ப வத்தை ஆராய்ந்த ஒரு டாக்டர் எங்களிடம் கூறினார்: "அது யுத்தத்தின் ஆரம்பக் கட்டம். அவர்கள் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் இளம் பெண்ணைக் கொண்டு வந்தார்கள். அவளுடைய பெற் றோர் விவசாயிகள், வயதானவர்கள். ஒரு புகைப்படம் சம்பந்தமாக விசாரிப்பதற்காக இந்திய இராணுவம் நவம்பர் 16ம் திகதி அவளைக் கூட்டிக்கொண்டு போனது. அந்தப் புகைப்படத்தில் இவளும் இவளு டைய பள்ளிச் சிநேகிதியும் உள்ளனர். அந்தச் சிநேகிதியின் சகோதரன் புலி என்று கருதப்படுகிறார். அவள் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அந்த இளை ஞன் இப்போது எங்கிருக்கிறான் என்பது பற்றியும் அவனுக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் விசாரணை மேற்கொள் ளப்பட்டது. அவன் அவளுடைய காதலன் தானென்றும் அந்தப் பையனைப் பற்றிய உண்மைகளைச் சொல்லாவிட்டால் அடித்து நொறுக்கப்போவதாகவும், பாலியல் வன் முறையையும் செய்வேன் என்றும் இராணுவ கெப்டன் வார்த்தையால் மிரட்டியிருக்கி றான். எப்படியோ விசாரணை முடிந்ததும் வீட்டிற்கு அவளைக்கொண்டு வந்துவிட்ட கெப்டன் இதுபற்றி யோசித்து முடிவு செய்ய அவளுக்கு 24 மணித்தியால கால அவ- காசமும் கொடுத்திருந்தான். சிறிது நேரம் கழித்து, அவளின் வீட்டிற்கு இரண்டு படைவீரர்கள் வந்து, பெற்றோரை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, அவளை ஒரு அறைக்குள் கொண்டு போய் ஒருவன் அவள் மீது பாலியல் வன்முறையை மேற் கொண்டான். அவளுக்கு இரத்தம் கசியத் தொடங்கியது. தாங்கள் மறுநாளும் வரு வோம் என்றும் நடந்ததைத் தாயிடமும் சொல்லக்கூடாது என்றும் அதில் ஒருவன் எச்சரிக்க, பின் அவர்கள் சென்றுவிட்டனர். என்ன செய்வதென்றறியாத நிலையில் அந்தப்பெணி கிணற்றுக்குள் குதித்துவிட் டாள். அதிர்ஷ்டவசமாக அயலில் உள்ள வர்கள் வந்து அவளைக் காப்பாற்றி விட்டனர்.

அக்குடும்பத்தினர் இப்பெண்ணை இந்த டாக்டரிடம் கூட்டிச் சென்றபோது, அவர் தான் இந்தச் சம்பவத்தைப் பற்றி முறை யீடு செய்யும்படி அவளைத் தூண்டியிருக் கிறார். அப்பெண்ணும் அவ்வாறே அத னைத் துணிச்சலோடு செய்து, குற்றம் இழைத்த நபர்களையும் அடையாளம் காட்டினாள்.

3.

மனநிலை பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் வீதியில் திரிந்து கொண்டிருந்தபோது இராணுவத்தால் பிடிக்கப்பட்டார். அவளை ஏற்றிக்கொண்டு சென்ற வாகனம் நிலக் கண்ணி வெடிக்குள்ளானதால் அவருக்குத் தலையில் காயம் ஏற்பட்டது. அப்போது இராணுவப் பாதுகாப்பில் இருந்த யாழ் பெரியாஸ்பத்திரியின் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு அவர் அனுமதிக்கப்பட்டார். அங்கிருந்தபோது தாதிமார் உடைமாற் றும் அறைக்கு அவர் இந்தியப் படையி- னரால் கொண்டுசெல்லப்பட்டு, தங்களுக்கு இணங்குமாறு அச்சுறுத்தப்பட்டு தொடர்ந்து நான்கு இரவுகள் கூட்டாகப் பலரால் அவர் வன்புணர்வுக்கு ஆளாகப்பட்டார். பின்னர் அவர் காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு மீண்டும் இந்தியப் படையினரால் 'பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட் டார். அவள் அங்கிருந்த உயரமான ஜன் னல் வழியே வெளியே குதித்து, மீண்டும் யாழ் பெரியாஸ்பத்திரிக்கு அனுமதிக்கப் பட்டாள். அங்கு நரம்பியல் பிரிவில் அவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டபோது அங் கும் இராணுவத்தால் அவர் கழிவறைக்குக் கொண்டுசெல்லப்பட்டு மாறிமாறிப் பாலி யல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டார். மோசமான தொந்தரவுக்குள்ளாகிய நிலை யில் அவர் பின்னர் மனநலச் சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

■ ■ ■

# பிரம்படி

**க. தணிகாசலம் எழுதி, தேசிய இலக்கிய பேரவையால் 1988 இல் வெளியிடப்பட்ட ‘பிரம்படி’ என்கிற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கின்ற பிரம்படி என்கிற இச்சிறுகதையானது, இந்திய இராணுவம் ஈழத்தில் நிகழ்த்திய படுகொலைகளில் ஒன்றான ‘பிரம்படிப் படுகொலைகள்’ பற்றிய இலக்கிய சாட்சியமாக அமைவதுடன் அன்றைய சமகால மக்களின் மனநிலை, சமூக அமைப்புப் பற்றிய விமர்சனங்களையும் பதிவு செய்திருக்கின்றது. போரையும், அது ஏற்படுத்திய அழிவுகளையும் நினைவுகூர்வதுடன் அவற்றைப் பதிவு செய்வதுவும் அவசியம் என்கிற பிரக்ஞை அதிகரித்துவருகின்ற இன்றைய நாட்களில் இந்தச் சிறுகதையானது முக்கியமான ஒன்றாக அமைகின்றது.**

வானை நோக்கி உயர்ந்து பரந்து வளர்ந்திருந்த மலை வேம்பு, மருது, மகிழ மரங்களுக்கு மேலாக உயர்ந்து தெரியும் கோபுரத்துடன் அந்தப் பரந்த வெளியில் அமைந்திருந்த அம்மன் கோவிலின் பெரிய மண்டபங்கள், வீதிகள் திருவிழாக்காலங்களில் மட்டுமே ஜனத்திரள் நிரம்பி வழியும். இன்று அதிகாலையில் இருந்து வழமைக்கு மாறாக அந்தப்பகுதியில் நடந்து கொண்டிருந்த அசம்பாவிதங்களினால் ஆலயத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள மக்கள் அனைவரும் அங்கு கூடிவிட்டனர். அயற்புறங்களில் கண் மூடித்தனமாக ஏவப்படும் ஷெல்களுக்கு அஞ்சி சமையல் சாப்பாடுகளையும் மறந்து பசியோடும் பட்டினியோடும் மக்கள் அஞ்சி ஒடுங்கி இருந்தார்கள். அந்த ஊர் இளைஞர்கள் சிலர் ஒன்றுசேர்ந்து ஷெல் அடிகளுக்கு மத்தியிலும் பேக்கரிகளைத் தாமே திறந்து தம்மால் இயன்ற உணவு வசதிகளைச் செய்து கொடுத்தார்கள்.

“பாணும் தேத்தண்ணியும் இருக்கு, தேவையான ஆக்கள் வந்து வாங்குங்கோ” கோவில் கொடிக்கம்பத்துக்கு அருகில் எரிந்துகொண்டிருந்த ஆளளவு உயர்ந்த குத்து விளக்குகளுக்கு அருகே தாம் கொண்டுவந்த பாண் பெட்டிகளையும் தேனீர்க்கிடாரத்தையும் வைத்துவிட்டு அந்த இளைஞர்களில் ஒருவன் உரத்துக் கத்துகிறான். அந்தக் கோவில் மண்டபம் முழுவதும் நிறைந்திருந்த ஜனக்கூட்டத்தின் இரைச்சல்களுக்கு மத்தியிலும் முத்துச்சாமியருக்குப் பழக்கப்பட்ட அந்தக்குரல் சிவநாதனுடையது தான் என்பதை அவர் நிச்சயித்துக்கொண்ட போது அச்சமும் பரபரப்பும் நிறைந்த அந்தச்சூழலிலும் அவரிடம் ஒரு நம்பிக்கை பிறக்கிறது. கோபுர வாசலின் உட்புறத்தில் ஒருபக்கத்தில் தன் மனைவியோடு கதைத்துக் கொண்டிருந்தவர் சிவநாதனைச் சந்திக்கும் ஆவலுடன் எழுந்து சனங்களை விலக்கிக் கொண்டு கொடிக்கம்பத்தடியை நோக்கி நடக்கிறார்.

முத்துச்சாமியருக்கு அந்தக் கோவிலும் சூழலும் பழக்கப்பட்ட ஒன்று. வெள்ளை வேட்டியும், நரைத்து வெள்ளையாகிவிட்ட தலையும், நெற்றியில் திருநீறும், அவரது சாந்தமான பார்வையும் மிக அன்பாகவும் அமைதியாகவும் பேசும் சுபாவமும் கோயிற் குருக்கள் முதல் அந்தச் சூழலில் உள்ள அனைவருக்குமே ஒரு மதிப்பை ஏற்படுத்தியிருந்தது. காலையும் மாலையும் தோய்ந்து குளித்து ஆலய தரிசனம் செய்ய வரும் அவர் விசேஷ தினங்களில் மட்டும் அர்ச்சனைத் தட்டத்துடன் மனைவியையும் அழைத்து வருவார். ஐம்பது வயதை நெருங்கும் இத்தகைய சுபாவங்களுடைய முத்துச்சாமியருக்கும் சிவநாதனுக்கும் இடையே இன்றுவரை அந்த நட்பு நீடிப்பது விசித்திரமானது தான். முத்துச்சாமியர் மத ஒழுங்குகளை தவறாது பின்பற்றும் ஒரு இறை பக்தர். ஒரு காந்தீயவாதி, பகவத் கீதையையும், ‘பகவான் ஜேணல்’ போன்ற நூல்களையுமே ஓயாத படிப்பவர். சிவநாதனோ மத நம்பிக்கையற்றவன். சமூகப்பிரச்சினைகளுக்கு விஞ்ஞான ரீதியில் தீர்வு காணவேண்டும் என்று கருதும் ஒரு துடிதுடிப்புள்ள இளைஞன். இருவருக்கும் மனித நேயத்தைப் பேணுவது என்பதில்தான் ஒற்றுமை இருந்தது. இருவரும் சந்திக்கும்போது மிக மோசமாகத் தர்க்கித்துக் கொண்டாலும் ஒருவர் சுகத்தை ஒருவர் விசாரித்துக் கொண்டு அடிக்கடி சந்தித்துக் கொள்வர்.

ஆங்கிலத்தில் புலமைமிக்க முத்துச்சாமியர் அரசாங்க ஊழியர்கள், சிங்களம் கற்கவேண்டும் என்ற சட்டம் வந்தபோது தான் வகித்த உயர் பதவியையே உதறி தள்ளிவிட்டு வந்தவர். இளம் வயதினரான தனது மகளையும் மகனையும் நாட்டின் நிலைமையை மனதிற்கொண்டு லண்டனுக்கு அனுப்பி வைத்திருந்தார். சும்மா இருந்தே சாப்பிடக்கூடிய அளவிற்கு பூர்வீகச்சொத்துக்கள் இருந்தபோதும் பொழுது போக்கிற்காக தனியார் கொம்பனியில் அவர் மனேச்சராகப் பணிபுரிந்தபோது தான் தொழிலாளியாக அங்கு வேலை செய்த சிவநாதனுடன் அவருக்கு நட்பு ஏற்பட்டது. அவனிடமிருந்த மற்றவர்களை மதித்து நேசிக்கின்ற உயர்ந்த பண்பும் சமூக அவலங்களைக் கண்டு கொதித்தெழும் மனப்போக்கும் அவருக்குப் பிடித்திருந்தது. ஆனால் விவேகானந்தரைப் போல அவனது உணர்வுகளும் வேதாந்த எல்லைக்குள் நின்றுவிட வேண்டும் என்று அவர் விரும்பினார்.

இறுதியாக முத்துச்சாமியர் வீட்டில்தான் இருவரும் சந்தித்தனர். அவரது மனைவி




எங்கோ சென்றிருந்ததால் அவனை வரவேற்றுப் பிளாஸ்க்கில் இருந்த வெந்நீரில் தேனீர் போட்டுக் கொடுத்து உரையாடிக் கொண்டிருந்த போதுதான் இந்திய மிராஜ் விமானங்கள் இலங்கையின் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததைப் பற்றிய பிரச்சினை எழுந்தது.

“அவசியமெண்டா உணவுப்பொதிகளைச் சமாதானமா பேசிக் கொண்டுவந்து குடுத்திருக்கலாம். உது எங்கடை நாட்டின்ரை இறைமையை மீறின அத்துமீறல் தான்” சிவநாதன் ஆத்திரத்துடன் கூறினான்.

“இறைமை என்ன இறைமை உந்த முட்டாள்களுக்கு உப்பிடித்தான் பாடம் படிப்பிக்கவேணும்.”

சாய்மனைக் கதிரையில் சாய்ந்தபடி அமைதியாக ஆனால் வெறுப்பால் முகத்தைச் சுருக்கியபடி கூறினார் முத்துச்சாமியர்.

“என்னையா ஒரு அநியாயத்தைச் சரியா எதிர்க்கத் துணிவில்லாமல் இன்னொரு அநியாயத்தை நியாயப்படுத்தறியளே.”

சிவநாதனின் இந்த வார்த்தைகளால் முத்துச்சாமியர் ஒருகணம் திகைத்தாலும் மறுகணம் தனது பிடிவாதப் போக்கைத் துணைக்கு அழைத்துக் கொள்கிறார்.

“புத்தியுள்ளவனோடை பேசலாம். உப்பிடி முட்டாள் சனங்களோடை முட்டாள்தனமாய்த் தான் நடக்க வேணும்.”

சிவநாதனுக்கு அவருடைய வார்த்தைகள் மேலும் ஆத்திரத்தைக் கொடுக்கிறது.

“ஐயா காந்தியையும் கீதையையும் தூக்கிற நீங்களே ஆட்சியிலை இருக்கிறவை செய்யிற அநியாயத்துக்காண்டி ஒரு இனத்தையே முட்டாளினமா நினைச்சா சாதாரண சனங்கள் எப்படி நினைக்கும்?”

அவனது பேச்சில் இருந்த நியாயம் அவரது மனச்சாட்சியை உறுத்தியபோது அதைப் பொருட்படுத்தாமலே முத்துச்சாமியர் சொல்கிறார்.

“நீர் என்ன சொன்னாலும் இந்த விசயத்திலை இந்தியா செய்தது சரியெண்டுதான் நினைக்கிறன்.”

“ஓமைய்யா கருத்துச் சுதந்திரம் எல்லாருக்கும் இருக்கு... ஆனால் உங்களைப் போல படிச்சவையே உப்படிக்கருத்துக்களை இன்னும் வைச்சிருந்தா இந்த நாட்டின்ரை எதிர்காலத்தை நினைக்கவே பயமாயிருக்கு.”

“சரி சரி உதுகளை விட்டிட்டு நீர் பிழைக்கிற வழியைப்பாரும்.. இப்ப எப்படி வேலையாள் வருமானங்கள்.” வழமையாக விவாதங்கள் சூடுபிடிக்கும்போது முத்துச்சாமியர் அவனுக்குக் கூறும் அறிவுரையையே அன்றும் கூறினார்.

“என்னத்தை உழைச்சு என்ன.. இப்படியே போனால் ஒருத்தரும் பிழைக்கேலா தய்யா... சரி வாறன்..”

அண்டைக்குப் போனவன் தான். அதன் பின்பு ஒருவரையொருவர் சந்திக்கவேயில்லை. இன்று அவனது குரலைக்கேட்டதும் அவனைக் கண்டு பேசவேண்டும் என்ற ஆவலுடன் கொடிக்கம்பத்தடியை அடைந்து அவனைத் தேடுகிறார்.

“பாணும் தேத்தண்ணியும்...”

கொடிக்கம்பத்தடியில் கேட்ட குரல் மேற்கு வீதி வடக்கு வீதிப் பக்கமாகக் கேட்கிறது. பின் தொடர்ந்து செல்ல முயன்றவர் எப்படியும் சுற்றிக்கொண்டு கொடிக்கம்பத்தடிக்கு வருவான் என்ற நம்பிக்கையோடு மீண்டும் திரும்பி வந்து அவனுக்காகக் காத்து நிற்கிறார். பாணும் தேனீரும் வாங்குவதற்காக மக்கள் கூடி நெரிபடுகின்றனர்.

“ஒழுங்கா ஒவ்வொருத்தரா வாங்குங்கோ, பேக்கரியிலை பாண் போடுப்படுது முடிஞ்சு போமெண்டு அவசரப்படாமை ஆறுதலாக வாங்குங்கே.”

இரண்டாவது குரல் சிவநாதனுடைய தான் என்பதை உணர்ந்து கொண்ட முத்துச்சாமியர் குரல் வந்த திசையில் சென்று அவனைக் கண்டுவிடுகிறார். பாண்வழங்கும் வேலையில் கவனமான இருந்த அவனைக் குழப்பக்கூடாது என்று சிறிது நேரம் பொறுமையாகக் காத்து நின்ற அவர் பொறுமை இழந்தவராய் அவனது தோளில் தட்டியபடி ‘சிவநாதன்’ என்கிறார். தலையை நிமிர்த்திப் பார்த்த அவன் வியப்புடன், “ஐயா நீங்களே... நான் உங்களைப் பார்க்க வீட்டை போனனான். அங்காலை கின்டுக்கொலிஜ் பக்கம் போயிருப்பியள் எண்டு நினைச்சன்...இந்தாங்கோ பாண்... தேத்தண்ணிக்கு ஏதாலும் இயத்துக் கிடந்தா கொண்டாங்கோ.”

“நான் உம்மோடை கதைக்க வேணுமெண்டுதான் வந்தனான். நீர் பிஸியா இருக்கிறீர் உம்மைக்குழப்பக்கூடாது... என்னத்தைக் கதைக்கிறது. எல்லாம் படுமோசமாய் போச்சு... நீர் பாணைக் குடும். நான் பேந்து சந்திக்கிறன்.’

பாணைக் கையில் பெற்றுக்கொண்டு சிவநாதனைக் கண்டு தன் மன உழைச்சல்களை ஓரிரு வார்த்தைகளிலாவது சொல்லிய மனத்திருப்பதியுடன் திரும்புகிறார் முத்துச்சாமியர். கடைசியாக அவனைச் சந்தித்தபோது அவனுடன் வாக்குவாதப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி நேற்று இரவு வரை அவர் மறந்திருந்தார்.

சிவநாதனின் அன்றைய விவாதங்கள் வெளிப்படையாக அவர் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் அவரது மனதை நன்றாகப் பாதித்திருந்தது. இதுவரை பின்தங்கிய கிராமங்களில் பின் தங்கியமக்களிடம் அவர்கள் ஏற்படுத்தி வந்த மாற்றத்தைப் பற்றியே அறிந்திருந்த அவருக்கு தேசத்தைப்பற்றி அவன் பேசிய வார்த்தைகள் திகைப்பைத் தந்தன. ஒரு சாதாரண தொழிலாளியான அவன் எவ்வளவு உறுதியாகவும் தெளிவாகவும் விஷயங்களை பார்க்கிறான் என்று அவர் வியப்படைந்தார். நேற்று இரவு நடந்த அந்தச் சம்பவம் அவரது நம்பிக்கைகளைச் சிதறடித்தது. தன்னைவிட வயதிற் சிறியவனானாலும் சமூக உணர்வுமிக்க சிவநாதனின் வாதங்களில் நியாயமிருப்பதாக அவர் உணர்ந்தார்.

அந்தப் பெரிய கிராமத்தின் ஒருபகுதிதான் பிரம்படி. தென்னை, பனை, பலா, இலுப்பை, வேம்பு என்று எல்லா மரங்களும் ஆங்காங்கு அடர்ந்து உயர்ந்து சோலைகளாக வளர்ந்திருக்கும் அந்தப் பகுதி இயற்கை அரண்களைப் போல அழகாகக் காட்சி தரும். அதன் ஒரு எல்லையில் தான் முத்துச்சாமியரின் வீடு அமைந்திருந்தது. அன்று மாலை அவர் கேள்விப்பட்ட சில சம்பவங்களுடன் அந்தப் பகுதியில் போராளிகளின் நடமாட்டத்தையும் அவதானித்த போது ஏதோ அனர்த்தங்கள் நடக்கப் போவதாக நினைத்துக் கொண்டே உறங்கப்போனார். நள்ளிரவு நேரம் திடீரென வந்த இரண்டு ஹெலிகள் அண்மையிலுள்ள யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீட வளாகத்தைச் சுற்றி சரமாரியாகச் சுடத் தொடங்கின. திடுக்குற்று எழுந்த முத்துச்சாமியரும் மனைவியும் வீட்டுக்கு வெளியே ஓடி பாதுகாப்பான இடத்தில் நின்றுகொண்டே நிலைமைகளை அவதானித்தனர். ஹெலியிலிருந்து நெருப்புக் கோடுகளாக நிலத்தை நோக்கிக் குண்டுகள் பாய்ந்தன. எவர் தலையில் வீழ்கிறதோ என்று அவர் அங்கலாய்த்த மறுகணம் பேரிரைச்சலுடன் கீழே இருந்த மரம் செடிகளை தனது காற்றின் அமுக்கத்தால் ஆட்டி அசைத்தபடி சென்ற இரண்டு ஹெலிகள் வளாக மைதானத்தில் பதிந்து இராணுவத்தினரை அங்கு இறக்கியது. துப்பாக்கிச் சூடுகள் பல திசைகளிலுமிருந்து மைதானத்தில் இறக்கப்பட்ட இராணுவத்தினரை நோக்கிப் பறந்தன. பதிலுக்கு அங்கிருந்தும் சரமாரியாக சூடுகள் வந்தன. இவை போதாதென்று பல மைல்களுக்கு அப்பாலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து அந்தப் பகுதியை நோக்கி ஷெல்கள் வந்து வீழ்ந்தன. இவற்றை அவதானித்துக் கொண்டு தங்களது உயிரை பாதுகாப்பது எப்படி என்று எண்ணிக் கொண்டிருந்த போதுதான் அயல் வீட்டுக்காரர்கள் அவரது வீட்டின் பின்புறமாக ஏறிக் குதித்து ஓடிவந்தனர்.

*தொடர்தல் 95ம் பக்கம்*

# பிரம்படி…

94ம் பக்கத் தொடர்ச்சி…

“அண்ணை பிரம்படிக்கை ஆமி வந்திட்டுது. அங்காலை வீட்டுக்காறரையெல்லாம் பணயமாய் பிடிச்சு வைச்சிருக்கிறாங்கள். இஞ்சை இருக்கக் கூடாது வாங்கோ கோயிலடிக்குப் போவம்.”

படுக்கை விரிப்பையும் சுடுதண்ணீர்ப் போத்தல்லையும் கூடைக்குள் வைத்துக் கொண்டு அதிகாலை இருளோடு அவர்கள் கோவிலடிக்கு வந்து சேர்ந்தார்கள். காலையில் அங்கு கூட்டம் குறைவாகவே இருந்தது. மதியவேளைக்குச் சற்று முன்னர்தான் பல்கலைக்கழக வளாக மைதானத்தில் இறக்கப்பட்ட இராணுவத்தினரை மேல்மாடியில் ஏறி நின்று இடைவிடாது தாக்கிய போராளிகள் அவர்களில் இருபத்தொன்பது பேரைச் சுட்டுக் கொன்று விட்டனர். பிரம்படிக்குள் சென்ற இராணுவத்தினர் மட்டும் தமது நோக்கம் நிறைவேறாத போதம் வீடுகளுக்குள் புகுந்து மக்களைப் பணயமாக வைத்துக் கொண்டு சுட்டுக்கொண்டு இருந்தனர். போராளிகளும் அவர்களைச் சுற்றிவளைத்து இருந்தனர். புதினம் பார்க்கச் சென்ற சிலர் இது போன்ற செய்திகளைக் கோயிலடியில் இருந்தவர்களுக்கு வந்து சொல்கின்றனர்.

இரவாகியும் பிரம்படிப் பக்கத்தில் துப்பாக்கிச் சூடுகளும் ஷெல்லடிகளும் கேட்டபடியே இருக்கின்றன. முத்துச்சாமியர் வாங்கிக்கொண்டு வந்த பாணை மனைவியுடன் பங்கிட்டுச் சாப்பிட்டுவிட்டு மீண்டும் சிவநாதனைச் சந்திப்பதற்காக வெளி மண்டபப் பக்கம் சென்றார். அங்குக் கூடி நின்றவர்கள் பரபரப்படைந்தவர்களாய் தேர்முட்டியடிப் பக்கம் பார்த்துப் பார்த்து தங்களுக்குள் கூடி குசுகுசுத்தபடி நிற்கின்றனர். முத்துச்சாமியாரும் தனது பார்வையைத் தேர் முட்டியபடிப்பக்கம் செலுத்துகின்றார். உரப்பைகளால் சுற்றப்பட்டிருந்த ஆயுதங்களை எடுத்து “மகசீன்களை மாட்டிக்கொண்டு போராளிகள் அங்கு தாக்குதலுக்குத் தயாராக நிற்கின்றனர். பிரம்படியில் சுற்றிவளைக்கப்பட்டிருந்த இராணுவத்தினரை மீட்க ‘செயின் புளொக்’ கோடு இராணுவத்தினர் வருவதாகவும், அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்காக இவர்கள் தயாராக நிற்பதாகவும் அங்கு நின்றவர்கள் தமக்குள் பேசிக் கொண்டனர்.

மற்றவர்களைப் போலவே, அந்த இடத்தில் தாக்குதல் நடைபெற்றால் கோவிலில் உள்ள பெண்கள், குழந்தைகள் எல்லோரும் பாதிக்கப்படுவர் என்பதை முத்துச்சாமியரும் உணர்கிறார். யார் அவர்களுடன் சென்று கதைப்பதென்று எண்ணிக் கொண்டிருந்தபோதுதான் சிவநாதனும் சில பெரியவர்களும் போய் அவர்களுடன் கதைக்கின்றனர். அங்குள்ள நிலைமைகளை உணர்ந்தவர்களாக மீண்டும் ஆயுதங்களை உரப்பைகளில் வைத்து மறைத்துக்கொண்டு அந்த இடத்தை விட்டு அவர்கள் நகர்கின்றனர். அந்த ஜனக்கூட்டம் ஒரு தாக்குதலில் இருந்து தப்பிய உணர்வுடன் மூச்சு விடுகிறது.
தொலைவில் அடிவானத்தில் இடையிடையே தெரிந்த மின்னல் கீற்றுகளும் தூரத்தே கேட்ட இடிமுழக்கங்களும் நெருங்கி நெருங்கி வந்து பலத்த காற்றோடு மழையாகப் பெய்து கொட்டுகிறது. உயரமான வெளிமண்டபத் தாழ்வாரம் ஊடாக அடித்த தூவானம் அங்கிருந்தவர்களை நனைத்துவிட்டது. இதுவரை அந்த மண்டபமே தஞ்சமென்று இருந்தவர்களில் ஒருபகுதியினர் படுக்கை விரிப்புகளையும் சுருட்டிக் கொண்டு கோயிலுக்குள் நுளைகின்றனர். ஒரு சிலர் மட்டும் தயக்கத்துடன் வெளியே நிற்கின்றனர்.

“இப்ப அது இது பாக்கேலாது, எல்லாரும் உள்ளை போங்க… படுக்க இடமில்லாட்டி குந்திக் கொண்டாதல் இருங்கோ”

“ஓ…கூட்டிக்கழுவி பிராயச்சித்தம் செய்து தானே இனிப் பூசை தொடங்கிறது”…

அங்கு நின்ற பெரியவர் சொல்ல ஐயரும் அதனை ஆமோதிக்கின்றார். அனைவரும் உள்ளே செல்கின்றனர். கதவும் பூட்டப்படுகிறது. நள்ளிரவாகியும் குழந்தைக ளைத் தவிர பெரியவர்கள் எல்லோரும் குந்தி இருந்து கொண்டு விழித்தபடி இருக்கின்றனர்.

தூரத்தே கேட்டுக் கொண்டிருந்த பீரங்கி, துப்பாக்கி வேட்டுக்கள் நேரம் செல்லச் செல்ல அருகருகே கேட்டு அந்த இரவில் அவர்களுக்கு அச்சத்தை ஊட்டுகிறது. திடீரென சத்தங்கள் காதைத்துளைக்கின்றன. ‘செயின் புளொக்’ தான் ஆலயத்தின் முன்னால் உள்ள ரெயில் பாதையால் வருகிறது. அங்குள்ளவர்கள் யாவரும் இதனை அனுமானித்துக் கொண்டதால் அச்சத்தால் விழிகள் பிதுங்க கடவுளைப் பிரார்த்திக்கின்றனர். ஆலய வெளிமண்டபத்தை நோக்கி படபடவென்று பல சூடுகளைத் தீர்த்துவிட்டு, பதிலுக்கு சூடுகள் வராததால் பிரம்படியை நோக்கி அது செல்கின்றது. நீண்டநேரமாக அங்கு சூட்டுச் சத்தங்களும் பீரங்கி வேட்டுக்களும் கேட்கின்றன. கோவிலடிக்கு வராத உறவினர்களை எண்ணி அங்குள்ளவர்கள் வேதனை அடைகிறார்கள். அதிகாலையானதும் இராணுவத்தினரை மீட்டுக்கொண்டு அதே ரெயில் பாதையால் ‘செயின் புளொக்’ மீண்டும் வருகிறது.

காலைச்சூரியனின் வெளிச்சம்கூட கோயில் மண்டபங்களுக்கு ஊடாக உள்ளே தெரிகின்றது. வெடி ஓசைகளுக்கு அஞ்சி சேவல்கள் கூவாத, குருவிகளும் பறவைகளும் குரல் எழுப்பாத அந்தக் காலை நேரம் அவர்களுக்கு ஒருவித அச்சத்தை ஊட்டுகிறது. கோயில் மூலஸ்தானம் முதல் விக்கிரக அறைகள் யாவும் திறக்கப்பட்டு குழந்தைகளையும் பெண்களையும் அங்கே நின்றவர்கள் பாதுகாப்பாக உள்ளே விட்டுக் கதவை சாத்துகின்றனர்.

முத்துச்சாமியரையும் மனைவியையும் சிவநாதன் பாதுகாப்பான ஓர் இடத்தில் கொண்டு போய் படுக்க வைக்கிறான். எல்லோரும் காதுகளைப் பொத்தியபடி படுத்துக் கிடக்கின்றனர். இம்முறை கோவிலின் பின்புறம் இருந்தும் செயின் புளொக் கை நோக்கி சூடுகள் செல்ல அந்த இடத்தில் சிறிது நேரம் தொடர்ந்து துப்பாக்கிச் சூடுகளும் பீரங்கி முழக்கங்களும் காதைத்துளைக்கின்றன. ‘செயின் புளொக்’ சுட்டுக்கொண்டே மீண்டும் நகர்கிறது. மரணத்தின் விளிம்பில் இருந்து தப்பிய உணர்வோடு எல்லோரும் மற்றவர்களது நலன்களை விசாரிக்கின்றனர். ஒரு சிலருக்கே சூட்டுக்காயங்கள் ஏற்பட்டிருந்தன. அவர்களை இரத்தம் சொட்டச்சொட்ட சைக்கிள்களில் ஏற்றியபடி அருகிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்கின்றனர்.

விடிந்துவிட்டதால் சனநடமாட்டத்தை அவதானித்து பெண்களையும் குழந்தைகளையும் கோவிலில் விட்டுவிட்டு ஆண்கள் மட்டும் தமது வீடுகளைப் பார்க்கச் செல்கின்றனர். முத்துச்சாமியரும் சிவநாதனின் சைக்கிளில் ஏறிக்கொண்டார்.சிவநாதனின் தாய் தந்தையார் கோவிலிலேயே இருந்தனர். சைக்கிளில் போகும்போதே தனது வீட்டுப் பக்கம் திரும்பிப் பார்த்தான். ஷெல் விழுந்ததற்கான அடையாளம் எதுவும் அங்கே தெரியவில்லை. பிரம்படியில் என்ன நடந்தது என்பதை அறியும் ஆவலில் சைக்கிளை வேகமாகச் செலுத்துகிறான்.

“நான் இப்படி வருமெண்டு கொஞ்சமும் நினைக்கேல்லை”.

“எத்தினையோ மகான்கள் பிறந்தநாடு. எத்தினை மகான்கள் பிறந்தாலும் ஆட்சியிலை இருக்கிற வர்க்கம்தானே எல்லாத்தையும் தீர்மானிக்கிறது.”

வழமையாக சிவநாதனின் வர்க்க வாதங்களுக்கு மறுமொழி சொல்லி, எல்லாம் ஆண்டவன் வகுத்தவழி என்று வலியுறுத்தி நிற்கும் முத்துச்சாமியர் குழலின் தாக்கத்தால் வாயடைத்தபடி சைக்கிளில் அமர்ந்திருக்கிறார்.

> **“ ‘செயின் புளொக்’கின்**
> **ஒன்றை அடிப்பள்ளத்தின் கீழ் மிதிபட்டு**
> **இழுபட்டு புதைந்து கிடக்கும் பிரேதங்கள்…**
> **கிழக்கு மாகாணத்தில் இருந்து**
> **பல்கலைக்கழகத்தில் கல்விகற்க வந்த இரண்டு**
> **மாணவர்களின் உடல்களும்**
> **அங்கு நெரிந்து கிடக்கின்றன. ”**

கண்ணி வெடிகளைத் தவிர்ப்பதற்காக ரெயில்பாதைக்கு ஊடாகவே செயின்புளொக் சென்று வந்திருக்கின்றது. ரெயில் பாதையை விட்டு அது திரும்பும்போது தண்டவாள இரும்பை தாறுமாறாக வளைத்திருக்கும் காட்சியை அங்கே கூடிநின்றவர்கள் அச்சத்துடன் பார்க்கின்றனர்.

“உதென்ன…அங்கை போய்ப்பாருங்கோ அறுவார் செய்திருக்கிற வேலையை”

பிரம்படியில் இருந்துவந்த வயோதிபர் ஒருவர் ஆத்திரத்துடன் கூறிக்கொண்டு செல்கிறார். ஆவலுடன் செயின் புளொக்கின் சுவட்டைப் பின்பற்றி பிரம்படியை நோக்கிச் சைக்கிளைச் செலுத்துகிறான் சிவநாதன். போகும் வழியெங்கும் மதில்கள் உடைந்தும், வீடுகள் இடிந்தும் மரங்கள் முறிந்தும் அங்குமிங்குமாகக் கிடக்கின்றன. உயர்ந்த மரங்களும் சோலைகளும் நிறைந்த அழகாகக் காட்சிதரும் அந்தப் பகுதி சோபை இழந்த காட்சி தருகின்றது.

அவலக்குரல்கள் அங்குமிங்குமாக ஒழுங்கைகளிலும் வீடுகளிலும் கேட்கின்றன. இரவு பெய்த மழையில் ஈரமான அந்த மண்ணில் புதைந்த ‘செயின் புளொக்’கின் ஒன்றை அடிப்பள்ளத்தின் கீழ் மிதிபட்டு இழுபட்டு புதைந்து கிடக்கும் பிரேதங்கள்… கிழக்கு மாகாணத்தில் இருந்து பல்கலைக்கழகத்தில் கல்விகற்க வந்த இரண்டு மாணவர்களின் உடல்களும் அங்கு நெரிந்து கிடக்கின்றன. சிவநாதனுக்கே அங்கு கண்ட காட்சிகளால் உடலெங்கும் மயிர்க்கூர்செறிகிறது. முத்துச்சாமியர் ஒருமுறை பார்த்து விட்டு ‘சிவனே’ என்று வாய் மட்டும் முணுமுணுக்க முகத்தைத் திருப்பிக்கொள்கிறார். அப்பால் ஒரு சுருட்டுத் தொழிலாளியின் மகன் அவனது குடிசையோடு வைத்து சுட்டு எரிக்கப்பட்டிருக்கிறான். அப்பொழுதுதான் அங்கு வந்த அவனது தாயார் தனக்குப் பாதுகாப்பாக இருந்த ஒரே ஒரு மகனை இழந்த துயரத்தில் ஒப்பாரி வைத்து கத்துவது அங்குள்ளவர்களின் இதயத்தைப் பிழிகின்றது. ஒரு வயோதிபரின் உடல் முள்வேலியில் தலைகீழாகத் தொங்குகின்றது. உயிரைப் பாதுகாக்க முட்கம்பியைக் கடந்து ஓடும்போது அவர் சுடப்பட்டிருக்க வேண்டும். உறவினர்கள் எவரும் வராததால் அப்படியே தொங்கும் அந்தப் பரிதாபமான காட்சியைக் காணச் சகிக்காத சிவநாதன் அங்கு நின்ற இளைஞர்களின் உதவியுடன் கம்பியில் தொங்கிய முதயவரின் உடலை விடுவித்துக் கீழே கிடத்துகின்றான். பணயக்கைதிகளாக வைத்திருந்த பொது மக்களின் பிரேதங்கள் அந்தப் பகுதியில் ஒவ்வொரு வீட்டினுள்ளும் அங்குமிங்கும் அலங்கோலமாகச் சிதறக் கிடக்கின்றன. கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட பெண்களின் அவலக்கதைகளை கூடி நின்றவர்கள் கூறுகின்றனர். கண்களின் நீர்திரளக் காதுகளைப் பொத்திக் கொள்கிறார் முத்துச்சாமியர்.

“சிவநாதன்! எனக்கு ஒரு மாதிரிக்கிடக்கு, வாரும் வீட்டை போவம்”.

மற்ற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் மாமிச உணவை உட்கொள்ளாமல், இத்தகைய கொலை பாதகச் செயல்களையே அடியோடு வெறுத்து வாழும் வேதாந்தியான அவருக்கு அந்த வயதான காலத்தில் ஏதவாது தாக்கம் ஏற்படக்கூடும் என்ற உணர்வுடன் சிவநாதன் அவரை அவரது வீட்டை நோக்கி கூட்டிச் சென்றான்.

அந்தப் பகுதியில் அநேகமாக எந்த வீடும் ‘ஷெல்’ அடிக்குத் தப்பவில்லை. அவரது வீட்டுத் தெருப்புறமதிலும் ‘செயின் புளொக்’கால் இடிக்கப்பட்டு உட்புறமாக விழுத்தப்பட்டுக் கிடக்கிறது. அவரது வீடும் ‘ஷெல்’ அடியால் கூரை பிரிந்து சுவர்கள் இடிந்து பாதிக்கு மேல் தகர்க்கப்பட்டிருக்கிறது. தண்ணீர்க் குழாயடியில் அவர் நட்ட தேன் கதலி வாழை குலைபோட்டு முற்றிப் பார்ப்பதற்கு அழகாயிருந்தது. அடுத்த வாரம் பழுத்துவிடும்… அர்ச்சனைக்குக் கொண்டு போகலாம் என்று அவர் நினைத்திருந்த அந்த வாழைக்குலை ஷெல்லின் சிதைவுகள் பட்டுச் சிதறி.. வாழை இலைகள் கூட தும்பு தும்பாகத் கிழிந்து போய்க்கிடக்கிறது…

“ஊரோட ஒத்ததுதான் எங்களுக்கும், தனகரும் பிள்ளைகளும் கூட்டிக்கொண்டு போகாட்டி நாங்களும் இதுக்கை நெரிஞ்சிருப்பம்.”

சற்றுநேரம் விறைத்து நின்றவர் அங்கு நடந்த அழிவுகளையும் இழப்புகளையும் பார்த்துக்கொண்டு வந்த உணர்வுடன் அமைதியாகக் கூறுகிறார்.

‘ஹால்’ சுவரில் மாட்டப்பட்டிருந்த விவேகானந்தர் பரமஹம்சரின் படங்கள் சுவரோடு இடிந்து வீழ்ந்து, வீட்டின் கூரை பெயர்ந்து இருந்ததால் இரவு பெய்த மழையில் நனைந்து இற்றுப்போய் கிழிந்து கிடக்கின்றது. காந்தியின் படம் மட்டும் பாதி இடிந்த சுவரின் ஒரு பகுதியில் இன்னும் விழாமல் நனையாமல் அப்படியே உயிர்ப்புடன் ஒரு கம்பியில் அறுந்து தொங்கிக்கொண்டு இருக்கின்றது. இடிபாடுகளுக்குள் சென்று அந்தப் படத்தை அவர் கையில் எடுக்கிறார்.

“காந்தியின்ரை படம் மட்டும் உடையேல்லை”. படத்தைப் பார்த்தபடி எந்தவித உணர்வுமில்லாமல் ஒரு செய்தியாளனைப் போல அமைதியாகச் சொன்னார் முத்துச்சாமியார்.

“ஓம். ஆனால்… காந்தியின்ரை கைத்தடி நழுவிவிழுந்து எங்களைக் காயப்படுத்திப் போட்டுது.”

உடைந்த கண்ணாடித் துண்டொன்றை கையில் வைத்து அதன் கூரானமுனையை நிதானமாக விரல்களால் தடவிய படி அந்த இடிந்த வீட்டையே வெறித்துப் பார்த்துக்கொண்டு கூறுகிறான் சிவநாதன்.

அவனது வார்த்தைகள் ஆயிரம் பிரம்படிகளாக அவரது இதயத்தில் பட அதிர்ச்சியுடன் அவனைத் திரும்பிப் பார்க்கின்றார் அவர்.

■ ■ ■



## அந்தத் தீபாவளியும் என் அழகிய கிராமமும்

1987 ஒக்ரோபர் 22
பனிநீரில் குளித்து
பச்சைப் பட்டாடை உடுத்து
புதுமணப்பெண் போல்
பூரித்து நிற்கிறது என் கிராமம்,
காகங்களும் குருவிகளும்
காதோடு காதுவைத்து
ஏதோ பேசிக்கொள்கின்றன
மரங்கள் மூசிமூசி மறுக்கின்றன

இடுகாட்டிலிருந்து
இரவல் வாங்கிய அமைதியை
கவசவாகன உறுமல்கள்
சிதைக்கின்றன
யுத்த நெடி
மனித முகங்களில் அறைகின்றது
இந்தியா என்கிற இமாலயம்
எங்கள் மனப்பரப்பில் இடிந்து
நொருங்குகின்றது.

என்னவென்று அறியாமல்
முற்றத்துக்கு ஓடிவந்த அம்மா
குண்டுபட்டு வீழ்கிறாள்
அதைப் பார்த்து
அலறிய தம்பிக்கும் சூடு.
அப்பாவோ
வயலில் வியர்வை குளித்தபடி.
எங்கள் வீட்டில் குருதிச் சேறு
அயல் வீட்டிலும் அதற்கு
அடுத்த வீட்டிலும் அப்பாலும்
அவலக் குரல்கள்.

எங்கள் கிராமத்தில்
இனிய வசந்தங்கள் கருகின
பூட்ஸ் கால்களில் கீழ்
புனிதங்கள் நசிந்தன
வியர்வை முத்துக்கள் சிந்தி
விளைவித்த நெல்மணிகள்
முற்றமெங்கும் சிந்திய
விழுந்த கிடந்த மலர்களை
இரும்புச் சக்கரங்கள் மிதித்தன

சிதறிய உடல்களும்
சிந்திய இரத்தமுமாய்
இரவு சூழ்ந்தது
தூரத்தே துப்பாக்கிகள் வெடித்தன
அன்றைய நாள் அகல
விடியலின் குரல்கள் தோன்றின!

-ஆதிலட்சுமி
(பெயரிடாத நட்சத்திரங்கள் தொகுப்பில் இருந்து)

## ஐயோ

கிணறு தரும் குரலாக வருகிறது
இச் சொல்.

தெரியும்.

ஓராயிரம் குழந்தைகள்
போதையில் வழி தவறிய கலைஞர்கள் நூறு பேர்
மோகக் களிப்பில்
ஊரறியாமல்
கிடுகு வேலியைத் தாண்டும்போது தவறி விழுந்தோர்
என
மாரிக் கிணற்றின் சாவின் படலம்

இருபத்தேழு ஆண்டுகள் முன்பு
மூன்று இந்தியப் படையினர்
அந்த வீட்டுக்குள் நுழைவதைக் கண்டேன்
ஐந்து வயதுக் குழந்தையை இழுத்துக் கொண்டு
வெளியே ஓடி வந்த பெண்ணை
இரண்டு படையினர் அழுத்திப் பிடித்தனர்

பெரும் அழுகுரலுக்கிடையிலும்
குழந்தை மூன்றாமவனுக்கு முகத்திலறைந்தது.

அவனுடைய முகமும்
நெற்றியில் கலைந்திருந்த இருந்த குங்குமப் பொட்டும்
தெளிவாக
இப்போதும் நினைவில் உள்ளது
கடைவாயில் கசிந்த குறுஞ்சிரிப்பு
அழுக்கேறிய காலணியில் விழ
குழந்தையை ஒரே கைவீச்சில் பறித்தெடுத்து
அருகில் இருந்த பங்குக் கிணற்றுக்குள் வீசினான்

குரலற்றுப் போன கிணறு

- சேரன்
(ஒக்டோபர் 21)

## இப்படியும் மரணவீடுகள்

ஆண்டுகள் நான்கு அரேபிய வாசம்
மீண்டவர் வந்து மூன்றே நாட்கள்
குண்டுகள் உருவிடக் குருதியும் பெருகிடக்
குப்புறக் கிடந்தார் கோபால் மாமா!

பாவம் கோபால் மாமா அவர்க்குச்
சாவரும் என்றொரு சகுனமும் காட்டலை
கொள்ளிப் பிள்ளையின் குரலைக் கேட்டுக்
கண்களை மூடிட ஆச்சிக் கிழவி
படுக்கையிற் கிடந்து பிசத்தும் காட்சியை
எழுத்தில் செதுக்கிய அஞ்சலைத் தவிர _

எண்பதைத் தாண்டிய ஆச்சியன் கடனை
ஐம்பதைக் கடந்த அவள் மகன் முடித்திட
எண்ணுதல் இயல்பே! இதிலெதும் பிழைஅவர்
பண்ணிய தாக யாரே கொள்வீர்?

வீட்டுக்குள் கிடந்தார்..... வெளியே இழுத்தனர்
றோட்டில் சுவரொடும் சாத்திச் சுட்டனர்!
(அந்நிய இராணுவம் அமைதி பேணி
சுட்டவர் தம்மொடு ரோந்து சென்றது)
யாவரும் அறிவீர் ஞாலமும் அறிக!
கோபால் இழைத்த குற்றம் இதுதான்
ஆன வயதினில் அவரொடு கன்னியைத்
தானம் கொண்டனர் தாரமாய் வந்தவள்
மைந்தரை ஈன்றனர் வளர்ந்த ஓர் மகனோ
தந்தையைப் போல்கடல் தாண்டி உழைக்காமலே
விடுதலை வேட்கையில் வேங்கையைச் சேர்ந்தனர்
அடுக்கா தென்றவர் அப்பனைப் பிடித்தனர்
(புலியினைப் பிடித்திட இயலா தாயின்
புலியின் அப்பனை முடிப்பதும் தகுமே]

ஆச்சியின்னும் சாகவில்லை!
அவளுக்குக் கொள்ளிவைக்க
காத்திருந்த தந்தையுடல்
காண பேரன் வரவுமில்லை!

28.05.1989 அன்று ஏழாலையில் நடைபெற்ற
உண்மைச் சம்பவம்.

- எஸ். ஜி. கணேசவேல்

ஈழநாதம்
மே 4, 1990
காலம் எழுதிய வரிகள் தொகுப்பில் இருந்து



# இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் முடிவு என்ன?

- அ. கணபதிப்பிள்ளை -

இந்திய இலங்கைச் சமாதான ஒப்பந்தமானது ‘செத்த இடத்தில் புல்முளைத்து விட்டது’ போன்ற உணர்வு பரவியிருக்கிறது. 30 வருடங்கள் முடிந்தும் இந்திய அரசு ஒப்பந்தத்தின் வழிநின்று அது பற்றிய கரிசனையினை இலங்கைக்குச் சொல்லத் தவறிவிட்டது.

காலவோட்டத்தில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களும், இனப்படு கொலைகளும், காணாமலாக்கப்பட்டோர் குடும்பங்கள் அனுபவித்துவரும் துயர்களும், காணிபறிக்கப்பட்டோர் அவலங்களும் முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய நிலைக்குள் தமிழர்கள் இழுத்துவிடப்பட்டிருக்கிறார்கள்.

இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்தினை இந்தியாவின் இராஜதந்திர நகர்வு என அரசியலாய்வாளர்கள் வர்ணித்திருந்தாலும் இலங்கை அதற்கு எதிரான நடவடிக்கையில் வெற்றி கண்டிருந்தமை மறுக்கமுடியாத ஒன்று.

இந்த ஒப்பந்தத்தின் முதலாவது பிரிவானது சிறுபான்மைமக்களின் தனித்துவம் மொழி, மத, கலாச்சார அடையாளத்தை வலியுறுத்துகிறது. இரண்டாவது பிரிவானது வடக்கு கிழக்கு இணைப்பு அதனைத் தனி நிர்வாக அலகாக்கல் ஆயுதக்களைவு இடம் பெயர்ந்தோர் மீள்குடியமர்வு இந்தியாவின் ஆயுத உதவி ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

வடக்குக்கிழக்கில் வாழும் சிறுபான்மையினைங்களுக்கு மத, இன ரீதியிலான தனித்துவம் உண்டென்பதும் பல்லின, பல்மத சமூக அமைப்பானது உண்டென ஏற்றுக்கொள்ளுவதும் வடக்குக்கும் கிழக்குக்கும் வரலாற்று ரீதியிலான தமிழ் பேசும் மக்களின் குடியிருப்புப் பிரதேசமாக இருந்ததென்பதும் இதன் மூலம் மாகாணசபை முறையிலான அதிகாரப் பகிர்வில் மாகாணங்களுக்கான குடியியல், பொலிஸ், நிதித்துறை அதிகாரம் என்பன வழங்கப்படும் என்பதுமாகும்.

> **“ இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்தினை இந்தியாவின் இராஜதந்திர நகர்வு என அரசியலாய்வாளர்கள் வர்ணித்திருந்தாலும் இலங்கை, அதற்கு எதிரான நடவடிக்கையில் வெற்றி கண்டிருந்தமை மறுக்கமுடியாத ஒன்று. ”**

மேலும் இவ்வாறான மாகாணசபையில் வடக்கையும் கிழக்கையும் இணைத்து ஒரு முதன் மந்திரி, ஒரு மந்திரி சபை ஒரு நிர்வாகம் என்பதும் வலியுறுத்தப்பட்டது. இராணுவ நடவடிக்கையில் இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுதல், 72மணித்தியாலத்தில் ஆயுதங்கள் கையளிக்கப்படுதல் இலங்கை இராணுவம் 1987 மே 29ம் திகதி இருந்த நிலைக்கு மீளச் செல்ல வேண்டும்

இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கு இலங்கை மதிப்பளிக்கும் என்ற உறுதிமொழி வழங்குதல் இந்தியாவிலுள்ள எந்தப்பிரதேசத்தையும் போராளிகள் பயன்படுத்த அனு-மதிப்பதில்லை இலங்கை கேட்கும்பொழுது இந்தியா இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்கும் என்பது போன்றன உடன்படிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்ட விடயங்களாக அவதானிக்கத்தக்கன.

ஒப்பந்தத்தின் இரண்டாவது பிரிவினை நடைமுறைப்படுத்தவே இந்திய அமைதிப்படை அனுப்பப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்தக் கூடிய சூழல் காணப்படவில்லை எனக் கூறி இந்தியா தப்பித்து விட்டது. இலங்கை இந்த ஒப்பந்தத்தைத் தவிர்க்கக் கூடிய வழியிற் செயற்பட்டு தமது இலக்கான விடுதலை இயக்கங்களை அழித்துவிட்டதாக வெற்றிக் கொண்டாட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறது.

ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்ட விடயங்கள் தமிழ் பேசும் மக்களின் உரிமையினை வலியுறுத்தியதல்லாமல் இலங்கையைக் கட்டாயப்படுத்தி நடைமுறைப்படுத்தும் பங்கினை இந்தியா செய்யத் தவறியிருந்தது.

இவை ஒப்பந்தத்திலன்றி அரசியற் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதனை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். எவரும் இந்த ஒப்பந்தத்தை மீறக்கூடிய வாய்ப்புக் காணப்பட்டது. ஒப்பந்தப் பங்காளிக-ளான இலங்கையும் இந்தியாவும் காலந் தாழ்த்துவதனூடாக இந்த ஒப்பந்தத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தினையும் குறைத்துவிட்டனர். பங்காளியில்லாத புலிகளின்மீது பழி போடப்பட்டதால் தமிழருக்கு நலனளிக்கும் பிரிவானது கவனிக்காமலே விடப்பட்டுவிட்டது. இருப்பினும் இந்த ஒப்பந்தம் இன்னமும் காலாவதியாகிவிடவில்லை என்பதனையும் இங்கு கவனத்திற் கொள்வது அவசியம்.

இவ்வொப்பந்தத்தினைத் தமிழர் நலன் பேணும் ஒன்றா? இலங்கையின் நலனைக் கருத்தில்கொண்டதா? இந்திய நலனை அடிப்படையாகக் கொண்டதா என்பனவெல்லாம் இரண்டு நாடுகளும் எதனை வலியுறுத்திக் கவனத்துக்கெடுத்துக் கொள்ளுகின்றன என்பதில் தங்கியுள்ளது.

இவ்வொப்பந்தத்தினைக் கூர்ந்து கவனிக்குமிடத்து இந்தியா வளர்த்த போராளி-களை இலங்கையில் தனித்துவிடுவது

*தொடர்தல் 98ம் பக்கம்*

# இந்திய இலங்கை...

97ம் பக்கத் தொடர்ச்சி...

போன்ற உண்மை வெளித் தெரியும். இதன் மூலம் இலகுவில் இந்திய இலங்கை உடன்படிக்கைகளை மீறக்கூடிய இலங்கை அரசானது தனது கையினை ஓங்கச் செய்யுமாயின் அதன்மூலம் பாதிக்கப்பட்டப் போகின்றவர்கள் போராளிகளாகவே இருப்பார்கள்.

மறுபுறமாக இந்தியா நடுநிலையாளராகச் செயற்படுமானால் இந்தநிலை ஏற்பட்டிருக்காது. இதனை அன்றைய ராஜீவ் காந்தி அரசில் வெளியுறவு அமைச்சராக விருந்த பி.வீ. நரசிம்ஹராவ் இந்த ஒப்பந்தமானது இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தியிருந்தார் என்று சொல்லப்பட்டது. இருப்பினும் தவிர்க்க முடியாதவாறு விடுதலைப் புலிகளைப் பின் நிறுத்தி இந்தியா இலங்கையின் பிடியுட்சிக்கிக் கொண்டது.

இலங்கையில் வைத்துப் புலிகளிடமிருந்தும் ஏனைய ஆயுதக்குழுக்களிடமிருந்தும். ஆயுதங்கள் கையளிக்கப்படும் பொழுது இந்தியா போராளிகளுக்குரிய குறிப்பாகக் புலிகளுக்குரிய பாதுகாப்பினை உறுதி செய்யும் என்ற நம்பிக்கை பலரிடமிருந்து.

கடலில் வைத்து ஆயுதங்களுடன் பிடிபட்ட விடுதலைப்புலிப் போராளிகளை கொழும்புக்கு அனுப்ப எடுத்துக்கொண்ட ஜே.என் டிக்சிற்றின் முடிவும் இந்தியா அதனைத் தடுக்க முடியாத ஒப்பந்தக் கட்டுப்பாட்டினுள் சிக்கியிருந்தமையும் இந்தியா தமிழரைக்காக்க வரவில்லை என்பதனைப் போராளிகள் உணர்ந்து கொண்டனர். அந்த நேரத்தில் இலங்கை இராணுவத்தின் அடாவடித்தனத்திலிருந்து தங்களை மீட்கக் கூடியவர்கள் விடுதலைப்புலிகள் என்ற நம்பிக்கையினை மக்கள் கொண்டிருந்தார்.

இந்த நம்பிக்கைக்கு அடிப்படையாகவிருந்தது ஆயுதமோ, புலிகளின் சுதந்திரத்தின் மீதான மனஉறுதியோ அல்ல. அவர்களிடையே காணப்பட்ட ஒழுக்க சிந்தனைகளும் அதனைப் பின்பற்றக் கூடியதாக யாழ்ப்பாணத்தில் படித்த மாணவர்களும் மாணவிகளும் இயக்கத்தில் இணைந்திருந்தமையாகும். கவர்ச்சிக்கும் சொகுசு வாழ்வுக்குமில்லாது இதய சுத்தியுடன் இணைந்துகொண்ட இளைஞர்களின் நடவடிக்கைகளைக் கண்டு இந்திய இராணுவ அதிகாரிகளே பெருமைப்பட்டுக் கொண்டனர்.

இந்த உடன்படிக்கையில் இருதரப்பினருக்கும் இடையேயிருந்த பொறுப்புக்கள் நன்கு பேணப்பட முடியாத சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஜெனரல் திபிந்தர்சிங் இந்தியத் தலையீட்டுக்கு மூன்று விடயங்களைக் குறிப்பிடுகிறார். முதலாவது இந்தியாவின் பாதுகாப்புச் சிந்தனை இரண்டாவது தமிழக முதல்வர் எம்.ஜீ.ராமச்சந்திரன் காங்கிரஸ் அரசுக்குக் கொடுத்த அழுத்தம் இதன் பின்னணியில் வந்தது மூன்றாவதான மனிதாபிமான உதவி. இதிலிருந்து எம்.ஜீ. ராமச்சந்திரனின் இறப்பு நிலைமையைச் சீர்குலைத்தது எனக் கூறமுடிகிறது.

இந்தியா விடுதலைப்புலிகளை ஒடுக்கவும் தமக்கு மக்கள் ஆதரவு பெருகவும் என சில விடுதலை இயக்கங்களை இணைத்துக் கொண்டது. அவற்றுக்கு மக்களிடையேயிருந்த செல்வாக்கு ஒப்பிட்டளவில் குறைவாக இருந்ததுடன் அவர்கள் புலிகளுக் கெதிரான இந்தியப் படைகளுடன் இருந்ததனைத் தமிழ் மக்கள் விரும்பவில்லை என்றே சொல்லவேண்டும். அதனால் அவர்களினூடாகபெறவிருந்த தீர்வில் தமிழ் மக்கள் அதிகம் அக்கறை காட்டவில்லை.

விடுதலைப்புலிகள் தம்மிடமிருந்த ஆயுதங்களைக் கொடுத்திருந்த நிலையில் இந்த ஆயுதங்களை வைத்துக்கொண்டா இந்தப் பெரிய இலங்கை இராணுவத்துடன் பேர் செய்து வென்றார்கள் என்ற கேள்வியினை இந்திய இராணுவத்தினர் கேட்கத் தொடங்கியிருந்தார்கள்.அப்பொழுதிருந்தே விடுதலைப்புலிகளுக்கு வேறு வழிகள் மூலம் ஆயுதம் கிடைக்கப்பெற்றிருந்தது என்பதனை உணரத் தொடங்கினர். அது இந்தியாவின் எதிரி நாடாவாக இருக்கக்கூடுமோ என்ற சந்தேகம் எழத் தொடங்கியிருந்தது.

இலங்கையில் வடக்குக் கிழக்குக்கான இடைக்கால அரசியல் உரிமையினைத் தனியாகப் புலிகளிடம் கையளிப்பதில் இலங்கைக்கோ இந்தியாவுக்கோ உடன்பாடில்லாத நிலையிருந்தது. வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையின் தோற்றமானது பெயர்ப்பட்டியல் நிலையிலேயே வைத்துக் குளப்பப்பட்டிருந்தமையால் இலங்கையில் ஒருசாரார் மிகவும் தீவிரமாக இந்த உடன் படிக்கையினை எதிர்த்தமை தெளிவாகத் தெரிந்தது.



இதன் பின்னணியில் இலங்கை அரசானது இந்தியாவை இலங்கையிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்பதில் உறுதியாக விருந்ததனை உணர முடிகிறது. இந்திய இராணுவத்தினர் கிழக்கு மாகாணத்தில் பின்பற்றிய சில நடைமுறையான தமிழர் குடியிருப்புக்குச் சார்பாகவும் சிங்களக் குடியிருப்புக்குச் சாதகமற்றும் நடந்து கொண்டமையானது சிங்கள மக்களது எதிர்ப்புக்கும் காரணமாக அமைந்தது.

விடுதலைப் புலிகள் தங்களைப் பாதுகாக்க இலங்கை அரசுடன் உடன்பட்டு நடக்கக் கூடிய சூழலை இலங்கை அரசு விடுதலைப்புலிகள் இருவரும் ஏற்படுத்திக் கொண்டனர் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் பின்னர் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற ரணசிங்க பிரேமதாச இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்பதில் உறுதியுடன் செயற்பட்டு அதற்கான கட்டளையினையும் பிறப்பித்திருந்தார்.

1990ம் ஆண்டு மார்ச் மாதம் இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறியது. இந்திய இராணுவமானது இலங்கை இராணுவத்தின் உதவியுடன் விடுதலைப் புலிகளால் கொல்லப்படுவதனை இந்தியா விரும்பியிருக்கவில்லை. விடுதலைப் புலிகளுடன் போரிட்டு பிராந்திய வல்லரசானது தோல்வியினைச் சந்தித்துக் கொண்டது என்ற பெயருடன் பின் வாங்கிய இந்திய இராணுவம் இலங்கை மீதான தனது தலையீட்டினைத் தவிர்த்துக்கொண்டது. இந்தியாவின் களநிலைமையினைப் புரிந்து கொள்ளும் தெளிவின்மை தான் அதன் இழப்புக்கு காரணமாகச் சொல்லப்படுகிறது.

இந்தியா இலங்கைத் தமிழரின் மேல் தொடர்ந்தும் அக்கறை காட்டாமலிருந்தமைக்கு 1991ம் ஆண்டு மேமாதம் தேர்தற் பிரச்சாரத்துக்கென வருகை தந்திருந்த ராஜீவ்காந்தி தமிழ் நாட்டில் வைத்துக் கொல்லப்பட்டமையும் ஒரு காரணமாக அமைந்து விட்டது.

தேர்தல் வெற்றியினைத் தொடர்ந்து மீண்டும் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் அரசும் அதன் கூட்டாளிக் கட்சிகளும் தமது சுயநலத்தில் அக்கறை கொண்டிருந்தனவேயன்றி தமிழர் மீது எந்த அக்கறையும் கொண்டிருக்காததினால் தமிழர்நலன் குறித்த இந்த ஒப்பந்தத்தின் பகுதியானது கைவிடப்பட்டதாக மாறியது.

ஒப்பந்தத்தில் இணக்கப்பாடு காணப்பட்டிருந்த வடக்கு கிழக்கு என்ற தாயகப்பிரதேசம் சுப்பிறீம் கோட்டின் உதவியுடன் பிரிக்கப்பட்டது. இந்தியா தனக்கு ஆதரவளித்த தமிழர் ஆயுதக்குழுக்களின் நிலையிலும் கூடப் பாராமுகமாகவே இருந்து விட்டது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் தோல்விக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்ற கருத்து பரவலாகப்பேசப்பட்டது. இதற்கு ஆதாரமாக பத்திரிகையாளர் பி.எஸ். சூரிய நாராயணாவுக்குப் பேட்டியளித்த புலிகளின் தலைவர் இந்த ஒப்பந்தத்தைத் தன் மீது பழிவராதவாறு அதனை அழித்துவிடத்தன்னால் முடியும் என்று கூறியதாக நாராயண்சாமி தனது கட்டுரையொன்றில் வெளியிட்டிருந்தார்.

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்தியாவுடன் ஒன்றுபட்டுச் செயற்பட மறுத்த இலங்கை அரசானது இந்த ஒப்பந்தத்தின் தோல்விக்குப் பிரதான காரணமாகும் என்பது வெளிப்படையான தொன்று இலங்கை அரசின் இத்தகையான போக்கினை இன்றுவரை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இந்த ஒப்பந்தத்தின் தோல்விக்குப் பிரதான காரணம் இந்தியா என்பதனை இன்று பலரும் ஏற்றுக் கொள்ளத்தவறவில்லை. குறிப்பாக சமாதானப்படை போர்ப்படையாக மாறியதை இங்கு குறிப்பிடலாம். இந்தியா விடுதலைப் புலிகளின் ஆயுத ரீதியான வளர்ச்சியையும் இலங்கையில் சிறுபான்மையினர் தொடர்பான நடவடிக்கையில் இலங்கையரசின் அணுகுமுறையினையும் இந்தியா விரும்பியிருக்கவில்லை. இருப்பினும் இரண்டுக்குமான தீர்வினை ஒருசேரக்கண்டு பிடிப்பதில் சிக்கலானது தொடர்ந்து கொண்டிருந்தது.

அமெரிக்கா மீதான பயங்கரவாதத் தாக்குதலுடன் விடுதலைப் போராட்டம், ஆயுதப் போராட்டம் என்பன தொடர்பான கொள்கைகள் மாற்றம் பெற்றிருந்தன. அமெரிக்காவின் அணுகு முறையினைச் சர்வதேச நாடுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டிருந்தது. இதுவே இலங்கை இந்திய உடன்படிக்கையின் உள்ளடக்கத்தினை இலங்கை அரசு மீறுவதற்குச் சாதகமானதொரு சூழலைத் தோற்றுவித்திருந்தது.

■ ■ ■